ஹாமீம்
பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# ஞானத்
# திருப்பாடற்றிரட்டு

இஃது

மெய்ஞ்ஞான சொரூபராகிய கீமில் ஆரிபுஸீராஷன்
தர்வேஷ் றூஹுல் அஃலம் கலீபத்து ஷெய்கு
ஷாஹுல் ஹமீது அப்பா நாஜுத்தீன்
அப்துல்காதிர் நாயகம் கல்விடைமா
நகரம் கத்தஸல்லாஹு சிற்ற
ஹுல் அஸீஸ் அவர்கள்
திருவாய்மலர்ந்தருளியது.

இதனை
மேற் கூறிய நாயகம் அவர்களுடைய முரீது
மதருஸ் முஹம்மது இப்றாஹீம் பயில்வான்
அவர்களின் முயற்சியைக் கொண்டும்

செவ்வல்மாநகரம் கனம்தங்கிய
M. A. கெரீனுன் முஹம்மதுப் பாவலரைக் கொண்டு
மிக்க பரிசோதனையுடன் பார்வையிட்டு

சென்னை திருவல்லிக்கேணி,
[illegible] அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

1930.

225898

காமில் ஆரிபுரோஷன் தர்வேஷ் றாஹுல் அஃலம்
கலீபத்து ஷெய்கு ஷாஹுல் ஹமீது அப்பா
தாஜுத்தீன் அப்துல் காதிர் நாயகம்
கல்விடைமாநகரம் கத்தஸல்லாஹு
சிர்றஹுல் அஸீஸ் அவர்கள்
திருவாய்மலர்ந்தருளிய

# ஞானத் திருப்பாடற்றிரட்டின்

## அட்டவணை.


| பக்கம். | நூற்பிரிவு | பாட்டு. |
|---|---|---|
| | சிறப்புப் பாயிரம் | |
| | பிரசங்கம் | |
| 1 | விளம்பரம் | |
| 3 | ஜீவிய சரித்திரச் சுருக்கம் | |
| 9 | ஞானக் கமல மணிமாலை | 270 |
| 45 | ஞான அலங்காரம் | |
| ஷை | பூரண மெய்ஞ்ஞானம் நூறு | 100 |
| 71 | சம்பூர்ண ஆசிரியவிருத்தம் | 14 |
| 80 | சச்சிதானந்த ஆசிரிய விருத்தம் | 11 |
| 85 | மெய்ஞ்ஞான ஆனந்தக் களிப்பு | 24 |
| 89 | ஞானச் சரநூல் | 12 |
| 92 | ஞானக் கண்மணிக் கும்மி | 48 |
| 99 | மாசிலாமணிப் பதிகம் | 12 |
| 102 | மெய்ஞ்ஞான முச்சுடர் விளக்கம் | 10 |
| 107 | எக்காலக் கண்ணிகள் | 47 |
| 111 | எந்நாள் கண்ணிகள் | 44 |
| 114 | ஞானத் திறவுப்பதிகம் | 5 |
| 115 | மெய்ஞ்ஞான தீபம் | 38 |
| 118 | ஞானத் திருநடி | 26 |
| 120 | ஞானத் தெளிவு | 44 |
| 123 | மெய்ஞ்ஞான அடைக்கலம் | 15 |
| 126 | ஞான அற்புதம் | |
| ஷை | மஹ்ஷர் ஒளிமாலை | 316 |
| 148 | முஹியித்தீன் ஆண்டவர்கள் முனாஜாத்து | 33 |

| பக்கம். | நூற்பிரிவு | பாட்டு. |
|---|---|---|
| 152 | அபுல்ஹஸன்ஷாதிலிறஹ்மஹுல்லா முனாஜாத்து | 11 |
| 154 | ஞான சூஸ்த்ரம் | 65 |
| 166 | றஹ்மான் கண்ணிகள் | 71 |
| 171 | ஞானச்சுடர் | 61 |
| 175 | ஞான ஒளிவு | 255 |
| 209 | ஞானப் பிரகாசம் | 47 |
| 216 | சூஸ்த்ர மெய்ஞ்ஞானம் பதினாறு | 16 |
| 220 | நபிநாயகம் அவர்கள்பேரில் முனாஜாத்து | 33 |
| 225 | வேதத் திருப்புகழ்ச்சி | 13 |
| 229 | ஞான வேதாந்தம் | |
| ஷை | ஞானவுபதேசம் இருபத்திரண்டு | 22 |
| 235 | வண்ணம் | 4 |
| 238 | பூரண நூல் | 15 |
| 242 | முஹிய்யித்தீன் ஆண்டவர்கள் பேரில் ஆசிரிய விருத்தம் | |
| 243 | காஜாமுஈனுத்தீன் ஆண்டயர்கள்பேரில் ஆசிரிய விருத்தம் | |
| 244 | ஷெய்கு ஸிந்தா மதார் நாயகம் அவர்கள் பேரில் ஆசிரிய விருத்தம் | |
| 245 | சுல்தானுல் ஆரிபு செய்யிது அஹமதுல் கபீர் நாயகம் ஆடண்வர்கள் பேரில் ஆசிரியவிருத்தம் | |
| 246 | காதிர்ஒலி மீரான்சாஹிபு நாயகம் அவர்கள் பேரில் ஆசிரிய விருத்தம் | |
| 247 | ஞானவல்லபப் பதிகம் | 12 |
| 248 | அருளானந்தப் பதிகம் | 19 |
| 251 | காரண மாலை | 46 |
| 254 | தவயோக சூஸ்த்ரம் | 20 |
| 257 | அடைக்கல மாலை | 30 |
| 265 | கற்பஞானம் பதினாறு | 16 |
| 269 | கருமெய்ஞ்ஞானம் பதினொன்று | 11 |
| 272 | ஞானமலர் முப்பது | 30 |
| 280 | ஞானநிலை | 5 |
| 283 | பஞ்சபக்ஷி | 10 |
| 284 | திருவருள் வெண்பா | 42 |
| 290 | நிறைவருள் வெண்யா | 55 |

| பக்கம். | நூற்பிரிவு | பாட்டு. |
|---|---|---|
| | | 16 |
| 298 | ஞானகலை | 39 |
| 299 | மெய்ஞ்ஞானப் பொற்பதி | 14 |
| 308 | ஞானச் சிங்காரச்சிந்து | |
| 311 | பதக்கண்ணிகள் | 8 |
| ஷை | விதி யென்ன செய்திடுமோ | 4 |
| 313 | அண்டின பேர்க்கிந்த | 9 |
| 314 | மாயை சூஸ்த்ர | |
| 317 | பதங்கள் | 4 |
| ஷை | வடிவானவா | 5 |
| 318 | வாசமாகிய நீதனே | 4 |
| 319 | தாஸீமே தாஸீமே | 6 |
| 321 | தருணம் இதுவே | 4 |
| ஷை | எக்காலமும் மேன்மை | 4 |
| 323 | தெளிவாயருளைத் தாருமே | 5 |
| 325 | மெய்யான அவ்வல்கலிமா | 4 |
| 326 | மயங்கிறாய் எதுக்கு மனமே | 4 |
| 328 | குன்னென்ற பொருளை | 5 |
| 329 | அருளான அவ்வல்கலிமா | |
| 332 | பிழை திருத்தம் | |

திருக்கனதி வான்இபுரு ஹீம்பயில்வான் மனையகத்துத்
திருஷ்டி கொண்டு. (3)

ஞானநிஷ்டை சில்லாவி லமர்ந்திருந்து வாய்மலர்ந்து
நவின்ற செய்யுள்
தேனலர்ந்த பாடலெலா மொருசேரத் திரட்டியதை
ஜெகத் ப்ரசித்தம்
மேனலத்த நூலாக கலீபத்து ஷெய்கு ஷா
ஹுல்ஹ மீது
கோனப்பா மெய்ஞ்ஞான அருளதினாற் பாடிகளி
கூர்ந்தார் மாதோ. (4)

அகிலத்தில் உடலெடுத்த மானிடவர்க் கத்தார்க்கு
அவசி யத்தின்
மகிமைபெற்ற ஞானவழி யோகவழி சர்வடக்கம்
மதுரத் தேன்போல்
இகபரமுங் கொண்டாட அருட்பாடல் பொங்கிடவே
இயற்றித் தந்த
ஜெகத்குரு நாயகமார் என்பார்க்குக் கூறுகிறேன்
ஜெகத்தில் தானே. (5)

சீரியவான் மலக்கூத்தின் வாசல்திரு மணியோசை
சிறக்கப் பெற்ற
ஆரிபுரோ ஷன்தர்வேஷ் ராஹுல்ஆஃ லம்கலீபத்து
அருளாம் ஷெய்கு
பாரியதோர் ஷாஹுல்ஹமீத் அப்பாநா யகம்நாமம்
தாஜுத் தீனும்
காரியவான் காரணத்தின் குருஅப்துல் காதிர்நா
யகம்மா மகுடம். (6)

இத்தகைமை அரிதான திருநாமங் கள்றஹ்மான்
இலபா நந்தம்
அத்தனையும் கொடுசாற்று மாமகார ணஞ்சூட்டி
அழைத்த மேன்மை
சுத்தமுள இவைகளிலொன் றேனும்பொய் யென்பார்க்குத்
தொடரும் சாபம்
உத்தமநா யகமிவர்கள் முரீதிபுரு ஹீம்பயில்வான்
உண்மை யாக. (7)

# பிரசங்கம்.

இதனால் சகலமான கனதனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், எங்கள் குருநாயகம் காமில் ஆரிபுரோஷன் தர்வேஷ் றாஹுல் ஆஃலம் கலீபத்து ஷெய்கு ஷாஹுல் ஹமீது அப்பா தாஜுத்தின் அப்துல்காதிர் நாயகம் கல்விடைமாநகரம் கத்தஸல்லாஹு சிர்றஹுல்அஸீஸ் அவர்கள் அல்லாவுடைய அருள் மெய்ஞ்ஞானமென்னுந் தெளிவினால் திருவாய் மலர்ந்தருளிய ஞானத் திருப்பாடற்றிரட்டு.

மேற்படி புத்தகத்தை நான்கு பகுதியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, ஞானக் கமலமணி மாலை, ஞான அலங்காரம், ஞான அற்புதம், ஞான வேதாந்தம்.

ஆனதால் இனி அச்சிடக்கூடிய கனதனவான்கள் எல்லாம் மொத்தமாகச் சேர்த்து அச்சிட்டாலும் தனித்தனியே அச்சிட்டாலும் ஏகபரமானந்தக் கடவுளான றஹ்மானுக்காக இந்த பிரசங்கத்தையும் இந்த புத்தகத்திலிருக்கிற விளம்பரத்தையும் எங்கள் குருநாயகம் மேற்கூறிய திருநாமம் பொருந்திய அவர்கள் ஜீவிய சரித்திரத்தையும் மேற்கூறிய நாயகம் அவர்கள்பேரில் எம். ஏ. நெயினான் முஹம்மதுப் பாவலர் அவர்கள் சொல்லிய சிறப்புப் பாயிரத்தையும் புத்தகத்தின் துவக்கத்திற் போட்டு அச்சிடும்படிக்கு கேட்டுக் கொள்கிறோம். இப்பாடலைப் படிக்கும் புண்ணியவான்கள் பிழை திருத்தத்தைப் பார்த்து எழுத்தைக் கவனித்துத் திருத்திப் படிக்கும்படியாக மிகவும் வேண்டிக் கொள்கிறோம். மேற்கண்ட ஞானத் திருப்பாடற்றிரட்டைப் பெற்றுக்கொள்ளு மிடம் :—

ரோஷன் தர்வேஷ்,
15-ம் நெ. வீடு ஹாஜி ஷேக்ஹுஸைன் தெரு,
ராயப்பேட்டை போஸ்ட்,
(திருவல்லிக்கேணி), சென்னை.

இப்படிக்கு :

மதுரஸ், முஹம்மது இப்ருஹீம் பயில்வான்.
மா. பக்கீர் மஸ்தான் லெப்பை.
மா. முஹம்மது யூஸுபு லெப்பை.

ஆமீன் ஆமீன் யாறப்பில் ஆலமீன்.

# விளம்பரம்.

இதனால் சகலமான கனதனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், எங்கள் குருநாயகம், காமில், ஆரிபு, ரோஷன்தர்வேஷ் றாஹூல் அஸ்லம் கலீபத்து ஷெய்கு ஷாஹூல்ஹமீது அப்பா தாஜூத்தீன் அப்துல் காதிர் நாயகம் கல்விடைமாநகரம் கத்தஸல்லாஹூ சிர்றஹூல் அஸீஸ் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய :— "ஞானத் திருப்பாடற்றிரட்டு" என்னும் இப்புத்தகத்தை அல்லாவுடைய அருள் மெய்ஞ்ஞானமென்னும் தெளிவினால் உலக நன்மையைக் கருதி, யாவரும் எளிதில் நல் நிலை பரமடைவதற்காகத் திருவாய்மலர்ந்தருளி யிருப்பதால் இப்புத்தகம் எல்லோருக்கும் சொந்தம். ஆனதால் இப்புத்தகத்தை யாவரும் அச்சிட்டுக் கொள்ளலாம்.

இனி, பின் அச்சிடக்கூடிய கனதனவான்கள் இத் திருப்பாடற்றிரட்டுக்குள் ளடங்கியிருக்கும் பாடல்களடங்கலையும் தனித் தனியே அச்சிட்டாலும் எல்லாம் மொத்தமாகச் சேர்த்து அச்சிட்டாலும் ஏகபரமானந்தக் கடவுளான ஆண்டவனுக்காக யாதொரு அச்சுப்பிழை யில்லாமலும் மிக்கச் சீர்திருத்தத்துடனும் ஆராய்ந்து அச்சிட வேண்டுமென்று நாங்கள் மிகவும் பிரார்த்திக்கின்றோம்.

மேற் கூறியவற்றைக் கவனியாமல் இவ்வருளான புத்தகத்தை அச்சிடுபவர்களுக்கு இப்பாடலில் ஏற்படும் அருள் சம்பந்தமான குற்றங்கள் அவர்களைப் பொறுத்ததாகும். இப்புத்தகத்தை அச்சிடக்கூடிய கனதனவான்கள் மொத்தமாக அச்சிட்டாலும் தனித் தனியே அச்சிட்டாலும் இவ் விளம்பரத்தை புத்தகத்தின், முதற் பக்கத்தில் போட்டு அச்சிடும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

இப்படிக்கு,

**மதாருஸ், முஹம்மது இப்றாஹீம் பயில்வான்**
**மா. பக்கீர் மஸ்தான் லெப்பை,**
**மா. முஹம்மது யூஸூபு லெப்பை.**
**ஆமீன் ஆமீன் யாறப்பில் ஆலமீன்.**

ஹா மீம்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

## காமில் ஆரிபு ரோஷன் தர்வேஷ் றூஹுல் அஃலம் கலீபத்து ஷெய்கு ஷாஹுல் ஹமீது அப்பா தாஜுத்தீன் அப்துல் காதிர்நாயகம் கல்லிடை மாநகரம் கத்தஸல்லாஹு சிர்றஹுல் அஸீஸ் அவர்களின்

# ஜீவிய சரித்திரச் சுருக்கம்.

புகழடங்கலும் ஈரேழுபதினாலு லோகத்தையும் எறும்புகடை எண்பத்திநான்கு நூறாயிரம் ஜீவஜெந்துக்களையும் படைத்து ஆளக்கூடிய லோகாதிபதியாகிய நெறிநீதி வழுவா துய்யோனுக் குரியது. இவ்வுலகெலா முணர்ந்தோதற்கரிய சுத்த தத்துவ சுயப்பிரகாசக் கடவுளாகிய சர்வ காருண்யம் பொருந்திய சச்சிதானந்த பரமஜோதியான ஹக்கு சுபுஹானஹுத் தஆலாவின் அருமைத் திருத்தூதரும் இரகசிய நிதியுமான சற்குருவாகிய நபிகள்நாயகம் முஹம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடைய கிருபை அனுகூலமே துணையெனக் கருதினதுமன்றி மேன்மைதங்கிய நாலுயார்களுடைய துஆபறக்கத்தைக் கொண்டும் நமது நாயகம் குத்பு றப்பானீ கௌதுசமதானீ மஃபூபுசுபுஹானீ அப்துல் காதிரில் ஜெய்லானீ முஹியித்தீன் ஆண்டவர்களுடைய துஆபறக்கத்தைக் கொண்டும் மற்றும் அன்பியாக்கள் அவுலியாக்கள் ஒலிமார்களுடைய துஆபறக்கத்தின் மகிமையைக்கோரியும் சிறிய அற்பஞான முஹம்மது இபுறாஹீம் பயில்வான் என்பவன் சொல்வதாவது:— என் குருவாகிய காமில் ஆரிபு ரோஷன் தர்வேஷ் றூஹுல் அஃலம் கலீபத்து ஷெய்கு ஷாஹுல் ஹமீது அப்பா தாஜுத்தீன் அப்துல் காதிர் நாயகம் கல்லிடைமாநகரம் கத்தஸல்லாஹு சிர்றஹுல் அஸீஸ் அவர்களுடைய ஜீவிய சரித்திரச் சுருக்கத்தை என் சிற்றறிவுக்குத் தக்கபடி எழுதத் துணிந்தனன். என் குருநாயகமாகிய அப்பாநாயகம்

அவர்கள் தாய்தந்தையர்கள் பலகாலம் மன்றாடிய பலனோ! முன்னோர் தவமோ! தவமுடையார் விரும்பும் பயனோ! உலகத்தவரதிஷ்டமோ! யோகஞானனுபவ நிலையோ! நமது நபிகள்நாயகம் முஹம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் ஸ்தாபித்த தீனுல் இஸ்லாமாகிய கப்பலைத்தத்தளிப்பின்றி ஓட்டுதற்குரிய பரம காற்றோ வென்றோதத் தக்க தகைமையுடன் இவ்வுலகின்கண் ஓர் வெள்ளிக்கிழமையத்தினம் திருஅவதாரமானார்கள்.

என் குருநாயகம் அவர்கள் பிறந்த ஊர் * கல்லிடைமாநகரம். அவர்கள் தகப்பனார் பெயர் செய்யிது அஹமதுல்காதிரி. தாயார் பெயர் பாத்திமாபீவி. அப்பாநாயகம் அவர்கள் இவ்வுலகில் பிறந்தது முதல் கல்விப்பயிற்சியிலும் மெய்ஞ்ஞான விஷயங்களின் ஆராக்ஷியிலும் தன்புத்தியைச்செலுத்தி வந்ததின்பயனைப் பேரின்பக்கடலாகிய தௌஹீது நிலையைப் பற்றற அறிவிக்கும் தீட்சைபெறக் கொண்ட ஏக்கம் இவ்வாறென்றியம்பற்கரிது. அப்பாநாயகம் அவர்கள் கொண்ட ஏக்கம் நாளுக்குநாள் வளர்பிறையைப்போல் அதிகரித்து வந்ததால் அவர்கள் காடு, மலை, வனம், வனாந்திரங்களெல்லாஞ் சென்று ஆங்காங்குள்ள ரிஷிகளையும், பக்கீர்களையும், பரதேசிகளையும் அடுத்துப் பணிவிடை செய்தும் நேர்வழிக்குரிய தௌஹீது நிலை தோன்றாது மனவியாகுலம் கொண்டவர்களாகத் திருக்குற்றாலமலை போய்ச்சேர்ந்தார்கள். அங்கே மக்கமாநகர வாசியாகிய ஷெய்கு இஸ்மாயீல் தர்வேஷ்காதிரி அவர்களுடைய முரீதாகிய பகுதாது செய்யிது இபுறாஹீம் அல்ஹசனுல் காதிரி அவர்களுடைய முரீதாகிய காயல் தேசத்தைச் சார்ந்த ஷெய்கு பரீது தர்வேஷ்காதிரி என்றொரு பெரியோர்கள் வாசஞ்செய்து கொண்டிருப்பதை அப்பா நாயகம் அவர்கள் கண்ணுற்று வெகு மரியாதையாக அஞ்சிப்பயந்து அவர்களை யடுத்து அவர்களுக்கு கிதுமத்தென்னும் ஊழியஞ்செய்து அந்தப் பெரியோர்களிடம் மிகவும் வணக்கமாக நின்று மன்றாடி அருளாகிய நிரப்பமுள்ள முச்சுடரின் பரஞ்சோதி நிலையான தீட்சையென்னும் முரீதைப் பெற்றார்கள்.

அப்பாநாயகம் அவர்கள் காரணக்குருவாகிய ஷெய்கு பரீது தர்வேஷ்காதிரி அவர்களிட்ட வுத்திரவுக்கிணங்க இச்சென்னைமா

*கல்லிடை மாநகரமென்பது கல்லிடைக் குறிச்சி



நகரம் வந்து சேர்ந்து மௌலானா ஹாபிது முஹம்மது அப்துர் றஹ்மான் அவர்களிடமிருந்து, காதிரி, ஷாதிலி, நக்ஷபந்தி, இம் மூன்று தரீக்கும் பொருந்திய ஷாதிலி தரீக்கில் கிலாபத்துப்பெற்ற பின் சில பிள்ளைகளுக்கு முரீது கொடுத்தார்கள். யானும் என்குருவாகிய காமில் ஆரிபு ரோஷன் தர்வேஷ் றாஹுல் அஃலம் கலீபத்து ஷெய்கு ஷாஹுல்ஹமீது அப்பா தாஜுத்தீன் அப்துல்காதிர் நாயகம் கல்லிடைமாநகரம் கத்தஸல்லாஹு சிர்றஹுல் அஸீஸ் அவர்களிடம் நிரப்பமுள்ள அருளான முச்சுடரின் நிலைபொருந்திய முரீதைப் பெற்றேன். அதன்பின் என்குருநாயகமவர்கள் என்மனையில் ஓர் அரையில் ஹிஜ்றீ 1331-ம் வருஷ முதல் 1346-ம் வருஷம் வரை உள் அடக்கமாக இருந்து இபாதத்துச்செய்து வருங்காலத்தில் அழகு பொருந்திய ஞானத்திருப்பாடற் றிரட்டென்னும் இப் பாடலைப் பரிபூரணமாய்த் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

என் குருவாகிய அப்பாநாயகம் அவர்கள் என்மனையில் ஓரறையில் ஹிஜ்றீ 1335-ம் வருஷம் முஹர்றமாதம் பத்தொன்பதாவது இரவு நுழைந்து நாற்பதுநாள் நிரப்பமாய் சில்லா இருந்து றபீயுல் அவ்வல்மாதம் நிறைபிறை இரவு அல்லா உதவியால் சிறப்பாக வெளியில் வந்தார்கள்.

மறுபடியும் அப்பாநாயகம் அவர்கள் சென்னை, மீர்சாப்பேட்டையில் அமையப் பெற்றிருக்கும் ஓர் பூங்காவனத் தோட்டத்தில் ஹிஜ்றீ 1343-ம் வருஷம் ஜமாதுல்அவ்வல் மாதம் நிறைபிறை இரவு ஓர் அழகிய கல்வத்தறையில் நுழைந்து நாற்பது நாள் நிரப்பமாய் சில்லா இருந்து ஜமாத்துல் ஆகிறு மாதம் பதினாலாம் இரவு றஹ்மானுடைய கிருபையால் சிறப்பாக வெளியே வந்தார்கள்.

என் குருநாயகமவர்கள் பதினைந்து வருஷகால பரியந்தம் என் மனையில் அடக்கமாக இருந்து குர்ஆன் ஷரீபின் சட்ட திட்டங்களுக்கிணங்க இபாதத்துச் செய்து வந்ததைக் கண்ணுற்றதாலும் என் மனையில் பதினைந்து வருஷ காலம் வெளியில் போகாமல் அடக்கமாய் இருந்த குணாதிசயத்தைக் கருதியும் யான் என் குருநாயகம் அவர்களை முன்னுள்ள நாதாக்களைப் போல் இவர்களும் ஒருவர்களென்று என் மனச்சாக்ஷியாகத் திட்டமாய்க் கூறுகிறேன்.

என் குருநாயகமவர்கள் நிரப்பமாகக் கல்வத்திலிருந்து தபசு செய்து வருங் காலத்தில் ஒருநாள் காதிர் ஒலி ஷாஹுல் ஹமீது மீறான் சாஹிபு ஆண்டவர்கள் வந்து ஹாஸிறாகி என் குருநாயகம் அவர்கள் வாயில் தங்கள் வாயின் உமிழ்நீரைப் புகட்டி மேன்மையான நிலைகளையுஞ் சொல்லிவைத்து என் குருநாயகமவர்கள் முதுகில் ஒரு அடி அடித்து நிரப்பமாக இபாதத்துச் செய்யென்று சொல்லிப் பயங்கரப்படுத்தி விட்டு மறைந்ததாக என் குருநாயகம் அவர்கள் கண்டார்கள். அதன்பின் என் குருநாயகம் அவர்கள் மேன்மையான தபசு நிலையில் தரிப்பட்டு இபாதத்து நிரப்பமாய்ச் செய்து வந்தார்கள். என் குருநாயகம் அவர்கள் ஹிஜிரீ 1346-ம் வருஷம் றமலான் மீ நிறைபிறை வியாழக்கிழமை இரவானதால் 25உ ஞாயிற்றுக்கிழமை விலத்துல் கதிரி இரவு. அன்றிரவு ஆகாயத்திலிருந்து பூரணசந்திரன் கீழ்த் திசையிலிருந்து மேல் திசைக்கிப் பறந்துபோய் வானுக்கும் பூமிக்கும் மத்தியாக இறங்கி ஏழுதரம் வலமிடமாய்ச் சுற்றி என் குருநாயகம் அவர்கள் முன்னுக இறங்கிவந்து வேகமாய் நெற்றியில் ஒட்டித் தரிப்பட்டிருக்கக் கண்டார்கள். ஹிஜிரீ 1347-ம் வருஷம் முஹர்றம் மீ 23உ வியாழக்கிழமை இரவு ஆகாயத்தில் வான் உச்சியிலிருந்து பூரண சந்திரன் கீழே இறங்கி பூமிக்கும் வானுக்கும் மத்தியில வலமிடமாய் ஏழுதரஞ் சுற்றி என் குருநாயகம் அவர்கள் முன்னிலையில் வந்து வேகமாய் வலதுகை கலிமாவிரல் முனையில் ஒட்டி மிகுதி நேரந் தரிப்பட்டு அதன்பின் கலிமாவிரலிலிருந்து எழும்பி ஆகாயத்திற் பறந்துபோய் வானில் ஒட்டிக்கொள்ளவுங் கண்டார்கள். என் குருநாயகம் அவர்களின் நாமதேயம் ஆதியில் கலீபத்து ஷெய்கு ஷாஹுல் ஹமீது அப்பா என்றும், அதன்பின் ஆண்டவனின் அருள் தங்கி நிரப்பமாய் முச்சுடரின் அமலான இபாதத்து செய்துவருங் காலத்தில் றஹ்மானுடைய கிருபை கடாக்ஷத்தால் என் குருநாயகம் அவர்களுக்குக் கனம் தங்கிய நாதாக்கள் ஹாஸிறாகிவந்து அறிவித்த திருநாமங்களாவது:—ஆரிபு என்றும் அதன்பின் சிலநாளைக்குப் பிறகு ரோஷன் தர்வேஷ் என்றும் அதன்பின் சிலநாளைக்குப் பிறகு நிரப்பமான றூஹுடைய மகாமில் தரிப்பட்டு இபாதத்துச்செய்து வருங்காலத்தில் றூஹுல் அஃலம் என்றும், கல்புடைய மகாமில் தரிப்பட்டு இபாதத்துச்



செய்து தசுபீஹு செய்துவருங் காலத்தில் தாஜுத்தீன் என்றும், ஜலால் ஜமால் இரண்டும் பொருந்திய கமாலுடையபதி அமுதம் பொங்குந்தானத்தில் தரிப்பட்டு நின்று தபசுசெய்து தசுபீஹு செய்யுங்காலத்தில் என் குருநாயகம் அவர்கள் தாய் வயிற்றிலிருந்து குழந்தையாகப் பிறந்து கீழே கிடக்கவும், அந்தச்சமயம் சற்குரு செய்யிதினு முஹியித்தீன் அப்துல்காதிரில் ஜெய்லானீ றலியல்லாஹு ஆண்டவர்கள் ஹாஸிறாகி வந்து அந்தக்குழந்தையாகிய என் குருநாயகம் அவர்களுக்கு அப்துல் காதிர் நாயகம் என்னும் திருநாமத்தைச் சூட்டினதாக என் குருவானவர்கள் கண்டார்கள். ஆனதால் என் குரு நாயகம் அவர்களுடைய நாமதேயம் ஆரிபு ரோஷன் தர்வேஷ் றூஹுல் அஃலம் கலீபத்து ஷெய்கு ஷாஹுல் ஹமீது அப்பா தாஜுத்தீன் அப்துல்காதிர் நாயகம் கல்விடைமாநகரம் கத்தஸல்லாஹு சிர்றஹுல் அஸீஸ் என்று நாமம் தரிப்பட்டது. நான் எழுதிய சரித்திரச் சுருக்கமும் அதற்குள் அடங்கிய விஷயங்களும், உண்மையானதென்று சத்தியஞ்செய்து கூறுகிறேன். இனி பின்வரும் பதிப்புகளில் அவர்களுடைய காரண விஷயங்களும் சம்பூர்ண ஜீவிய சரித்திரம் முழுவதும் வெளிவரும். இப்போது என்னுடைய சிற்றறிவுக்குத் தகுந்தபடி ஜீவிய சரித்திரத்தை மெத்தச் சுருக்கி எழுதினேன்.

இப்படிக்கு,

**மதருஸ், முஹம்மது இப்றாஹீம் பயில்வான்.**

ஆமீன்ஆமீன் யாறப்பில் ஆலமீன்.

ஜீவிய சரித்திரச் சுருக்கம் முற்றிற்று.

ஹாமீம்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

# ஞானக் கமல மணிமாலை

## காப்பு

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரியம்.

பூரணமாய் நல்வழியி லாவதற்குப்
புகழுடையோன் முஹம்மதுநல் மூஹியித்தீனை
காரணத்தி னுட்பொருளாய்க் கண்டு போற்றி
கனமுள்ள நல்யார்கள் பாதம் ஏற்றி
ஆரணத்தைத் தெளிந்தவொலி மார்கள் பாதம்
அன்புடனென் சிரசிலனு தினமும்வைத்தேன்.
தாரணியில் இந்நூலைச் சிறியோன் சொல்லத்
தக்கோனே யெனக்கருளைத் தருவாய் காப்பு. (1)

வெண்பா.

ஆதியே நீதி அடங்காத மெய்ப்பொருளே
சோதியே எங்குஞ் சுடரொளியே—நீதமுள்ள
கமலமணி மாலைதனைக் கர்த்தனே யான்பாட
அமலமுள்ள மகிழ்ச்சியெனக் கருள். (2)

ஆசிரிய விருத்தம்.

முத்தொடு பவளம் பச்சை முறையருள் தன்னைக்காட்டும்
பத்தியாய் இந்நூல்தன்னைப் பாருளோ ரறியச் சொன்னேன்
சித்தியா யிருந்திந்நூலைத் தெளிவுட னுணர்ந்து பார்க்கக்
குற்றங்க ளகற்றி வைக்கும் குருவருள் காணலாமே. (3)

வெண்பாக்கள்.

பத்தியா யானும் பணிந்திறைஞ்சி நாடுவதைச்
சித்திக்கச் செய்தருள்வாய் செல்வனே—பத்தியுடன்
தெளிவாக யான்வணங்கத் திறமான நல்லருளை
அழிவில்லா வல்லவனே அருள். (4)

அல்லா ஒருவனையும் அற்புத முஹம்மதையும்
நல்லாக வுள்ளறிந்து நாடியபேர்—வல்லார்கள்
மண்ணி லழியாரே வான்பொருளைக் கண்டபலன்
எண்ணிமுடி யாதுதொழ எண். (5)

விருத்தம்.

வளமுள்ள ஷரீஅத்தான வழியதோர் தொழுகையெல்லாம்
தெளிவதாய்த் தொழுதுகொண்டு திண்மையாய் ஆறைந்தான
களமில்லா நோன்பைநீயும் கருதியே பிடித்துக்கொண்டு
தழங்கலாய் ஷாலைநீயுஞ் சாருவாய் நலமாய்க்கண்ணே. (6)

நலமுள்ள தரீகத்தான நல்விதப் பாதைதன்னைப்
பெலமுடன் அறிவாய்பின்னே பெருமையோர் ஹகீகத்தாலே
தலைவனை வணங்கிப்பின்பு தன்மையா யிருந்துநீயும்
கலங்கல்விட் டவனைநன்றாய்க் கருதியே வணங்குவாயே. (7)

வணங்குவாய் மஃரிபத்தின் வளமுள்ள வணக்கமாகும்
குணநிதி தனைப்புகழ்ந்து கூர்மையாய் அறிவாயப்பா
கணக்க மில்லாமல்நித்தம் சுத்தனைத் தொழுதுகொண்டு
தனமுஹப்பத்து முஃதி தாத்தினை யறிந்துபாரே. (8)

அறிந்துபார் முஃதிதாத்தை யன்புடன் தெளிவதாக
குறிப்புடன் வணக்கந்தன்னைக் குவலயத் தறிவாருண்டோ
சரியதாய் அறிந்துகொண்டு சங்கையா யறிவன்தன்னை
நெறியுடன் சுஜூதுசெய்து நிலைத்திட மேன்மைதானே. (9)

தானவன் பாதையாறும் தவறிடா வணங்கிப்பின்பு
கோனவன் மகாமெட்டுந்தான் குறைவிலாத் தெளிவாய்ப்போற்றி
மோனமாய்த் தொழுதுகொள்வாய் முச்சுடர்வணக்கமொன்றாய்
ஈனன்யான் தெளிவதற்கு இறைவனே அருள்தாறப்பா. (10)

இறைவனின் முஃதிதாத்து இன்பம்நல் தம்ஹூத்தாகும்
கறையில்லாக் காட்சியான காரணச் சுடருந்தோன்றி
குறைவில்லா தெழுந்துநிற்கும் குறிப்புமுச் சுடருமாக
திரையில்லா வணக்கமென்று இறையவன் கலாமில்சொன்னான். (11)

இவ்வகை வணக்கந்தானே யிறையவன் தொழுகையாரும்
திவ்விய சுடருமூன்றில் தெளிவதாய் மௌனநீயில்



செவ்வியாய் அம்பையொட்டித் திருக்கலிமா வுரைத்து
நவ்வியாய்க் கீழ்முனையில் நயனங்கொண் டணைத்துக்கொள்ளே. (12)

கோனவன் மிஃறாஜியில் குருநபி தனக்குச்சொன்ன
தானவன் ரகசியத்தின் தன்மையோர் வணக்கமாகும்
தீனவர் கலிமாக்காணத் திருக்கஞ்சு தலமிருத்தத்
கோனொளிகாண்பா ரென்று குருநபி யிறசூல்சொன்னார். (13)

இறசூலு லலிக்குரைத்த இன்பமுள் ளுபதேசந்தான்
மறந்தவர் மதிமயங்கி மன்னனைக் காணார்பாவி
சிறந்தவர் அருளதான ஜெகஜோதி தன்னைக்கண்டு
நிறைந்தவ னிவன்தானென்று நிச்சய மறிகுவாரே. (14)

அழகுள்ள முஷாஹிதாவை யறியவே சொல்லக்கேளு
தெளிவுடன் ஹறுபையெல்லாம் திட்டம தாகநாட்டி
தளிர்த்தெழும் வாசிதன்னில் தன்மையாய்க் கலிமாதன்னைச்
சளமற நீக்கியேற்றிச் சார்ந்திடு ஆசனத்தில். (15)

ஆசனம் குறுசுக்குந்தான் அலிபதை நாட்டிவைத்து
ஆசனம் அர்சினுக்கும் அழகுள்ள மீமைநாட்டி
வாசமீம் வாலைத்தொட்டு வரிசையாய் லாமைப்போடு
பாசங்கீழ் தாழ்வாய்மட்டும் பரிவுடன் நாட்டுவாயே. (16)

பரிசுத்தி தாமரைக்கும் பலனுள்ள றேயைநாட்டி
நெறியுள்ள றேயைத்தொட்டு நேசமாய் லாமைநீயும்
சரியதாய் வாவுக்குங்கீழ்ச் சங்கையாய் நாட்டிவைத்துக்
குறிப்புடன் லாமுக்குள்ளே குணமுடன் அலிபைப்போடே. (17)

அலிபதைக்குறுசுமட்டும் அன்புடன் நாட்டு நீயும்
கலியுடன் மாவுமென்ன கனமுள்ள ஹாவுமீமே
மெலிவில்லாக் கலியுமாவும் மேன்மைநல் ஹம்மதாகும்
சலிவில்லாக் கலிமாதன்னைச் சரத்துடன் தூக்கியேற்றே (18)

ஏற்றுநீசரத்தை நன்றாய் இரண்டெழுத் தாடேவைத்து
சாத்துசக்கதனைக் கண்ணே தன்மையாய் நோக்கிப்பார்க்கத்
தோற்றிடுஞ் சோதிதன்னைத் தொழுதுமே வணங்கிநின்றால்
கூற்றுவன் றுயரம் நீங்கிக் குணமுள்ள தௌசில் வாழ்வாய். (19)

அலிபது அல்லாவென்ற அலிபுமுன் அலிபதாகும்
மெலிவில்லா முஹம்மதென்ற மேன்மைமுன் மீமதாகும்
சலிப்பில்லா னல்லாவென்ற சார்ந்தமுன் லாமதாகும்
வலிவுள்ள றசூலின் றேய்தான் வளமுடன் அறிகுவாயே. (20)

வளமுள்ள றேயின் பின்னே வலிவுள்ள இல்லதென்ற
அழகுள்ள லாமதாகும் அன்புள்ள லாமுக்குள்ளே
தெளிவலிபதுதான் இல்லின் சிறந்த நல்லலிபுமாகும்
களமறும் இல்லல்லாஹு கடைசிஹே முதல்மீமான. (21)

மீமதுமுஹம்மதென்ற மேன்மைநல் முதல் மீமாகும்
மீமதும் ஹூவுஞ் சேர்ந்தால் மேன்மைநற் கலிமாவாகும்
மீமும் ஹேகலிமாத்தன்னை மேன்மையாய்ச் சாத்திலேற்றி
மீமும் ஹேகலிமாத்தன்னை மேன்மையாய் அறிந்துகாணே. (22)

காணமுச் சுடருமொன்றாய்க் கத்தனே அருள்தாறப்பே
பூணவே நிரப்பமாக்குப் பூரணத் தெளிவே நீதா
கீணனுக் கிடர்கள் துன்பங் கெடுதி நோயனைத்தும் நீக்கி
ஈனன்யான் முதிர்ந்த வயதுக் கிருந்திட அருள்வல்லோனே. (23)

அருளுள்ள தாத்தைக்கண்டு அன்புடனொடுங்கி நின்று
பொருளுள்ள சிபத்தைக்கண்டு போற்றவே நன்மையாக்கி
கருவி காணுதியெல்லாம் கத்தனே அடக்கிப்பொல்லா
இருளைக வொளிவாய்க்காண இலாஹியே அருள்வல்லோனே. (24)

வல்லனே நாவிலுள்ள வன்பிழையனைத்தும் போக்கு
நல்லனே யுலகமெங்கும் நாடிடுந் தெளிவேயாதி
சொல்லதின்பிழையனைத்தும் சோதியே நீக்கி மந்தன்
வல்வினை துன்பம் போக்கி வல்லவா அருள்வல்லோனே. (25)

வள்ளலானவனே யுந்தன் மாமலர் வாசந்தன்னைக்
கொள்ளவேயானும் நாடி குருவடி தேடிநின்றேன்
கள்ளனுன் செய்த தோஷம் கத்தனே நீபொறுத்து
எள்ளளவேனும் பாவம் இணங்கிடா தருள்வல்லோனே. (26)

உன்னையும் ஒருவனென்று உண்மையா யறிவதற்குத்
தன்னைத்தா னறிந்த எந்தன் சற்குரு தீட்சை பெற்றேன்



என்னையுங் காத்து ரட்சித் திடாது வராமல் நீக்கு
அன்னையும் பிதாவில்லானே அறியவும் அருள்வல்லோனே. (27)

திருவருளான பாதை தெளிவில்லா வாடிநின்றேன்
குருதொட்டு வுபதேசித்துக் குறிப்புடன் தாளுதிறக்க
அறிவுமுச்சுடருந் தோன்றி யகிலமெல்லா மறைந்து
மருமலர் பாதங்கண்டு மகிழ்ந்திட்டேன் தெளிந்திட்டேனே. (28)

முத்திரை வட்டம்போலே முன்னிலேவந்து தோற்றும்
சித்தொடு அருளுமானச் செல்வனி னொளிவு பொங்கி
எத்திசை புகழும் வல்லா னேகனு மென்னைக் காத்துப்
பத்தியாய் நிலையிலாக்கிப் பரன்பர னொளியிற் சேர்த்தான். (29)

வெண்பாக்கள்.

கண்ணுடிக் குள்ளே கலந்திருக்கும் அமுதமதை
உண்ணும துண்டு உணர்ந்தேன்யான்—விண்டலத்தில்
அருளான பூரணத்தை யன்புடனே கண்டறிந்தால்
குருபரனுங் கிருபைசெய்வான் குணம். (30)

ஆடாம லாடி அந்தரத்தில் நின்றிலங்கிப்
பாடாமற் பாடுகின்ற பரம்பொருளை—கூடதனுள்
காணாத பாவியெல்லாங் கருகுதலாய்த் தீயதனில்
வீணாகப் போவாரே விதி. (31)

விருத்தம் ஆசிரியம்.

வட்டமெய் வடிவைக்கண்டு வாசமு மலருமாகிச்
சட்டமாய் நிலையுமாகிச் சார்ந்திட அருளுமாகி
திட்டமாய் தீனிலாகி ஜெயம் பெற்று வச்ரமானேன்
மட்டிட முடியாவாழ்வை வல்லவன் அருள்செய்தானே. (32)

வெட்டருச் சக்கரத்துள் வீசிடும் வண்ணமாகும்
ஒட்டிடும் வண்ணமுள்ளே ஓராயிரந் தென்பூவாகும்
கட்டுமுப் பொருளையாய்ந்து கடந்தவர் வாசமாவார்
மட்டிலும் அடங்காநன்மை வல்லவன் அருள்செய்வானே. (33)

காணுதற் கெட்டாநின்ற கமலத்தின் பூவுதன்னைப்
பூணுதற் கருளைத்தந்து புகழவும் நினைவுதந்து

தீனுட நிலையுமாக்கி ஜெயம்பெறும் வழியிலாக
தோணுதற் குதவிதந்து துய்யவனருள் செய்தானே. (34)

கோடியே கோடிகாலம் குவலயத்திருந்து எல்லாம்
தேடியே வாழ்ந்திட்டாலும் ஜெகமதி லிறப்பதுண்மை
வாடியே தவத்தைச்செய்து வல்லவ னருளை கண்டு
நாடியே யிருப்பாய் கண்ணே நல்லவன் சுவனம்வாழ்வாய். (35)

வாழுவார் இறையைக் கண்ட வல்லவர் சுவனந்தன்னில்
தாழுவார் நரகந்தன்னில் தனியனைக் காணாப்பாவி
வீழுவார் துன்பநோயால் வினையது அணுகுமெத்தெந்
நாளுமே யுலகந் தன்னில் நலமதை யறிந்திலாரே. (36)

நலமுள்ள சுடருமூன்றும் நற்றவ மறிவாயப்பா
பெலமுள்ள தவத்தைச்செய்து பிரிசமாய்க் காக்ஷிகண்டு
குலமுள்ள கண்ணே நீயும் குறிப்புடன் தெளிவாயுன்சஞ்
சலமது விலகிப்போகும் சம்பூர்ணம் பெறுவாய்தானே. (37)

பெருகுமே பேரின்பந்தான் பிரியமுள் ளொலி மார்கட்கு
தருகுவான் நாடும்நாட்டம் தற்பரன் கொடுப்பான் நன்றாய்
சறுகுதல் வருகுமெத்தச் சம்பூரணம் அறியாப்பேர்க்கு
வருகுமே யறிந்து கொள்வாய் வல்லவ னருளைக் காணே. (38)

வல்லவ னருளைக்கண்ட வல்லவர் கோடிக் கொன்று
வெல்லுவா ரிபுலீசைத்தான் வெட்டியே பிளந்துநன்றாய்
சொல்லொணாப் பொருளின்சூக்ஷம் சுயமதையறிந்த சீமான்
நல்லவன் சொர்க்கந்தன்னில் நன்மையாய் வாழுவாரே. (39)

நன்மையாய்க் காமில்தன்னை நாட்டமாய்த் தேடிச்சென்று
பொன்மலர் பாதந்தொட்டுப் புகழுடன் முத்திநின்று
தன்மையாய்க் கையைத்தொட்டால் தனியனி னருளுங் காண்பாய்
குன்னருள் குருவைக்காணக் குலயத் தரிதுதானே. (40)

தானவன் அலிபுலாமீம் தங்கமே ஐம்பத்தொன்று
காணவே அரிதுசொன்னேன் கண்மணி யறிவுள்ளோனே
தோணவே செப்பிவைப்பார்த் துய்யவன் காமில் கையைப்
பூணவே மட்டிடாத புதுமைநல் லொளி காண்பாயே. (41)



ஒளியது மதிப்பிடாத வுண்மையே சுடர்தான்மூன்றும்
அழிவது இல்லையப்பா அவனியி லறிந்த பேர்க்குத்
தெளிவது இலங்கும்பாரு செல்வனின் கிருபையாலே
இழிவொன்று மவர்கட்கில்லை இறையவனருள் கண்டோர்க்கே. (42)

## மகுட விருத்தம்.

அருளான தலமஞ்சறிந்திடாப் பாவிகள்
ஆறான தல மறிவரோ
பொருளான திருவருளை யறியார்கள் அஞ்சான
புகழுடைய தலமதறியார்
குருவருள் கிரப்பமுள் ளகவிழியை யறியாத
குருடர்கள் ஷெய்காவரோ
திருவான சுடர்மணியை யறியாத சிந்தையது
தெளியாதெந் நாளுமறியே. (43)

அறிவாயே தலமஞ்சும் அறியா திருப்பவர்
அரிதான தவமஞ்சையும்
குறியாக அறியார்கள் குவலயந் தன்னிலே
குருடர் களிவர்களறிவாய்
நெறியான தவமஞ்சும் நீதமா யெந்நாளும்
நேர்மையா யறிந்து தொழுவாய்
சரியான மேன்மைபெறு தௌசதனிலாக்கியே
தனியனும் நன்மை தருவான். (44)

தருவானே ஆதியுந் திறமான மாளிகை
சங்கையாய் நீதமுள்ள
பொருளான முச்சுடர் தெளிவான ஒலிகட்கு
புகழுடன் சொர்க்கவரிசை
சறுகுதல் வாராமல் தவஞ்செய்ய வல்லவா
தருவாய்நீ அருளுதவியை
வறுமையதை நீக்கியே அழகாக வைத்திடென்
வலியனே நன்மையொளிவே. (45)

ஒளிவான கலிமாவில் அல்லாஹு நாலெழுத்
தொன்றைநீ தானறிந்து
தெளிவானநாலதில் ரண்டு மொன்றாகவே
செல்வமாய் அறிந்து நிதமும்

விழியான நேத்திரம் மத்திதனில் நோக்கியே
  மேன்மையைத் தானறிகுவாய்
அழிவான இபுலீசு மாயையது நீங்கியே
  அல்லாவின் நன்மை பெறுவாய். (46)

## ஆசிரிய விருத்தம்.

நன்மையே பெருகுமெத்த நல்வினை யறிந்தவர்க்குத்
தின்மையே வெருண்டுவோடுந் தெளிவுள்ள கண்ணேசொன்னேன்
முன்னவ னருளைகண்டு மௌனமாய் இருந்தால் நன்றாய்
தன்வினை நீங்கிப்போகும் தரணியில் மேன்மைதானே. (47)

தானவனை யறியாரெல்லாம் தரணியிற் பாவியாவார்
கோனவ னருளைக்காணாக் குருடர்களிடத்தில் மேன்மைத்
தீனிலைப் பொருளைப்பற்றிச் செல்வனை பேசவேண்டாம்
ஞானமே ஒளிவதான நன்மைபூரணந்தான் பாரே. (48)

பூரணம் இன்னதென்று புகழுடன் சொல்வா யப்பா
காரணக் குருவறிந்த கண்மணி விபரஞ் சொல்வான்
ஆரணந் தன்னைப்பார்த்து அலைந்துவாய் ஞானம்பேசி
நாரியர் மாயைவீழும் நலமிலா ரறிந்திடாரே. (49)

அறிந்திடார் கெதிதானென்ன அருளில்லாப் பாவியாகித்
திரிந்தலைந் துலகந்தன்னிற் சீர்கெட்ட மடையனாவான்
நெறியுள்ள வணக்கமான நீதிமுச் சுடருங்கண்டு (50)
குறிப்புடன் தவஞ்செய்தோர்கள் குதாயாதிப்பதியில் வாழ்வார்.

## அறுசீர் தோங்கல் விருத்தம்.

ஆதி பெரியோனே முடிவில்லானே
  ஆலம் அடங்கலும் படைத்தவனே
நீதி யருமையே நிகரில்லானே
  நித்தமடியார்கள் புகழுங் கோனே
ஓதி மறையெல்லாம் புகழ்ச்சியாக
  உரைத்தாலும் உன்னைக் காணரிது
சோதியருளேயான் நல்விதமாய்த்
  துலங்க அருளதைத் தந்தருள்வாய். (51)



துலங்கும்குறு ஆனை நிரப்பமாகச்
  சுயமாய் தெரிசித்து வணங்கிடவும்
இலங்குங் குதறத்தா னவனே நன்றாய்
  ஏழைக் கிரங்கியே மிடிமைதுன்பம்
கலக்கம் பிணிநோய்கள் பலஆபத்தும்
  கருமம் எனைவந்து அணுகாமலே
நிலைக்குந் தவமதைச் செய்தீடேற
  நெடியோனே அருள் தருகுவாயே. (52)

அருளை யறிந்திடாக் கொடியபாவி
  அநேகம் பிழையெல்லாஞ் செய்திருந்த
சிறுமை யாகிய தோசி தன்னை
  ஜெகத்திற் குழிபரித் தடக்கியபின்
திருவானவன் மலக் கிறங்கிக் கேள்வி
  திண்மையாகவே கேட்பாரென்று
உறுதியாகவே தெரிகின்றது
  உரைக்கந் நேரத்தி லருள்தா றப்பே (53)

உரத்த சத்தத்தோ டதிரக்கோபத்
  துடனே மலக்கவர் கபுறில்வந்து
நெருப்பு அனல்போல்கண் பொரிபறக்க
  நீதன் மலக்கவர் எனைக்கேள்விகள்
பறக்கப் பறக்கவே கேட்கும்போது
  பயந்திடாமல் யான் அதிரிடாமல்
சிறந்த அருளெனக் குடனே தந்து
  செப்ப வுதவிசெய் செல்வனேகா. (54)

செல்வமாகிய ஆதியேநீ
  ஜெகத்தி னுயிர்க்கெல்லா பிரணமீயும்
கல்லானே நீதி தெளிவுள்ளோனே
  நாடும் பேர்களின் நினைவின்படி
வல்லா துஆவை நீ கையேற்றுமே
  வாகாய்க் கிருபைகள் செய்யுங்கோவே
அல்லாவே யென்னைக் கபுறில்வாதை
  யடித்திடாமல்நீ யுதவி செய்வாய். (55)

உதவிசெய்திடும் பரம்பொருளே
    உலகிற் பகையாளர் எனக்கில்லாமல்
நிதமும் அடியார்கள் புகழுங்கோனே
    நேசமாக்கிவை யாவரையும்
பதமுன்கதியல்லால் யாருமில்லை
    பாசக்காமவே ரறவே செய்து
மதியைத்தருவாய் நீ நிரப்பமாக
    மாசில்லாமணி அருளுள்ளோனே. (56)

மாசில்லாமணி விளக்கானவா
    வறுமை மறப்பெல்லா முசீபத்துவும்
நாசமாகவே வருங்குற்றங்கள்
    நயங்களில்லாத மனச்சலிப்பும்
தேசிகாஎனக் கணுகிடாமற்
    சிறந்தவுனதருள் தந்தெனக்கு
ஆசையாகவே நல்வினையில்
    ஆக்கிக்கிருபைசெய் யாஅல்லாஹு. (57)

அல்லாஎனைப்பெற்ற மாதாபிதா
    அன்பாய்வளர்த்திடும் தந்தை தாய்க்கும்
வல்லா இவர்கட்குப் பதமுத்தியை
    வரிசையாகவே நீகொடுப்பாய்
பொல்லா இபுலீசை வென்றுநித்தம்
    புகழ்ந்து தெரிசிக்க எனக்கருளை
எல்லாவுயிர்கட்கும் மேலானவா
    எங்கோனே தந்து அருள்சேர்ப்பாயே. (58)

எங்கோனாகிய ஏகனே நீ
    எனக்குமுதிர்ந்ததோர் வயதைத்தந்து
சங்கையாகவே யுனதருளிற்
    சரியாய்நிரப்பமுள் ளவனுமாக்கி
தங்கும்படியருள் கிருபைசெய்வாய்
    தனியனாதியே தயாபரனே
மங்காமணி விளக் கானகோனே
    வல்லவா அருள் அம்பரனே. (59)



கலி விருத்தம்.

அம்பரப்பொருளான அறிவதை
நம்பிநின்றவர் நாயனடியவர்
வம்பர்கட்கிது வாய்க்குமோ நன்னெறி
எம்பிரானைக் கண்டோ ரின்பமாவரே. (60)

வேறு ஆசிரியம்.

இன்பமா குலவோஞானத் திருவிழி நோக்கினோர்கள்
தன்மைமுச் சுடருங்காண்பார் தனியனி னருளிலாகி
நன்மையே பெருகிமெத்த நல்லவன் சுவனந்தன்னிற்
கன்மங்கள் துலைந்துமேன்மைக் காக்ஷியாய் வாழ்வார்தானே. (61)

தானவன் சூக்ஷங்கேளு தயவுடன் தாரைதன்னிற்
கோனவ னருளைக்காணக் குறிப்புடன் இறுக்கிநீயும்
ஈனமொன் றணுகாத்தினை யின்பமாய்க் கனவில்லாமல்
வானொளிச் சுடரைநன்றாய் வகையுடன் தெளிந்தோர்நல்லோர். (62)

நல்லதோர் ஹுவுக் குள்ளேநலமதாய் அடங்கிநின்ற
சொல்லொணாப் பொருள்மீம் தன்னிற் சுயமுள்ளஹுவுமாமே
எல்லையிற் பொருளறிந்து இன்பமாய்த் தவஞ்செய்தோர்கள்
மல்லிகை வாசம்போலே வாழுவார் சுவனந் தானே. (63)

சுவனமாளிகையின் வண்ணஞ் சொல்லவே நாவுகாணு
தவசிகள் அறிவாரப்பா தீனவனொளிவுதன்னை
அவனியில் அறியாமூடர் அன்பில்லாக் கேடாகி
சவமதாய் மடிந்து நரகச் சள்ளையி லாகுவாரே. (64)

நரகினிற் சேர்வார் பித்தர் நன்மை யில்லாததோசி
அரவமுந் தேளுந்தீயாய் அதாபுகள் செய்யுங் கொட்டி
சிரமதில் விஷமதேறச் சீறியே கொத்துமுண்மை
பாரையும் அறிவாய்க்கண்டு பயந்துநீ வணங்குவாயே. (65)

அறிவுள்ள பெரியோர்கட்கு அன்புடனுரைத்தே னிந்நூல்
அறிவில்லாப் பாவிகட்கும் அன்பில்லா மூடர்கட்கும்
தெரிவைய ராசைகொண்டு தீனுள்ள பெரியோர்தன்னை
சிறிதென்று புறங்கள்பேசும் சிறியனுக் குரைத்திடாதே. (66)

உரைத்ததால் வருங்கொடுமை யுலகத்திற் பாவியென்றும்
முறையுள்ள ஷாஹுலெல்லாம் முறைப்படி யறியானல்ல
ஷாஹுயே கெடுத்த பாவி சண்டாள னிவன்தானென்றும்
மறையொளி யறியாப்பாவி மண்ணினில் மொழிவாணப்பா. (67)

அறிவுடன் கேட்கக்கேட்க அன்புட னுபதேசத்தைப்
பரிவுடன் சொல்வார் நல்லோர் பாவங்கள் நீங்குநீக்கி
குறிப்புட னிருந்துநீயுங் குருவருள் தேடிக்கொண்டால்
சிறப்புடன் மகிழ்ந்துநித்தஞ் செல்வத்தை யடைய லாமே. (68)

வெண்பாக்கள்.

மேதினியில் வாழ்கின்ற மேன்மையுள்ள மானிடரே
ஆதிநிலை யறியாமல் அழிகின்றீர்—வேதமுள்ள
பூரணத்தைக் கண்டு புகுந்தறிந்து பார்த்தவர்கள்
காரணத்தி லாவதுண்மை கனம். (69)

கல்லையுருக்கக் காரணமாய் தீபவொளி
வெல்லுகின்ற சோதியாய் விளங்குமே—நல்குதலாய்
உள்ளெழுத்தைப் பூட்டி யுணர்ந்துநின்றால் பூரணத்தின்
வெள்ளெழுத்தைக் காண்பாய் விதி. (70)

வேறு ஆசிரியம்.

பகாய் நற்சிறப்பைக் காணப் பாவிகள் பெருமைபேசி
நிகரில்லை யென்றுசொல்லி நேர்மையாய்த் துதித்துநிற்பார்
அகமதிலிருளை நீக்கி ஆரணத்தெட்டா நின்ற
சுகஞானி கண்டோர்நல்லோர் கனமுள்ளோ ரிவர்கள்தானே. (71)

வரத்துடன் எழுத்தைநோக்கி வகையுடன்பார்ப்பார் நல்லோர்
திறத்துடன் மூலந்தன்னிற் றெளிவதாயதிலே நின்று
சரத்துடன் எழுத்திரண்டைச் சங்கையா யேற்றியேற்றி
கருத்துடன் காட்டிப்பூட்டக் கதிரொளி தோன்றுந்தானே. (72)

கட்டளைக் கலித்துறை.

கண்ணுக்கடங்காத திருவொளிவான நற் கருவெழுத்தும்
தொண்ணூற் றிரண்டான சுருபாவும் ஆயிரத் தெண்பலரும்
விண்ணிலே முச்சுடர்தெளிவாகக் காணவும் மேன்மைதந்து
பொன்னுலில் வாழப் புகழ்தந்து சேர்த்தருள் பூரணமே. (73)



விருத்தம்.

பூரணமாக வெங்கும் பொங்குமே நடுவதாகக்
காரணமாக வோங்கும் கருவெழுத் தவிபுலாமீம்
ஆரணந்தனை யுணர்ந்து அன்புடன் தெளிவுகாணத்
தாரணி தனிலெனக்குத் தலீலதை யருள்வல்லோனே. (74)

வெண்பாக்கள்.

ஆல மறைந்து அற்புதமாய்த் தோணுகின்ற
மூலப் பொருளறிந்து முத்திக்கொள்—ஆலமதில்
பஞ்சபாதகம் நீக்கிப் பண்புதவந் தான்செய்து
சஞ்சலங்கள் தள்ளி நிற்பாய் தான். (75)

கண்மணியே காப கவுசைனி யானதிலே
நன்மை யறிவாய்நீ நலமாக—உண்மைதரும்
முச்சுடரைக் கண்டு மௌனமாய்த் தானிருந்து
சச்சிதானந்தனை நீ சார். (76)

வேறு ஆசிரியம்.

முச்சுட ருதயமாகு முக்கோண வீதிக்குள்ளே
அச்சுடரா யிலங்கும் ஆனந்த மதியைக்காண
நிச்சயமாக நன்றாய் நெறியெழுத் திருத்திப்பார்க்க
நற்சுட ரொளிவாய்நிற்கும் நலமுள்ள ஜோதிதானே. (77)

கண்ணதை மேலேநோக்கிக் கருத்துடன் பார்க்கப்பார்க்க
முன்செய்த வினைகள்நீங்கும் முழுமதி யிலங்கும்பாரு
சொன்னதை நினைவிற்பூட்டிச் சுயமுள்ள சாத்திரேலற்றித்
தன்மையாய்த் தவமேசெய்யத் தலமைந்தை யறிகுவாயே. (78)

அஞ்செழுத்தானதென்ன அல்ஹம்து ஐந்து பூதம்
அஞ்செழுத்தொன்றில் நின்று அறிவுடன் தெளிவைக்கண்டு
கொஞ்சியே பேரின்பத்திற் கூடியே கருணையாக
நெஞ்சினிலிருளை நீக்கு நெடியவா அருள்வல்லோனே. (79)

கட்டளை முழுமதாக இருக்குமோர் தீவுக்குள்ளே
பட்டணந்தனிலே ஐவர் பரிசுத்த ராஜனென்று
திட்டமாய் ராஜன்தன்னைத் தெளிவதா யறிந்துபார்க்க
வட்டமாய்த் தோன்றுமுன்னே மறையொளி காணலாமே. (80)

அலிபு லாமீமதனை யறியவே மூலந்தன்னிற்
சலிப்பில்லா வாசியோடே தானவனெழுத்தை யேற்றி
மெலிவில்லா திருக்க நீயும் மேன்மையாய் அருளுங்கூடும்
தலீலுடன் நிரப்பமாகத் தன்னினி லருள் வல்லோனே. (81)

வெண்பாக்கள்.

முத்தி உதித்த முஹம்மதுர் றசூல்நபியை
சித்தா யறிந்தவரே செல்வமுள்ளோர்—நித்தியமும்
காரணத்தின் நந்நபியைக் கண்டு பதம் பணிந்து
பூரணத்தின் மகிமைபெற்றோர் பொன். (82)

எம்பிரா னென்ற வெங்கும் நிறைந் தோர்பொருளைத்
தம்பிரா னென்றே தானறிவாய்—அம்பு கொண்டு
முன்பிரான் தன்னை முன்னிலை யறியாத
அன்பில்லார் கெடுவார் அழிந்து. (83)

வேறு ஆசிரியம்.

தோற்றமே யேழதாகும் துலங்கிய மனுவுந்தேவர்
ஆற்றிலே யுலாவும்மச்சம் அகிலமீ தெழும் விருக்ஷம்
சாற்றுமேவன் விலங்கினங்கள் சங்கையூர்வனங்கள் புட்கள்
தோற்றிடுந் தோற்றமேழாய்த் துய்யவ னமைத்திட்டானே. (84)

முச்சுடராக வந்து மூலத்தில் நின்றெழும்பும்
அச்சுடர் வடிவைக்கண்டு அன்புடன் வணங்கிநிற்க
வச்சிர தேகமாகும் வல்லவ னருளுமெய்தும்
இச்சைவிட் டொடுங்கி நின்றால் இறையருள் சேரலாமே. (85)

ஓங்கார வட்டமான வுட்பொரு ளறிவதற்குப்
பாங்குட னருள்கண்டோரைப் பதிதனில் தேடிச்சென்று
பூங்கழல் பாதந்தொட்டுப் புகழுடன் கேட்டுநின்றால்
நீங்கறப் பொருளைக்காட்டித் தெளிவதி னருள்சேர்ப்பாரே. (86)

துலங்குமுன் னெழுத்தைப்பூட்டச் சொலிக்குமே பிரகாசங்கள்
அலைகடல் கதிரோன்வானம் அவனியோ டிந்துமற்றும்
பலதுமே மறைந்துபோகும் பராபரம் ஒருவனன்றி
தலைவனி னிடங்கையேந்தித் தணிந்திரப் போரேநல்லோர். (87)



நல்லோர்கள் நாடிக்கேட்கும் நலமுள்ள துஆவைநித்தம்
நல்விதமாய்க் கைக்கொள்ளும் நலமுள்ள ஆதியேநீ
பொல்லாஞன் பாவிகேட்கும் புகழுள்ள துஆவைநித்தம்
அல்லாஹுல் கையூமான ஆதியே யேற்றுக்கொள்வாய். (88)

கொள்ளுநல் ஈமான் தன்னைக் குதறத்தாய் எனக்குத்தாவல்
தெள்ளிமைத் தெளிவேயேகா செல்வனே குறைவிலாமல்
கள்ளனென் றிபுலீசென்னைக் கலைவினி லாக்கிடாமல்
உள்ளமைப் பொருளைத்தந்து வுணர்ந்திட அருள்வல்லோனே. (89)

உணர்ந்திட நினைவும்நெஞ்சும் வொன்றதா யாக்கிவைப்பாய்
வணங்கிட வாசமான வன்னி மலர்தனில் வண்டாய்
இணங்கியே ஆதம்பாதம் இன்பமாய் ஸுஜூது செய்து
குணந்தனிற் குடிதான்கொள்ளக் கொற்றவா அருள்வல்லோனே. ()

ஆதியே துன்பநோய்கள் அசதி நித்திரையைநீக்கி
நீதியே கண்ணேறுயாவும் நித்தனை யணுகிடாமற்
சோதியே யென்னைக்காத்துத் துடர்பிடி யாகநித்தம்
தீதில்லாப் பொருளைக்கண்டு தெளிவதற் கருள்வல்லோனே. (91)

அடியனின் குலமதனை யாதியே தெளிவதாக
படிதனிற் றழைக்கச்செய்வாய்ப் பார்த்திபா நெடியகோவே
கொடியஞன் செய்தபாவம் குவலயந் தனிலேபோக்கி
வடிவுமுச் சுடரையானும் வணங்கிட அருள்வல்லோனே. (92)

மின்னிடுஞ் சுடரைப்போலும் விரிகதி ரொளிவைப்போலும்
உன்னத மதியைப்போலும் உலாவுமே நேர்மையாக
வண்ணமா யிருந்துநித்தம் வளமுள்ள தெளிவதான
தன்னிய னொளிவைக்கண்டு தவஞ்செய்தா லழியாய்நீயே. (93)

வெண்பாக்கள்.

துய்யமெய்ஞ் ஞானச் சுடரொளிவைக் காணுதற்கு
ஐயோ வுலகமெல்லா மலைந்தேன்யான்—கைகொண்டு
காதைவளைத் துபதேசம் காரணத்தின் குருசொல்ல
நீதமுள்ள அருள்கண்டேன் நேர். (94)

கலிமாச் சரமேற்றிக் கருத்ததனைத் தானிருக்க
மெலிவில்லா சிபத்தை மேல்காண்பாய்—கலிமாவால்

பறக்கும் ஞானக்கொடியும் பட்டமது போலாக
சிறக்கும் மரத்துச்சியின்மேல் சேர். (95)

பூட்டை யுடைக்கப் பொங்குமே ஞானமது
பாட்டைப் படித்ததனாற் பலனறியாய்—தேட்டமுடன்
வான்முப்பூக் கண்டறிந்து வளமாக நின்றக்கால்
தேனமிர்தம் இறங்குமுண்மை திறம். (96)

வேறு ஆசிரியம்.

ஹக்கது தாத்துமாகும் ககனப்பற் புவியிலுள்ளோர்
முக்கியமாக வாழ்த்தும் முஹம்மது சிபத்துமாகும்
தக்கதோ ரருளைக் காட்டித் தனியனை யென்னைக்காத்து
சிக்கற இருளைநீக்கிச் செல்வனே அருள்வல்லோனே. (97)

விண்ணொளிவாக நின்ற மேலவன்காஷி தன்னில்
மண்ணினி லுகப்பில்லார்க்கு மன்னவ னருள்கிட்டாது
பொன்மணி யருளாய்வந்த பூரண வடிவைக்கண்டு
கண்மணைப் புரிந்தோ ரெல்லாம் நாயனி னருளிலாவார். (98)

கலிவிருத்தம்.

அட்ட சக்கரம் ஆறிரட்டு வாகுமே
திட்டமாகிய திவ்விய நிலையிலே
கட்டழகான நற்காஷிகள் காணவே
பெட்டகத்தைத் திறந்தருள் பெரியவா. (99)

வெண்பா.

அற்ப ஜலத்தாலே யன்பா யெனைப்படைத்த
தற்பரனை யருமிடமைத் தானகற்றி—சிற்பரனே
உன்னருளைக் காட்டி யுகப்பா யடியனையும்
நன்மையறி வாக்கிடுவாய் நயம். (100)

வேறு ஆசிரியம்.

என்னையுங் காத்தாதித்தம் இடர்வினை துன்பம்நீக்கி
முன்பின்னுஞ் செய்தபாவம் முழுதுமே தீர்ப்பாய்கோவே
பொன்மணி மேடையான புகழ்பர வெளியிலாகும்
வெண்சுடர் வடிவைப்பார்க்க மீஷிதந் தருள்வல்லோனே. (101)



அந்தர நிலையிலாடும் அருக்கனைத் தழுகுதன்னை
வந்தனஞ் செய்துவந்த மௌனி பொற்பதியிற் சேர்வார்
அந்தரப்புவியில்யானும் செய்தவம் நிலைக்கச் செய்தென்
சிந்தையைத் தெளிவதாக்குச் செல்வனே யருள்வல்லோனே. (102)

வெண்பாக்கள்.

அஞ்ஞான வாசலிலே அமுதமது தான்கசியும்
கொஞ்சியதி லறிவாய்நீ குணமாக—வஞ்சமறும்
ஜோதியொளி முச்சுடருந் துலங்கும் நலமாக
நீதியா யறிந்தவர்க்கு நேர். (103)

கண்ணகக் கண்ணதினாற் காண்பாற் பெரியோர்கள்
விண்ணிலே நின்றிலங்கும் மெய்ப்பொருளை—திண்ணமாய்
அறிந்து தொழுவார் அடியார்களெல்லோரும்
நெறியாகத் தொழுதவரே நேர். (104)

ஆதியந்த மற்றதொரு அற்புதமே நற்சுடரே
நீதியற்ற பாவியென்னை நேர்சேர்ப்பாய்—தேமுள்ள
தாயையதைச் சாத்தித் தானவனைத் தானறியார்
பாயைவிட்டுச் சென்றால் பயம். (105)

வேறு ஆசிரியம்.

பயமது வருகுமெத்தப் பரமனை யறிந்திலார்க்கு
நயமிகு லாபமுண்டு நாயனை யுணர்ந்தபோது
கபர்கள் மெத்தவுண்டு காசினி தன்னில் வீணாய்
மயங்கிய மாயைதன்னில் மருள்குவா யருள்காணுமே. (106)

எழுசீர்ச் சந்த விருத்தம்.

அருளான வேந்தே வாபா திருக்கிலென்
அங்கமது வருகுதன்பே
பொருளான வுன்னருளைக் காணுத மடையர்க்குப்
பொன்னுலகு வாழ்வு முண்டோ
திருவாதி அமனென்ற பரனை சுயப்பொருளைத்
தெளிவா யறிந்து தொழுமே
கருவான ரூஹ்மதின் திரையைய யறுத்திடென்
ஹக்கொற் றீப மணியே. (107)

ஹக்கையென் னிருதயங் கனிந்து அறிவாகவும்
கருவான சூக்ஷ மதனை
எக்காலமும் யானும் தெரிசிக்க வுதவிசெய்
ஏகஅரு ளான பொருளே
மக்கா முஹம்மதெனும் நபி சபாஅத்தி லெனை
வல்லவா கரை சேர்த்துமே
தக்கபடி நித்தியம் தவஞ்செய்ய அருளுதவி
தருவாய்நற் றீப மணியே. (108)

வெண்பாக்கள்.

உம்மில் கிதாபுசபூ ருறுகிதிரு குறுஆனை
செம்மையாய்த் தானறிவாய் சிறப்புடனே—இம்மியாய்
கண்டு பிடித்துக் கருத்தாகத் தானூன்றி
விண்ணிலே நோக்கவருள் மெய். (109)

குறுஆனைத் தெரிசித்துக் கூர்மையுடன் நித்தியமும்
வரிசையா யோதிவந்தோர் வல்லோர்கள்—திருவருளில்
புகுந்துகலி மாவுறைத்துப் பொற்பதத்தில் தான்வீழ்ந்து
மிகுதியாய் நிற்பவரே மேல். (110)

அதிக இருளடர்ந்த அவ்வனத்திற் சென்றுகையை
மதியாக ஊன்றியெடு பாக்கனியைக்—கதியாக
அருந்த வுமைகுயிர்கள அகிலாண்ட முமறந்து
திருவருளைக் காண்பாய் தினம். (111)

ஆசிரிய விருத்தம்

தீவினை யகற்றிவைக்கும் தெளிவுள்ள மௌனமில்லாப்
பாவிதான் மௌத்துவேளைப் பாதவித் திடுவானப்போ
ஆவினில் நிரம்பிநின்ற அரும்பொரு ளறிவதற்கு
நோவினை யகற்றிவைத்து நூரொளி யருள்வல்லோனே. (112)

பொய்யினைப் பேசிப்பேசிப் பிறர்தனக் கிடர்கள்செய்து
மெய்யினைப் பொய்யென்பார்கள் வேதத்தி னருளைக்காணார்
கையது தவறிநின்று நடுமான் வலைக்குள்ளாவார்
ஐங்கனி பழுத்தெழும்ப அருந்தயான் அருள்வல்லோனே. (113)



கனியினி லினியவாசா கன்னியர் பாசம்நீக்கி
தொனியிலா வொளிவுமான தூண்டிடா மணிவிளக்கை
இனிமையாய் யானுங்காண இன்பமா யுதவிசெய்வாய்
தனியனே நேத்திரத்தின் தடையற அருள்வல்லோனே. (114)

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஆதியே அரும்பொருளே அன்புள்ளோனே
அருந்தவமே அரிதான அருமை யுள்ள
நீதிமணிச் சுடரொளியே நிகரில்லானே
நிச்சயமே தெளிவுடைய நீத கோனே.
ஜோதியொளி வாகவெங்கும் துலங்கி நின்ற
சுத்தமுள்ள மெய்ப்பொருளே சுயமதான
தீதற்ற மெய்ஞ்ஞான மருளே வேந்தே
தெளிவு உண்மை நேத்திரத்தின் திரையைநீக்கே. (115)

உண்மையுள்ள தவப்பொருளே மேன்மையான
உகப்புடைய நல்லோருக் குதவி செய்து
கண்ணிலுள்ள திரைபோக்கி யருளைக்காட்டுங்
காரணனே நற்பொருளே கருணையேகா
திண்மையுள்ள வுணதருளை நித்தங்கண்டு
தெரிசிக்கக் கிருபைசெய்வாய் தெளிவுள்ளோனே
வண்மையருள் பெரியோனே வாதை நீக்கி
வளமான நேத்திரத்தின் திரையைப் போக்கே. (116)

ஆசிரிய விருத்தம்.

கரும்பு கற்கண்டுசீனி கனிபழம் பாலுமான
நருமலரான வாசம் நந்தியின் வடிவிருக்கக்
குரும்புகள் மெத்தப்பேசிக் கூடியே கசப்பையுண்பார்
வெறும்பிலுக் குடையோரெல்லாம் வேதாந்த நிலைகாணாரே. (117)

வெண்பா.

முத்து மணிவிளக்காய் மூலக் கொலுவெரியும்
பத்தம் பஞ்சாட்சரத்தைப் பார்த்தவர்கள்—பத்தியுள்ளோர்
கெடுதலெல்லாம் நீக்கிக் கிருபையுடனேயவர்கள்
கடுந்தவஞ் செய்வாரே காண். (118)

வேறு ஆசிரியம்.

பூவினில் வாசம்போலே பொருந்திய அமுதமுள்ள
மாவென்ற சோதியான வடிவுமுச் சுடர்கண்டோர்க்கு
நோவினை யனைத்தும்நீக்கி நாரதை யருள்வாய்ஹக்கே
பாவியென் பிழைகள்போக்கிப் பக்ஷம்வைத் தருள்வல்லோனே. 119

எல்லையின் விளக்காய்நின்று எரிந்திடு மொளிவேமுத்தே
தொல்லைகள் வாராமற்காத்துத் துய்யனே பிழைபொறுத்து
நல்லோர் வழியிலாக்கி நற்செயல் மனநிற்பூட்டி
கல்பினிற் கனியின்வாசம் கமழ்ந்திட அருள்வல்லோனே. (120)

அற்புதக் காட்சியான ஆனந்தச் சுடரேசித்தே
கற்பூரத் தீபம்போன்ற காவல ஞானேகோவே
பொற்பிரகாசமான பூரணவடிவைப் பார்க்க
பற்பல எண்ணம் நீக்குப் பரமனே யருள்வல்லோனே. (121)

திடமதா யுலகமெங்கும் தேடிடும் அறிவன் தன்னை
திடருவாய் பாவமெல்லாம் தூளதாய்ப் பறக்கும் பாரு
சடமதுட் கனிமாவான தவப்பொரு ளறிந்துகொண்டால்
தடையறும் பதவிசேர்ந்து தன்மையாய் வாழ்வாய்பாரே. (122)

பாரிரு விழியிடையே பதியா யிலங்குஞ் சோதி
கூருள சிபத்து மொன்றாய்க் கூடியே ஆடும்போது
காருநீ திமையதான கடுமிரு ளதனைப்போக்கி
மேருவி னருளைக் காட்டி மேன்மைதந் தருள் வல்லோனே. (123)

கலித்துறை.

பதியான மருமூதி ஊதித் தெழு முச்சுடர் பரம்பொருளை
விதியால் வருமென்று ஆராய்ந்தறியாத வீணர்களே.
மதியாக இப்பொருள் தெளிவாகக் கண்டு வணங்கிடுவீர்
நிதியான சொர்க்கம் படைத்தோன் தருவது நிச்சயமே. (124)

வேறு ஆசிரியம்.

குருமணி யதனுள்ளாகிக் குப்பகத் தனிலே பார்த்தால்
திருவொளியான வட்டம் தெளிவதாய்த் தோன்றுஞ்சோனேன்
இருளைவிட் டகற்றிவைத்து இசையவா இடர்கள்போக்கி
மருமலர் வாசங்கண்டு மகிழ்ந்திட அருள்வல்லோனே. (125)



உச்சிக்கு நேரே கீழே யுலாவிடும் அருளைக்காண
வர்சிரக் கயிற்றாற்பூட்டி வகையுடன் தெளிந்துபார்க்க
இச்சையை நீக்கிவைத்து இயல்பதை மேன்மையாக்கு
அச்சரத் தடங்காறப்பை யன்புடன் காணலாமே. (126)

வெண்பாக்கள்.

ஐயெட்டு நாற்பதுக்குள் அலங்கார மெய்ப்பொருளை
வையகத்தி லறிந்தோர்கள் வல்லவர்கள்—மெய்யதனில்
தாக்கியே நின்று தன்மைவிழி மத்திதனில்
நோக்கவருள் தெரியுமங்கே நூர். (127)

மூலக் கொலுவதென்ற முச்சந்தி மேடையிலே
பாலர் முழுமதுவைப் பாங்குடனே—மேலாக
கண்டு தெளிந்த காரணர்கள் எல்லோர்க்கும்
பண்புண்டாம் பாவம்போம் பார். (128)

வேறு ஆசிரியம்

பலனுள்ள மஹ்மூதாவிற் பார்ப்பார்கள் பெரியோரெல்லாம்
வலம்புரி சோதிக்குள்ளே மைவடிவா யிலங்கும்
தலமதை யறிந்து நின்று தாக்கியே தன்னுள் நோக்க
மலைவதை நீக்கிவைப்பாய் மன்னனே அருள்வல்லோனே. (129)

கட்டளைக் கலித்துறை

ஹூரா யிருந்தாலும் உற்றா ரிருந்தாலும் உலகமதில்
வாரார்கள் நாளை கடைவழிக்கே துணை வருபவரோ
பேராசையாம் புவி யிச்சையை நீக்கியே பெரியவனே
கூரான வாழ்வுங் குறையாத செல்வந்தா கொற்றவனே. (130)

சொல்லால் வரும்பிழை செயலால் வரும்பிழை தொழாப்பிழையும்
நல்லானே யின்னுங் கொடுஞ் செயலான நயக்கெடுதல்
பொல்லாத பாவியான் செய்தபிழைகளைப் பொறுத்தருள்வாய்
கொல்லாத வேதனே குறையாத செல்வந்தா கொற்றவனே. (131)

என்றுமுள்ளோ னிறை பொற்பதமேயருள் என்றுமுனை
நன்றாக யானும் வணங்க வுதவிசெய் நாயகனே
அன்றாடஞ் செய்த பிழைக ளனைத்தும் அகற்றிவைத்துக்
குன்றாத வாழ்வுங் குறையாத செல்வந்தா கொற்றவனே. (132)

பெண்டிரும் மக்களும் பேராசையானதும் பிரியமங்காள்
அன்றோடே பூதலந் தன்னிலே தங்கிடும் ஆசையெல்லாம்
சென்றோடும் வாழ்வெலாம் செல்வனை நீக்கியுன் திறமையுள்ள
குன்றுதவாழ்வுங் குறையாத செல்வந்தா கொற்றவனே. (133)

ஆசைப் பெருக்கான பேரின்பமானதில் ஆசைகொள்ள
தேசிகனாகிய இறையே கிருபைநீ செய்தருள்வாய்
காசாசையான பேராசை கொள்ளாமற் காத்தருள்வாய்
கூசாத இறைவே குறையாத செல்வந்தா கொற்றவனே. (134)

மாயை பெண்ணாசையை நீக்கிவை யேகனே வல்லவனே
காயமதானது தேறியே நற்கரை கண்டிடவும்
தேயமதானதைப் புவியில் வைத்தாலும் மண் தீண்டாமலே
தாயமதாகிய ஏகனே யுதவிசெய் தற்பரனே. (135)

முட்டித் ததும்பி மூளைத்தெழும் முச்சுடர் முன்னறிவை
மட்டித்தனங் கொண்ட மூதேவி யறிவனோ வையகத்திற்
கட்டைதனில் வைத்துப் போகு முன்னேயிக் காசினியிற்
திட்டமதான சற்குருவை யறிவாய் சிறப்புடனே. (136)

ஆரா யிருந்தாலும் பலனில்லையே யிந்த அகிலத்திலே
சீரான பூவாழ்வு நிலைநிற்குமோ அது தெறிவிடும்
கூரான தெளிவுள்ள முச்சுடரைக் கண்டு கூர்ந்துதொழு
நேரான காக்ஷியைக் காணுதவர்க்குமே நிலையில்லையே. (137)

கூடியே சேர்ந்திடு நல்லோரைக் கண்டுதான் குவலயத்தில்
தேடியே சென்றுநல் லுபதேசம் பெற்றுயுன் சிந்தையது
வாடியே யேகனைக் கண்டு கூரானநல் மாக்ஷிகண்டு
நாடியே நீயிரு திருப்பதம் பெறுவது நல்ஜெயமே. (138)

நல்லார் உறவு இருந்தா லுலகினில் நன்மையுண்டும்
பொல்லாருறவது புகழான இன்பத்தைப் போக்கிவிடும்
வல்லானைக் கண்டுநல் லன்பாகவே தொழு வரிசையுடன்
நில்லாது பாவம் நிலையாது இது நல்ல நிச்சயமே. (139)

மனையாள் மருட்டலும் மக்கள்மருட்டலும் வையகத்தில்
வினையாகவே வந்து மூடிவிடும் இது மேன்மையில்லை



கனமான வொளிவதைத் தெளிவா யறியாத கசடர்கள்தான்
தனமான சொர்க்கத்தி லேகா ரறிந்துகொள் சத்தியமே. (140)

முத்தான முச்சுடர் கண்டுக்தெளிந்து முறையறிந்தாற்
சித்தான தெல்லாம் வருகுமப்பா நற் செல்வமுடன்
கத்தாமல் நித்தியந் தெளிவாயறிந்துமே காக்ஷிகண்டு
எத்தேசகாலமும் வணங்க அருளது இலங்கிடுமே (141)

காடான வனமதி லாகிடுமோ நீர்க் கரைதனிலோ
மேடான பூமியி லாகிடுமோ நல் மேன்மையுள்ள
வீடான மனைதனி லாகிடுமோ இந்த மேனியது
நாடான நக ரடைந்திடுமோ தெரிந்திலன் நாயகனே (142)

நாயகனே யென்னை யாதரித் தாளுவாய் நற்பரனே
நேயமதாக வென் பேரி லிரக்கம்வை நெடியவனே
காயமதானது நன்று யடங்கிடக் காசினியில்
தாயமதாகக் கிருபை செய்வா யருள் தாபரனே. (143)

கலிவிருத்தம்.

ஐனுக்குள்ளே யடங்கிய சூஸ்த்திரம்
ஐனுக்குள்ளே யடக்கம தாகிடும்
ஐனுக்குள்ளே நிரப்பம தாகிய
ஐனைநன்றாய் அறிந்திடு நெஞ்சமே. (144)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஞானமதை யறிந்தோர்கள் நயமான மேன்மையுள்ள
நல்லோராகும்
ஞானமதை யறிந்தோர்கள் நன்மையுள்ள ரத்தினமே
நாநிலத்தில்
ஞானமதை யறிந்தோரைக் காணுவது அரிதாகும்
ஞாலம் தன்னில்
ஞானமென்ற தீபவொளி முச்சுடரை யறிந்துநின்றால்
நலமதாமே. (145)

பணம் பொருள்கள் யாவுமுந்தன் கூடவரா தென்பதுதான்
பரிமேயாகும்
பணம்பொருள்க ளாசையெல்லா முலகமதிற் றங்கிவிடும்
பாழதான

பணம் பொருளை பரகதிக்குச் செல்லாமல் நிறுத்தி வைக்கும்
பாசமாயம்
பணம் பொருளி னாசையற்றுப் பார்தனிலே தவஞ்செய்தால்
பலனுண்டாமே. (146)

பெண்ணாசை யானதுதான் பூரியா யாக்கிவைக்கும்
பேரின்பத்தை
பெண்ணாசை யானதுதான் பொல்லாத மாயைவிஷம்
பெரியோர்கட்கு
பெண்ணாசை யானதுதான் புகழ்தவத்தைக் கெடுக்கின்ற
பேயதாகும்
பெண்ணாசை நீக்கிவைத்துப் பேரின்பத் தவஞ்செய்தால்
பெறுவாய் முத்தி (147)

கொலை களவு பொய் காமம் குருநிந்தை குவலயத்திற்
கொடிய குற்றம்
கொலை களவு பொய் காமம் குருநிந்தை கோதனிலே
கொடிய தோஷம்
கொலை களவு பொய் காமம் குருநிந்தை செய்தாக்காற்
கோட்டனாகும்
கொலை களவு பொய் காமம் குருநிந்தை நீக்கிநித்தம்
குணத்திற் சேரே. (148)

தவஞ்செய்தோர் அகிலமதில் மேன்மையுள்ள மனிதர்களில்
தன்மையானோர்
தவஞ்செய்தோர் தரணிதனில் மாணிக்கக் கல்லாகும்
தங்கமாகும்
தவஞ்செய்தோர் தனியனவன் பதமறிந்த நன்மையுள்ள
தவத்தோராகும்
தவஞ்செய்து தனமறிந்து சங்கையுள்ள நல்வழியிற்
சாருவாயே. (149)

சாகாமற் செத்துஅருள் தெரிசித்தோர் மெய்ஞ்ஞானச்
சங்கையுள்ளோர்
சாகாமற் செத்துஅரு ளொளிவதனிற் குடிகொண்டு
தன்மை பெற்று



சாகாமற் செத்து அனுதினமும் முச்சுடர்கண்டு
தரணிதன்னில்
சாகாமற் செத்தவரே நன்மையுள்ள மேன்மைபெற்ற
தங்கமாமே. (150)

அக்கரைநீ செல்கையிலே யார்வருவா ருன்னோடு
அறிவில்லானே
அக்கரைநீ செல்கையிலே மனைவிமக்கள் பொருளாசை
யனைத்தும் பாழாம்
அக்கரைநீ செல்கையிலே யாருறவு மில்லையிந்த
அவனிதன்னில்
அக்கரைநீ செல்லுமுன்னே அருள்தவத்தைச் செய்துநிதம்
அன்பாய் நில்லே. (151)

மாணிக்கக் கல்லாமோ மற்றவர்கள் யாருமிந்த
மகிதலத்தில்
மாணிக்கக் கல்லாமோ வரிசையுள்ள முச்சுடரை
வணங்காப்பாவி
மாணிக்கக் கல்லாகும் வையகத்தில் மேன்மைபெற்ற
மகிமையுள்ளோர்
மாணிக்கக் கல்லாக மகிமையருள் தவமதிற்சேர்
வல்லகோனே. (152)

மானிடராய்ப் பிறப்பதுவே மண்ணுலகி லரிதாகும்
வண்ணமான
மானிடராய்ப் பிறந்தபின்பு மானிலத்தில் தவஞ்செய்யார்
வன்னிசேர்வார்
மானிடமே எவ்வுயிர்க்கும் மகிமையுள்ள பிறப்பாகும்
மகிதலத்தில்
மானிடனா யெனைப்படைத்த வல்லவனே தவமதிற்சேர்
வளமுன்னோனே (153)

பராபரமே படைப்பனைத்தும் படைத்தாளும் மேன்மையுள்ள
பரமானந்தம்
பராபரமே எவ்வுயிர்க்கும் உணவளிக்கும் நன்மையுள்ள
பரமஜோதி

பராபரமே யாவரையுங் காக்குகின்ற தெளிவான
பரனனந்தன்
பராபரமே மாயையெல்லாம் நீக்கியெனைத் தவமதிற்சேர்
பண்புள்ளோனே (154)

## சந்தவிருத்தம்

ஆதியந்த மானதே அருளதான நல்லொளி
ஆதியந்த மானதே அருளதான முச்சுடர்
ஆதியந்த மானதே அருளதான மெய்ப்பொருள்
ஆதியந்தம் விந்துநாதம் அறிந்து கொள்ளு அப்பனே. (155)

எட்டிரண்டுங் கூடினு விலங்கிநிற்கும் சக்கரம்
மட்டிடாத பேரொளிநல் வல்லமென் றறிந்திடு
திட்டமா யறிந்தபேர்க்குச் செல்வமேன்மை நன்மையே
மட்டிகட்கு இக்கெதியும் வாய்க்குமோ என்னப்பனே. (156)

சுக்கிலம் சுரோணிதம் சுயமதான ரண்டது
சுக்கிலமும் விந்தல்லோ சுரோணிதமும் நாதமே
சுக்கிலம் சுரோணிதந் துடர்ந்தேயுரு வாகினும்
சுக்கிலம் சுரோணிதத்தின் சூக்ஷமறி யப்பனே (157)

உண்மையான கதிர்மதியும் ஒன்றுபட்ட தெவ்விடம்
உண்மையான கதிர்மதி யுதிப்பொடுக்க மெவ்விடம்
உண்மையான முச்சுட ரொளிவையுந் தெளிவதாய்
உண்மையான ஞானியே யுரைத்திடுவீர் நீதியாய். (158)

கண்ணுறக்க மெவ்விடத்தில் கண்மணியே மேன்மையாய்
விண்ணதி லுலாவிநின்ற மெய்ச்சுட ரழகையும்
நன்மைஅஞ்சு பிஞ்சுகஞ் செழுத்தையுந் தெளிவதாய்
திண்மையான ஞானியே சிறப்புடனே செப்புவீர். (159)

நன்மையான தாத்துமே நடுவெரிந்த சுடரொளி
தன்மையான சிபத்தது தான்முஹம்ம தாகுமே
வன்னமான நல்லெழுத்தை வாசிதன்னிலேற்றியே
அன்புகா தடைத்தபின் னருளறிந்தே னுண்மையே. (160)

ஆதியென்றுஞ் சொல்லுவார் அனாதியென்றுஞ் சொல்லுவார்
வேதமெல்லாம் ஓதுவார் மேன்மையொளி கண்டிடார்
ஓதிஓதி யேயலைந்து உலகமெல்லாந் தேடுவார்
நாதனை ஆதிஜோதி நம்முள்ளிருந்துங் காணுவீர். (161)



நலமதான வல்லவன்றான் நம்முள்ளே யிருக்கையில்
உலகமெல்லாந் தேடித்தேடி ஓடியேதான் வாடுவார்
தலமதான காடுமலைகள் தரணியெல்லாம் அலைகுவார்
பெலமதான குருவைத்தேடிப் பிரிசங்கொள்வா யப்பனே. ()

நாட்டமென்ப தென்னடாநல் நந்தியொளி வென்னடா
நாட்டமிரண்டுங் கூடினால் நடக்கும்வித மென்னடா
நாட்டமாகத் தேடிநின்று நல்லருளைப் பார்த்தபேர்
வாட்டமெல்லாந் தீர்ந்துநன்மை வண்ணஞானி யெய்யடா. ()

தொட்டவுடன் ஜோதியுந் துலங்குமே நல்நீலமும்
வட்டவடி வாயிரத்தெண் மலரும்வந் திலங்குமே
முட்டிநின்று பார்த்திடும்நல் மோனமுள்ள மாந்தரே
திட்டமா யறிந்தபேர்கள் தெளிவதான ஞானியே. (164)

உடலுயி ரிருக்கும்போதே ஒருவனை வணங்கடா
உடலைவிட்டு உயிர்பிரிந்தால் ஒன்றுமில்லை பாரடா
உடலுயிரும் ஒன்றுபட்டால் உண்மையான ஜெயமடா
உடலுக்குள் ளிருக்குநந்தி யொளியைக்கண்டு அறியடா. ()

மூலமான பதியிலே முளைத்தெழுந்த நற்கொடி
காலமே யெழுந்துநாலைக் கட்டியருள் பாரடா
பாலதோடு கனியிருந்த பண்பதை யறிந்தபேர்
சீலமுள்ள அமுதமுண்டு செகத்தில்வாழ்வ துண்மைடா. (166)

அருமையான கருவிலே யமைந்துநிற்குங் காலையில்
உருவமே மறைந்தபோது ஒருவனை யறியலாம்
மறுவில்லாத ஜோதியை மகிமையாகக் கண்டபின்
பிறப்பதும் இறப்புமில்லை பேதமில்லா ஞானியே. (167)

மந்திரத்தை வாசிதன்னில் மாட்டிமேலே யேற்றவே.
அந்தரம் பரந்தஜோதி யதனிலே புகுந்தபின்
இந்திரனுந் தொண்டனு மிசைந்துநிற்குங் காலையில்
அந்தவேளை ஆதியன்றி அடங்கலும் மறைந்ததே. (168)

தானவனைக் கண்டபோது தாசனான தொண்டனும்
வானம்பூமி சகலமும் மறைந்துபோகும் அப்பனே
ஈனமெல்லாம் நீங்கிடும் இறையைக்கண்ட பேர்க்கெலாம்
தீனமில்லை மேன்மையாகி ஜெயம்பெறுவ துண்மையே. (169)

வில்லைத்தொட்ட போதுந்தன் வினைகளோடும் காதமே
எல்லைதன்னைக் கண்டறிந்து இன்பமாய் வணங்கடா
கல்வினுள்ளே தேகைகட்டும் காரணன் உயிர்க்கெலாம்
நல்லவித மமுதளிக்கும் நாயனை யிறைஞ்சடா. (170)

நாயனைத் தொழுதுகொள்ளு நன்மையுள்ள கண்மணி
காயம தழியுமுன்னே கண்டறிந்து கொள்ளடா
மாயமதி லாகிடாமல் வண்ணமுள்ள நல்லனைத்
தாயமாய் வணங்கினோர்க்குத் தங்குமேயன்மை நன்மையே. ()

ஆதியான தய்யனை அடியனுக்கிரங்கியே
நீதியான யேகனை நிதமுமென் பிழைபொறு
சோதியான நபிபொருட்டால் சொற்கவாழ்வு தந்தருள்
வேதனை யிருபதிக்கும் மேன்மைநல் லுதவிசெய். (172)

### வேறு ஆசிரியம்.

எந்தனின் தாய்தந்தைக்கும் எந்தனுக் குபதேசித்த
சொந்தமென் குருகட்கும் உடருள்ள பிறவியர்க்கும்
சுந்தம்நற் சேய்களுக்கும் கண்மணி முரீதுகட்கும்
நிந்தனை வாராமற்காத்து நீதனே கரைசேர்ப்பாயே. (173)

மாவினின் மலரின்வாசம் மணந்திடும் அந்தலத்தில்
தாவியவ் வமுதமுண்ணத் தனியனே யுதவிசெய்வாய்
தேவனே தொண்டன்கலீபத்து ஷெய்கு ஷாஹுல்ஹமீதென்
தீவினை யகற்றிவைப்பாய் தெளிவுள்ள ஏகநாதா. (174)

### கலி விருத்தம்.

அத்தனே அருளாக்கியே அம்பர
முத்திதன்னில் மூழ்கிடவே யருள்
சித்தமான திரங்கியே எந்தனை
வெற்றியானதிற் சேர்த்திடு வல்லவா. (175)

### ஞானப் பஃறொடை வெண்பா.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீ மேபாரில்
இஸ்மெனென் றிபுலீசைத் தூரக்கி—நசியான (176)

நத்தனே நயப்பொருளே ஜோதியே எந்தனை
நித்தமுங் காத்தருள்வாய் நேதனே—இத்தியுள்ள (177)



உண்மையே உற்பனமே உட்சுடரே தாபரனே
வண்மையே மேன்மைதரும் வல்லோனே—தன்மைதந்து (178)

என்னைத் தவமருளி யின்பமதி லாக்கிவைப்பாய்
குன்றாத சோதி குருவருளே—தொண்டருனை (179)

காணாமற் காணுகின்ற கத்தனே காவலனே
தோணாமல் தோணுஞ் சுடர்விளக்கே—வீணில்லா (180)

மட்டி லடங்காத மௌனமணி மெய்ச்சுடரே
வெட்டாத சக்கரமே வேந்தனே—திட்டமுள்ள (181)

முத்திதரும் முப்பொருளே மூதறிவே முன்னவனே
வெற்றிதரும் மெய்ஞ்ஞான விளக்கொளியே—பத்தியுடன் (182)

ஆராய்ந்து நோக்க அருள்தருவாய் அம்பரனே
கூரான வுதவிசெய்வாய் கோமானே—பாரிலெனைப் (183)

பழுதுவினை செய்யாமற் பாத்திபனே அம்பரனே
முழுமுதலே காத்திடுவாய் முத்தனே—வழுவில்லா (184)

ஆணைத்துக் கெட்டா தருந்திருவே ஆண்டவனே
பூரணனே மெய்ப்பொருளே பொற்பதமே—பூரணர்கள் (185)

தெரிசிக்கத் தோணுகின்ற செல்வனே சீமானே
அரிய அரிதான எங்கள் அல்லாவே—நெறியில்லார் (186)

அறியா தகப்பொருளே அன்பனே அற்புதமே
குறியான ஓங்காரக் குருபரனே—வரிசைதரும் (187)

சித்தேக பராபரமே தீபப்பெருஞ் சுடரே.
கத்தனே உள்ளமெழுங் கதிரொளியே—வெற்றிதரும் (188)

அம்பகத்தி னுள்ளிருக்கும் அதிசயத்தை யறியாமல்
வம்பாக நானிருந்தேன் வையகத்தில்—அற்புதகுரு (189)

கைப்பிடித்து வுபதேசம் காதிலே தானுரைத்து
ஐங்கலிமா இன்னதென்று அறிவிக்க—மெய்மயங்கி (190)

அண்டம் புவியாவும் அதிலடங்குஞ் சகலமதும்
இன்மையாய் மறைந்தபின் தெளிவாக—அண்டமெங்கும் (191)

ஏக வொளிவாய் எங்குமே தானிறைந்த
பாகமுள்ள மூச்சுடரைப் பார்த்தறிய—யோககுரு (192)

இவ்வுலகில் தெய்வமோ இகழ்ச்சியில்லா மாதவமோ
இவ்வுலகில் நிகருண்டோ யிவர்கட்கு—இவ்விதம்யான் (193)

போற்றிப் புகழ்ந்தேன் புகழான கண்மணியை
ஏற்றினேன் குருபாதம் என்சிரசில்—போற்றி (194)

இப்பொருளை யெல்லாம் ஏகனே நல்விதமாய்த்
தப்பாமற் செய்யத் தவமருள்வாய்—ஒப்பில்லா (195)

மூலச் சுடரே முடிவில்லா நற்பொருளே
சீலமா யெழுந்ததொரு திருவருளே—சாலமுள்ளோர் (196)

தேடி யலைந்தாலுந் தெரியாமல் நிற்பவனே
ஓடிவருவாய் மெய்யர்க் குத்தமனே—வாடாத (197)

தெள்ளத் தெளிவே தீங்கில்லாப் பொற்பதமே
எள்ளளவுங் குறைவிலா ஏகனே—கள்ளமில்லா (198)

அஞ்சு கணுவாகும் அதினுள் ளுறைந்தநடு
பிஞ்செழுத் தானநற் பெருமையதை—நஞ்செழுத்தோ (199)

உன்னியதைத் தொட்டால் உண்டாகுங் காரணங்கள்
தின்மைபல வருத்தமெல்லாந் தீருமே—தன்மையுள்ள (200)

வாழ்வதை நீதந்து வல்லவனே உன்னருளில்
வாழவே கிருபைசெய்வாய் வான்பொருளே—தாழ்மையுள்ள (201)

ஊணுறக்க மற்றவனே உண்மையே உத்தமனே
ஆணுமில்லாப் பெண்ணுமில்லா அருந்திருவே—ஆண்டவனே (202)

விள்ளாத சோதிமய விரிசுடரே மேலவனே
உள்ளொளிவே மெய்ஞ்ஞான முட்சுடரே—சள்ளையில்லா (203)

மூலத் திருந்தம்பில் முத்திகலி மாவெழுத்தை
சீலமுட னேற்றச் சிறப்பருள்வாய்—மூலமதில் (204)

தாக்கீயே பார்க்கத் தன்மைதரும் தாபரனே
நோக்கவே யெங்குமொளி நூராக—பாக்கியமாய் (205)

காண வுதவியருள் காவலனே காரணனே
பூண நலந்தருகும் புண்ணியனே—இணையில்லா (206)

ஆசைக் கடலே அறுதியே ஆண்டவனே
நேசத் துடன்வருகும் நெடியோனே—பாசம்வைத்து (207)



துன்பவினை நோயனைத்தும் தூராக்கித் துய்யவனே
இன்பமுள்ள நற்கலிமா ஈந்தருள்வாய்—இன்மையுனைக் (208)

கண்டவுட னோடிவிடுங் காரணனே காவலனே
உண்மைதரும் மாதவமே உடையோனே—தன்மையுள்ளோர் (209)

புகழ்கின்ற வல்லவனே பூமானே பூரணனே
இகழ்கின்ற யாவரையும் இகழ்வோனே—புகழுடைய (210)

சித்தே சிவனருளே சிறப்புடைய நாயகனே
எத்திசையும் புகழுகின்ற ஏகனே—சித்திரமே (211)

நாவுக் கடங்காத நன்மையுள்ள நற்சுடரே
பூவாசம் போல்கமழும் புண்ணியனே—காவலனே (212)

தன்மை மஹ்மூதநபி ஷபாஅத்தி னுதவியினால்
முன்னவனே கரைசேர்ப்பாய் மூதறிவே—நன்மைதரும் (213)

நேத்திரத்தை யறுத்திடவே நேராகும் முப்பொருளை
நேர்த்தியாய் நோக்கவருள் நித்தனே—ஏற்றமுள்ளோர் (214))

தெரிசிக்கும் ஒளிவடிவே தேவனே யவ்வடிவைத்
தெரிசித்து வுனதருளிற் சேரவைப்பாய்—அருமையுடன் (215)

தெரிசிப்போர் வாசமென்றும் தெளியாதோர் பாவியென்றும்
உறுதியாய் மொழியுமெங்கள் உண்மையே—வரிசைதரும் (216)

காணுச் சுடர்விளக்கே கருப்பொருளே காவலனே
பூண வெளியாகும் பொற்பதமே—தோணவருள் (217)

வான்மலையும் புவிகடலும் மதிசுவனன் மற்றவையும்
வான்பொருளே உனைக்கண்டால் மறையுமே—தானன்றி (218)

வேறே யொருவரில்லை வேதாந்த சித்தொளிவே
நேராக முன்வருகும் நெடியோனே—நேரொளிவுள் (219)

தோன்றுஞ் சுருமாவாய்த் துலங்குமே நாலாகத்
தோன்றுகின்ற முஹம்மதுவின் சூட்சமதை—காணவே (220)

ஓர்முனையில் நின்றுயான் ஒடுங்கவே நல்லருளை
நேராகத் தந்தருள்வாய் நித்தனே—கூரான (221)

முச்சுடரை யொன்றாய் முதலோனே யான்வணங்க
பக்ஷமுடன் அருள்தருவாய் பாத்திபனே—நிச்சயமாய் (222)

உன்னைத் தொழுகளனக் குதவிசெய்து திங்ககற்று
அன்புடைய நற்சுடரே ஆசானே—நன்மைதரும் (223)

வடிவாகி ஆறிலொன்றில் மங்காத சோதியாய்
முடிவிலாப் பொருளான முன்னவனே—சடமதனில் (224)

ஆறு தலமாகும் அதிலோர் தலமதிலே
நேராகக் கனியொன்று நேர்த்திபாய்—கூருள்ள (225)

அஞ்சுசுடர் மூன்றாய் அழகாய் வெளியாகிச்
செஞ்சுடர்போ லொளிவாக ஜெகமெங்கும்—வஞ்சமில்லா (226)

நஞ்செழுத்தோ டுறவுசெய்து நழுகாம லோர்மனதாய்க்
கொஞ்சியே நிற்கவுந்தான் கோமானே—தஞ்சமே (227)

உன்னைவணங்க வுகப்பாய் அடியனுக்குத்
தன்மையாய் வரந்தருவாய் தாபரனே—அன்புடைய (228)

எட்டெழுத்து வாசியதை யிரண்டெழுத்தி னூடாகத்
திட்டமாய்த் தாக்கவருள் சீமானே—வெட்டறு (229)

வட்டெழுத்தாய்க் காணும் வகையறி யார்கள்தனை
வெட்டியாய் நாகமதி லேகவைக்கும்—அட்டதிக்கும் (230)

முட்டிநின்ற தற்பரனே முதலோனே பொற்பதமே
மட்டிடா நற்சுடரே வான்பொருளே—திட்டமுள்ள (231)

ஹக்குல் எக்கீன்முனையிற் காரணமாய் நான்வணங்க
தக்கோனே யுன்னுதவி தருவாயே—தக்கநவ (232)

வாசல்தனைச் சாத்திடவே வலம்புரியி னோசைகளும்
ஓசையுள்ள கைமணியி னோசைகளும்—வாசமாய் (233)

அறிந்து தெளிவாகி யன்புடனே கேட்பதற்கு
சரியாக எல்லாம்நீ தந்தருள்வாய்—நெறியாக (234)

கேட்போர் துஆவைக் கிருபையாய்க் கையேற்று
நாட்ட மதன்படியே நலமாக—காட்சிதரும் (235)

மூலமணி மந்திரமே முச்சுடரே முதலோனே
ஆலமெல்லாம் புகழுகின்ற அல்லாவே—சீலமுள்ள (236)

குவலயத்தைத் தான்பிரட்டிக் கூர்மையா யுள்நோக்கித்
தவமதனைச் செய்யத் தலீலருள்வாய்—புவனமென்ற (237)



பாரெலா மறைந்துநற் பளிங்கிப் பிரகாசமதாய்த்
தூரதிஷ்டி யெல்லாம் தோன்றுமே—தீரமுள்ள (238)

தூய்யவனே யிவ்வறிவைத் துலக்கமாய்த் தந்தருள்வாய்
மெய்யனே யாவருக்கும் மேலவனே—மெய்யுடைய (239)

பெருமைதனை யுள்ளே பிரட்டியே நோக்கிடநல்
அருகனே சம்பூர்ண அருள்தந்து—கருவான (240)

கருவிகர ணாதியெல்லாம் கதிரொளிபோல் தோன்றிடவே
அருந்திருவே யுதவிசெய்வாய் ஆண்டவனே—கருவாகப் (241)

பார்க்குமிட மெல்லாம் பரமனே யொளிவாகத்
தீர்க்கமாய்க் காணவருள் சீமானே—மார்க்கமுள (242)

பாருலகும் வானுலகும் பக்ஷமுடன் திருவுலகும்
கூராக வுனைப்புகழும் கோமானே—தீரமுடன் (243)

காலைப் பிடிக்கக் காரணங்கள் வெளியாகும்
ஆலமதில் அறிவதற்கு அன்புதந்து—சீலமில்லாக் (244)

கொடுந்துயரம் புலன்மயக்கம் கொற்றவனே யணுகாமற்
கடுகவே நீக்கிவைப்பாய் காரணனே—கெடுதியுள்ள (245)

வஞ்சமுள்ள மனுடர்பகை மாரணங்கள் தீங்குகளும்
அஞ்சுவிதப் பூதத்தின் அசடகற்றி—வஞ்சமற்றுக் (246)

கருவிகர ணாதியெல்லாம் காரணமாய்த் தவஞ்செய்யத்
திருவருளை யெனக்கருள்வாய் செல்வமே—நெறியுடனே (247)

நாடுந் துஆவை நலமாகக் கையேற்று
நாடுதல்போல் நீகொடுப்பாய் நாயகனே—கேடான (248)

தாகமதை நீக்கித் தன்மையுள்ள கலிமாவில்
மோகமது கொண்டு மூழ்கிடவும்—யோகமதைத் (249)

தந்தெனை ரக்ஷிப்பாய தாபரனே தற்பரனே
அந்தமுள்ள மாமணியே ஆசானே—சிந்தையுள்ள (250)

மதிப்பி லடங்காத மஹ்மூது ஷபாஅத்தில்
கதியான கரைசேர்ப்பாய் கர்த்தனே—கதியுள்ள (251)

நால்யார்கள் நற்பாதம் நாடுதலாய்ச் சிரமேற்றிச்
சீலமுடன் புகழ்ந்தேன்யான் சிறப்புடனே—மேலவர்கட் (252)

கன்பான கௌதுல் அஃலத்தின் பாதமதில்
நன்பாகச் சிரம்வைத்து நான்புகழ்ந்தேன்—இன்பமுள்ள (253)

மேலான ஒலியாகும் மேன்மையுள்ள ரத்தினத்தைச்
சீலமா யான்புகழ்ந்தேன் தெளிவாக—மேலான (254)

மூமீன் முஸ்லிம்கள் முத்தியுள்ளோர் பாதமதில்
தாமதமில் லாமற்சிரம் தணித்தேன்யான்—நேமமுள்ள (255)

தகமைதரு ஷெய்குபரீத் தர்வேஷு காதிரியின்
மகிழ்பாதம் சிரமேற்றி மகிழ்ந்தேன்யான்—பகவனே (256)

கலீபத்து ஷெய்குஷாஹுல் ஹமீதென்னும் தொண்டனுக்குச்
சலிப்பெல்லாம் நீக்கியருள் தந்திடுவாய்—வலியோனே (257)

ஒலிமார்கள் கூட்டமதில் உகப்பாய் அடியனைநன்
நிலையாகச் சேர்த்திடுவாய் நித்தனே—நலமெனக்கும் (258)

எந்தனுடை பீர்கட்கும் என்பிதா மாதாக்கும்
சிந்தையுள்ள பிறவிசேய் சிஷர்க்கும்—சொந்தமாய்ப் (259)

பதமுத்தி பாகதியும் பராபரமே நீயருள்வாய்
பதவிதந் தாளுகின்ற பாக்கியமே—நிதமிதனைப் (260)

படித்தவர்க்குங் கேட்பவர்க்கும் படைத்தோனே துன்பவினை
படிமீதில் நீக்கிவைப்பாய் பராபரனே—அடியனுக்குச் (261)

சகலமும் நீதந்து சம்பூர்ண யோகமதில்
அகமகிழச் செய்தருள்வாய் ஆமீன். (262)

வெண்பா.

எல்லா வுயிர்களுக்கும் இரணமிக வேகொடுத்து
நல்லன்பாய்க் காப்பாற்றும் நாயகனே—பொல்லான்யான்
கேட்ட துஆவெல்லாங் கிருபையாய்க் கையேற்று
நாட்டமாய்க் கொடுத்தருள் நயம். (263)



## துஆ வாழ்த்து

அறுசீர்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

கல்லழகு பொருந்தியநற் கல்லிடைமா நகரமதிற்
கனமே தங்கி
நல்லழகு தாம்பிரத்தின் பருணிநதி செழிப்புற்று
நனிரு மோங்கி
தொல்லையதும் மிடிமைதுன்பப் நோயனைத்தும் அவ்வூரில்
தொலைந்து போக
வல்லவனே கிருபைசெய்து மேன்மையுற காக்கிவைப்பாய் (264)
வரிசை யாக

சென்னைமா நகரமது செழிப்புற்றுச் செல்வமாய்ச்
சிறப்பாய் இன்னும்
நன்னிலைநற் பெருவாழ்வும் நனிபாக நிற்கவருள்
நன்மை யாக
தின்மைதொல்லை மிடிமைகஷ்டம் நோயனைத்தும் இந்நகரில்
தீர்ந்து போக
வண்மையுள்ள வல்லவனே கிருபைசெய்வாய் வளமாக (265)
வரிசை பொங்க

மருகமலரும் மாச்சென்னை திருவல்லிக் கேணியில்யான்
வாசஞ் செய்தேன்
அருமையுள்ள சிஷனும் இபுறுஹீம் பயில்வானின்
அகந்தனிலே
குருஆதி வல்லவனே அவர்களுடை குடும்பமெல்லாம்
குற்றம் நீங்கி
திரப்பமாய் என்றென்றும் வாழ்கநீ கிருபைசெய்வாய் (266)
நிகரில்லானே

திருவருளைப் பெற்றநாந்தன் முரீதுகட்கும் அனுசரித்து
சிறப்பாயென்னை
அருமையுடன் காப்பாற்றி வந்தவர்கள் எந்தனக்கும்
அருள்செய் வேந்தே

நிரப்பமுள வாழ்வுடைய நல்லிரணம் நீகொடுத்து
நேர்மை யாக்கி
கருவுடனே வைத்திடுவாய் பூமியிலும் ஆகிறிலும்
கனமுள்ளோனே. (267)

உன்னருளை நல்விதமாய்ப் பெற்றுநின்று மாறுசெய்யா
உண்மையான [மெல்லாம்
தின்மையில்லாப் பெரியோர்க்கு மிடிமைதுன்பம் வருத்த
தீர்த்து வைப்பாய்
வண்மைதிரு வுனதருளைப் பெற்றுநின்று மாறுசெய்யா
வளமுள்ளோர்க்கு [செய்வாய்
உண்மையுள்ள பொருள்கொடுத்து அனுதினமுங் கிருபை
யுயர்ந்த வேந்தே. (268)

திருஞானத் திருப்பாடற் றிரட்டைதிரு வாய்மலர்ந்து
தெளிந்து சொன்னேன்
அருளறிந்த குருவிடத்தில் முரீதுபெற்று இந்நூலை
ஆராய்ந்தோர்க்கு
கருவான இந்நூலின் பொருள்துலங்கக் கிருபைசெய்து
கனமதான
திருப்பதியி லாக்கிடுவாய் சிறப்புடைய வல்லவனே
செல்வ கோனே. (269)

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

கத்தனே கலீபத்து ஷெய்கு ஷாஹுல்
ஹமீதப்பா அடியானின் பிழை பொறுத்து
நித்தமும் ஆதரித் தன்பு வைத்து
நிலையான யோகமதைச் சித்தி யாக்கி
முத்தனே முத்திபெற அருளைத் தந்து
மோனமுள்ள முச்சுடரின் நிலையைக் காட்டி
சித்தனே ஞானக்கண் திறந்து நூரைத்
தெரிசிக்க வரமருள்வாய் ஆமீன் ஆமீன். (270)

ஞானக் கமல மணிமாலை முற்றிற்று.

ஹாமீம்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# ஞான அலங்காரம்.

## பூரண மெய்ஞ்ஞானம் நூறு

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

சிறந்தபரா பரமேதான் ஜோதி யாகி
தெளிவான முஹம்மதுவே யதினுள் ளாகி
வரமருளும் அல்லமதே மலரு மாகி
வன்னமது மூன்றுமொரு வடிவி லாகி
பரந்தருகும் சக்குஇரு மத்தி தன்னிற்
பரந்தெழுந்த முச்சுடரைப் பரமாய்க் கானு
சிரந்தனிநீ எழுதாம் வலமாய்ச் சுற்றி
திறமான கலிமாவை யுரைப்பாய் கண்ணே. (1)

உரைத்திடுவாய் முச்சுடரில் கடுவ தாக
உண்மையுள்ள வோர்முனையில் நடுங்கு மைந்தா
பறைந்திடுவாய் கல்பினு ளுருகி நீயும்
பக்குவமாய்க் கேட்டதெல்லா முனக்குக் கிட்டும்
அரிதான நாலைந்து வாசல் தன்னை
அடைத்திடுவாய் கலிமாவா லேற்றிறக்கி
சிறப்புடைய நாதவொலி கீத வோசை
திருநடனம் கைமணியி னோசை கேளே. (2)

கேளப்பா இன்னமுந்தான் நன்றாய்ச் சொல்வேன்
கிளம்புமே கடலோசை படம டென்று
மாளப்பா அத்தொனியோ டொத்துப் பின்னும்
மகிமையுள்ள கிண்ணரியி னோசை கேட்டு

வாழப்பா பதினெட்டு ஓசை யெல்லாம்
வகைவகையாய்த் தொனிக்குமப்பா வொன்று கூடி
நாளப்பா தினம்பார்த்து அறிந்தால் நீயும்
நன்மையுள்ள நல்வழியிற் சேர்வாய் பாரே. (3)

பாரப்பா வுலகுயிர்க ளனைத்துக்குந் தான்
பரனென்ற பராபரமே வல்லோ னாகும்
நேரப்பா சகலவுயி ரனைத்துக்குந்தான்
நேர்மையுள்ள முஹம்மதுவும் நிய மாகும்
சாரப்பா தானவனும் தாத்து மாகும்
சங்கையுள்ள முஹம்மதுவும் பெத்து மாகும்
தேறப்பா இப்பொருளை யறிந்து நீயும்
தெளிவான ஆயிரத்தெண் மலரைப் பாரே. (4)

பாரப்பா இன்னமொரு நிலையைக் கேளு
பகருகிறேன் மதியில்நின்று ரவியில் மாறு
நேரப்பா ரவியில்நின்று மதியாய் நீயும்
நினைவெல்லாஞ் சுழிமுனையில் நாட்டி நில்லு
ஆறப்பா மூலத்தில் மனதை வைத்து
அன்புடனே ரேசக பூரகமும் பண்ணி
சீரப்பா கும்பகத்தில் தனதாய் நில்லு
சிறப்பான கலிமாவால் அருளு மாமே. (5)

அருளான ஊமையென்ற எழுத்து மீமே
அச்சாமே தலைவட்டம் கால்கீழாக
பொருளான மஹ்மூதில் தலையு மாக
பொருந்துகின்ற கால்நாசி நுனியின் மட்டும்
மருளாமல் மஹ்மூதில் பார்வை யோட்டி
மாறாமல் இந்நிலையில் நின்றா யானால்
சறுகாமல் சகலமதும் நிரப்ப மாகும்
சங்கைபரி பூரணத்தின் தங்கம் பாரே. (6)

பாரப்பா தவத்துடைய அழகை யானும்
பகருகிறேன் நிலையான தொழுகையாகும்
நேரப்பா அத்தொழுகை ஆரிபீன்கள்
நிஷ்டைகளுக் கிசைவான வணக்க மாகும்



கூரான அத்தொழுகை தொழுவா யப்பா
குணமான நன்மையுடனு தானுஞ் செய்து
சீரப்பா தஹஜ்ஜத்து தொழுது கொண்டு
ஜெயமான ஹறுபதனைத் தெளிவாய்ப் போடே. (7)

போடப்பா அழகான ஹறுபைச் சொல்வேன்
புகழான அலிபுநீம் லாம்றேய் லாமும்
சாடப்பா லாமுக்குள் ளலிபைப் போட்டு
சற்குருவின் தலமதற்கு மேலே நீட்டு
நாடப்பா இருதலையும் ஒருவா லுண்டு
நலமான ஒருதலையும் ஒருவா லுண்டு
வாடாமல் இதுரண்டும் சரத்திற் றூக்கு
வளமுள்ள நன்மணியே சொல்லக் கேளே. (8)

கேளப்பா முன்சொன்ன எழுத்து ரண்டை
கிருபையுடன் தாக்கிடுவாய் வாசி தன்னில்
பாழில்லா பண்டெழுத்தை யேற்றி நோக்க
பண்பான மஹ்மூதிற் சுடருந் தோன்றும்
வாழப்பா முன்சொன்ன எழுத்தை யெல்லாம்
வகைவகையாய் இன்ன இன்ன ஹறுபதென்று
கேளப்பா பீடத்தில் கேட்ட தோடு
கிருபையுடன் அந்தந்தத் தலத்தில் தாக்கே. (9)

தாக்குகின்ற தலமதனின் விபரங் கேளு
தயவாகப் பீடத்தில் அப்பா சொன்னேன்
வாக்குமனம் ஒன்றாகக் கேட்டா யானால்
வகைவகையாய்த் தலமதுவும் ஹறுபுஞ் சொல்வார்
நோக்கப்பா அந்தந்தத் தலத்தில் நீயும்
நுட்பமாய் அந்தந்த ஹறுபை நாட்டி
தாக்கப்பா எழுத்ததனை யிருத்திப் பார்த்தால்
தனியோனின் கலிமாவைக் காணலாமே (10)

காணுமே தெளிவான ஜோதி வட்டம்
கனமான வடிவதனுட் சுருமா வட்டம்
தோணுமே அவ்வடிவு தெளிவ தாக
துல்லியமாய் நாற்கோண மாகவே தான்

பூணவே அலிபதுவும் தெளிவாய்த் தோன்றும்
புகழான ஆயிரத்தெண் மலருந் தோன்றும்
தீனுமே நிலையாகும் கண்ட பேர்க்கு
தெளிவாக இப்பொருளை யறிந்தோர் தங்கம் (11)

தங்கமென்ற என்குருவை அறியச் சொல்லும்
தனியனவ னருளதனிற் சேர்வ தெப்போ
மங்காத மணிவிளக்கை நிதமறிந்த
மகத்தான சற்குருவே சொல்ல வேணும்
சங்கையுடன் சாயுச்சிய பதத்திற் சார்ந்து
சம்பூர்ண முச்சுடரைத் தொழுது கொண்டால்
பொங்குமே யிறைவனது அருளு மாகி
பூரணத்தின் நல்லருளிற் சேருவாயே. (12)

சேருநீ யென்மகனே அருளி லாகி
ஜெகதலத்தி னமளிகளை விட்டு நீங்கி
கூறுநீ மௌனமதாய் எழுத்தைச் சேர்த்து
குணமான வாசிதனி லேற்றி யூடே
பாருநீ ஜோதியென்ற பூரணத்தைப்
பார்த்துமிக மனமகிழ்ந்து தினமும் நோக்க
தீருமே வினைநீங்கும் காலன் வந்தால்
தெண்டனைகள் செய்யாரே ஜெயம தாமே (13)

ஜெயமான அருளதனை யெனக்கு ஈந்த
செல்வமுள்ள கண்மணியே சொல்லக் கேளும்
கயவரென்ற சண்டாளர் செய்யுகின்ற
கருமவினை சாடாமல் நீக்கி வைத்து
பயமேது மில்லாமற் பராபரத்தைப்
பத்தியே வணங்குதற்குப் பலனைத் தந்து
நயமான நல்லதுஆ நல்க வேணும்
நாயனிடம் பிணிநீங்கக் கேட்பீர் கண்ணே. (14)

நீங்குமே துன்பவினை யற்றுப் போகும்
நேர்மையுள்ள பூரணத்தை யறிந்து கொண்டால்
பாங்குடனே பாவமெல்லாம் பறந்துப் போகும்
பண்பான சித்ததுவும் பலிக்கு மப்பா



தீங்குடைய அமளிகளும் தீர்ந்து போகும்
தீர்க்கமுடன் கத்தாவி னருளி லாவாய்
ஏங்கிநீ வாடாதே கண்ணே சொன்னேன்
இன்பமுள்ள இந்நூலை யுகந்து பாரே. (15)

உகந்துபார் மௌனமதை யோர்மை யாக
ஒருவருக்குஞ் சொல்லாதே குற்ற மாகும்
இகழ்ந்துபார் வெறிவஸ்து அருந்தி னோரை
இன்பமில்லாப் பாவிகளை யறிந்து தள்ளு
மகிழ்ந்துபார் தனையறிந்தோர் பெரியோர் தம்மை
வாசமுள்ள வணக்கமதிற் கூடினோரை
அகந்தெளிந்த அறிஞரையுங் கண்டு போற்றி
அன்புடனே ஆராய்ந்து சார்ந்து பாரே. (16)

சார்ந்துபார் வுலகமதின் வாழ்வைச் சொல்வேன்
தரணியிலே பெண்டுபிள்ளை பணமும் வாழ்வும்
சேர்ந்திடுவோர் உறவினரும் இஷ்டர் தாமும்
தெளிவான நல்வழிக்கி யுதவ மாட்டார்
ஊர்ந்திருந்து வணக்கமதைச் செய்தாயானால்
குணமான மஹ்ஷருக்கு வுதவி யாகும்
தீர்ந்திடுமே பாவமெல்லாம் நெருப்பில் பஞ்சாய்
தெளிவாக வுலகவர்க்கும் குருவுமாமே. (17)

குருவென்று திரிவார்கள் உலகந் தன்னில்
குலமான தின்குலத்தி லுள்ளோ னென்பார்
மறுவில்லா மாக்கலிமா இன்ன தென்று
மகத்தான அங்கத்துள் ளறியமாட்டார்
ஒருவருமே யெனக்குநிக ரில்லை யென்பார்
ஓர்மையில்லாப் பாவிகளைச் சேர்ந்திடாதே
கருவான கருவெழுத்தை யறிந்து நின்று
கத்தனவன் நல்வழியிற் சேர்வாய் கண்ணே. (18)

கண்ணான கண்மணியே யென்ன சொல்வேன்
கனவிலும் மறவாதே கத்தன் தன்னை

விண்ணான அண்டமெல்லாம் தான் படைத்து
விதவிதமாய்ப் படைப்புகளைச் சமைத்து வைத்து
பொன்னான பூலோகஞ் சகல மெல்லாம்
புகழாக அமைத்தவொரு வல்லோன் தன்னை
தன்னகத் தானிருந்து வணங்கும் வல்லார்
தற்பரனின் பொற்பதியி லேகு வாரே. (19)

ஏகுவார் வணக்கமதின் நிலையுங் கண்டு
இருளான மாயையெல்லாம் நீக்கி நின்று
சாகுவார் சாகாமல் தினமும் போற்றி
சாயுச்சிய பதவிதனில் தாமுங் கூடி
போகுவார் வெண்கலத்தி னோசையற்று
புகழான தங்கமதி னோசை யாக
ஆகுவார் அருளான பூரணத்தில்
அமைந்தவொரு சற்குருவைத் தேடுவாயே. (20)

தேடுவாய் நல்மனதாய்க் குருவைக் கண்டு
தெளிவான பூரணத்தின் வழியிற் சார்ந்து
கூடுவாய் நடுச்சாம் வேளை தன்னில்
கோனமைத்த வுயிரெல்லாந் துயிலும் போது
சாடியே நீயிருந்து கலிமாத் தன்னைச்
சரமதனி லேற்றியே முனையி லொட்டி
நாடுவாய் முச்சுடரின் வடிவைக் கண்டு
நலமாகத் தவஞ்செய்தோர் நல்லோர் பாரே. (21

பாரப்பா கலிமாவின் விபரங் கேளு
பகருகிறேன் லாயிலாஹ இல்லல்லாஹு
நேரப்பா கடையெழுத்தில் முஹம்மதென்ற
நிலையான முதலெழுத்தைக் கொளுவிப் பற்றி
கூறப்பா இளையாத வாசி யோடே
குணமாக இரண்டுமொன்றாய் ஏற்றிப் பார்க்க
சீரப்பா சிறந்தபொற் கமலந் தன்னில்
தெளிவான ஜோதியது தோற்றுந் தானே. (22)



தானான தானவனை யறியாப் பாவி
சங்கையா யுலகமதிற் கற்ப மென்பான்
தேனுள்ள அமுதமது போலே யுன்னுள்
தெளிவாக இருக்குமடா கற்ப மாகும்.
தூணைப்போல் நிற்கும்மரம் இலைகாய் பூடும்
தொல்லுலகிற் செடிகளுமே கற்ப மில்லை
சாணெட்டு முழநாலு வீட்டிற் குள்ளே
சம்பூர்ண சுடரறிந்தோன் மௌனியாமே. (23)

ஆகுமே யிந்தவகை யறியாமல்தான்
அருளறியாப் பேர்கள்தனை யண்டினோர்கள்
பாகமுள்ள மூலிகளைக் கற்ப மென்று
பக்குவமாய் அருந்திடுவார் கற்ப மாகா
தேகமதில் அடக்கிவைத்தால் முத்ததாகும்
சிறிதான ஆசைகொண்டு வெளிய தானால்
வேகமுள்ள விஷமதுவாய்ப் போகுமப்பா
வெற்றியுள்ள வஸ்ததுவுங் கற்ப மாச்சே. (24)

ஆச்சப்பா ஆறுதலம் விபரஞ் சொல்வேன்
அன்பான மூலமொன்று சுவாதிஷ்டானம்
மீட்சிமணி பூரகம் அனுகதமுமே
விசுத்தியொடு ஆஞ்ஞையப்பா தெளிவாய்ச் சொன்னேன்
பூச்சியநற் பூதமைந்தைச் சொல்லக்கேளு
புகழான பிருதிவியும் வாயு அப்பும்
காய்ச்சலுள்ள தேயுவொன்று ஆகாயந்தான்
கண்மணியே அறிவாகச் சொன்னேன் பாரே. (25)

பாரப்பா வுலகமதிற் பாவி யெல்லாம்
பலவிதமாய்ப் பேசிமெத்தப் பகருவார்கள்
ஆரப்பா அஞ்ஞானந் தனிலே நின்று
அடங்காத மெய்ஞ்ஞானி நான்தா னென்பான்
சாரப்பா என்னிடத்தில் சார்ந்தால் நீயும்
சங்கையுள்ள மந்திரங்கள் சொல்வே னென்பான்

வீறப்பா அநேகமாய் இன்னுஞ் சொல்வான்
வேஷமது பூண்டுவந்த பாவி தானே. (26)

பாவியென்ற தோஷிதனைச் சொல்லக் கேளு
பகர்ந்திடுவான் எத்தனையோ ஞானம் தன்னை
ஆவியது அழிந்துவிட்டால் மேன்மை யான
அன்பான வுடலதுவும் அழியா தென்பான்
சாவியென்ற பதரான மோடன் தானும்
சங்கையுடன் நல்விதமாய் அருமை யாக
கூவிடுவான் தெளிவுள்ள தவத்தைச் செய்தால்
குறிப்பான நல்பிறவி யாகும் கேளே. (27)

கேளப்பா இதற்குமுன் நான்தான் கண்ணே
கேடான ஜாதியிலே யிருந்தே னிப்போ
மீளவே நற்பிறவி யாக நானும்
மேலான தீன்குலத்திற் பிறந்தே னென்பான்
மாளவே புத்திமதி மெத்தச் சொல்லி
மயக்கிடுவான் பாவிதனை நம்பிடாதே
வாழப்பா பூரணத்தின் மகிமை கண்டு
வணங்கிடவே நற்பிறவி யாகும் பாரே. (28)

பாரடா ஜெகந்தனிலே பிறந்த பின்பு
பண்பான பேரெடுத்துக் குழந்தை யாகி
வீறான மெத்தமெத்தப் பேச்சுங் கற்று
விதவிதமாய் நீயிருந்து பிராய மாகி
சீரான சீரருளை யறிந்த பின்பு
திறமான கோலெடுத்துத் தெளிவாய் நின்று
கூரான கூற்றுவன்தான் அற்று விட்டால்
குவலயத்தில் மதலையதாய் பிறப்பதுண்டோ (29)

மதலையாய்ப் புவிதனிலே பிறப்ப தில்லை
மாண்டவர்கள் மீண்டுவந்து அப்பா சொன்னேன்
கதிபெறவே ஆசானைத் தொடர்ந்து நீயும்
கண்மணியே அவருடைய பாதம் தொட்டால்



சதமான நல்லருளை யுனக்கு ஈவார்
சங்கையாய் நீயிருந்து தவத்தைச் செய்தால்
பதமான நற்பிறவி யாகி வல்லோன்
பாதத்திலே சேர்வதுவும் உண்மை காணே. (30)

காணப்பா மண்ணீரல் ஒன்றும் மக்காம்
கருவான நாஸூத்து எழுத்தும் நாலாம்
ஊனப்பா கருசாவி ரண்டாம் மக்காம்
உறுதியுள்ள மலக்கூத்து எழுத்து மீமாம்
தேனுள்ள நுரையீரல் மூன்றும் மக்காம்
தெளிவான ஜெபறூத்து எழுத்தும் ஹேயாம்
கானுள்ள பித்ததுவும் நாலாம் மக்காம்
கண்மணியே லாஹூத்து எழுத்துலாமே. (31)

ஆமப்பா தாமரைதான் ஜெம்ஹூத் தாகும்
அதினுடைய எழுத்ததுவு மலிபு மாகும்
நாமமாய்ச் சொல்லுகிறேன் பாதை யாறும்
நலமான ஷரீஅத்து தரீகத் தாகும்
தாமமுள்ள ஹகீகத்து மஃரிபத்தாம்
தவமான முஹப்பத்து முஃதிதாத்து
நேமமுடன் இவ்வாறும் பாதையாகும்
நிச்சயமாய்ப் பூரணத்தி னன்பைப் பாரே. (32)

பாரப்பா பூரணத்தின் அருமை தன்னை
பகருகிறேன் தெளிவாகச் சொல்லக் கேளு
நேரப்பா நேராக நடந்து சென்று
நேர்மையுள்ள மத்திதனில் தங்கி நிற்பாய்
சேரப்பா மத்தியென்ற புருவ மத்தி
செல்வமுடன் ரண்டுமதில் நோக்கிப் பார்க்க
நூரப்பா நூரென்ற வொளிவு காணும்
நுட்பமுடன் அறிந்திடுவாய் நலமாய்ச் சொன்னேன். (33)

நலமான வொளிவதனை யறிவதற்கு
நன்மையுள்ள குருவைநீ யலைந்துதேடி
குலமான குருபதத்தில் வீழ்ந்து நின்று
குணமாகப் புவிதனிலே மாயை தள்ளி

பெலமான அருளொளிவின் தீட்சை யான
  பேரின்ப முச்சுடரைத் தெளிவாய்க் கண்டு
கலங்காமல் நித்தியமும் தவஞ் செய்தாக்கால்
  ஹக்குடைய அடங்காத நன்மையாமே. (34)

நன்மையென்றால் அடங்காத நன்மை யாகும்
  நாயனுடை உதவியினாலே தெளசில் வாழ்வாய்
பொன்னான குருகையைத் தொட்டபோதே
  பொங்குமே ஜோதிமுச் சுடருங் காணும்
கன்னாசு வுன்னைவிட் டகன்று செல்வான்
  கர்மவினை நோய்வினையுங் கடந்து நிற்கும்
முன்னான முதலோனின் வணக்கத்தாலே
  முத்திபெற்று அருளதனி லாகுவாயே. (35)

அருளான அறிவதனை யகிலந் தன்னில்
  அன்புடனே மொழியாதே பாவிகட்கு
பொருளான அருளதனைச் சிறியோருக்கும்
  புனிதமில்லா அறிவுகெட்ட மூடர்கட்கும்
திருவழகு தெளிவுடைய வணக்க மான
  தெவிட்டாத அமுதமுள்ள மௌனந்தன்னை
தெரிவையரின் மாயைகொள்ளும் வீணர்கட்கும்
  தேசத்திற் சொல்லாதே குற்றம் பாரே. (36)

பாரப்பா ஷரீஅத்தின் திக்று ஜல்லி
  பலனுள்ள லாயிலாஹ இல்லல்லாஹு
நேரப்பா தரீகத்தின் திக்று கல்பி
  நேர்மையுள்ள இல்லல்லா ஹுவு மாகும்
சாரப்பா ஹகீகத்தின் திக்று ரூஹி
  தன்மையுள்ள அல்லாஹ் வென்றதாச்சு
கூறப்பா மஃரிபத்தின் திக்று சிர்றி
  குணமான அல்லாஹு எழுத்ததாமே. (37)

ஆமப்பா முஹப்பத்தின் திக்று கபீ
  அன்பான ஹுவதுவு மாகுமப்பா
தாமமுள்ள ஹேமீமும் முஃதிதாதது
  தப்பாமல் தெளிவாகச் சொன்னேன் பாரு



நாமமாய் இவ்வறிவை யறிந்த பேர்க்கு
  நலமெல்லாம் மெத்தவுண்டு நரகி லாகார்
ஜீமென்ற கமலமதிற் சுடர்மூன்றுந் தான்
  சிறப்பாக அறிந்தவனே தங்கந் தானே. (38)

தானான தானவனை யறியாமல் நான்
  தரணிதனில் பெருமைகளும் மெத்த மெத்த
வீணான வாய்மதங்கள் பேசும் பாவி
  வினைநீங்காத் துஷ்டர்களா யிருக்கும் பாவி
கோனான குதாஒளிவின் அருளைக் காணக்
  குரும்பர்கள் ஞானமென்று கல்வி பேசி
தேனாக வாயூர வொழுதும் பாவி
  தேசத்தில் மெத்தவுண்டு அருள் கிட்டாதே. (39)

அருளதனை யறிந்ததுபோல் மொழிவா னப்பா
  அகிலமெல்லா மதிர்ந்திடவே ஞானம் பேசி
பொருளான பொருளெல்லாந் தெரிந்தவன்போல்
  புகன்றிடுவா னறிவுகெட்ட மடையன் தானும்
திருவருளை வாய்ஞானம் பேசுகின்ற
  தின்மையுள்ள பாவிகட்கு ஈந்திடாதே
கருவறிந்த குருவெனப்போ லுண்டோ வென்று
  காசினியில் விலைகள்மெத்தக் கூறுவானே. (40)

கூறுவான் தெருத்தோறும் அலைவா னப்பா
  குவலயத்தில் பாவிகளைத் தள்ளு தள்ளு
பாருலகில் அறிவுடைய குணங்க ளுள்ள
  பண்புபெறும் நன்மையுள்ளார்க் கறிந்து நீயும்
மேருவதின் அருளதனை மொழிவாய் கண்ணே
  மேன்மையுள்ள முச்சுடரைத் தெளிவாய்க் காட்டி
பேறுள்ள அறிவதனைப் புகட்டி வைத்து
  பேரின்பத் தவஞ்செய்ய ஏவுவாயே. (41)

ஏவுவாய் ஹக்குதிரு வுளத்தைப் போலே
  இன்பமுள்ள நன்மையெடு தின்மைதள்ளி
சாவுவாய் சாகாமல் அன்பாய் நீயும்
  சாயுச்சிய பதத்திலே சார்வா யென்றும்

நோவினைகள் அநியாயக் கொடுமை தள்ளி
நுட்பமுள்ள அறிவதனை யறிவா யென்றும்
நாவுகொண்டு நன்மையதை மொழிவா யென்றும்
நன்மையாய் அருளதனில் நில்லென் றேவே. (42)

நில்லப்பா பிருதிவியும் மண்ண தாகும்
நிலையான அப்பதுவுஞ் ஜலமதாகும்
வல்லமைநல் வாயுவதும் காற்று மாகும்
வரிசையுள்ள தேயுவதுங் கனலு மாகும்
அல்லல்தனை நீக்கிவைத்துத் தவத்தை யேற்றும்
அருமையுள்ள ஆகாயந் தானு[illegible]கும்
உல்லாச மாகவுந்தான் இ[illegible]ை யறிந்து
உண்மைதவம் செயவதற்குச் சாத்தைக் காணே. (43)

காணப்[illegible] சரமோடும் நாழிகைகேள்
கண்மணியே பிருதிவியில் அறுகா லோடும்
ஈனமில்லா அப்பதனில் ஐங்கா லோடும்
இன்பமுள்ள வாயுதனில் நாற்கா லோடும்
கானலுள்ள கனலென்ற தேயு தன்னில்
கருவான முக்கால்நா ழிகைதா னோடும்
தீனமில்லா ஆகாயத் தரைதா னோடும்
தெளிவாக இம்முறையா யோடும் பாரே. (44)

ஓடுமே கலையொன்று நாழிகையு மைந்து
உறுதியா யோடுமடா வுண்மை யாக
ஆடியே வலகலையி லோடும் போது
அன்புடைய சூரியனென் றதற்கு நாமம்
சாடியே யிடகலையி லோடும் போது
சந்த்ரகலை யென்றுமே பேரு மாச்சு
கூடியே யிருகலையும் ஒன்ற தானல்
குணமான சுழிமுனையென் றறிந்து காணே. (45)

அறிந்துகொள் கண்மணியே யென்ன சொல்வேன்
அன்புடைய சுழிமுனையை யுகந்து பாரு
எரியுமப்பா எண்ணை திரி யில்லாமல் தான்
ஏகமாய்த் தெரியுமொளி ஆதி யாச்சு



நெறியுடைய தீபவொளி யதுவே யென்றும்
நிச்சயமாய் நற்சுடரும் அதுவே யென்றும்
குறியுடனே தானறிவாய் இருக்கும் போதே
குவலயத்தில் அறிந்தவனே பத்தனுமே. (46)

பத்தான எட்டிரண்டை யறியான் தன்னை
பாரதனில் நல்லோனென் றியம்பலாமோ
சித்தான சித்ததனை யறியா ரெல்லாம்
சிறுமையுள்ள கீழ்குலத்தி லாவா ரப்பா
குத்தான குருமணியை யறிந்தால் நீயும்
குவலயத்தில் மேன்மைபெற்ற அறிஞ ரென்றும்
முத்தான ஆகிறத்தில் சொற்கந் தன்னில்
முதலவனின் அருளினுல் வாழ்வாய் தானே. (47)

வாழ்ந்திடுவாய் வல்லோனின் அருளதான
வலிமையுள்ள மூச்சுடரின் வணக்கத்தாலே
தாழ்ந்திடுவார் அறியாமற் கால மெல்லாம்
தாரணிதனில் மாயைதனில் சிக்கி வீழ்ந்து
பாழ்நரகி லாகிடுவார் அறியா ரெல்லாம்
பரிவுடனே யெந்நாளுந் தவத்தைச் செய்து
மூழ்கிடுவாய் நன்மையதிற் சார்ந்து நீயும்
முத்திபெற்று நல்லருளிற் சேருவாயே. (48)

அருளான தொழுகைவக் தைந்து நேரம்
ஆதமுக்கு சுபுஹல்லோ இறக்கி வைத்தான்
பொருளான இபுறுஹீம் ளுஹர் தொழுகை
புகழான ஆதியவன் இறக்கி வைத்தான்
மருளில்லா யூனூசுக் கஸர் தொழுகை
வல்லவனும் இறக்கிவைத்தான் தெளிவதாக
இருளனுகா மகுரிபுவும் ஈசாவுக்கு
இறையவனு மிறக்கிவைத்தான் அறிவாய்ச் சொன்னேன். (49)

அறிவான மூசாவுக் கிஷாத் தொழுகை
ஆண்டவன்று னிறக்கிவைத்தா னருமையாக
சரியாக வக்தைந்தும் தெளிவதாக
தப்பில்லா வணங்கினோர்க் கருணமாகும்

நெறியுடைய நித்தனுமே பிழைகள் போக்கி
நீடூழி காலமெல்லாம் பதியிலாக்கி
குறியான கூலியதுங் கொடுப்பே னென்று
கொற்றவனும் அருளினான் நலமாய்த் தானே. (50)

நலமாக ஐந்தையுந்தான் ஒன்றாய்ச் சேர்த்து
நன்மையாய்த் தொழுகத்தான் வேணு மென்றும்
குலமான பெரியவனும் நபிக்குச் சொல்லி
குணம்பெருகும் பேரின்ப மழகுமான
பெலமுள்ள முச்சுடரின் வணக்கந் தன்னை
பிரியமுடன் முஹம்மதுமக் கிறக்கி வைத்தேன்
கலங்காமல் உம்மத்தை வணங்கென் றேவும்
கத்தனுமே ரகசியமாய்ச் சொன்னான் பாரே. (51)

சொன்னானே நபிக்குயிறை ரகசியந்தான்
சுத்தமுடன் மிஃறாஜுக் கழைத்து நன்றாய்
எந்நாளும் இவ்வணக்கம் வணங்கினோர்கள்
இறையவனின் பரகதியை யடைவாரப்பா
கன்னெசென் றிபுலீஸு விலகிப் போவான்
கருமமென்ற கொடியவினை யகன்று போகும்
பொன்னான பொற்பதியில் வாழ்வா ரப்பா
பூரணமா யுரைத்துவிட்டேன் நலம தாச்சே. (52)

ஆச்சப்பா தெளிவாகச் சொல்லக் கேளு
அன்பான தொழுகையதன் விபரந் தன்னை
காட்சியுள்ள அலிபதுதான் நிலையு மாச்சு
கனமான ஹேயது றுக்கூவு மாகும்
மாட்சியுள்ள மீமதுதான் சுஜூது மாச்சு
வாகான தாலதுதான் இருப்பு மாச்சு
பூச்சியமாய் இந்நாலும் வணக்க மாச்சு
பூரணமாய்த் தானறிந்து பொருளைக் காணே. (53)

காணப்பா அலிபதுதா னிலையுமான
கண்மணியே மாமுடைய வணக்கமாகும்
ஈனமில்லா ஹேயதுதான் மிருக ஜாதி
இன்புள்ள வணக்கமது மீமதாகும்



தீனமில்லாப் புழுப்பூச்சி ஊர்வனத்தின்
தெளிவான வணக்கமது மீமதாகும்
வீணென்று வணக்கமதை நினைத்திடாதே
விதமான மலைவணக்கம் தால்தான் பாரே. (54)

பாரப்பா ஹக்குடைய சிர்றினாலே
பதினொன்று முடிச்சதுவும் உன்னிலுண்டும்
நேரப்பா அம்முடிச்சு அவிழ்ந்தா லப்போ
நிலைஈமா னிஸ்லாமும் வெளிய தாகும்
யாரப்பா அம்முடிச்சை யவிழ்க்கப் போறார்
அழகுபெரி யோர்களிடம் அருளைப்பெற்று
கூரறிந்து தெளிந்ததிரு காமில் கையை
குணமாகத் தொட்டிடவே யவிழுந் தானே. (55)

தொட்டிடவே அவிழ்ந்துவிடும் நன்றாய்ப் பாரு
தூய்தாக ஆறான தலமதனிலே
மட்டிடா தாத்ததுவும் வெளியு மாகி
மகத்தான முஹம்மதெழுந் தோங்கி நிற்கும்
திட்டமாய் இதுஈமா னிஸ்லா மாகும்
தெளிவான ஆறைந்து மிதுவே யாகும்
சட்டமாய் குல்அவூது பிறப்பின்னாஸ்
சம்பூர்ண மானதொரு ஆயத் தாறே. (56)

ஆயத்து ஐந்தான விபரங் கேளு
அழகான குல்அவூது பிறப்பில் பலக்கு
ஆயகுர் ஆன் பதினொன்றாயத்தை நீயும்
தொடர்பிடியாய் விபரமுட னோதிக் கொள்ளு
காயமது அழியாமல் பெலப்பதற்கு
கலிமாவைக் கண்டமான் நித்தங் கொண்டால்
மாயமது வினைவிட்டு நீங்கிப் போகும்
மாறாமல் காக்ஷியதுந் தோற்றுந் தானே. (57)

தோற்றுமே லாயிலாஹ மண்தண்ணீராம்
துடியான காற்றதுதான் இல்லா வாச்சு
ஏற்றமுள்ள அல்லாதான் கனலு மாச்சு
இலங்குகின்ற ஹூவது ஆகாய மாச்சு

மாற்றமில்லா தந்தரத்தி லிலங்குஞ் சோதி
மகிமையுள்ள ஆசையென்ற கலியுமாச்சு
நீற்றியே பாவமெல்லா மகற்றி வைக்கும்
நிலையான மீமதுதான் மாவு மாச்சே. (58)

நிலையான வணக்கமதை யறிவா யப்பா
நேர்மையுள்ள கண்மணியே யறிவுள்ளோனே
கலையான மதிரவியை முனையி லொட்டி
கருவான சூக்ஷமதைத் தெளிவாய்க் கண்டு
மலையாமல் ஓர்நினைவாய்த் தவத்தைச் செய்வாய்
மகத்தான பூரணத்தை யுணர்ந்து கொள்வாய்
சிலையான தேகமது அழியு முன்னே
சிறப்பாக அறிந்தவர்க்குத் துயரில்லையே. (59)

துயரமது ஸகருத்தில் இல்லை யப்பா
துய்யோனின் இஸ்றுயீல் மலக்கு வந்து
தியங்கியே நின்றிடுவார் உயிரும் வாங்கார்
தீவிரமாய் ஹக்கவனும் இஸ்றுயீலை
நயமாக அழைத்தல்லோ மொழிவா னப்போ
நன்மையுள்ள முச்சுடரின் வணக்கந் தன்னை
ஜெயமாக நாள்தோறும் அறிந்த சீமான்
செல்வமுள்ள தீன்குலம தாகுமென்றே. (60)

ஆகுமே மண்ணீரல் வாசல் வாயாம்
அன்பான ஆலமின்ஸா னென்ற தாகும்
வாகான கருயீரல் வாசல் கண்ணும்
வழியான அஜிஸாமென் றதற்கு நாமம்
பாகான நுரையீரல் வாசல் நாசி
பூண்புள்ள ஆலமிதால் அதுவே யாகும்
வேகமுள்ள பித்தினின் வாசல் காது
மேன்மையின்பம் அறுவாஹு இதுவே பாரே. (61)

இன்பமுள்ள நயனமதின் பொருளை நாடி
இருந்திடுவார் அறிவுள்ள பெரியோ ரெல்லாம்
நன்றெனவே யோகமதைத் தெளிவாய்ச்செய்து
நயமில்லாப் பொருளையெல்லாந் தூஷணித்து



பண்டுபழம் பொருளான கலிமாத் தன்னை
பரமிடையில் தெரிசித்துப் பாசம் நீக்கி
வென்றிடுவார் இபுலீஸை யறிஞர் தாமும்
விவேகமுடன் இந்நூலைத் தெளிந்து கொள்ளே. (62)

தெளிந்துகொள் கருவதனை நாடி நீயும்
தீவிரமாய் ஊன்றியே ஆறி லுன்னி
அழிவில்லா ஞுதிதனை யறிவா யப்பா
அன்புடைய கண்மணியே அறிவுள்ளானே
இழிவுள்ளா னென்பதுவுந் தவமில்லானே
இகழ்ச்சியாய் நரகமதி லேகிச் செல்வான்
மொழிந்திட்டேன் திட்டமதாய் இந்நூல் தன்னில்
மூடர்களே யுகப்பாக இந்நூல் பாரே. (63)

பாரப்பா மண்ணினிறம் வெள்ளை யாகும்
பகருகிறேன் ஜிபுரீயீல் மலக்கு மாகும்
நீரான தண்ணீரின் நிறஞ் சிவப்பு
நேர்மையுள்ள மீக்காயீல் மலக்கு மாகும்
கூரான காற்றுநிறம் பச்சை யாகும்
குணமுள்ள இஸ்றுபீல் மலக்கு மாகும்
வீரமுள்ள கனல்நிறமே கறுப்பு மாகும்
மேலோனின் இஸ்றுயீல் மலக்குந் தானே. (64)

தானப்பா தாமரைக்குத் தொட ராகாசம்
தன்மையுள்ள முஹம்மதுவும் அரசாகும்
தேனுள்ள ஆகாசம் நிறமே நீலம்
தெவிட்டாத மதியமுதம் மௌன மாகும்
தீனுடைய தீனிலையை யறிந்த பேர்கள்
செல்வமுள்ள பதிதனிலே வாழ்வா ரப்பா
தீனமில்லாத் தானவனை யுணர்வாராகில்
சிங்கமென்ற தங்கமது அவர்கள் தானே. (65)

தானான தத்துவத்தை யறியான் வீணன்
சாவுற்று நிலைமறந்து சறுகிப் போவான்
தீனுடைய நெறிநீதி யறியாமல்தான்
தெவிட்டாத மதியமுத மென்றுசொல்வான்

கோனென்ற குருபரனை யறியாப் பாவி
கொடுமையென்ற தீவினைகள் பேசும் நாவால்
நானென்பான் ஆதியது வேறே தென்பான்
நன்மையில்லாப் பாவியவன் மொழிகுவானே. (66)

மொழிகுவான் அஞ்ஞானம் மெத்தப் பேசி
மோக்ஷகதிக் காளாகான் மூடன் தானும்
தெளிவுநால் வேதமதை யுணர்ந்திடாமல்
தெய்வமது ஆதிதானென்று மெண்ணான்
இழிவுகளும் மெத்தவுண்டு அறிவில்லார்க்கு
இன்பமுள்ள பூவென்று விளக்கில்வண்டு
அழிவதற்குச் சுற்றுமே யதிலே வீழ்ந்து
அநியாய மாகவுந்தான் சாகுந் தானே. (67)

அநியாய மாகவுந்தான் அதுபோல் பாவி
அகிலமதில் ஆசையென்ற மாயை தன்னில்
இனிமையென்று சுற்றியே வீழ்ந்து சாவான்
இன்பமதை யறியாத மடையனுக்கு
கனியான கலிமாவைப் புகட்டினாலும்
கருவதையும் அறியானே கசடனப்பா
தனியனின் முனிவுஇவன் மேலிறங்கி
தயங்குவான் மதிகெட்ட பாவி பாரே. (68)

பாரப்பா வுடலுக்குள் ஐந்து றூஹு
பகருகிறேன் றூஹொன்று நாமியாவாம்
நேரான றூஹொன்று நாத்திகாவாம்
நிந்தனைகள் செய்யுமொன்று நாபியாவாம்
சாரமில்லாப் பிழைகளெல்லாம் மிகுதமாக்கும்
சண்டாள றூஹுதுவும் நகீமதாகும்
நூரான நல்லொளிவாய் இலங்கி நிற்கும்
நுட்பமுள்ள றூஹுவும் குதுஸி தானே. (69)

தானப்பா தானவனின் குதுஸி தன்னை
தன்மையுடன் அறியாதார் பாவியாகும்
தேனான அமுதமது உருகிப் பாயும்
தெவிட்டாத மதியமுத மறிந்த பேர்க்கு



வீணாக வீண்காலம் போக்க வேண்டாம்
விருப்பமுள்ள அறிவதனைச் சார்ந்தெந் நாளும்
காணுநீ முச்சுடருந் தெளிவாய்க் கண்டு
கனமான அருளதனில் சேருவாயே. (70)

அருளான தவமென்ற தன்னைத் தானே
ஆதியவன் வணங்கென்று அருளிச் செய்ய
பொருளான தன்ஸூறத் தென்று சொல்லி
புவிதனிலே தன்னைப்போ லுரு நிறுத்தி
நெறியான வணக்கமென்று வணங்குவானே
நீதமுள்ள தன்ஸூறத் திதுவுமாமோ
திருவான ஹக்கதுக்குச் சுரூப முண்டோ
தேகமென்ற சிலையாமோ தெளிந்து பாரே. (71)

தெளிவான கண்ணாடி தன்னைப் பார்த்து
தேகமென்ற ஸூறத்தை முன்னிறுத்தி
அழிவான பாவியவன் வணங்கி நிற்பான்
அதுதானே பிணைவைத்த வணக்க மென்ற
இழிவான கேடுள்ள வணக்க மாகும்
இறையோனும் பொருந்தாத செய்கை யாகும்
ஒளியென்று தீபமதை வணங்கி நிற்கும்
உகப்பில்லா மடையனுந்தா னருளில்லானே. (72)

அருளான ஜெபறூத்தின் கண்ணாடிக்குள்
அமைந்திருக்கும் வெளியதுதன் ஸூறத் தாகும்
பொருளான தன்ஸூறத் ததனை நன்றாய்
புகழுடனே தவஞ்செய்தால் புதுமை யாவாய்
திருவான முச்சுடரைத் தெளிவாய்க் கண்டு
தீனுடைய நிலையாகித் தெளிந்து வாழ்ந்து
இருளான இபுலீஸின் மாயை நீக்கி
ஏகனுடை யுதவியினால் அருளைப் பாரே. (73)

பாரப்பா நாஸூத்து மலக்கூத் தென்றும்
பரிவான ஜெபறூத்து லாஹூத் தென்றும்
நேரான ஜெம்ஹூத்து பாஹூத் தென்றும்
நெறியான ஆஹூத்து தம்ஹூத் தென்றும்

தீரமாய் இதுவெட்டும் மகாம தாகும்
    தெளிவாகப் பாஹூத்தில் காக்ஷி கண்டு
நூரான முச்சுடரை யறிந்து நீயும்
    நுட்பமுள்ள தம்ஹூத்தி லொடுங்கி நில்லே. (74)

நில்லப்பா ஆறுதல மறிந்து நன்றாய்
    நேர்மையுள்ள கண்மணியே மதியுள்ளோனே
சொல்லாத சூக்ஷமது தோன்றும் நேரே
    சுடரொளிவாய்க் கோடிரவி யொன்றானாலும்
வெல்லுகின்ற ஜோதிசுடர் நிகரைச் சொல்ல
    வெற்றியுள்ள கண்மணியே முடியா தப்பா
எல்லையறிந் தவர்க்குநன்மை யதிக மாகும்
    இறையவனின் அருளதுவுந் துலங்குந் தானே. (75)

இறையவனின் அருளதனைக் காணார் கோடி
    இன்பமுள்ள அறிவுள்ள மாந்தர் கோடி
குறைவில்லாச் சரமதனைக் காணார் கோடி
    குணமதிலே குடிகொண்ட அறிஞர் கோடி
மறைவேதம் தெளிந்தகுரு வறிந்திருந்தும்
    மதிகெட்டுத் தவஞ்செய்யார் கோடி கோடி
நிறைவான பூரணத்தை யறியா திந்த
    நீதிகெட்ட அறிவிலார் கோடியாமே (76)

அறிவில்லாப் பாவியெல்லாம் உலகந் தன்னில்
    அருமையுள்ள ஞானமதை யறிந்திடாமல்
நெறியுடையோ னென்றுசொல்வான் வீண னப்பா
    நீதமில்லா ஞானமதை மொழிந்து நிற்பான்
குறியான தலமதனை யறியாப் பாவி
    குவலயத்தில் மெத்தவுண்டு அறிவாய் நன்றாய்
வெறிகொள்ளும் பாவிகளுக் கருள் கிட்டாது
    விதமாக இன்னமொன்று சொல்லக் கேளே. (77)

சொல்லுகிறேன் அம்மாறு லவ்வாமத்து
    துணிவான முல்ஹிமா முத்மஇன்னு
வெல்லுகின்ற றாலியா மறுலியாவும்
    மேன்மையுள்ள காமிலாவோ டேழு மாகும்



நல்லாக இதுவேழும் நபுசு மாச்சு
    நலமான கண்மணியே யுகந்து நீயும்
அல்லும்நற் பகலுமாய் வணக்கஞ் செய்தால்
    அருமையுள்ள ஜென்னபதி சேருவாயே. (78)

பதியான பதிதலத்தை யறியா ரெல்லாம்
    பாழ்நரகி லாகிடுவார் பாவி தானும்
நதியான நதியதனை யறிந்தோ ரெல்லாம்
    நலமான பிறதௌசில் வாழ்வார் நன்றாய்
மதியான பூரணத்தை யறிவாய் நீயும்
    மகத்தான கண்மணியே மதியுள்ளோனே
கதியான கருப்பொருளை யறிந்தால் மேலோன்
    காக்ஷியது தெளிந்திடுவாய்க் கண்டுக் கொள்ளே. (79)

கொள்ளுவாய் அறிவான பூரணத்தை
    குறிப்பாகப் புருவமத்தி யதிலே கண்டு
தெள்ளுதவம் புரிந்திடுவாய் அறிவுள்ளோனே
    தெவிட்டாத மதியமுத முண்டு கொள்வாய்
சள்ளைதனை நீக்கிவைத்துத் தவத்தைச் செய்வாய்
    சம்பூர்ண வாழ்வதனைத் தருவான் நீதன்
கொள்ளைகொள் கலிமாவை யிருக்கும் போதே
    குவலயத்தில் நல்விதமாய்க் கூறினேனே. (80)

கூறுகின்ற நாவினா லடைத்திடாமல்
    குணமாக மனநாவை அண்ணா வொட்டி
ஏறுகின்ற சரமதனை மத்தி நாட்டி
    இன்பமுடன் தெளிவாக மேலே நோக்கு
அருவொளி சுடர்மூன்றும் அறிவா யப்பா
    நுட்பமுடன் கண்மணியே மொழிந்தேன் நன்றாய்
மாறுசெய்யும் பாவிகட்குப் புகன்றா யானால்
    மானிலத்தில் மோசமது வருகும் பாரே. (81)

வருகுமப்பா புவிதனிலே கண்ணே சொன்னேன்
    வலிமையுள்ள பொருளதனை யுரைத்திடாதே
பெருகுமப்பா அன்புடனே குருவைத் தேடி
    பேரின்ப அருளதனைப் பெற்றுக் கொண்டு

சறுகுதல்கள் வாராமல் தவத்தைச் செய்வான்
சங்கையுள்ள அறிவுடைய தெளிவுள்ளானும்
குருவதற்கு அருமையுள்ள சீஷனுக்கும்
குவலயத்தில் உரைத்தேன்யான் குணமதாமே. (82)

குணமான அருளதனை யறிந்திலார்கள்
குருடர்கள் புவிதனிலே மொழிந்தேன் நன்றாய்
பிணமானால் தீயதனில் வருத்த மாகி
பிசகிடுவார் அறிவில்லார் மடையர் தாமும்
மணமாவார் நற்பொருளி னாசையான
மாக்கனிமா அறிந்தவனே தங்க மாகும்
வணங்கென்று இவ்வருளைத் தெளிவாய் நீயும்
வாசமுள்ள அறிஞருக்குச் சொல்லுவாயே. (83)

சொல்லுவேன் அருமையாய் இன்ன மொன்று
துடியாக மேல்நாவில் மனநா வொட்டு
வெல்லுகிற தலமதனில் வாசி தானும்
விரிகதிர்போ லொளிவாகத் தோன்றும் பாரே
அல்லுபக லற்றஇடம் அருளைக் காண
அருமையுள்ள கல்லதனை யுருக்கிப் பாரு
அல்லல்செய்யும் பாவியெனை யணுகிடாமல்
ஆண்டவனே யுதவிசெய்து அருள்வாய் தானே. (84)

தானென்ற தீபமதின் சுடரைக் கண்டோர்
தரணிதனில் மேன்மைபெற்ற தங்க மாகும்
தீனுடைய பயிரதனை விளைத்து நன்றாய்
ஜெயமாக வளர்த்ததொரு அறிஞராகும்
தேனான அமுதமதை யருந்திக் கொண்டு
செல்வமுடன் நல்விதமாய்த் தெளிந்து வாழ்வார்
வானுலவும் வான்பொருளை யறிந்தோ ரெல்லாம்
வல்லவரே கண்மணியே அறியச் சொன்னேன். (85)

அறிந்திடுவாய் ஆணிமுத்து மாணிக்கத்தை
அன்புடைய கண்மணியே தெளிவுள்ளானே



வெறியான மஸ்தருந்தும் பாதகர்க்கும்
வீணருக்கும் சிறியோர்க்கும் அருள்கிட்டாது
சிறிதாகப் பரனருளை யெண்ணா தப்பா
சிறப்பாக நீயிருந்து தவத்தைச் செய்து
பெரிதான பேரின்ப அருளைப் பெற்றால்
பெரியோனின் தௌசினிலே வாழலாமே. (86)

வாழலாம் தௌசென்னும் பதியில் தானும்
வல்லோனின் அருள்பெற்ற வரிசையாலே
ஆளலாம் அவனருளை யறிந்த சீமான்
அற்பருக்கு இவ்வரிசை கிடைக்குமோசொல்
மாளாமல் மாண்டவர்கள் பெரியோ ராகும்
மகத்தான தெளிவுடையோ ரிவரே யாகும்
கீழான குலமாவார் அவனைக் காணார்
கேடாகி நரகமதி லேகுவாரே. (87)

நரகமதில் கொடுமைமெத்த அப்பா சொன்னேன்
நன்மையில்லாப் பாவிகட்கு மிகுதி துன்பம்
அரவமதுந் தேட்களுமே நரகந் தன்னில்
அருளில்லாப் பாவிகளை வருத்தஞ் செய்யும்
திறமாக அருளதனை யறிந்தவர்க்கு
ஜென்னபதி யானதிலே சுகங்க ளுண்டும்
மரகதநல் மாளிகையில் நலங்களோடு
மகிழ்ச்சியாய் வாழ்ந்திடுவா ருண்மையாமே. (88)

உண்மைதனைக் கண்டவர்கள் புவியி லஞ்சார்
உலகிலே கோடியில்தான் ஒன்று வுண்டும்
இன்மையென்ற கெடுதியதை விலக்கி நிற்பார்
தேசத்தில் அருளுள்ள ஞானி யாவார்
வெண்மையுள்ள ஜெகஜோதி தன்னைக் கண்ட
மேன்மைபெற்ற நன்மையுள்ளோ ரிவரே யாகும்
வன்னபதி யெல்லைதனில் தெரிசிப்பார்கள்
வளமுடைய பூரணத்தை வல்லோர் தாமே. (89)

பூரணந்தான் இன்னதென்று தெரியுமோ சொல்
புகழுடைய அருமையுள்ள கண்ணே அப்பா
காரணமாய் அவனுடைய அருளினாலே
கருவறிந்த குருதமக்குத் தெரியுஞ் சொன்னேன்
தீரமாய் அவர்களிடம் சென்று மேலோன்
தீபவொளி முச்சுடரைத் தெரிந்துக் கொள்வாய்
வீரமுள்ள அருள்குருவை யறிவதற்கு
மேலோனின் கிருபையினால் காணலாமே. (90)

காணப்பா பூவுலகில் மறந்து ஹக்கை
கருமிகள்தான் வாய்மதங்கள் பேசி நிற்பான்
தோணுகின்ற முச்சுடரை யறிய மாட்டான்
சுயமாகச் சிபத்ததனைத் தெளிய மாட்டான்
வீணான மதம்பேசி ஞான மென்று
மேட்டியாய்த் திரிந்ததினால் கெதிதா னென்ன
ஆணுவத்தை யடக்கியருள் நோக்கிப் பார்த்தால்
ஆண்டவனின் நற்சமுக மேகலாமே. (91)

ஏகலாம் தௌசுயென்ற சொற்கந் தன்னில்
இறையோனி னருளதனால் வாழ்வார் மேலோர்
போகலாம் பூரணத்தைப் புகழ்ந்தா யானால்
புண்ணியம தானதல மதிலே யப்பா
தேகமது அழியாது புவிக்குள் வைத்தால்
தெளிவுள்ள தவசிகளை மண்தின்னாது
மோகமுடன் முதலோனே அருளதான
முத்தியுள்ள தவஞ்செய்ய வுதவி செய்வாய். (92)

தவமான மௌனமதை யறிவுள்ளோர்க்கு
தன்மையுடன் ஈந்திடுவாய் சங்கை யாக
பவமான பாவமெல்லாம் அகற்றென் றேவிப்
பதியான மஹ்மூதி லருளைக் காட்டி
சவம்போலே சாகாமற் சாகச் சொல்லி
சம்பூர்ணக் கலிமாவை யுரைக்கச் சொல்வாய்
நவவாசல் ஒன்பதையு மடைத்தி டென்று
நன்மையுடன் கூறிடுவாய் நலமாய்த் தானே. (93)



நலமான ஏழிரண்டு வாசல் சாத்தி
நன்மையுடன் இருந்திடவே சத்த மோசை
குலமான சங்குதொனி யோசை கேட்கும்
குணமாக அறிந்திடுவாய் கூர்மையாக
பெலனான கடலோசை நாத வோசை
பேரின்ப முழக்கமுள்ள கீத வோசை
கலகலென்று பதினெட்டு ஓசை யொன்றாய்
காக்ஷியுடன் கேட்குமடா அறிந்து பாரே. (94)

அறிவான குருமுறையைக் காண்பதாரு
அழகுடைய நன்மைபெற்ற அன்பர் காண்பார்
குறியான குறிப்பெல்லா மறிந்து நாட்டி
குணமாகத் தவமெல்லாம் முடிப்பாய் நன்றாய்
நெறியான பூரணத்தைத் தவிர வேறே
நிலையான வணக்கமது உலகி லுண்டோ
சரியான வணக்கமது இதுதா னப்பா
சம்பூர்ண மாகவேநீ தவஞ்செய்வாயே. (95)

சம்பூர்ண மானதொரு பூரணந் தான்
சரியான மாற்றதிகத் தங்க மப்பா
எம்பிரா னென்றதுவும் இதுவே யாகும்
இன்பமுள்ள கண்மணியே யினியவானே
வம்புசெய்யும் பாவிகட்கும் மூடர் கட்கும்
மகத்தான நல்லருளை யீந்திடாமல்
நம்பிநின்ற அன்பர்கட்கு முப்பூ வீந்து
நலமான அறிவதனை நன்றாய்ச் சொல்லே. (96)

நன்றான கண்மணியே அறிவுள்ளோனே
நாவதற்கு அடங்காமெய்த் தபசு தன்னை
குன்றாமல் செய்திடுவாய்த் தெளிவதாக
குலமுயர்ந்த தங்கமதாய் நீயுமாவாய்
தின்மையென்ற கொடுமைவினை யகன்று போகும்
தீங்குகளும் சஞ்சலமும் விலகிப் போகும்
புன்னருளைக் கண்டநல்ல பெரியோர் கட்கு
முதலோனே கிருபைசெய்வா யாதி நீயே. (97)

ஆதியே துன்பவினை யகற்றி வைத்து
அருள் தருவாய் பொற்பதியே அறிவனைகல்
நீதியே நாடுகின்ற துஆவை நித்தம்
நேர்மையுடன் ஏற்றுக்கொள் நெறியுள்ளோனே
ஜோதியே நித்திரையும் அசதி நோயும்
சுடர்விளக்கே மறதியெல்லாம் நீக்கி வைத்து
வேதனைக ளில்லாமல் நித்தங் காத்து
வேந்தனே தேறச்செய் அருளிற்றேனே. (98)

தேறவே யுதவிசெய் நன்மையான
தீபமுள்ள முச்சுடரே தெளிவே நீதா
ஏறவே வாசியதை ஜெயமதாக
இறையவனே கிருபைசெய்து இரக்கம் வைப்பாய்
தீரமாய்த் தவமதனைச் செய்வதற்கு
செல்வனே சோம்பலதை நீக்கி வைத்தென்
நேரமுமுன் நினைவெணக்கு மாறிடாமல்
நித்தனே யுதவிசெய்வாய் நிகரில்லானே. (99)

உதவிசெய்வாய் மௌனமென்ற பதத்திற் சேர
உண்மையுள்ள வல்லவனே யுயர்ந்த கோனே
சதுமறைநால் வேதமதுஞ் சமய மாறும்
சங்கையுடன் தெளிவதற்கு அருளுந் தந்து
கதிபெறவே கலீபத்து ஷெய்கு ஷாகுல்
ஹமீதவனை நிரப்பமா யாக்கிவைப்பாய்
அதிபதியாய் எவ்வுலகும் ஆளும் கோவே
அருட்பூர்ண மெய்ஞ்ஞானம் நூ றருளினேனே. (100)

பூரண மெய்ஞ்ஞான நூறு முற்றிற்று.



## சம்பூர்ண ஆசிரிய விருத்தம்.

கொற்றவா அற்பஜல மழியாம லேகாத்து
குணமுள்ள தாய்வயிற்றில்
குறைவிலா தசமாதம் வைத்துமே யுருவாக்கி
குவலயந் தனிலாக்கியே
நற்றவம் தந்தபரி பூரணா னந்தமே
நலமான ஜெகஜோதியே
நாதனே யுனது திரு தெரிசனங் காணவே
நன்மைசெய் ஏகவொளிவே.
உற்றவர்க ளொருகோடி யுலகத் திருக்கினும்
ஒருபலனு மில்லைபரனே
உன்பதம் பதமேய தொழியவே றில்லையென்
றுறுதிகொண் டடியனுக்கு
முற்றும்அரு ளாகநல் மோக்ஷகதி தந்துவுன்
மோனமணி தீபமதிலே
மூழ்கியே நின்றிடக் கிருபைசெய் தருளுவாய்
முதல்வனே யென்பிரானே
சற்றுவறி வானசிறி யோனைநீ தள்ளாமல்
சம்பூர்ண வாழ்வை யருள்வாய்
சகலமும் புகழ்கின்ற வல்லவா வுன்னுதவி
தருவாய் நிறைந்தபொருளே. (1)

வட்டவடி வானவோர் வல்லவா நானுனை
வணங்கிட வருள் தருகுவாய்
வண்ணமது மூன்றுமொரு வடிவதனி லாகிய
வணக்கமது தந்தருளுவாய்
நிஷ்டையி லிருந்துநன் மார்க்கவழி செல்லவே
நேர்மையைத் தந்தருளுவாய்
நேரான மஹாமூது ஆறான தலமதில்
நிலைத்திட வருள் தருகுவாய்
வட்டவடி வதனிலே யொட்டிடும் வண்ணமை
வடிவுநான் காணவருள்வாய்

வாசமாய் வீசியே வருகின்ற நால்மறையில்
வந்தனஞ் செய்யவருள்வாய்
திட்டமாய் வரும்நாலில் கலிமா வுரைத்திட
தெளிவாக வருள்தருகுவாய்
திருநாம மானதைச் செப்பியே கீழ்முனையில்
செல்வமாய்த் தொழுகவருள்வாய்
சட்டமதை யறியாத அறிவிலா தடிமைக்கு
சம்பூர்ண வாழ்வையருள்வாய்
சகலமும் புகழ்கின்ற வல்லவா வுன்னுதவி
தருவாய் நிறைந்த பொருளே. (2)

பாசங்க ளென்றகொடு மோசங்களை விட்டுப்
பரமதனிற் சேரவருள்வாய்
பற்பலகே டெண்ணம்தனை யெல்லாம்நீ நீக்கியே
பரமகுரு பாதமருள்வாய்
வேசங்கள் பூண்டுநற் குருவென்று பொய்பேசும்
வேசகுரு நீக்கியருள்வாய்
வெற்றியரு ளாகிய தன்னொளிவு காட்டிடும்
மேன்மைகுரு காணவருள்வாய்
நேசமாய்த் தினமுமே வன்னிமல ஞானதில்
நீதியாய்ச் சுற்றவருள்வாய்
நெறிதரும் கண்மத்தி மீதினில் அழகொளி
நிலைத்திட வருள்தருகுவாய்
தேசமணி யானமஹா மூதான தீபமதைத்
தெரிசிக்க வருள்தருகுவாய்
தீனை பயிரதைத் தெளிவாய் வளர்த்துநல்
தீன்நிலை நிறுத்தியருள்வாய்
சாசுவதம் தந்தருள் சர்வலோ காதியே
சம்பூர்ண வாழ்வையருள்வாய்
சகலமும் புகழ்கின்ற வல்லவா வுன்னுதவி
தருவாய் நிறைந்தபொருளே. (3)

வாயினால் மொழியாத மௌனமணி சக்கரம்
வந்திட வருள்தருகுவாய்



வண்ணமது தளதளென் றொளிவான கதிர்வீசும்
வட்டமது தெரியவருள்வாய்
[illegible]யை மாதாவுந் தள்ளுமோ
தெய்வமே யெனக்கருளுவாய்
சிந்தையது தெளிவாகி யருளான வுன்பதம்
தெரிசிக்க வருள்தருகுவாய்
தாயென்ற மாதாவும் பிள்ளையைத் தள்ளுமோ
தள்ளாமல் வரமருளுவாய்
தஞ்சமுன் தஞ்சமே யல்லாமல் வேறில்லை
தர்மமே யருள்தருகுவாய்
காயில்லாக் கனியான கலிமாவி னொளியதனைக்
காணவே யருள்தருகுவாய்
கண்மூடி மௌனியா யிருந்துவர சாளநற்
கருத்தைநீ தந்தருளுவாய்
சாயுச்சிய பாதமருள் தற்பரனே பொற்பதியே
சம்பூர்ண வாழ்வையருள்வாய்
சகலமும் புகழ்கின்ற வல்லவா வுன்னுதவி
தருவாய் நிறைந்தபொருளே.

ஆலம் படைத்தறஹ்மானே நீ யெனையடிமை
யாளாக்கி அருள்தருகுவாய்
அரிதான பொருளென்ற ககனமணி முத்தோநல்
லறிவனை யருள்தருகுவாய்
மூலமதில் நின்றுகலி மாவோடு வாசியை
மூலமதில் மூட்டவருள்வாய்
முட்டியே நின்றெழுஞ் சோதிமுச் சுடரதை
முறையாக அறியவருள்வாய்
கோலமது கொள்ளும்நல் லறிவிலாப் பாவியொடு
கூடா திருக்கவருள்வாய்
குறியான நாவதனை யண்ணாவி லொட்டியே
கூர்ந்துமே பார்க்கவருள்வாய்
பாலங்க டந்தியே ஜன்னப்பிறு தௌகினில்
பகூதுடன் சேர்க்கவருள்வாய்

பாவியான் செய்தபெரும் பாவம் அனைத்துமே
பரமனே நீக்கியருளவாய்
ஜாலமாய் மறையோதும் சண்டாள ராணுகாமற்
சம்பூர்ண வாழ்வையருள்வாய்
சகலமும் புகழ்கின்ற வல்லவா வுன்னுதவி
தருவாய் நிறைந்தபொருளே. (5)

நேசமது வுன்னருளின் நேசமே யொழியவினி
நேசமது இல்லையருள்வாய்
நிச்சயம் நற்பரி பூரணங் தன்னிலே
நேர்கொள்ள அருள்தருகுவாய்
பாசமது வுன்பேரில் இல்லாத பாவிக்குன்
பக்ஷமுண் டோஅருளுவாய்
பாரினிற் றெளிவான அருளுள்ள அன்பர்களை
பக்ஷம்வைத் தேயருளுவாய்
வாசமதி லருள்கொள்ள நேசம் பூரண
வல்லவா எனக்கருளுவாய்
வானிறெளி பெருகவும் நாளுமதிற் றாங்கவும்
வரமதனைத் தந்தருளுவாய்
நீசமற நெஞ்சதனில் அறிவதனைத் தந்துமே
நிலைகொள்ள வருள்தருகுவாய்
நித்திரையை நீக்கியே சத்துருவைப் போக்கியே
நீதனே யருள்தருகுவாய்
சாசுவத கருணாகரா வெங்கும் மேலவா
சம்பூர்ண வாழ்வையருள்வாய்
சகலமும் புகழ்கின்ற வல்லவா வுன்னுதவி
தருவாய் நிறைந்தபொருளே. (6)

வரிசைதரும் அழகான சுந்தரச் சோதிமணி
வண்ணவடி. வதனையருள்வாய்
வம்புடைய கொடுமோச அம்பிகை பாசமதை
வல்லவா நீக்கியருள்வாய்
சரிகையோடு கிரிகைநல் யோகமுடன் ஞானமும்
சரியாக அறியவருள்வாய்



சச்சிதா னந்தனே சந்தமே மேலவா
சங்கைகலி மாவையருள்வாய்
அறுஷென்ற ஜோதியதுள் குறுசென்ற கஃபாவை
அறிந்துயான் சுற்றவருள்வாய்
அரிதான வுள்ளரையி லோரிடந் தன்னிலே
அன்புடன் தூங்கவருள்வாய்
கருநினைவு மொன்றாய்க் கலந்துவரும் மத்தியில்
காணாமற் காணவருள்வாய்
காக்ஷிக ளனைத்துமே கண்டுயான் மகிழ்ந்துலகக்
காக்ஷியை நீக்கவருள்வாய்
சறுகுதல் வாராமற் சகலமும் நிரப்பமாய்
சம்பூர்ண வாழ்வையருள்வாய்
சகலமும் புகழ்கின்ற வல்லவா வுன்னுதவி
தருவாய் நிறைந்தபொருளே. (7)

அண்டகோ டிகளெலாம் ஓர்குடையி லாள்கின்ற
அற்புதனே தீபமருள்வாய்
அந்தரந் தனில்நின்று ஆடும்முச் சுடரையும்
அறிவுடன் தெளியவருள்வாய்
கண்டதோ ரிருபொருளைப் பொட்டியே நோக்கிடக்
கருவெலாந் தெரியவருள்வாய்.
கருவிகா ரணங்களனைத்தும்பிர காசமாய்
கத்தனே காணவருள்வாய்
முண்டகக் கமலத்தின் கீழாகத் தூர்சின
முனையதனில் நிற்கவருள்வாய்
முனையதனில் நிற்கவே ஜோதிப்பிர காசமாய்
முன்னிற்க அறியவருள்வாய்
வண்டர்தா னிலமதி லிவ்வறிவை யறிவரோ
வகையுடன் தெளியவருள்வாய்
வரிசைதரும் ரண்டெழுத் தானதை நோக்கியே
வடிவையான் காணவருள்வாய்
சண்டமா ருதமெனும் தீங்குக ளணுகாமற்
சம்பூர்ண வாழ்வையருள்வாய்

சகலமும் புகழ்கின்ற வல்லவா வுன்னுதவி
தருவாய் நிறைந்த பொருளே. (8)

கண்ணாலே நோக்கவும் விண்ணெலாம் நூராகக்
காணவே யருள்தருகுவாய்
கற்பூர மாமணி ஷபா அத்தி லெனையுமே
கரைசேர வருள்தருகுவாய்
மூன்றான தவசிங்க ராஜனே யரிதான
உண்மையைத் தந்தருளுவாய்
ஒன்பது நான்கைந்து வாசலைக் கட்டவும்
உதவிநீ செய்தருளுவாய்
தன்னாலே மூந்திடும் வாசிகலி மாவிலை
சாரவுன் கிருபையருள்வாய்
தகதகமு ழக்கமும் கைமணியி னோசையும்
சங்குதொனி கேட்கவருள்வாய்
பன்னிரு மப்படியே மாறுதி ருக்கவும்
பராபர மானேயருள்வாய்
பக்ஷம்வைத் தெனையாளும் வச்ரமணி நீலனை
படைத்த றஹ்மானேயருள்வாய்
சன்னதியில் வரவருட் பதியதனி லாக்கியே
சம்பூர்ண வாழ்வையருள்வாய்
சகலமும் புகழ்கின்ற வல்லவா வுன்னுதவி
தருவாய் நிறைந்தபொருளே. (9)

ஆதியே யன்பனே அருமைமணி யாகிய
அம்பரனே யருள்தருகுவாய்
அஞ்செழுத் தானதும் பிஞ்செழுத் தானதும்
அறியவே யருள்தருகுவாய்
நீதியுள் ளருளான ஹூவெதுவு மைந்துமே
நிரப்பமா யருள்தருகுவாய்
நிலையான ஐந்தினுள் பிஞ்செழுத் தானதும்
நிலைகொள்ள வருள் தருகுவாய்
ஜோதியே யெனையுமே யாளாக்கி யுன்னருளில்
துயரற வருள்தருகுவாய்



துறவுசாம் நஞ்செழுத் தோடுறவு செய்துமே
சூட்டிட வருள்தருகுவாய்
தீதிலாக் கண்ணாடி ஜபறூத்தை யான்கண்டு
தெளியவே யருள்தருகுவாய்
தெளிவான ஜபறூத்தி னுள்ளான வொளிரூபம்
தெளிவாக அறியவருள்வாய்
சாதித்து இப்பொருளைக் கண்டுதெளி வாகவும்
சம்பூர்ண வாழ்வையருள்வாய்
சகலமும் புகழ்கின்ற வல்லவா வுன்னுதவி
தருவாய் நிறைந்த பொருளே.

பரமான அருவேநற் றிருவேபொற் பதமான
பாக்கியந் தந்தருளுவாய்
பராபரனே யண்டபகி ரண்டமும் நிறைந்தவா
படைத்தோனே யருள்தருகுவாய்
வரந்தரும் தவநிலைசம் பூர்ணத் தெரிசனையும்
வலியனே யறியவருள்வாய்
வஞ்சனை சூனியம் வரும்பிணிகள் சகலதும்
வல்லவா நீக்கியருள்வாய்
திறமான கலிமாவை வாசிதனி லேற்றியே
சிறப்புடன் தூங்கவருள்வாய்
திரிகோண வீதியில் தீபமுச் சுடரதைத்
தெரிசிக்க வருள்தருகுவாய்
விரதமா யிருந்துசன் னதியினிற் சென்றுதொழ
மேலவா வருள்தருகுவாய்
வேதமஹ்மூ தூநபி பாதமலர் கண்டுமே
வீழ்கவு மருள்தருகுவாய்
சரமான புறவியது வடங்கவே காயமதிற்
சம்பூர்ண வாழ்வையருள்வாய்
சகலமும் புகழ்கின்ற வல்லவா வுன்னுதவி
தருவாய் நிறைந்த பொருளே. (11)

சேர்த்துநீ மூமீன்கள் கூட்டமதி லாக்கியே
செல்வம்நீ தந்தருளுவாய்

ஜெயமான சதுரங்க நால்மறையிற் றேறவே
 ஜெயமதனைத் தந்தருளுவாய்
பார்த்தவிட மெங்கும்பரி பூரணச் சோதியாய்
 பார்க்கவே யருள்தருகுவாய்
பகுதிநற் பொருளான கலிமாவை யெந்நாளும்
 பக்ஷமுட னேயருளுவாய்
சீர்த்திநற் கலிமாவை மாற்றிப் பிடித்து[illegible]
 சீருற வருள்தருகுவா[illegible]
சீமானே [illegible]னே [illegible]னே குன்றாத
 சற்பரனே யருள்தருகுவாய்
தோத்திரஞ் செய்யவே சுத்தனே சோர்வுதரும்
 தூக்கமதை நீக்கியருள்வாய்
சுத்தபரி பூரண னந்தமே தேசிகா
 சொல்லொணாப் பொருளே யருள்வாய்
தார்த்தியம் அணுகாமற் காத்துபிற தெளசினிற்
 சம்பூர்ண வாழ்வையருள்வாய்
சகலமும் புகழ்கின்ற வல்லவா வுன்னுதவி
 தருவாய் நிறைந்த பொருளே. (12)

கட்டியே பூட்டியதை மாட்டிப் பிடித்திட
 ககனமணி சோதியருள்வாய்
ககனமணி ஜோதியுள் குருவான சுருமாவைக்
 காணவே யருள்தருகுவாய்
திட்டமாய் வரும்நாலில் ஆயிரத் தெண்மலர்
 தெளிவாக வரவருளுவாய்
ஷெய்குபரீத் தர்வேஷு காதிரி யானமஹா
 சிறந்தஎன் குருக்கருளுவாய்
முட்டித்த தம்பியே முச்சுடர் விளம்பவும்
 மும்மலம் நீக்கியருள்வாய்
மூலமணி சக்கரம தானதின் ஓர்முனையில்
 முடக்கிப் படுக்கவருள்வாய்
வெட்டவெளி தன்னிலே யொட்டிடா வண்ணமதில்
 விழியொட்ட வருள்தருகுவாய்



வேதா[illegible] [illegible]த்தாந்தம் ரண்டையும் தெளிந்துயான்
 வேதவொளி காண[illegible]
[illegible] [illegible]ய வேதமுறை சகலமும் யானறிய
 சம்பூர்ண வாழ்வையருள்வாய்
சகலமும் புகழ்கின்ற வல்லவா வுன்னுதவி
 தருவாய் நிறைந்தபொருளே. (13)

நேயமது வுன்பேரி லாகியே மஹாமுறிதில்
 நிலைகொள்ள வருள்தருகுவாய்
நெஞ்சமது சரியான அறிவினிற் கூடவே
 நேர்வழியீ தந்தருளுவாய்
மாயபூ தலத்தோர்கள் தூஷணிக் காமலெனை
 வல்லவா அருள்தருகுவாய்
வளமான தவமதனைத் தெளிவாகச் செய்யவும்
 வல்லபந் தந்தருளுவாய்
காயமது அழியாமற் பெலக்கவே யருளான
 கலிமாவைக் காணவருள்வாய்
கலீபத்து ஷெய்குஷா ஹுல்ஹமீ தெந்தனை
 கரைசேர்த்து அருள்தருகுவாய்
மாயமது எனைவிட்டு நீங்கவே யுதவியீ
 மாறாமல் தந்தருளுவாய்
மறுவற்ற வோசைமணி மாமண்ட பத்துள்நிதம்
 மருவிட வருள்தருகுவாய்
சாயைநிழ லற்றமஹா மூதுநபி யருள்காண
 சம்பூர்ண வாழ்வையருள்வாய்
சகலமும் புகழ்கின்ற வல்லவா வுன்னுதவி
 தருவாய் நிறைந்த பொருளே. (14)

சம்பூர்ண ஆசிரிய விருத்தம் முற்றிற்று.

## சிதானந்த ஆசிரியவிருத்தம்.

அதிபனே நீதியே அண்டபகி ரண்டமும
அடங்கியே நின்ற பொருளே
அணுவேனுங் குறைவிலா தறியவும் அற்புதம்
ஆனந்தமே தருகுவாய்
கெதியுன்னை யன்றியே வேறொருவ ரில்லையென்
கிருபையரு ளானநீதா
கெட்டவழி யாகாமல் திட்டமென் றருளையுன்
கிருபைகொண் டறியயானும்
விதியெனக் கருளுவாய் சித்தனே முத்தனே
வீணாக நானிராமல்
வேதமெனும் ஒளிவுகுறு ஆனந்த மோதியே
விபரமாய்த் தெளிவாகவும்
சதிகெடுதி யுண்டாக்கும் இச்சையை நீக்கியே
சதானந்தி காணவருளே
சச்சிதா னந்தமே நிச்சயப் பொருள்நிதந்
தருகுவாய் ஒளிநாதனே. (1)

மாதவத் தோர்களை நீதவத் தோர்களாய்
வைத்திடும் பெருமைநீயே
மற்றவ ரிருந்தென்ன ஆசையணு வேனுமே
வல்லவா இல்லையெந்தன்
நாதனே யருளான நீதனே யெந்நாளும்
நழுகாமற் காத்தருளுவாய்
நட்பாக வெனையாத ரித்துவுன் கைவசம்
நாயனே வைத்தணைத்து
கோதையரின் மாயையைப் பற்றறவே நீக்கிவை
கோமானே ஆதிவாசா
குற்றங்கள் தீயவினை காமக்கு ரோதங்கள்
கொடியபகை போக்குஇறைவா
சாதித்து ஓர்நினைவு கொண்டுமே தெளிவாகச்
சதானந்தி காணவருளே
சச்சிதா னந்தமே நிச்சயப் பொருள்நிதந்
தருகுவாய் ஒளிநாதனே. (2)



முத்துநவ ரத்தினம் மௌனமே யெனையாளும்
முத்தனே நல்லொளிவதை
மோகமுட னறியவே பாசமது எப்போதும்
மூலமே நீதருகுவாய்
எத்தேச காலமும் முச்சுடர் தெளிவதாய்
இருக்கவும் அருளானது
இலங்கியே தளதளென் றொளிவுகதிர் வீசவே
இறைவனே தந்துநன்றாய்
வெற்றியாய்க் கோட்டைப் பிடித்துவருள் கொடியையான்
வீதிமுக் கோணமதிலே
மேன்மையாய்ப் போடகலி மாக்கொடி பறக்கவும்
வெற்றிசெய் யருள்நாதனே
சத்தியம தானதோர் சுத்தமணி தீபமே
சதானந்தி காணவருளே
சச்சிதா னந்தமே நிச்சயப் பொருள்நிதந்
தருகுவாய் ஒளிநாதனே. (3)

பொய்யான துனியாவின் ஆசையது நீக்கியே
புகழுடன் தவமானதைப்
பொருந்தவும் அருளுதவி தருகுவாய்ப் புண்ணியப்
போஜனே ஆதியானே
மெய்யான கலிமாவை நித்தியந் தெரிசிக்க
மேன்மையைத் தந்துநன்றாய்
மேலாம் பதங்காட்டி நீயடிமை யாக்கியே
மேலவா கையேற்றுமே
வையகந் தன்னிலே துன்பவினை சூனியம்
வஞ்சனை யணுகாமலே
வல்லனே யகற்றிவை வாசனே நேசனே
வலிபொருளே தெளிவுள்ளவா
சையோக மென்றதோர் மயலாசை நீக்கியே
சதானந்தி காணவருளே
சச்சிதா னந்தமே நிச்சயப் பொருள்நிதந்
தருகுவாய் ஒளிநாதனே. (4)

அருமையழ கீசனே அற்புதத் தீபமே
ஆனந்த னேராஜனே
அண்டினோர் களையெலாம் ஆளாக்கி யருளதில்
அமைத்தநல் லாதியான
பெருமையே அஞ்ஞான வேரறு தீபமெய்
பேரின்ப வருள்தந்துயான்
பிசகற நடக்கவே கிருபைசெய் நீதியே
பேதகம கற்றிவைத்து
சறுகுதல் வாராதி ருக்கவும் உனதருள்
தந்திர க்ஷித்துஎன்னை
சப்பூர்ண வாழ்வதனி லாக்கிவை இறைவனே
தனிமையே இனிமையருளே
சரியான பதமுத்தி யாகிடவும் நாயனே
சதானந்தி காணவருளே
சச்சிதா னந்தமே நிச்சயப் பொருள்நிதந்
தருகுவாய் ஒளிநாதனே. (5)

செத்தால் பிழைக்குமோ தேகமது அழியுமுன்
சீக்கிரம் அருமையுள்ள
ஜெயமான சதுர்மறை வேதமதை மௌனமாய்ச்
செல்வமுடன் நாளோதவும்
வெற்றிகொடு கத்தனே சித்திகொடு முத்தனே
விரதமா யிருந்துநிதமும்
வெல்லவும் இபுலீஸை நல்விதப் பூரணம்
மேன்மைமுச் சுடர்கண்டுயான்
நத்துதல் கொள்ளவும் முத்தியரு ளாக்கியே
நாயனே கிருபைசெய்வாய்
நாதநா தாந்தமே நீதமணி மௌனமே
நன்மைகொடு தேவசித்தே
சத்தியது கொள்ளாமற் சித்துவிளை யாடவே
சதானந்தி காணவருளே
சச்சிதா னந்தமே நிச்சயப் பொருள்நிதந்
தருகுவாய் ஒளிநாதனே. (6)



காகமாய் நின்றுமே கதறிடும் பையலைக்
காப்பாற்றி நன்மையருளில்
காரணா சேர்த்துவை பூரணா னந்தமே
கர்த்தாவே யேகனேயென்
தேகமது அழியாதிருக்க நீ கிருபைசெய்
தெளிவுள்ள தீபமதனே
சிறப்புடன் நித்தியம் தெரிசித்து வோர்முனையில்
செல்வமாய் முத்திவீழ்ந்து
பாகமாய் எப்போதும் தவவட்ட மானதில்
பக்தியா யூன்றி யூன்றி
பக்ஷம்வைத் துன்னையும் வணங்கவே யுன்னுதவி
பரமனே நீதருகுவாய்
சாகரத் திரை கடல் மூழ்கவிருள் போக்கியே
சதானந்தி காணவருளே
சச்சிதா னந்தமே நிச்சயப் பொருள்நிதந்
தருகுவாய் ஒளிநாதனே. (7)

கஞ்சாவ பின்கொடிய வஸ்தான மஸ்துவகை
கருதியுண வாகிடாமல்
காவலனே நீக்கிவை பாவமதை யெப்போதும்
கர்த்தனே போக்கிவைத்து
வஞ்சகமி லாப்பொருள் தந்துவழ காக்கிவை
வல்லவா வலியனீதா
மாவென்ற கலிமாப் பொருந்துந் தலந்தனில்
வணங்கிடவே யுதவிசெய்வாய்
தஞ்சமுன் தஞ்சமே யொழியவே யில்லையென்
தாயனே தனிமைவாசா
தாரைப் பெரும் பொருள் தந்தா க்ஷித்திடு
தயாபரனே தீபவொளிவே
சஞ்சல விருளதை நீக்கிநல் லாதியே
சதானந்தி காணவருளே
சச்சிதா னந்தமே நிச்சயப் பொருள்நிதந்
தருகுவாய் ஒளிநாதனே. (8)

கானக முனிவர்கள் போலவே கால்களைக்
　　கட்டித் திணித்து நிஷ்டை
கருத்துடன் செய்திடச் சிறப்பருள் வல்லவா
　　கனகதே சிகனே சனே
வானமந் தரமதில் ஜெகஜோதி யானது
　　வடிவா யுலாவிநிற்க
வடிவதிற் சதுர்மறை நான்கில் நிலைத்துயான்
　　வந்தனஞ் செய்ய ஆதி
கோனவனே நீயுதவி செய்துவரு வேணற்றியை
　　கோமானே ஏகனானே
குணமதிற் குடிகொள்ள சோம்பல்பிணி நித்திரை
　　கொடியஇருள் நீக்கிவைத்து
சாணெட்டு நாலுமுழ மானகூ டானதிற்
　　சதானந்தி காணவருளே
சச்சிதா னந்தமே நிச்சயப் பொருள்நிதந்
　　தருகுவாய் ஒளிநாதனே. (9)

கண்ணிநடு வானமஹா மூலவின் தலமதிற்
　　கருத்துட னருளறியவே
கலீபத்து ஷெய்குஷா ஹுல்ஹமீ துக்கருள்
　　கத்தனே நீதருகுவாய்
எண்ணரிய ஜீவமனு வெல்லாம் படைத்தகல
　　விறைவனை கைவிடாமல்
ஏற்றெனக் கருள்தந்து மாற்றநிக மாக்கியெ
　　எங்கோனே யடியேனையும்
பொன்னுலகு வாழ்வுதந் தன்னருளி லாக்கியவை
　　புதுமைமுச் சுடர்காணவே
பூரணா னந்தமே காரணச் செல்வமே
　　புகழுடன் கிருபைசெய்வாய்
தன்னகுண மோசத் துரோகியனு காமனே
　　சதானந்தி காணவருளே
சச்சிதா னந்தமே நிச்சயப் பொருள்நிதந்
　　தருகுவாய் ஒளிநாதனே. (10)



கானக விலங்கினங் கனமுள்ள மதயானை
　　கரடிபுலி சிங்கமதுவும்
கைவசப் படுமினும் பாம்புதேள் கொடியவிஷக்
　　கருவான ஜெந்துகளுமே
தீனமது செய்கின்ற அனலான கனலதுவும்
　　சிறிதுஞ் சுடாமல் வசியம்
ஜெயமான மந்திரஞ் செய்துதண் ணீரின்மேல்
　　தெளிவுடன் நடந்து செல்வர்
வானமெனு மந்தரந் தனிலே பறக்கவும்
　　வசியமது முண்டுமுலகில்
வாகான மந்திரம் வசியத்தி னுலகுயிர்
　　வசப்படும் இதுபெரிதிலை
தானென தன்னுடை மனமதை யொடுக்கியே
　　தவஞ்செய்வ தரிது வரிது
சச்சிதா னந்தமே நிச்சயப் பொருள்நிதந்
　　தருகுவாய் ஒளிநாதனே. (11)

சச்சிதானந்த ஆசிரிய விருத்தம் முற்றிற்று.

## மெய்ஞ்ஞான ஆனந்தக் களிப்பு

கலிமாவை யறிந்துக்கொள் மனமே—நீயுஞ்
சலியாம லெப்போதுந் தவஞ்செய்வாய் தினமே (கலிமா)

1. அற்ப ஜலத்தினு லாக்கி—அமைத்த
ஆண்டவன் சன்னதி யதனைநீ நோக்கி
பொற்பதி தன்னிலே சீக்கி—ரமாய்
புகுந்துநீ சற்குரு உபதேசம் தாக்கி (கலிமா)

2. அற்புத மூலத் திருந்து—பூர
ணானந்தக் கலிமாவை வாசிநீயா டருந்து
வற்பு வெழுததை யறிந்து—இறக்க
வாகான காரணந் தோன்றுமே தெரிந்து (கலிமா)

3. பார்மையம் பற்பல கோலம்—அருளை
பார்த்தோர்கள் பரிபூர ணானந்த மூலம்
நேர்மையாய்ப் போவாரே பாலம்—நித்தியம்
நிஷ்டை யிருந்து அறிவாரே சீலம் (கலிமா)

4. கூர்மையாய்ப் பார்த்தால்நற் கோலம்—தோன்றும்
குணமுள்ள குறிகளைத் தெரிந்தவர் சீலம்
சீர்மேவுங் குருபாதம் ஞாலம்—தன்னில்
தேடித் தெளிந்து துதியனு கூலம் (கலிமா)

5. பெண்ணாசை கொள்வதும் பொய்யே—இந்த
பிரட்டான பூலோக வாழ்வதும் பொய்யே
மண்ணாசை கொள்வதும் பொய்யே—நீயும்
மாற்றிப் பிடித்து வறிந்தாலே மெய்யே (கலிமா)

6. கண்ணாசை யானதும் பொய்யே—இன்பக்
காக்ஷிகள் கண்டு தெளிவது மெய்யே
உண்ணாத ஊணுண்டால் மெய்யி—லருள்
ஒளிவான முச்சுடர் தெரியுமே மெய்யே (கலிமா)

7. தேவாலயந் தன்னிற் சென்று—மிக்க
தீதான பாவங்கள் தீராதே வென்று
ஆவலாய் துதிசெய்வார் நின்று—பாவம்
அதனாலே தீருமோ யோசிப்பீர் நன்று (கலிமா)

8. அணையாத தீபத்தை காணும்—பார்க்க
அதிபாவ தோசங்கள் அனைத்துமே மாணும்
இணையில்லாக் காக்ஷிகள் நேரும்—அதை
இன்பமாய்க் கண்டுதெளிந்தோம் காணும் (கலிமா)

9. ஆடுஞ் சுடர்தன்னில் நாட்டி—நன்றாய்
அன்பான கலிமாவை வாசியில் பூட்டி
நாடியே மேலேற்றியே தீட்டி—கெட்ட
நலமற்ற இபுலீசை வணுகாம லோட்டி (கலிமா)

10. கூர்ந்துபார் தோன்றுமே வட்டம்—நீயும்
கூசாமல் மறகாம லிருந்தாலுன் றெட்டும்
சேர்ந்த வாசல்தன்னை மட்டும்—அடைத்து
தெளிவான தொனிகேட்க தேங்கனி கிட்டும் (கலிமா)



11. அஞ்சுமோ யாறென்ற ஈமான்—இஸ்லாம்
அறிந்து தெளிந்த அறிவுள்ள சீமான்
கஞ்சப் பதம்பணி பூமான்—அருள்
காக்ஷிகள் தோன்றும்நீ கண்டுக்கொள் கோமான் (கலிமா)

12. வஞ்சனை சூனியம் நீக்கு—அருள்
வகையான உபதேசம் வாங்கியே தாக்கு
சஞ்சல மானதைப் போக்கு—நித்தம்
தனியனைக் கண்டுநீ தொழுதுக்கொள் மேக்கு (கலிமா)

13. மச்செனற மாளிகை பொய்யே—உன்னை
மாயையி லாக்கின்ற வாழ்வதும் பொய்யே
சச்சிதா னந்தமே மெய்யே—அதைச்
சார்ந்த வர்க்குநன்மை பொற்பதி மெய்யே (கலிமா)

14. தச்சில்லா மாளிகை யின்கண்—அருள்
சாயுச்சிய பதங்கண்ட மாகுரு வின்கண்
பக்ஷமாய்த் தேடியே முன்நின்—றேநீ
பாங்கான உபதேசம் பெற்றுக்கொள் அன்பன் (கலிமா)

15. முச்சுட ரானதோர் வட்டம்—மேல்
மூலந் தனில்வந் திலங்கிடும் திட்டம்
அச்சுட ரானதை மட்டும்—கண்டே
யறிந்தே வணங்கினால் பேரின்பங் கிட்டும் (கலிமா)

16. வட்ட வடிவான ஜோதி—அந்த
வகையை யறியவே மூலத்தின் மீதி
லெட்டி ரண்டாலேமே லாதி—இறுக்க
ஏகன் ஒளி தோன்றும் தொழுதுக்கொள் ஆதி (கலிமா)

17. ஆசைநீ யொன்றும் வையாதே—நன்மை
அன்பான பேரின்பம் யார்க்குஞ் சொல்லாதே
தோசிகட் கொன்றுங் கிட்டாதே—உனைத்
தாஷணிப்போ ரோடு உறவு செய்யாதே (கலிமா)

18. தேசங்க ளெங்குமே நாடி—மிகு
திரவியம் தேடப்போய்க் குருவேசம் சூடி

பாசமாய்ப் பலஞானம் பாடி—வய்க்கும்
பாழான குருவைநீ யணுகாதே நாடி (கலிமா)

19. காலனும் வருவது மெய்யே—நீயும்
காக்ஷி கண்டுகதி பெறுவதும் மெய்யே
பாலமும் தாண்டுவாய் மெய்யே—இன்னும்
பாகதிக் காளாகி விடுவதும் மெய்யே (கலிமா)

20. ஜாலங்களை விட்டு நீதி—யான
சச்சிதா னந்தனைக் கண்டுநீ யாதி
மேலான கலிமாவை யோதி—நித்தம்
மேன்மையாய்த் தொழுதுக்கொள் தெளிவான சோதி (கலிமா)

21. அண்டினோரைக் காக்கும் ஆதி—யான
ஆண்டவனைத் தினம் அடிபணிந் தோதி
சண்டாள ருடனே கூடாதி—ருந்து
சாயுச்சிய பதவியை சார்ந்துநற் சோதி (கலிமா)

22. அறிந்தோர்க்குத் தெரியுமெஞ் ஞானம்—இதை
அறியாத பேர்க ளெல்லாம்மதி ஈனம்
தெரிந்தோரைத் தேடியே ஞானம்—தன்னை
தெளிந்து அறிந்துநீ செய்வாயே தியானம் (கலிமா)

23. சரிகை கிரிகையோக ஞானம்—நன்றாய்
சர்வமு மறிந்தசற் குருவேமெய்ஞ் ஞானம்
சரியாக அருளிந்தீர் தானம்—அதனால்
சறுகாமல் அறிந்து தெளிந்தேனே யானும் (கலிமா)

24. கப்பிய மாபாவக் கோது—தீர்த்து
கலீபத்து ஷெய்காம் ஷாஹுல் ஹமீது
அப்பாவை பதிமஹ் முது—தன்னில்
அன்பாக சேர்த்துவை யனேஇப் போது (கலிமா)

மெய்ஞ்ஞான ஆனந்தக் களிப்பு முற்றிற்று.



## ஞானச் சர நூல்

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

ஆதியென்ற வரும்பொருளே யறிவனே யென்
அற்புதனே ஆனந்த வுண்மை யேகா
நீதியே தெளிவான நித்தனேநல்
நேர்மையுள்ள வல்லவனே நிரப்பமுள்ள
ஜோதிவடி வுடையோனே சுத்தவண்ணச்
சுயமான வலியவனே தூய்யகோனே
ஓதிடவே சர நூலைச் சிறியோன் யானும்
உகப்பான அருள்நீதம் தருகுவாயே. (1)

நீதமாய்ப் புவிதனிலே வாழுகின்ற
நேர்மையுள்ள கண்மணியே மதியுள்ளோனே
வேதசர நூல்தனையான் இனிமையாக
மேதினியில் உரைப்பதைநீ யன்பாய்க் கேட்டு
போதமென்ற அருளான போதந் தன்னை
புனிதமுடன் அறிந்து தவஞ் செய்வாய் நன்றாய்
வாதைதனை மாற்றிவைப்பான் வல்லோன் தானும்
வணக்கமுடன் நன்மையதிற் சாருவாயே. (2)

நன்மையுள்ள சரமதனின் விபரஞ் சொல்வேன்
நானிலத்திலுள்ள மானிடரே கேளும்
தின்மையறும் சரமொன்று விதமைந் தாக
தீரமதாய் வருகுமப்பா மேலே நோக்கி
தன்மையுள்ள இடகலையி லோடும் போது
சம்பூர்ண மதியென்று அறிந்துக் கொள்ளு
வன்னமுள்ள வலகலையி லோடும்போது
வரிசையுள்ள ரவியென்ற நாமம் பாரே. (3)

பாரப்பா ரவிமதியும் ஒன்றதானால்
பதிவான சுழிமுனை கும்பகமே யாகும்
ஆரப்பா அறிவார்கள் விபரந் தன்னை
அம்புசர மொன்றுநாழிகையுந் தாகும்

சாருமே பிருதிவியில் சரமே சார்ந்து
    தன்மையுடன் அறுகால் நாழிகைதா னோடி
நேரப்பா நேர்மையுள்ள அப்பில்சார்ந்து
    நிலையாக ஐங்காலும் ஓடும் பாரே (4)

ஓடுமே சரம்வாயு வதிலே சார்ந்து
    உறுதியாய் நாலுகா லோடி நின்று
சாடியே தேயுவதிற் சார்ந்து பின்னும்
    சரியாக மூன்றுகா லதிலே யோடும்
நாடியே சரமதாகாயஞ் சார்ந்து
    நன்மை யுடன் ரண்டுகா லோடு மப்பா
வாடுதலா யிதையறிந்து தவத்தைச் செய்வாய்
    மகத்தான கண்மணியே யின்னுங் கேளே. (5)

கேளப்பா இம்முறையாய் ஐந்திலோடும்
    கிருபையுடன் ரண்டுமணி கலையொன்றாக
வாழுமே நாழிகைக்குச் சரமேதானும்
    வளமான முன்னூற்றி யறுபதாகும்
நாளதுதான் ஒன்றுக்குச் சுவாசந் தானும்
    நலமாக இருபத்தோ ராயிரம்பின்
பாழில்லா அறுநூறும் நலமதாக
    பண்பாக வோடுமடா அறிந்துக்கொள்ளே. (6)

அறிந்துகொள் கண்மணியே யின்னுஞ் சொல்வேன்
    அருமையுள்ள சரமதனின் விபரந் தன்னை
தெரிந்துகொள் வெள்ளிமதி புதன்மூன்றுந்தான்
    சிறப்புடனே காலைதனில் மதிதா னோடும்
சரியான ஆதித்தன் சனிசெவ்வாயும்
    தன்மையுடன் காலைதனில் ரவியே யோடும்
குருவான வியாழனுள் பூர்வபக்ஷம்
    குணமாக மதியோடும் அறிகுவாயே. (7)

மதியாகச் சொல்லுகிறேன் அப்பா கேளு
    மதிதேயும் அபரபக்ஷம் வியாழனில்
கதிரும் செங்கதிரோ னோடுங் கண்ணே
    காரணமாய் நீயறிந்து தவத்தைச் செய்வாய்



விதியிருந்தால் வருகுமென்று அப்பாநீயும்
    வீண்காலம் போக்காதே தெளியச் சொன்னேன்
நதிபதியின் புனலதுக்குள் முத்தெடுத்த
    நன்மையுள்ள ஆசானைத் தேடிக் கொள்ளே. (8)

தேடியே யாசானை யறிந்து நீயும்
    தெளிவாயிம் முறைகளெல்லாம் செல்வனே கேள்
ஓடியே பிருதிவியில் சரம்சென்றாக்கால்
    உண்மையாய்ப் புவிநோக்கிக் கீழேயோடும்
சாடியே அப்பதனிற் செல்லும் போது
    தன்மையுடன் வலமோடுஞ் சரந்தா னப்பா
ஆடியே தேயுவதி லோடும் போது
    அருமையுள்ள இடப்புறந்தான் சாரும் பாரே. (9)

சாருமே வாயுவதிற் சரஞ்சென்றாக்கால்
    தன்மையுடன் நேராக வோடு மப்பா
பாருநீ தாமரையி லோடும் போது
    பாலகனே கலையதுவும் மேலே போகும்
ஆறுதலம் அறிந்தபெரியோரைக் கண்டு
    அன்புடனே அறிவான தீட்சை பெற்று
நூருவொளி சுடர்மூன்றுந் தெளிவாய்க் கண்டு
    நுட்பமுடன் தவமதனைச் செய்வாய் கண்ணே. (10)

கண்ணான கண்மணியே அப்பா கேளு
    கருத்துடனே சரநூலைத் தெளிவதற்கு
பொன்னான சற்குருவைச் சார்ந்தால் நீயும்
    புகழாகக் கலையருளுஞ் சொல்வார் மெத்த
எந்நாளும் அருளுடைய தவத்தைச் செய்தால்
    ஏகனுடை சொர்க்கமதில் வாழ்வா யின்னும்
கன்னுசென் றிபுலீஸு விலகிப் போவான்
    கர்மவினை நோயனைத்தும் போகும் பாரே. (11)

பாருநீ யிறையோனே அடியேன் தன்னை
    பக்ஷமுட னருளதனி லாக்கி வைத்து
காருநீ கலீபத்து ஷெய்கு ஷாஹுல்
    ஹமீதவனைக் கத்தனே காத்து நன்றாய்

சேருநீ ஜன்னபதி சேர்ப்பாய் ஏகா
சிறப்புடனே சாரநூலைத் தெளிவாய்ச் சொன்னேன்
தாருலகி லுள்ளபெரியோரே நீங்கள்
தப்பில்லா தறியஇறை யருள்வான்தானே. (12)

ஞானச்சரநூல் முற்றிற்று.

---

## ஞானக் கண்மணிக் கும்மி.

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம்
ஆனந்தம் ஆனந்தம் அற்புதமே
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம்
ஆனந்தம் ஆனந்தம் நற்பரமே.

1. ஆதி பெரியவன் அம்பரனை நன்றாய்
ஆனந்த மாகவே கண்டு தொழு
சோதி ஒளிவது நற்பரி பூரணம்
சுயம தாகுமே கண்மணியே. (ஆனந்)

2. ஓடி யலைந்து வனமதிற் சென்றுமே
உண்மையான முத்தைக் கண்டெடுத்து
நாடியே முத்தைநீ தொட்டு அணைத்திட
நற்பொருள் காண்பாயே கண்மணியே. (ஆனந்)

3. எட்டுத்திசையுமே ஏகவொளிவதாய்
எங்கும் நிறைந்த அருளான
வட்டவடிவதில் வரும்முஹம்மதை
வணங்கி நின்றுக்கொள் கண்மணியே. (ஆனந்)

4. வெள்ளிய பணத்தைப்போல் வட்டம துகல்ல
வீரிய மாகிய திட்டமது
கள்ளர்களை யெல்லாம் நல்லோர்க ளென்றுமே
காட்டிக் கொடுக்கும்பார் கண்மணியே. (ஆனந்)



5. மூலத்தைத் தொட்டு விளைத்திட வேபயிர்
முளையி லெழும்பும் குலைசாடி
காலனைவெல்லுமே மாக்கனி யுண்டிட
கண்டு தெளிந்துக்கொள் கண்மணியே. (ஆனந்)

6. ஆறுதா ரத்திலொன் றாகுமது மெய்யின்
அருளான தீபம் எரியுமிடம்
கூரான இவ்விடங் கண்டுதெ ளிந்துநற்
குதறத் தறிவாயே கண்மணியே. (ஆனந்)

7. எரியுதே தீபம் அணையாது நன்றாய்
ஏகவி ளக்காய்த்து லங்குதுபார்
நெறியாக நின்றுஇ லங்கிடுந் தீபத்தின்
நிச்சயம் காணுவாய் கண்மணியே. (ஆனந்)

8. எட்டிரண் டும்பத்தொன் றாகுமிடமது
இரவுப கலுமில் லாவிடத்தில்
திட்டம காரமு காரநற் பூரணம்
தெளிவாய் வருகும்பார் கண்மணியே. (ஆனந்)

9. நிச்சய மாகிய தாத்தும் சிபத்துமே
நேர்மையாய் நின்றுவு லாவுதுநேர்
இச்சையை நீக்கியிம் முச்சுடர் தானறி
இன்பம் பெறுகுவாய் கண்மணியே. (ஆனந்)

10. கானக மானகொ டியவ னமது
கள்ளர் வேடர்களுந் தங்குமிடம்
கோனவ னையவ்வ னத்தினிற் கண்டுமே
கூர்ந்துநீ பேசுவாய் கண்மணியே (ஆனந்)

11. ஆனைவா யிற்கரும் பாகாம லேநன்மை
அன்பான முச்சுடர் தானறிவாய்
ஆனைவா யென்பது காலன்வ லையாகும்
அறிந்துதப் பித்துக்கொள் கண்மணியே (ஆனந்)

12. தாரையை கட்டியி றுக்கவ றியார்க்குத்
தாரணி யிலென்ன நற்பெருமை

சூரையி லாக்கியே மண்கொண்டு போவதின்
சூட்சம றியாயோ கண்மணியே. (ஆனந்)

13. மணிமார்பி லென்குரு வைத்தனைக் கக்கலி
மாவொளி முச்சுடர் தானுங்கண்டேன்
குணமாகச் சொல்லியே அச்சுடர் காட்டினார்
கூரா யறிந்துக்கொள் கண்மணியே. (ஆனந்)

14. காதிலு பதேசங் கற்பித்து மேயருள்
கத்தனைக் காட்டிடும் காமில் குரு
வீதியலைந்திடும் பொய்க்குரு கலிமாவின்
விபரம றியார்கள் கண்மணியே. (ஆனந்)

15. காட்டில லைந்தாலும் ஞானமு னக்குத்தான்
காணுமோ சொல்குவாய் நல்விதமாய்
கூட்டிலே பூட்டையு டைக்காத மாந்தர்கள்
கூறுவார் பொய்ஞானம் கண்மணியே. (ஆனந்)

16. நாலும றைகளைப் பேசியே சற்குரு
நானென்பான் பூவுல கந்தனிலே
நீலவ டிவான நாலைய றியாத
நீசர்கு ருவோஎன் கண்மணியே. (ஆனந்)

17. தொண்ணூற்றி யண்டையுங் காணாத மானிடர்
தொல்லையி லாகியி ழிந்திடுவார்
பொன்னுல கானசு வனப்ப தியவர்
போகுவா ரோசொல்நீ கண்மணியே. (ஆனந்)

18. நூற்றியெட் டோடுடன் தொண்ணூற்றி யண்டையும்
நுட்பம றியாத பாதகர்கள்
கூற்றுவன் வலையதிற் சிக்கிந ரகினிற்
கொடுமையாய்ப் போவாரே கண்மணியே. (ஆனந்)

19. ஆதியும் அந்தமும் கண்டுதெ ளிந்தவர்
அவனியி லேகோடிக் கொன்று வுண்டும்
நீதியாய் இப்பொருள் கண்டுதொ ழுதோரை
நிச்சய மாய்ப்பிடி கண்மணியே. (ஆனந்)



20. சத்திசி வனென்று சொல்வா ருலகத்தில்
தன்மைய றியாத பாதகர்கள்
வெற்றித ரும்அருள் முத்தியி லாகாமல்
வீணாய்அ ழிகுவார் கண்மணியே. (ஆனந்)

21. செத்தபின் என்னவ ருளதைக் காணுவாய்
ஜெகமதி லேவாழும் மானிடனே
நித்தியம் முத்திய ருளதி லாகிடு
நீயுலகந் தன்னில் கண்மணியே. (ஆனந்)

22. சுக்கில மொன்றுசு ரோணித மொன்றையும்
சுகமாக இவ்விரண் டொன்றாக்கி
தக்கப டியிந்த ஸூறத்த மைத்தோனை
சங்கையாய் நீதொழு கண்மணியே. (ஆனந்)

23. நாலாறு வென்றக லிமாவை நித்தியம்
நல்வித மாய்த்தெளி வாகவுமே
காலுடன் ஏற்றிய றியாத மாந்தர்கள்
கடுந்தீயி லாகுவார் கண்மணியே. (ஆனந்)

24. பத்தியாய் நீயுந்த வத்தைச் செய்வாய் நன்றாய்
பாலக னேயறி வானவனே
வெற்றிய ருள்சுவ னப்பதி தன்னிலே
மேன்மையாய் வாழுவாய் கண்மணியே. (ஆனந்)

25. தலமஞ்ச றியாத வேதியர் கள்நல்ல
தவமஞ் சையும்தா னறிவாரோ
குலமான சிங்கங்கள் மௌனம றிந்துமே
கூர்ந்துதொ ழுவார்கள் கண்மணியே. (ஆனந்)

26, முத்துப்ப வளம்பச் சையொன்றாய்க் கூடிய
முச்சுட ராகிய பூரணத்தை
சித்தாய றிந்தவ ரைத்தொடர்ந் துதேடி
செல்வமாய் வாழ்ந்துக்கொள் கண்மணியே. (ஆனந்)

27. நாலுமு ழப்பனை தன்னில்ம துவையும்
நட்புடன் தானேயி றக்கியுண்ணு

பாலென்று பாரினில் விற்கும்ப ணங்கள்ளை
பாவிய ருந்துறுர் கண்மணியே. (ஆனந்)

28. சீருள் மெய்ஞ்ஞானம் தெளியாத பேர்கட்கு
செல்வவ ருளது கிட்டாது.
நாரியர் மாயையில் வீழ்குங் கயவர்க்கு
நல்வினையில்லையே கண்மணியே. (ஆனந்)

29. பொய்யான பெண்மாதர் மாயைக் கடந்துமே
பூதலத் தாசையுந் தான்கடந்து
மெய்யான ஆதியைக் கண்டுதொழுதுநீ
மேன்மையைப் பெற்றுக்கொள் கண்மணியே. (ஆனந்)

30. திட்டம றியாத பாவிக ளானோர்க்குத்
தீனிலை யென்பது தானுமுண்டோ
மட்டி லடங்காத காட்சிகள் கண்டுமே
வல்லபம் பெற்றுக்கொள் கண்மணியே (ஆனந்)

31. எட்டொரு நாலும் ஈராறு மானது
இலங்கிய நின்றிடும் பொற்கமலம்
வெட்டறுச் சக்கர மானதைக் கண்டுநீ
வேதமென் றேதிக்கொள் கண்மணியே. (ஆனந்)

32. பெண்ணாசை யற்றுநீ பேணிந டந்தாலே
பேரின்ப நன்மைய டைந்திடுவாய்
எண்ணில டங்காத நன்மையு னக்குண்டு
இறையைய றியின்பக் கண்மணியே. (ஆனந்)

33. முக்கோண வீதியில் நின்றிலங் குஞ்சுடர்
மூன்றையுந் தானேய றிந்திடுவாய்
எக்கோணந் தன்னிலும் வாசம் பெருகியே
இறையோன ருளுண்டுங் கண்மணியே. (ஆனந்)

34. தொட்டுவி ளையாடி யானந்த மாகவே
சுகத்தைய றிந்தபெ ரியோர்கள்
மட்டில டங்காத காட்சிகள் கண்டுதான்
வணங்குவார் நன்மையாய்க் கண்மணியே. (ஆனந்)



35. அஞ்ஞான வாசலில் அமிர்தங்க சிந்திடும்
ஆனந்த மாகவே நீயறிந்து
கொஞ்சிக்கு லாவிம கிழ்ந்துதெ ளிந்துக்கொள்
குவலயந் தன்னிலே கண்மணியே. (ஆனந்)

36. மாசில்லா ரத்தின மானமு ஹம்மதை
வல்லப மென்றுநீ கண்டுதொழு
தோசியாய்ப் போகாமல் இப்பொரு ளானதின்
சூட்சம றிந்துக்கொள் கண்மணியே. (ஆனந்)

37. அலிபுலா மீமென்ற அச்சர மானதை
அன்புடன் தானறி யார்களெல்லாம்
சலிப்புடன் தீயதி லாகியே துன்பத்திற்
சார்வார்கள் நீயறி கண்மணியே. (ஆனந்)

38. மாடுமக் கள்பெண்டு பிள்ளையென் றல்லவோ
மருளுறுர் பூவுல கந்தனிலே
கூடுவிட் டுயிர் போனதின் பின்னவர்
கொடுமையி லாகுவார் கண்மணியே. (ஆனந்)

39. ஆணும்பெண் ணல்லாத அற்புதத் தீபமே
ஆனந்த மாகிய நல்லொளிவு
தோணும்ந டுவெளி வெள்ளிவி லங்கிடும்
தூய்யோன் சுடரது கண்மணியே. (ஆனந்)

40. கலையு மானும்ஒன் றாகவே கூடிய
காரண மானத லந்தனையும்
தொலையாவ ருக்கங்கொண் டேநீயு ணர்ந்திடு
சொர்க்கப்ப தியுண்மை கண்மணியே. (ஆனந்)

41. எக்கின் மரமும் மயிலதும் நன்றாக
ஏகவொ ளிவாய்த்து லங்குதுபார்
பக்குவமாகப் பரவெளி தன்னிலே
பார்த்தும கிழ்ந்துக்கொள் கண்மணியே. (ஆனந்)

42. மயிலது கொப்பில் இருக்கும திசயம்
மன்னவ னேகண்டு தான் மகிழ்வாய்

மயிலதும் எக்கின் மரமும் தலைகீழாய்
வருகின்ற சித்தறி கண்மணியே. (ஆனந்)

43. அந்தர மாகவே கல்பும் ஒளிவதும்
அற்புத மானகுர் ஆனெழுத்தும்
நந்தியொ ளிவாய்லி வாவுல்ஹம் தானதும்
நன்மையாய் நீயறி கண்மணியே. (ஆனந்)

44. நன்மையா யின்னும்வ ருகும திசயம்
நட்புட னேவெளி யானநிலை
வன்னவொ ளிபொட்டி லங்கும் வடிவதை
வளமா யறிந்துக்கொள் கண்மணியே. (ஆனந்)

45. வேலதா னவிழி களிரண் டையுமே
வேகமாய் நீற்றவே நந்திகண்டு
நால்வேத மாறுச மயந்தெ ளிவார்கள்
நன்மைகள் கிட்டுமே கண்மணியே. (ஆனந்)

46. நால்வேத மாறுச மயந்தெ ளிந்தவர்
நற்பர மாகிய வல்லவொளி
பால்போலே யெங்கும்ப ரந்தெழும் நந்தியைப்
பார்த்தும கிழ்வார்கள் கண்மணியே. (ஆனந்)

47. பால்போலே யெங்கும்ப ரந்தெழுஞ் ஜோதியைப்
பக்ஷமு டனறி யாரையெல்லாம்
காலில்வி லங்கதைப் பூட்டிந ரகினிற்
கத்தனு மாக்குவான் கண்மணியே. (ஆனந்)

48. காதலாய்க் கண்மணிக் கும்மிய தனையான்
கற்பூரத் தீபம்போல் நல்விதமாய்
ஓதினேன் கலீபத்து ஷெய்குஷா ஹுல்ஹமீ
துகப்பா யறிந்துக்கொள் கண்மணியே. (ஆனந்)

ஞானக் கண்மணிக் கும்மி முற்றிற்று.

---



## மாசிலாமணிப் பதிகம்.

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

திருமணி யொளிவைத் திடமுட னறிய
திரைகடல் அலையது போலும்
வருகுமே நுரைபோல் மதிப்பிலும் அடங்கா
மாக்கலி மாவது நேராய்
குருவடி வறியாக் குருடர்கள் தனக்கு
கொஞ்சமும் பதவியு முண்டோ
மருவரு ளறிய மகிழ்ச்சிநீ தருவாய்
வல்லவா மாசிலா மணியே. (1)

பூணவே கதிர்கள் வீசியே ஜொலிக்கும்
புகழுடன் அறிவதை யறிவாய்
தோணும் பிரகாசம் தீபமுச் சுடராய்த்
துலங்குமே தெளிவுநல் லொளிவாய்
காணவே சிபத்தை கலிபுடன் மாவைக்
கலந்துநீ யுரைத்திடு நலமாய்
தீனுடை நிலையி லாக்கிவைத் திடுவான்
சிறப்புள்ளோன் மாசிலா மணியே. (2)

முத்துநற் பவளம் பச்சையுங் கலந்த
முச்சுடர் வடிவொன்று அழகாய்
சித்தொடு வெழுந்த செல்வனின் ஒளிவு
திருஹாஷீ ஹுஆதம் வடிவாம்
நத்துதல் கொள்வாய் வடிவது அதனுள்
நாயகம் முஹம்மது ஒளிவே
எத்திசை புகழும் வடிவதி லாதி
இலங்கிடும் மாசிலா மணியே. (3)

சித்தனே யடியேன் செய்பிழை யனைத்தும்
சிறப்புடன் நீக்கியே யருள்வாய்
முத்தனே கவியில் தெரிந்திடா துரைத்த
மொழிபிழை யனைத்தையும் நீக்கு

கத்தனே சிறுவன் முன்பின்னுஞ் செய்த
    கடும்பிழை நீக்குவல் லோனே
நித்தனே சகல பிழையெல்லாம் நீக்கி
    நெறியருள் மாசிலா மணியே. (4)

மாவுள்ள கலிமா மூலத்தி னின்று
    மகிழ்ந்துமே சாத்திரே டேற்றி
தாவியே யண்ணாக் கினில்மன நாவை
    தவறிடா தொட்டியே அழகாய்
மேவியே ஐந்து தலமதை யிருக்க
    விளங்குமே முச்சுட ரொளிவும்
ஆவியும் அழிய முன்னிதையறிய
    அருள்தாவென் மாசிலா மணியே. (5)

குருவடி வதனைக் குவலயத் தறியாக்
    குரும்பர்கள் தீயதி லாகி
பெருமையு மிழந்து அருமையும் நீங்கிப்
    பேயுது போலவ ராவார்
திருவடி வதனைத் தெளிந்தவல் லோர்க்குத்
    தேசிகன் தெளசெனும் பதியில்
பருமலர் வாசம தாக்கியே யழகாய்
    வைத்திடும் மாசிலா மணியே. (6)

ஊணவே யிருள்க ளேகவே யொளிகள்
    உதித்திடும் முகக்கண்ணி னடுவில்
தோணுமே சுடர்கள் மூன்றுமே அழகு
    சுடரது மூன்றுநல் நிறமாய்
பேணியே யறிவாய் வணக்கமாய்த் தொழுவாய்
    பிசகறக் காக்ஷியைக் காண்பாய்
தானவன் அருளின் தெளசெனும் பதியைத்
    தருகுவான் மாசிலா மணியே. (7)

கைபணி யோசைமு ழக்கமும் இன்னும்
    சனமுள்ள வீணையின் முழக்கம்



மெய்த்தொனிச் சங்குமு ழக்கமும் கடலின்
    மேன்மைநல் முழக்கமும் தொனிக்கும்
பொய்யறும் அழகு லாமலி யோசை
    புகலு வதற்குமே முடியா
மெய்மணி யோசை யறியவே யருள்வாய்
    மேலவா மாசிலா மணியே. (8)

பேரிகை யோசைமு ழக்கமும் வாங்கா
    பேரின்ப வாங்கதின் முழக்கம்
வாரியி னலையின் முழக்கம தோடு
    வருகுமே மத்தளத் தோசை
காரிருள் விலகும் கலிமாவின் முழக்கம்
    கந்தரக் குடைநபி வாசம்
நேரிதை யறிய வருளதைத் தருவாய்
    நெடியவா மாசிலா மணியே. (9)

225818

தாகம தனை ஒடுக்கமவ் வேளை
    தனியனே நீக்கிடு மாதர்
போகம தகற்றி அறிவுடன் யோகப்
    பொருளதில் நிற்கவே யானும்
ஏகனே தருவாய்க் கலிமாவி னில்லை
    இறையவா அந்நேரங் கண்டு
பாகமா யறியப் பக்ஷம்வைத் தருள்வாய்
    பராபரம் மாசிலா மணியே. (10)

சிறியன்யான் செய்யி தஹமதின் பாலன்
    சிறப்புடன் நூலதை யுரைத்தேன்
பிரிசமாய்ப் பெரியோர் சகலரும் நூலிற்
    பிழையதைத் திருத்தியே படிப்பீர்
நிறைந்தவன் உங்களுக் கருளதைத் தருவான்
    நீதமாய் முறைப்படி யுணர்வாய்
குறையெல்லாம் நீக்கிச்சம் பூரண வாழ்வைக்
    கொடுத்தருள் மாசிலா மணியே. (11)

சலிப்பெல்லாம் நீக்கி சாயுச்சிய பதவி
தந்தருள் ஆதியே நீதா
மெலிவில்லா ஸிபத்தை யறியவும் உதவி
மேலவா நீசெய்வாய் மணியே
கலீபத்து ஷெய்கு ஷாஹுல் ஹமீதைக்
கத்தனே யருளதி லாக்கி
கலியது தீரச்சம் பூரணம் தருவாய்
காவலா மாசிலா மணியே. (12)

மாசிலாமணி பதிகம் முற்றிற்று.

## மெய்ஞ்ஞான மூச்சுடர் விளக்கம்.

தாழிசை ஆசிரியவிருத்தம்.

எதிர்வரும் ஒளி வானகாரணம்
எங்கும் நற்பரி பூரணம்
இலங்கிவந்திடும் ஜோதியுள்ளிலே
எங்கள் குருவடி வானதாம்
சதுநல்வேதமும் ஆறுசாஸ்த்திரம்
சகல நூல்விரி வானதும்
சங்கையாகிய சகலபடைப்புமே
சர்வமும்மஹ் மூதொளி
மதிமுஹம்மது வொளியினுள்வரும்
மலரும்ஆயிரத் தெட்டதாம்
மாமணிஅப்துல் காதிராகிய
வண்ணமாமலர் ரத்னமே
அதிரவந்திடும் சுடருமூன்றையும்
அறிந்துகண்டுயான் தொழுகவும்
ஆதிவல்லவா நீயுதவிசெய்
ஆளும்நாயனே யாஅல்லா. (1)

அஞ்சிதமான ஐந்தைப்பூட்டிட
அற்புதக்கதிர் வீசிடும்
அந்தரத்தினி லாடிவந்திடும்
அருமைமுச்சுட ரானதிற்



கொஞ்சிநின்று குலாவவேகுரு
கோலவடிவதின் மீதிலே
கோவதானதை நாட்டியேகுணக்
கூர்மைகலிமாவு றைக்கவும்
நெஞ்சிலிருளதை நீக்கிவைத்திடு
நெடியவாபர மானவா
நேசமாகிய நபிபதத்தினில்
நேர்மையாகயான் வீழ்கவும்
கொஞ்சியேபத்து நூறுஎண்மலர்
குதறத்தலைமைக் காணவும்
குருமுஹிய்யித்தீன் நாமத்தைக்கொள்ள
கூர்மைதருகுவாய் யாஅல்லா. (2)

[illegible]ணிநின்றொளி காணவேதிரு
உண்மைசுழுனையிலோர்மையாய்
உயர்வுலாமவி பானமூச்சதை
ஒத்துமேயதில் தாக்கியே
காணவேசுடர் பூணவே யருள்
காரணத்திரு வாமொளி
கதிரிலங்கவே சுடரொளிகளும்
கண்கள்கூசவே நின்றிடும்
பூணவேசுடர் மூன்றிலங்கிடும்
பூரணன்நபி அல்லவே
பொருந்திமுன்னிலே நிற்கும்ஒளிவது
பூரணமருட் சோதியே
காணவேயரி தானநற்பொருள்
கண்டறிந்துயான் தொழுகவும்
கத்தனேயருள் முத்தனே ஒளி
காணச்செய்திடு யாஅல்லா. (3)

மூலமானதில் நின்றுவிழிநடு
மூலமறுதல மாகுமே
முட்டவேவன மானகாட்டிலே
மோனமாகிய தீபமே

சலிப்பெல்லாம் நீக்கி சாயுச்சிய பதவி
தந்தருள் ஆதியே நீதா
மெலிவில்லா ஸிபத்தை யறியவும் உதவி
மேலவா நீசெய்வாய் மணியே
கலீபத்து ஷெய்கு ஷாஹுல் ஹமீதைக்
கத்தனே யருளதி லாக்கி
கலியது தீரச்சம் பூரணம் தருவாய்
காவலா மாசிலா மணியே. (12)

மாசிலாமணி பதிகம் முற்றிற்று.

## மெய்ஞ்ஞான மூச்சுடர் விளக்கம்.

தாழிசை ஆசிரியவிருத்தம்.

எதிர்வரும் ஒளி வானகாரணம்
எங்கும் நற்பரி பூரணம்
இலங்கிவந்திடும் ஜோதியுள்ளிலே
எங்கள் குருவடி வானதாம்
சதுநல்வேதமும் ஆயுசாஸ்த்திரம்
சகலநூல்விரி வானதும்
சங்கையாகிய சகலபடைப்புமே
சர்வமும்மஹ் மூதொளி
மதிமுஹம்மது வொளிவினுள்வரும்
மலரும்ஆயிரத் தெட்டதாம்
மாமணிஅப்துல் காதிராகிய
வண்ணமாமலர் ரத்னமே
அதிரவந்திடும் சுடருமூன்றையும்
அறிந்துகண்டியான் தொழுகவும்
ஆதிவல்லவா நீயுதவிசெய்
ஆளும்நாயனே யாஅல்லா. (1)

அஞ்சிதமான ஜுந்தைப்பூட்டிட
அற்புதக்கதிர் வீசிடும்
அந்தரத்தினி லாடிவந்திடும்
அருமைமுச்சுட ரானதிந்



கொஞ்சிநின்று குலாவவேகுரு
கோலவடிவதின் மீதிலே
கோவதானத்தை நாட்டியேகுணக்
கூர்மைகலிமாவு ரைக்கவும்
நெஞ்சிலிருளதை நீக்கிவைத்திடு
நெடியவரபர மானவா
நேசமாகிய நபிபதத்தினில்
நேர்மையாகயான் வீழ்கவும்
கொஞ்சியேபத்து நாறுண்மலர்
குதறத்தலைமைக் காணவும்
குருமுஹியித்தீன் நாமத்தைக்கொள்ள
கூர்மைதருகுவாய் யாஅல்லா. (2)

வண்ணிநின்றொளி காணவேதிரு
உண்மைசுழிவாயிலோர்மையாய்
உயர்வுலாமணி பானமூச்சதை
ஒத்துமேயதில் தாக்கியே
காணவேசுடர் பூணவே யருள்
காரணத்திரு வாரொளி
கதிரிலங்கவே சுடரொளிகளும்
கண்கள்கூசவே நின்றிடும்
பூணவேசுடர் மூன்றிலங்கிடும்
பூரணன்கதி அல்லமே
பொருந்திமுன்னிலே நிற்கும்ஒளியது
பூரணமருட் சோதியே
காணவேயரி தானதற்பொருள்
கண்டறிந்தியான் தொழுகவும்
கத்தனேயருள் முத்தனேஒளி
காணச்செய்திடு யாஅல்லா. (3)

மூலமானதில் நின்றவிழ்திடு
மூலமறுதல மாகுமே
மூட்டவேவன மானகாட்டிலே
மோனமாகிய தீபமே

ஆலமாகிய நம்மிலேயரி
தாகவெளிவரும் நாளிலே
அடக்கமானது சர்வதவமும்
அத்தலத்தினி லாகுமே
மாலதாகிய லாமதுவொளி
மஹ்பூலென்னும் பலகையே
வண்ணமாகிய ககனமீதினில்
வந்துலாவிய நற்சுடர்
நீலமானதில் மூலக்கலிமா
நிரப்பமாயுரைத் தெழுதவும்
நெடியவா அருளிறையவா நீ
நேர்மையருள்செய் யா அல்லா. (4)

ஒன்றிலாகிய ஐவரில் ஒரு
உற்றவரசனு முண்டுமே
உண்மையாகவே நாலுபேர்களும்
உகந்தவவல்க ளாகுமே
நன்றியாகவே நாலுபேர்களும்
நளிர்பொருந்திய ராஜனை
நாடிடாம லிருந்திடில்கொடும்
நரகமானதி லாகிடும்
அன்றுவாகிய ஒடுக்கநாளையில்
அமளியானதும் அதிகமே
அரசனானதை யறிந்தவர்க்குமே
அம்பரமருட் காக்ஷியே
என்றுமேயிக் காக்ஷிகண்டுயான்
இன்பமாகவே தொழுகவும்
ஏகனாகிய வல்லனேயருள்
இறைவனே திரு யா அல்லா. (5)

தாகமானது ஒடுக்கம்வேளையில்
தனியனே நீ நீக்கியே
சங்கையாகிய வருளைக்கண்டுமே
தன்மையாகயான் தொழுகவும்



தேகமானதுக் கழிவில்லாமலே
சிறப்புடன்கலி மாவையென்
சிந்தையானதிற் பூட்டிவைத்தருள்
செல்வனாகிய வல்லவா
போகமாகிய மாதரின்பம்
போக்கியே அருள் தாக்கியே
பூரணா அருள் காரணா திரு
புண்யனேயெனை யாளுவாய்
ஏகனாகிய ஆதியே நீ
எந்தன்மீதினி ரக்கம்வை
இன்பமாய்கேட் கும்து ஆவதை
ஏற்றுக்கொள்வாய் யா அல்லா. (6)

எட்டெழுத்தெனும் வாசியானதை
ஏற்றியே மேற்றூக்கியே
இருவெழுத்தினி னூடுபார்க்கவே
இன்பமாகிய நற்சுடர்
வட்டமாகிய வெட்டறுததோர்
வண்மைசக்கரம் ஒளிவது
வானில்நின்றுப ளீர்பளீரென
வந்துலாவிய கோட்டையே
திட்டமாகிய கோட்டையுள்ளிலே
செல்வமேடைநற் கொலுவது
சிறப்பதானது நீதியானது
சிறந்தநல்லரு ளானது
ஒட்டியேசக் கானதைக்கொண்டு
மன்றிகலிமாவு றைக்கவும்
உண்மைமலாதைக் காணவும்நீ
யுதவிதந்தருள் யா அல்லா. (7)

பூணவேவொளி காணமுச்சுடர்
புவனமாயை மறையவே
பூரணத்திரு கமலவாசனம்
புகுந்துநோக்கியே பார்க்கவே

ஆணல்லாதது பெண்ணல்லாதது
அருளும்நற்சுடர் ஜோதியே
அந்தவடிவினுள் ஹிந்தீலாகிய
அருமைவண்ண முஹம்மதே
தோணுதேஹிந் தீல்வடிவினுள்
சுழலும் ஆயிரத் தெண்மலர்
துலங்கிநின்றது அப்துல்கா திரு
சூக்ஷமாகிய ரத்னமே
கானமாகஇ லங்கிநின்றிடும்
காஷிமுச்சுடர் கண்டுமே
கத்தனேயான் தொழுகவும்நீ
கருணைசெய்வாய் யாஅல்லா. (8)

கபுறில்முன்கர்ந கீருவானவர்
கனமலக்கெனைக் கேள்விகள்
கடினமாகவே கேட்டிடாமலே
கத்தனேலே சாக்கிடு
நபுசடங்கலும் அஞ்சிபயந்துனை
நாடிடவருள் பூட்டியே
நயமில்லாததோ ரிருளைநீக்கியே
நற்பதவிதந் தருளுவாய்
ஸபுருவென்றதோர் இன்பமானதைத்
தாக்கியே அறிவானதில்
தாசனாகிய அடிமையென்னையும்
தப்பில்லாதரு ளாக்கிடு
கபுசோடறுஷினிற் சென்றதிருநபி
கனஷபாஅத்திற் சேர்த்துமே
காரணாபிறு தெளசிலாக்கியே
கருணைசெய்வாய் யாஅல்லா. (9)

அஞ்சியுன்னை வணங்கினேன்நல்
லற்புதமர ணவா
ஆறதானத லத்திலாக்கியே
அமர்ந்துநிற்கவும் உதவிசெய்



பிஞ்சில்நின்றுபெ லக்கவேகடும்
பேதமானதை நீக்கியே
பிசகிலாதநற் பொருளதானது
பேரின்பச்சுட ரறியவே
பஞ்சபூதங்க ளைந்துமொன்றாய்
பரனைசேர்த்துவைத் தருளுவாய்
பராபரம்ஒளி வானவா திரு
பகவனே அருளானவா
தஞ்சமானேன் கலீபத்துஷெய்கு
ஷாஹுல்ஹமீதெனைக் காத்துமே
தயாளனேநல் லறிவனேநீ
தன்மைதந்தருள் யாஅல்லா. (10)

மெய்ஞ்ஞான முச்சுடர் விளக்கம் முற்றிற்று.

## எக்காலக்கண்ணிகள்

ஈரசைக்கோச்சகம்.

ஆதி பராபரமே யகண்டபரி பூரணமே
ஜோதியே யெனைக்காத்துத் துன்பவினை தானகற்று. (1)

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீ மென்றோதும்
இஸ்மில் லஃலமதி லேற்றிடுவாய் பூரணமே. (2)

அல்லாஹு வென்ற அரும்பொருளைக் கண்டுநிதம்
சொல்லாமற் சொல்லி சுகமடைவ தெக்காலம். (3)

இங்கார வட்டமதி னுள்ளிருந்த மெய்யதனை
பாங்குடனே கண்டுநிதம் பரஞ்சேர்வ தெக்காலம். (4)

மெய்ஞ்ஞான மானதிரு விளக்கொளிவையானறிந்து
அஞ்ஞானம் விட்டொளி வருள்பெறுவ தெக்காலம். (5)

இங்கார மானதொரு வுண்மையுள்ள கண்ணாடி
பாங்குடனே கண்டு நிதம் பலன்பெறுவ தெக்காலம். (6)

தீபவொளிவதனைத் தெளிவாகப் பார்த்திருக்க
ஆபத்தைநீக்கி நன்மை யருள்தருவ தெக்காலம். (7)

அறிவாக நின்றுநிதம் அற்புதத்தின்காக்ஷிகண்டு
பிரிசமுட னெப்போதும் பேர்பெறுவ தெக்காலம். (8)

அழகாக வந்தவொரு அன்பான ஜோதியது
தளதளென்று கதிர்வீசத் தானறிவ தெக்காலம். (9)

வட்டமதுக் குள்ளான வண்ணநற் சுடரொளிவைத்
திட்டமாய்க் கண்டுநிதந் திறப்படுவ தெக்காலம். (10)

மெய்யான வுள்ளெழுத்தை வேகமுடன் தான்பூட்டி
துய்யோ னொளிவுகண்டு சுகம்பெறுவ தெக்காலம். (11)

கண்ணாடிக் குள்ளொளிவு காணுமந்த ரூபமதை
அண்ணாந்து பார்த்துநிதம் அருள்பெறுவ தெக்காலம். (12)

புத்திதனைத் தானறிந்து புலன்களைந்து மெயறிந்து
சித்துக்கண் மத்திதன்னில் தெளிவறிவ தெக்காலம். (13)

தெப்பக் குளத்தெருவில் செங்கதிராய் வீசுகின்ற
துப்புள்ள நன்மைகண்டு சுகம்பெறுவ தெக்காலம். (14)

தேசுமய மாகவுள்ளே சிறப்பாக நின்றாடும்
வாசிதனை மேலேற்றி வடிவறிவ தெக்காலம். (15)

மண்டபத்தில் நின்றுதிரு மாக்கலிமா தானறிந்து
தெண்டனிட்டு யானும்நன்றாய்ச் சிறப்படைவ தெக்காலம். (16)

நாலெழுத்தா யுள்ளநல்ல நபியாம் முஹம்மதுவை
மூலமதிற் கண்டுநிதம் முறையறிவ தெக்காலம். (17)

அன்பத்தோ ரச்சரத்தை யழகான மஹ்மூதில்
துன்பத்தை விட்டொழிந்து துறையறிவ தெக்காலம். (18)

கலிமா நிலையறிந்து காதலுடனே யிருந்து
சலியாம லெந்நாளும் தனையறிவ தெக்காலம். (19)

ஜோதியென்ற ஈமான் சுடரான வெள்ளைவட்டம்
நீதியா யிதையறிந்து நேர்பெறுவ தெக்காலம். (20)

வெளிவாச லானதையே வேகமாக வேசாத்தி
வழியான ஜோதிகண்டு வாழ்ந்திருப்ப தெக்காலம். (21)



நேயமாய்ச் சக்கறுக்க நேராகும் முச்சுடரை
மாயம்விட்டு நீங்கியே வணங்கிடுவ தெக்காலம். (22)

ஏகம தானமிகு இன்பமுள்ள வேளைதனில்
பாகமாய்ப் படைத்தோனைப் பார்த்திருப்ப தெக்காலம். (23)

ஆறுபத்தும் ஆறும் அமைந்திருக்கும் மெய்ப்பொருளை
வேறென்று எண்ணாமல் விரும்புவது மெக்காலம். (24)

உச்சிக்குமேல் நேரா யுலாவுங் குருவடிவை
தச்சில்லா மாளிகையில் தானறிவ தெக்காலம். (25)

ஆதமது பச்சைவட்டம் அருமையுள்ள நல்வடிவில்
நீதமுள்ள திருநபியின் நிலைபெறுவ தெக்காலம். (26)

நீதமுள்ள நபிவடிவில் நேசமாய் நின்றிலங்கும்
பாசமுள்ள ஹக்கதையான் பார்த்தறிவ தெக்காலம். (27)

பரனினொளி வானதுதான் பளிங்கியிலும் தெளிவாகும்
சரமதனை யேற்றிநின்று சார்ந்திருப்ப தெக்காலம். (28)

ஆங்காரத்தை யடக்கி யன்பாகவே சார்ந்து
பூங்கா வனந்தனிலே பூண்டறிவ தெக்காலம். (29)

கள்ளன் இபுலீஸைக் கல்பைவிட்டுத் தூராக்கி
சள்ளைகளை விட்டுநீங்கித் தனையறிவ தெக்காலம். (30)

கல்லதனைத் தானுருக்கி ககனவெளி பார்த்தஉடன்
நல்லருளின் ஜோதிகண்டு நலம்பெறுவ தெக்காலம். (31)

ஆதாரம் ஆறையுந்தான் ஆவலுடன் யான்கடந்து
ஓதாம லோதிநிதம் உணர்ந்திடுவ தெக்காலம். (32)

ஆரணத்துக் கெட்டாத வரும்பொருளை மத்திதனிற்
காரணமாய்க் கண்டுநிதம் கரைசேர்வ தெக்காலம். (33)

அகக்கண்ணால் நோக்கிடவே ஆதியே திரைநீங்கி
தகதகென்று முச்சுடருந் தான்வருவ தெக்காலம். (34)

எட்டிரண்டு மொன்றான எல்லையதில் நின்றிலங்கும்
திட்டமுள்ள வட்டமதைத் தெளிவதுவு மெக்காலம். (35)

கமலத் திருவிளக்கைக் காரணமாய்க் கண்டுநிதம்
அமலதனைச் செய்துவினை யறுத்திருப்ப தெக்காலம். (36)

கலிமாவை யறியாத கசடர்கள்தான் மெத்தவுண்டு
கலிமாவை யானறிந்து கலிதீர்வ தெக்காலம். (37)

வட்டவடி வானதிரு வல்லோ னருளதனிற்
சட்டமுள்ள நுட்பமதைத் தானறிவதெக்காலம். (38)

பார்த்ததொரு பூரணந்தான் பாதமேற் சிரங்கீழாம்
தீர்க்கமாய்ப் பாதமதிற் சிரந்தணிவ தெக்காலம். (39)

நாலான பூரணத்தை நலமாக வேதெளிந்து
மூலமுள்ள நற்கலிமா மொழிவதுவு மெக்காலம். (40)

கண்ணாலே நோக்கிடவே ககனமெலாம் நூராக
பண்ணாரு மப்படியே பார்த்திருப்ப தெக்காலம். (41)

சக்கரத்துக் குள்ளே சமைந்திருக்குஞ் சுருமாவை
பக்குவமாய்க் கண்டுநிதம் பார்த்திடுவ தெக்காலம். (42)

வானென்ற பரவெளியில் வந்திலங்கும் கதிரொளிவை
தான்தானாய்க் கண்டுநிதந் தனித்திருப்ப தெக்காலம். (43)

எல்லைதனைத் தானறிந்து இலங்கும் பொருளதனுள்
முல்லைமலர் பூத்துவரும் முறையறிவ தெக்காலம். (44)

அஞ்செழுத்து மூன்றெழுத்தாய் அமைந்துவரும் நற்சுடரை
கொஞ்சிவிளை யாடிநிதங் குறிப்பறிவ தெக்காலம். (45)

கொடுமைதுன்பம் வஞ்சனையும் கொற்றவனே நீயகற்றி
சடுதியிலே யுன்னருளிற் சாரவைப்ப தெக்காலம். (46)

கலீபத்து ஷெய்குஷாஹுல் ஹமீதவனை முத்தியருள்
கலிமா தனைக்கொண்டு கரைசேர்ப்ப தெக்காலம். (47)

எக்காலக்கண்ணிகள் முற்றிற்று.



## எந்நாள்கண்ணிகள்

ஈரசைக்கோச்சகம்.

ஆதி முதலொளியே அருளான நற்சோதி
நீதியே யெனைக்காத்து நேர்வழியி லாக்கிடுவாய். (1)

சிங்கங்க ளென்றவருள் செல்வமுள்ள பெரியோர்கள்
சங்கைதனி லாகியானும் சாடுவது மெந்நாளோ. (2)

உன்னருளை யானறிந்து ஓதாம லோதிநிதம்
தன்சிபத்தைத் தானறிந்து தவஞ்செய்வ தெந்நாளோ. (3)

தத்துவத்தைத் தானடக்கித் தானவனை யானறிந்து
மூத்து விளக்கொளியின் முறையறிவ தெந்நாளோ. (4)

பொய்யான துனியாவைப் போக்கியே நல்லருளில்
மெய்ஞ்ஞானங் கண்டு நிதம் விளங்கிடுவ தெந்நாளோ. (5).

அல்லாமு ஹம்மதையும் அறிந்தே யொருதலத்தில்
உல்லாச மாகக்கண்டு வுணருவது மெந்நாளோ (6)

கரும்பு ரசஞ்சீனி கற்கண்டோ டமுதருந்தி
குருவான நல்லருளிற் கூடுவது மெந்நாளோ. (7)

தொண்ணூற்றி ரண்டான சுருமா வடிவதனை
முன்னான ஜோதியதுள் முறையறிவ தெந்நாளோ. (8)

கட்டையை விட்டுவுயிர் கடந்துதான் போகுமுன்னே
திட்டமாய்க் கலிமாவில் திறப்படுவ தெந்நாளோ. (9)

நாலைந்து வாசலையும் நலமாகத் தானடைத்து
சீலமுடன் ஓசைகேட்டுச் சிறப்படைவ தெந்நாளோ. (10)

கண்டதொரு பூரணந்தான் கால்மேற் றலைகீழாம்
தெண்டனிட்டுப் பாதமதிற் றேறுவது மெந்நாளோ. (11)

மூக்கு முனைதன்னை முன்னோக்கித் தான்பார்த்து
வாக்கு மனமொன்றாய் வடிவறிவ தெந்நாளோ. (12)

பூரண மானதிரு புதுமையுள்ள வுள்ளொளிவைக்
காரண மாகக்கண்டு கருவறிவ தெந்நாளோ. (13)

அகத்தினுள் மாமணியை யன்புடனே காணுதற்கு
முகவெளித் தாரைதனை மூடிடுவ தெந்நாளோ. (14)

கண்ணாடிக் குள்ளே கலந்திருக்கும் மௌனமகக்
கண்ணாலே பார்த்துநிதம் கலிதீர்வ தெந்நாளோ. (15)

காமத்தை விட்டொழிந்து கலிமா நிலைபிடித்து
தாமதங்க ளில்லாமல் தனையறிவ தெந்நாளோ. (16)

மூட்டாளாய்ப் போகாமல் முன்னோ னொளிவுதன்னை
திட்டமுடன் யானறிந்துத் தெரிந்துகொள்வ தெந்நாளோ. (17)

வாசிநிலை கண்டுவருள் வல்லபம றிந்துலக
பாசம் படர்ந்ததிரை பற்றறுவ தெந்நாளோ. (18)

ஆலமெல்லாம் படைத்து ஆளுகின்ற வல்லவனே
பாலங் கடத்திஎன்னைப் பரஞ்சேர்ப்ப தெந்நாளோ. (19)

கண்ணின் நடுசுழுனைக் கலிமாப் பொருளறிந்து
பொன்னான குருபாதம் போற்றுவது மெந்நாளோ. (20)

சிற்றான சூக்ஷுமதின் சிவராஜ யோகமதை
சிற்றா யறிந்துநிதம் ஜெயமடைவ தெந்நாளோ. (21)

நேரான மஹுமூதில் நிரப்பமாய் வந்தவொளி
சீரான வெள்ளெழுத்தின் சிறப்பறிவ தெந்நாளோ. (22)

காட்டி யதைப்பூட்டிக் கலிமாவைத் தானேற்றி
மாட்டி மஹுமூதில் வகையறிவ தெந்நாளோ. (23)

கண்ணின் நடுசுழுனைக் கலிமாப் பொருளறிய
என்றும் இபுலீஸின் இடரறுவ தெந்நாளோ. (24)

குன்னுக்குள் ளேயிருந்த குதறத் தறிவதற்கு
தன்னுள் சரமதனிற் சார்ந்திருப்ப தெந்நாளோ. (25)

மூலப் பொருளறிந்து முத்திபெற எந்தனக்கு
ஆலமதில் துன்பவினை யகற்றிவைப்ப தெந்நாளோ. (26)

ஓங்கார வடிவதனுள் உலாவுங் குருவடிவைத்
தூங்காமற் பார்த்துநிதம் சுகமடைவ தெந்நாளோ. (28)

மதிரவியு மொன்றாகி மஹுமூதி லானவுடன்
கதிரொளிபோல் தோன்றுகின்ற கருவறிவ தெந்நாளோ. (29)



றாஹதுவும் ஹக்காகும் றாஹதுக்குள் கல்பதுவாம்
றாஹுல் குதுஸியென்ற நூரறிவ தெந்நாளோ. (30)

பலியான அமுதமதைப் பாங்குடனே யானருந்தி
கலிமாவைக் கண்டுதினம் கலிதீர்வ தெந்நாளோ. (31)

அஞ்சு சுடர்மூன்றாய் அருளாகத் தானெழுந்த
வஞ்சமறும் முச்சுடரை வணங்கிடுவ தெந்நாளோ. (32)

உடலதுவை விட்டு வுயிர்பிரியு முன்னாலே
சடலமதுள் ஹக்கனொளி தான்காண்ப தெந்நாளோ. (33)

வேகமுள்ள அம்பதிலே மேன்மையுள்ள கலிமாவை
வாகாய்த் தொடுத்தேற்றி வளம்பெறுவ தெந்நாளோ. (34)

நஞ்செழுத்தை யேற்றிமுட்டி நலமாக நோக்கிடவே
செஞ்சுடர்போல் காணும்ஒளி ஜெபமறிவ தெந்நாளோ. (35)

முத்திதரும் உத்தமனே மௌனச் சுடரொளிவே
சித்திதந்து நல்வழியிற் சேர்ப்பதுவு மெந்நாளோ. (36)

குதுஸியொளி வானகுரு கோமான் முஹம்மதுவை
அதிசயமா யானறிந்து அருள்பெறுவ தெந்நாளோ. (37)

மூவாசை விட்டுதிரு முப்பொருளை யானறிந்து
தேவாலயங் கண்டுநிதந் தெளிந்திடுவ தெந்நாளோ. (38)

ஹூவுக் குள்ளேமீமாய் கூடிநிற்கும் நற்பொருளின்
மாவுக்குள் ஹூவறிந்து வணங்கிடுவ தெந்நாளோ. (39)

உன்னை யறிந்துநிதம் உட்பொருளைத் தானுணர்ந்து
தன்னை யறிந்துதிரு தவம்பெறுவ தெந்நாளோ. (40)

பிஞ்செழுத் தானமீமின் பேரின்பத்தைக் காண்கிலனே
வஞ்சமில்லா இப்பொருளின் வகையறிவ தெந்நாளோ. (41)

நாவை மடக்கியேயண் ணாக்குதனில் தானுமொட்டி
மாவென்ற கலிமாவின் வகையறிவ தெந்நாளோ. (42)

பாச வினையகற்றிப் பாவங்களை தானகற்றி
நேசமுட னருளதனில் நிலைபெறுவ தெந்நாளோ. (43)

சிறியோன் கலீபத்து ஷெய்கு ஷாஹுல்ஹமீதை
அறிவனே யுன்னருளில் ஆக்கிடுவ தெந்நாளோ. (44)

எந்நாள்கண்ணிகள் முற்றிற்று.

## ஞானத்திறவுப் பதிகம்.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்.

ஆதியொளி வல்லவனே அறிவே நந்தி
ஆனந்தத் தெளிவுடைய அன்பே சித்தே
நீதியுள்ள சுடர்மணியே யறிவனேயென்
நித்தியமா மலர்வடிவே நிறைந்த முத்தே
ஜோதியருள் தீபமதாய்த் துலங்கி நின்ற
சுத்தமுள்ள தூய்யவனே சுடர்மெய்ஞ் ஞான
நீதிலாப் பொருளேநீ அருள்தந் தென்னை
தெளிவுதவ மதிலாக்கி யுதவி செய்யே. (1)

உதவிசெய்வாய் வல்லவனே யிந்நூல் ஞான
உண்மையுள்ள திறவுதனை யுரைக்க யானும்
பதவியருள் முத்திபெற வுலகத்தோரே
பகருகிறேன் மகாமுடைய விபர மெல்லாம்
சதமாக அறிந்துதவஞ் செய்வாய் நன்றாய்
சம்பூர்ண வாழ்வதனைத் தருவா ஞதி
நிதமறிவாய் கண்மணியே யோக வானே
நேர்மகா மெட்டையும்யான் பகருவேனே. (2)

பகருவேன் நாஸூத்து மகாம தப்பா
பரவெளியாம் இடப்புறம்நற் கல்பு மாகும்
நிகரில்லா மலக்கூத்துத் தெளிவ தான
நேர்மையுள்ள நாசிநுனி யாகுங் கண்ணே
சகமான தேகமதை யருள தாக்கும்
ஜபறூத்துக் கண்ணதிலே அருட்கண் ணாகும்
ககனமென்ற அண்டமுதல் பிண்ட மட்டும்
கண்மணியே லாஹூத்து அறிந்து கொள்ளே. (3)

அறிந்துகொள் ஜம்ஹூத்துத் தெளிவ தான
அருமையுள்ள முஹம்மதுவே அன்பாய்ப் பாரு
தெரிந்துகொள் பாஹூத்துக் காக்ஷி யெல்லாம்
தெரிசனையாய் வருந்தலம்நல் மஹ்ழூதாகும்



சரியான ஆஹூத்து மகாம தப்பா
தன்மையாய் வருகும்ஹக்கு நபியு மாகும்
குறைதிரைகள் நீங்கிச்சுடர் மூன்றுங் கண்டு
குணதவங்கள் முடிப்பதுதம் ஹூத்தாம் பாரே. (4)

பாருநீ இவ்வறிவை யறிந்து நன்றாய்
பாரில்நிதந் தவஞ்செய்வாய்ப் பாருள்ளோரே
நேரிலே வருகும்அருள் யோக ஞானம்
நிலையான பொருளறிந்து தொழுது கொள்வீர்
காருநீ கலீபத்து ஷெய்கு ஷாஹுல்
ஹமீதவனை நற்சுடரே காத்து நன்றாய்
சாருநீ அறிவனே சிறியோன் தன்னை
ஜன்னபதி சேர்த்தருள்வாய் சிறப்பாய்த் தானே. (5)

ஞானத்திறவுப் பதிகம் முற்றிற்று.

---

## மெய்ஞ்ஞான தீபம்.

ஐஞ்சீர்க் கண்ணிகள்.

அல்லாஹு வென்ற அரும்பொரு ளென்னடி கண்ணே—அது
அற்புத மாகவே நின்ற வடிவடா பொன்னே. (1)

அற்புத வடிவினில் வந்தது என்னடி கண்ணே—அது
அழகான நாலெழுத் தான முஹம்மது பொன்னே. (2)

முஹம்ம தென்றவடி வானதில் என்னடி கண்ணே—அது
முச்சுட ரில்ஒன்று எண்மல ராமடா பொன்னே. (3)

முச்சுட ரானதும் பொருந்திய தலமென்ன கண்ணே—அது
மூவிரண் டான மஹ்ழூதி லாமடா பொன்னே. (4)

மஹ்ழூதில் இருவேடர் வந்தது யாரடி கண்ணே—அது
வாருஅு காரம்உ காரம தாமடா பொன்னே. (5)

அகார வுகாரமென் றெவ்வஸ்தைச் சொல்லலாம் கண்ணே—அது
அன்பான லாமலி பாகிய மூச்சடா பொன்னே. (6)

அஞ்செழுத் தானது என்னது சொல்லடி கண்ணே—அது
அல்ஹம்து வாகிய அருமைப் பொருளடா பொன்னே. (7)

அருமைப் பொருள்நின்ற வாசலைச் சொல்லடி கண்ணே—அது
அலிபுநா மூச்சுலாம் ஹேமீமும் காதுக்குள் பொன்னே. (8)

ஹேமீமின் பின்னே கெடியான தாலென்ன கண்ணே—அது
கெதியான மாதிர வாசல்தான் மன்னனே பொன்னே. [அடா] (9)

மன்ன னென்றுசொன்ன மங்கையே யினிச்சொல்வேன் கண்ணே—
மன்னவா நீசொன்னால் சரியா யுரைக்கிறேன் பொன்னே. (10)

சரியான முச்சுடர் எப்படி யறியலாம் கண்ணே—அது
சடமெனும் மகுரிபைத் தொட்டு உரைத்தாலோ பொன்னே. (11)

பொருளான முச்சுடர் என்னது சொல்லடி கண்ணே—அது
பொதுவான ஆதிமு ஹம்மது அல்லமே பொன்னே. (12)

பொதுவான தோப்பின் கனியென்ப தென்னடி கண்ணே—அது
பொற்கம லமதில் மாவான கலிமாவே பொன்னே. (13)

கலியென்ன மாவென்ன கனிவாகச் சொல்லடி கண்ணே—அந்த
கலியது ஹேயடா மாவது மீமடா பொன்னே. (14)

ஹேயெழுத் தானது எந்த எழுத்தடி கண்ணே—அந்த
ஹேயது ஈராறிற் கடைசி யெழுத்தடா பொன்னே. (15)

பொன்னே என்றுசொன்ன பூவையே மீமென்ன கண்ணே—அது
மன்னர்மு ஹம்மதின் ஈராறில் முதல்மீமே பொன்னே. (16)

கடைமுதல் முதல்கடை ரண்டும் சேர்ந்தாலென்ன கண்ணே—அது
இடமாக மாற்றிப் பிடிக்கும் வகையது பொன்னே. (17)

ஆதியும் அந்தமும் என்னது சொல்லடி கண்ணே—அந்த
ஆதியும் வல்லவன் அந்தம் முஹம்மது பொன்னே. (18)

வல்லோன் முஹம்மதும் வாழ்கின்ற இடமெது கண்ணே—அது
பொல்லா இபுலீஸு போகாத் தலத்திலே பொன்னே. (19)

பொல்லா இபுலீஸின் குணமென்ன சொல்லடி கண்ணே—அவன்
நல்லாரைத் தவமதில் நாடிக் கெடுப்பானே பொன்னே. (20)

நாடிக் கெடுப்போனை யெப்படி நீக்கலாம் கண்ணே—அது
நலமான முச்சுடர் வணக்க மொன்றாகினால் பொன்னே. (21)



நலமான இன்ஸானில் ஈராறு தலமென்ன கண்ணே—அது
மேல்மூலம் இருமூன்று கீழ்மூல மாறடா பொன்னே. (22)

மேல்மூல மென்றுதான் எவ்வஸ்தைச் சொல்லலாம் கண்ணே-அது
மேலான ஆஞ்ஞை நிற்கும் தலமடா பொன்னே. (23)

ஆஞ்ஞை யென்றுநாம் எவ்வஸ்தைச் சொல்லலாம் கண்ணே—அது
ஆறுதா ரத்திலொன் றறிவாகச் சொன்னேனே பொன்னே. (24)

அறிவாக இனிக்கேட்பேன் அன்புடன் சொல்லடி கண்ணே—நீ
நெறியாய் வினைக்கேட்டால் சரியாக விடைசொல்வேன் பொன்னே.

கருநிலை யென்பதைக் களிப்பாகச் சொல்லடி கண்ணே—அந்த
கருநிலை கருநினை வறியுந் தலமடா பொன்னே. (26)

கருநினை வாகவே வந்தது என்னடி கண்ணே—அது
கலப்பற்ற வொளிவான சத்தியுஞ் சிவனுமே பொன்னே. (27)

சத்தியுஞ் சிவனென்று சொல்வது என்னடி கண்ணே—அது
தகதகென் றுவரும் அகார உகாரமே பொன்னே. (28)

அகார உகாரத்தை யெப்படி யறியலாம் கண்ணே—அதை
அறிவுள்ள பெரியோர்க ளகக்கண்ணா லறிவாரே பொன்னே. (29)

அறிவான பூரணம் என்னது சொல்லடி கண்ணே—அது
ஆரணத்தை எட்டா வரும்பொரு ளாமடா பொன்னே. (30)

அரும்பொரு ளாதிக்கி யமைந்தபே ரெத்தனை கண்ணே—அது
ஆயிரம் பேரொன் றருமையாய்ச் சொன்னேனே பொன்னே. (31)

அருமைநல் நால்வேதம் அடங்கிய பேரென்ன கண்ணே—அது
சரியான வொன்பது றூற்றிப் பதினொன்று பொன்னே. (32)

ஒருபேரு இன்னதென் றுரைத்திடு பூவையே கண்ணே—அது
அறிவுள்ள புர்கானி லடங்கிய மௌனமே பொன்னே. (33)

மௌன மென்றபொருள் என்னது சொல்லடி கண்ணே—அது
மதிப்பில டங்காத மாசில்லா ரத்னமே பொன்னே. (34)

மாசில்லா மணியான அலிபுலா மீமென்ன கண்ணே—அது
மகத்தான முச்சுடர் பேசாத மந்திரம் பொன்னே. (35)

பேசாத மந்திரம் அழகென்ன நிறமென்ன கண்ணே—அது
பேரின்ப மாகஇ லங்கிடுஞ் சக்கரம் பொன்னே. (36)

இலங்கிடுஞ் சக்கரம் அறிந்தவர்க் கென்னடி கண்ணே — அவர்
ஏகன் சுவர்க்கப் பிறுதௌசில் வாழ்வாரே பொன்னே. (37)

கருவான மெய்ஞ்ஞான தீப நூல் சொன்னதார் கண்ணே — அது
கலீபத்து ஷெய்கு ஷாஹுல் ஹமீதப்பா பொன்னே. (38)

மெய்ஞ்ஞானதீபம் முற்றிற்று.

## ஞானத்திருநடி.

### கண்ணிகள்.

1. ஆடு பாம்பே யருள் தேடு பாம்பே — ஆதி
அவனன்றி வேறில்லையென் றாடுபாம்பே. (ஆடு)

2. அல்லா வொருவனென்ற ஜோதியதிலே — நல்ல
அடங்கிய சூக்ஷமதைத் தேடுபாம்பே. (ஆடு)

3. ஹக்கு முஹம்மதுவும் ஒன்றாகி — வந்த
காரணங்கள் கண்டுதெளிந் தாடுபாம்பே. (ஆடு)

4. காரண மானகரு மாவின்வடிவில் — நல்ல
கந்தமல ரிதழ்கண்டு ஆடுபாம்பே. (ஆடு)

5. இரவு பகலற்ற தலந்தனிலே — நல்ல
இறையோனைக் கண்டுகொண் டாடுபாம்பே. (ஆடு)

6. மூலக் கொலுவான மேடைதன்னில் — நல்ல
முச்சுடரைக் கண்டேனென் றாடுபாம்பே. (ஆடு)

7. ஆடாம லாடுகின்ற ஆட்டங்கண்டு — நல்ல
பாடாமற் பாடிநின் றாடுபாம்பே. (ஆடு)

8. எங்கும் நிறைந்தபெரும் பொருளதனை — நல்ல
எல்லையதில் கண்டுநின் றாடுபாம்பே. (ஆடு)

9. வட்டவடி வாகவந்த திருவொளியில் — நல்ல
வல்லவனை நித்தங்கண் டாடுபாம்பே. (ஆடு)

10. ஹஜறுல் அஸ்வதென்னுங் கல்லைத்தொட்டு — முத்தி
காரண வொளிவுகண் டாடுபாம்பே. (ஆடு)



11. வாசியோ டிலங்கிய வலம்புரியில் — நல்ல
வந்தனங்கள் செய்துநின் றாடுபாம்பே. (ஆடு)

12. தேனுமாவு மொன்றாகக் கலந்திருக்கும் — நல்ல
திவ்விய அருளைக்கண்டு ஆடுபாம்பே. (ஆடு)

13. ஆதம் பாதமறிந்து சுஜூதுசெய்து — நல்ல
ஆயிரத்தெண் மலர்கண் டாடுபாம்பே. (ஆடு)

14. கதிரொளி வான திரு வடிவதிலே — திருக்
காக்ஷிகளைக் கண்டுநின் றாடுபாம்பே. (ஆடு)

15. ஹக்கென்றும் நபியென்றுந் தானறிந்து — நல்ல
கலைதனை மாட்டிநின் றாடுபாம்பே. (ஆடு)

16. தாத்துஸி பத்தொளிவு மொன்றாகி — வந்த
தனிப்பொருள் அறிந்துநின் றாடுபாம்பே. (ஆடு)

17. ஹூவுக்குள் ளானவொரு குறியறிந்து — நன்றாய்
கூடிக் கலந்துநின் றாடுபாம்பே. (ஆடு)

18. கலிமாவின் நிலைதனைக் கண்டு தெளிந்து — நிதம்
சலியாமல் நின்றுகொண் டாடுபாம்பே. (ஆடு)

19. கண்ணாடி யானநன்மை ஜபறூத்தை — நன்றாய்
விண்ணாடிப் பார்த்துநின் றாடுபாம்பே. (ஆடு)

20. அலிபுலா மீமென்ற வடிவதிலே — நல்ல
அருட்கலி மாத்தொடுத் தாடுபாம்பே. (ஆடு)

21. எப்போதும் நினைவிலும் நித்திரையிலும் — இறை
இன்பமுள்ள யாஹூசரம் ஆடுபாம்பே. (ஆடு)

22. கலீபத்து ஷெய்குஷாஹுல் ஹமீதெனக்கு — நல்ல
காக்ஷிகள் தெளிவுதாவென் றாடுபாம்பே. (ஆடு)

23. பாம்பாக ஆடும்அடி யான்தனக்குச் — சித்தன்
பரனேயுன் னருள்தாவென் றாடுபாம்பே. (ஆடு)

24. ஈமா னுடனேகரை சேர்த்திடென்று — நிதம்
இறையோனைக் கண்டுகேட் டாடுபாம்பே. (ஆடு)

25. ஆலமதி லுள்ளவொலி மார்கள்பாதம் — நிதம்
அடியேன் பணிந்தேனென் றாடுபாம்பே. (ஆடு)

26. ஆமீனல்லா ஆமீனல்லா ஆமீனென்று—நன்றாய்
ஆனந்த வாழியென் றூடுபாம்பே. (ஆடு)

ஞானத் திருநடி முற்றிற்று.

---

## ஞானத் தெளிவு.

—❀—

### சந்தவிருத்தம். ஈரடிக்கண்ணிகள்.

காமிலான ஷெய்கைத்தேடி கண்டுநித்தம் பாரடா
தாமத மில்லாமலே தலைவனை யறியடா. (1)

ஆறுதார முங்கடந்து ஆறுதாரம் பாரடா
நேராய் நோக்கிப் பாராதோர்க்கு நித்தம்பாவ மெய்யடா. (2)

ஐந்ததான அலிபுலாமும் ஹேயுமீமும் தாலடா
ஐந்துநாலு வாசலை யடைத்து நோக்கிப் பாரடா. (3)

நாதவோசை மணியினோசை நற்கடலி னோசையும்
கீதவோசை சங்குதொனியும் கேட்கும் நித்தமறியடா. (4)

காயமென்ற காயமீதில் கள்ளனொன்று கேளடா
மாயமதிற் கலந்திருக்கும் வல்லமைநீ யறியடா. (5)

கல்லுருக்கித் தொட்டுமுத்திக் ககனம்நோக்கிப் பாரடா
வெல்லுகின்ற ஜோதியுன்னுள் விளங்கிநிற்கும் மெய்யடா. (6)

பாஷைதலைப் பாஷையுள் சதுரபாஷை யறியடா
ஆசைநீக்கி யோர்நினைவாய் ஆடும்பூவைப் பாரடா. (7)

அவ்வும் உவ்வும் கூடிநின்ற அற்புதநற் பாற்கடல்
செவ்வையாய் அடங்கிநின்ற சுடருமூன்றும் அறியடா. (8)

முத்துப்பவளம் பச்சையாக முச்சுடருங் கூடியே
நித்தியமும் வந்திலங்கும் நேர்மையதை யறியடா. (9)

கீழ்த்திசையி லிருந்துவண்டு கீதராகம் பாடியெந்
நாளும்வந்து மேற்றிசையில் நட்பாய் நிற்கும் அறியடா. (10)

கள்ளர் வேடர் கூடுகின்ற கானகத்தின் முத்தடா
உள்ளின் முத்தைத் தொட்டபேர்க்கு வுண்மைதவம் மெய்யடா. (11)



ஆறுநாலு ராஜனை யறிந்தவர்கள் வாசமே
தாரைகண்டு முத்ததைத் தழுவினோர்கள் நேசமே. (12)

எட்டிரண்டும் பத்தடா இலங்கிநின்ற கூத்தடா
மட்டிடாத பேரொளிநல் மாக்கலிமா வோதடா. (13)

காரணம்நற் பூரணத்தைக் கண்டறிந்தால் மெய்யடா
தாரணியில் மாயையெல்லாந் தள்ளிநின்று பாரடா. (14)

தாரைரண்டு சக்குவொன்றுள் தாளநீல மாமலர்
நூரைக்கண்டு வானில்நோக்க நுட்பவலிபு லாமுமீம். (15)

வேரறிந்து கூடடா வேதங்காணு மானிடர்
பாரைவிட்டுச் சென்றுபோனால் பாரநரக மாமடா. (16)

முத்துப்பவளம் பச்சையாக முச்சந்தியில் கூடியே
சித்ததாக வந்துநின்ற செல்வமதை யறியடா. (17)

வெட்டவெளி வீசிநின்ற வெட்டறுத சக்கரம்
திட்டமா யறிந்தவர்கள் தெளிந்தவல்லோ ராமடா. (18)

ஆடுமாடு பெண்டென்று ஆசைகொண்ட மானிடா
கூடுவிட்டுப் போனவுயிருங் குவலயம் வராதடா. (19)

நேத்திரத்தி னூடுபார்க்க நேர்மையாவான் அன்புள்ள
ஆத்துமாவும் நல்வழியி லாகுமுண்மை பாரடா. (20)

சாலம்பேசித் திரியுங்குருவை சங்கைநீ செய்யாமலே
ஆலந்தன்னில் காமில்குருவை யன்பாகவே பாரடா. (21)

ஆதியந்த மறிந்திடாத அன்பில்லாத மானிடன்
நீதியற்ற நரகமான நெருப்பிலாவா னறியடா. (22)

பெண்டுபிள்ளை மக்களென்று பேதலித்த மானிடா
சண்டியாகி நரகந்தன்னில் தாழ்வதுமெய் பாரடா. (23)

தனியனை யறிந்திடார்க்குத் தவறுதல் அதிகமே
இனிமையான பொருளைத்தேடி யின்பமாய் வணங்கடா. (24)

அட்டதிக்கும் முட்டிநின்ற அம்பரநற் காக்ஷியை
திட்டமா யறிந்தவர்க்குத் தெளிவுசொர்க்கம் மெய்யடா. (25)

வட்டவடி வாயிலங்கும் வல்லோனருள் கண்டுநீ
சட்டமான வேதந்தன்னைத் தன்மையாக வோதடா. (26)

ககனவட்ட மானதிலே காலையூன்றி நில்லடா
தகவுசெய்து புவியில்வைக்கச் சரீரமழியா துண்மைடா. (27)

ஆறதான தலமதில் அழகுருவடி வாகிய
நூருவொளிவு சுடருமூன்றை நுட்பமா யறியடா. (28)

வனத்திற்சென்று கனியதை மகிமையா யருந்திடில்
தினமும் ஹக்கின் அருளைநீயும் தெளிவதுண்மை பாரடா. (29)

ஹூவுக்குள்ளே மீமதாம் குலாவும்மீமுள் ஹூவதாம்
மாவுக்குள்ளே வந்திலங்கும் வண்ணமதை யறியடா (30)

எட்டுச்சாண்நல் வீட்டிலே யிலங்கிநிற்கும் நற்சுடர்
தட்டுவட்ட மானஜோதி தன்மைநீ யறியடா. (31)

பால்நிறத்தில் வெள்ளையும் படர்ந்தொளிவ தானதுள்
நாலதான வுண்மையை நலமதா யறியடா. (32)

பத்துநூறு எட்டுவென்ற பாகமான நறுமலர்
சித்துவிளை யாட்டைநீ தினமும்நோக்கிப் பாரடா. (33)

வட்டமான திட்டமை வகையறியார் நஷ்டமே
பெட்டகம் திறந்தருள் பேரின்பத்தை யறியடா. (34)

வானமான பரவெளியில் வந்துலாவும் முச்சுடர்
தானமான தவமதஞ்சை சங்கையாக அறியடா. (35)

அண்டர்கோ னிருப்பிடம் அறிந்திடாத மானிடன்
கண்டதெல்லாம் தெய்வமென்று கருத்திலெண்ணு வானடா (36)

உப்புப்பாண்ட மானது வுடையுமுன் தெளிவதை
தப்பில்லாம லையறிந்து தரணிவாழ்வு நீக்கடா (37)

நாதவேதம் கூடியே நலமதாக வுன்னிலே
நீதமாய் வருகும்நித்தம் நேர்மையாகப் பாரடா. (38)

மாயைதன்னில் சிக்கியே மருண்டுபோகும் மானிடா
வாயைமூடி மௌனமான வல்லதீப மறியடா. (39)

உப்புக்கைக்கும் நீரிலே யொளிவுமுத் திருக்குது
தப்பியூன்றி யோகஞானத் தன்மையை யறியடா. (40)

அற்புதநற் காக்ஷியை யறிந்துணர்ந்த மானிடா
நற்பதத்தில் சேர்வதுண்மை நாடிநின்று பாரடா. (41)



அழகுகலி மாவையும் அறிந்துநிதம் கண்டுமே
வளமுடனே தொழுதவர்க்கு வல்லன்சொர்க்கம் மெய்யடா. (42)

கனம்ஞானத் தெளிவின்னூலைக் கருத்துடனே பார்த்துமே
தினமும்ஹக்கை யறிந்தபேர்க்கு செல்வன் பொருத்த முண்மைடா.

கலீபத்து ஷெய்குஷாஹுல் ஹமீதுஅப்பா தாஜுத்தீன்
காதிரியான் சொன்னநூலைக் கனமுடனே பாரடா. (44)

ஞானத்தெளிவு முற்றிற்று.

## மெய்ஞ்ஞான அடைக்கலம்.

### கலிவிருத்தம்.

ஆதியான அஹதியத் தானவா
சோதியான சுடரொளி வண்ணமே
நீதியான நிறைந்த பொருள்தந்து
தீதைநீக்குன் னடைக்கல மானனே. (1)

எட்டிரண்டும் இலங்கிய கூட்டிலே
திட்டமான தெளிவுள்ள முச்சுடர்
தட்டுவட்ட ஒளிகாண ஆதியே
நஷ்டம்நீக்குன் னடைக்கல மானனே. (2)

ஆறுநான்கு இருபத்தி நான்கதை
நூறதாக நொடிக்குள் ளறியயான்
பேறுவுள்ள பெரியோனே யென்றைக்கும்
நேர்மையாக்குன் னடைக்கல மானனே. (3)

முத்துமுச்சுடர் மூன்றுமோர் வடிவதை
பத்தியாகவே பார்த்துத் தெளியயான்
சித்ததானநற் செல்வ வருளேநீ
வெற்றிதாவுன் னடைக்கல மானனே. (4)

அட்டதிக்குமோர் அற்புத மாகவே
முட்டிநின்று முளைத்தெழுஞ் ஜோதியை

திட்டமாகத் தெளிந்திட வல்லவா
கஷ்டம்நீக்குன் னடைக்கல மானனே. (5)

மூலமானதைத் தொட்டிட வான்புவி
ஆலமெல்லாம் நிறைந்திடும் பேரொளி
நீலங்காணவே நித்தனே நல்லனு
கூலந்தாவுன் னடைக்கல மானனே. (6)

ஆறுஆயிரத் தறுநூற்றி யறுபத்து
ஆறுஆயத்து வுள்ள கலாமையான்
ஊரதானவல் லாதியே யறிந்துவுன்
நேர்மைகாண அடைக்கல மானனே. (7)

ஏகனாகிய யாறப்பே யென்னுடை
ஆகமான தழிந்திடா மல்அருள்
மோகமாக அறிந்து தெளியயான்
யோகனேயுன் னடைக்கல மானனே. (8)

இந்தவேளை யுதவிசெய் யேகனே
சிந்தைதன்னைத் தெளிவதா யாக்கியே
நந்திகாணவே நாதனே யென்னையுன்
சொந்தமாக்குன் னடைக்கல மானனே. (9)

அந்தரத்தினில் முட்டையில் தாக்கவே
சந்திரனொளி குஞ்சு பொரித்திடும்
நந்திவட்டத்தைக் கண்டுவ றியயான்
சுந்தரமேயுன் னடைக்கல மானனே. (10)

காரணக்கட லானசி பத்தைப்
பூரணத்திற் றெளிந்து அறியவே
ஆரணத்து ளமைந்தநற் றுய்யனே
நேரைத்தாவுன் னடைக்கல மானனே. (11)

ஹூவென்ற குதறத்தி னுள்ளிலே
மாவென்ற முஹம்மது தோன்றிடும்
தாவியேயாதி யானும் வணங்கிட
பாவியானுன் னடைக்கல மானனே. (12)



ஆறுபத்து ஆறானநல் லாதியே
நூறதாகிய நுட்பமே வல்லவா
மாறுவஞ்சனை காமமும் நீக்கியே
நேரதாக்குன் னடைக்கல மானனே. (13)

நாலுபத்து மூன்றானநற் கோணத்தில்
வேலதான விழியதை நோக்கிட
பாலைப்போலே பரந்தெழுஞ் சோதியே
சீலந்தாவுன் னடைக்கல மானனே. (14)

கல்லைநீற்றக் கரைந்தெழும் வானொளி
முல்லைமாவை யறியவே நீயருள்
சொல்லும்ஷெய்கு ஷாஹுல்ஹமீதுயான்
வல்லவாவுன் னடைக்கல மானனே. (15)

மெய்ஞ்ஞான அடைக்கலம் முற்றிற்று.

ஹாமீம்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

# ஞான அற்புதம்.

## மஹ்ஷர் ஒளிமாலை

வெண்பா.

ஆதியொளி அம்பரனே அற்புதமே காரணனே
நீதிமஹ்ஷர் ஒளிமாலை நேர்மையாய்—மேதினியில்
நேமமாய்த் தானுரைக்க நீதனே என்னுளில்
தாமதமில் லாமலருள் தா.

சிந்துக் கண்ணிகள்.

ஆதிபெரி யோனே றஹ்ற மானே—நன்றாய்
ஆலமெல்லாம் படைத்தாளும் நீதியுடை யோனே. (1)

ஜோதியொளி வான இறை யோனே—நிதம்
சுயமாகத் துலங்கிநின்ற துய்யபரந் தானே. (2)

வல்லவனே தெளிவான அருளை—நித்தம்
வளமுடனே தந்தருள்வாய் வாசமுள்ள கோனே. (3)

ஆலமதில் வாழும்மா னிடரே—யானும்
அறிவாக மஹ்ஷர்ஒளி மாலையதை மொழிவேன். (4)

நீதியுடன் அன்பாகக் கேட்டு—நீங்கள்
நேர்மையுடன் ஐந்துவக்துந் தவறாமல் தொழுவீர். (5)

அன்புடைய வல்லவனும் மொழிந்த—மெத்த
அழகான திருவுளத்தை யறிவாகக் கேளும். (6)

தன்மையுள்ள பெரியோனும் உரைத்த—அழகு
சங்கையுள்ள அமானத்தின் பெருமையதைக் கேளும். (7)

நீதியுள்ள வல்லவனுஞ் சொன்னான்—அழகு
நெறியுடைய அமானத்தை வெளியாக்கப்போ கின்றேன். (8)



என்னுடைய ஹகீகத்தின் பெருமை—யான
இன்பமுள்ள பகாவான உள்ளமையைச் சார்ந்தால். (9)

அதுவேளை சகலவஸ்தும் மறைந்து—மேன்மை
அழகுதாத்து ஸிபத்துவொளி அன்புடனே துலங்கும். (10)

அச்சமயம் பூமிவானம் மறையும்—கடலும்
அகிலத்துள்ள சகலஉயிரும் சகலமதும் மறையும். (11)

மதிசுவனன் தாரைகளும் மறையும்—அப்போ
வடிவான என்னுடைய தாத்துஸிபத்து துலங்கும். (12)

அப்போது உங்களுடைய பெலமும்—குறைந்து
அறிவான தத்துவமும் மௌத்தாகு மப்போ. (13)

தெளிவுபகா வானஅமா னத்தில்—நீங்கள்
திறமாகத் தரிபடவே காண்பிக்கப்போ கின்றேன். (14)

இந்தநல்ல அமானத்தை வணங்கும்—அவர்க்கு
இன்பமுள்ள என்னுடைய ராஜாங்கஞ் சொந்தம். (15).

அப்போது வணங்குவதும் மேன்மை—நல்ல
அழகாகக் கபூல்செய்வ ததுவும்நானே யாகும். (16)

என்றுமேதான் இறையவனும் நன்றாய்—மெத்த
இன்பமாக மொழிந்தானே ஆதியான றஹ்மான். (17)

இப்பேர்பட்ட அமானத்தின் பேரில்—உள்ள
ஏகவொளி வணக்கமதை யொப்புக்கொள்வ தற்கு. (18)

யாராவது வுண்டாவென்று கேட்டு—சகல
எல்லாஜீவ ஜெந்துகளுக்கும் வானம்பூமி மலைக்கும் (19)

வானம்பூமி மலைகளுக்கும் நன்றாய்—எடுத்து
வல்லோனுங் காண்பித்தான் அமானத்தை யழகாய். (20)

அப்போது அமானத்தை யொப்புக்—கொள்ள
ஆகாமல் சக்திய[illegible] சகல வஸ்தும. (21)

எல்லாம் படைத்தறஹ்மானே—இந்த
இன்பமுள்ள அமானத்தை சுமக்கசக்தி யில்லை. (22)

என்றுமேதான் சகலவுயிரனைத்தும்—நல்ல
ஏகனிடஞ் சொல்லியே விலகிவிட்ட தறிவாய். (23)

வலிமையாதம் ராஜாங்கத்தின் பேரில்—மெத்த
வழக்காடி அமானத்தை சுமந்துகொண்டார் நன்றாய். (24)

ஆதமுக்குத் தெளிவாகச் சொன்னான்—வல்லோன்
அறிவைமறதி யாக்கிஇன்ஸா னைப்புவியி லிறக்கி. (25)

அப்போது ஜிபுரீலைக் கொண்டு—இந்த
அழகான அமானத்தை வெளியாக்கப் படுமே. (26)

அழகான அமானத்தின் ஒளிவு—சுடரை
அருமையாகத் தெரிசித்துமே தொழுதுகொண்டு வாரும். (27)

அருமையாகத் தொழுதுகொண்டு வந்தால்—கொடுமை
அநியாயத் திரைநீக்கியென் ராஜாங்கஞ் சொந்தம். (28)

என்னுடைய ராஜாங்கத்தின் பேரில்—தனதாய்
இன்பமாகக் கிருபைசெய்யப் படுமென்றாதி யுரைத்தான். (29)

என்னையும்என் னுடைய அமா னத்தின்—பேரில்
இன்பமாகத் தொழுகைதனை முடுகுதலாய்த் தொழுதால். (30)

உம்முடைய மாயையென்ற திரையை—நீக்கி
உண்மையான என்னுடைய ராஜாங்கத்தில் தரித்து. (31)

என்ராஜாங் கத்தில்மிக அழகாய்—வைப்பேன்
என்றுமேதான் ஆதமுக்கு இறையவனும் மொழிந்தான். (32)

ஆதியுந்தான் ஆதமிடந் தன்னில்—சொல்லி
அர்திமானச் சத்தியமும் அறுவாஹில் வாங்கி. (33)

அறுவாஹில் சத்தியமும் வாங்கி—வல்லோன்
ஆதமிடம் நன்றாக உறுதிமொழி பெற்றான். (34)

இந்தஅமா னத்தின்பேரில் நீரும்—நன்றாய்
இன்பமுடன் தொழுகாமல் மறந்திருந்தீ ரானால். (35)

உம்முடைய ...ளைநீருங் கொடுமை—மெத்த
உண்மையாக செய்தவராய ஆ... (36)

என்னையும்என் னுடையஅமா னத்தை—நீரும்
இன்பமாக அறியாத பாவியாகி விடுவீர். (37)

என்றுவல்லோன் ஆதமுக்குச் சொல்லி—இன்னும்
இன்பமாக மொழிவானே யிறையவனும் நன்றாய். (38)



தெளிவு அமானத்தைச்சுமந் ததினால்—நீரும்
ஜெகத்துக்கெல்லா வுயிர்களுக்கும் கலீபாவாக வானீர். (39)

என்னுடைய ஜலால்ஜமால் ரண்டு—நல்ல
ஏகனுடைய குணமும்உம்மில் நின்றுவொரு மித்து. (40)

வெளியாவ தாலும்மற்று மெல்லா—உயிர்கள்
மேதினியிற் சகலதிலும் வெளியாகாத தாலும். (41)

சகலவஸ்து அடங்கலுக்கு நீரும்—நல்ல
சரியான நிரப்பமுள்ளோ ராகிவிட்டீ ரின்னும். (42)

நன்மைதின்மை ரண்டுக்கும்நீர் சொந்தம்—நன்றாய்
நலமாக ஆகிவிட்டீரென்று ஆதி யுரைத்தான். (43)

இவ்வணக்கஞ் செய்தால் தவாபும்—விட்டால்
இருளான நரகமென்று குறுஆனில் சொன்னான். (44)

வல்லோனு ரைத்ததிரு வுளத்தை—யானும்
வாகாய றிந்துமிகத் தெளிவாகச் சொன்னேன். (45)

செல்வமுள்ள தீனவரே நன்றாய்—அழகு
தெளிவான அமானத்தைத் திறமாக அறிவீர். (46)

இப்புவியில் அருளறிந்த காமில்—தன்னை
இன்பமாகத் தேடியே யறிந்துகொள்வாய் நலமே. (57)

அறிவான வணக்கந்தன்னை யறிந்து—மெத்த
அன்புடனே தவத்தைச்செய்வீர் அருமையுள்ள கண்ணே. (48)

அருமைத்தவஞ் செய்வதற்கு நன்றாய்—மெத்த
அன்பாக வுரைக்கிறேன் அறிவுடைய கண்ணே. (49)

கீழிருக்கும் நாலுவாசல் கோட்டை—அதில்
கிளம்பிடுமே வாசியென்ற புறவியது நேராய். (50)

வழியான கலிமாவைச் சரத்தில்—நல்ல
வல்லமையாய் ஏற்றிடுவாய் வரிசையுள்ள கண்ணே. (51)

அழகான ஜிபுரீலு வஹியே—நல்ல
அற்புதமாய் ஏற்றிடுவாய் சரங்கொண்டு மேலே. (52)

ஏற்றியருள் தொட்டுவிலை வாக்க—நன்மை
ஏகனவன் கலிமாவின் அருளதுவும் சிறந்து (53)

திறந்திடுமே கவுஸைனிப்பூட் டுடைந்து—உடனே
தேகமதும் ஆலம்பதி னெண்ணாயிரம் மறையும். (54)

மலைகடலும் வானம்மதி சுவனன்—மற்றும்
மகிதலத்தில் உயிர்களது சகலமதும் மறையும். (55)

காக்ஷிதனை மஹ்மூதில் அறிவாய்—கண்டு
கமலக்கண்ணால் மகிழ்ந்திடுவாய்த் தெளிந்திடுவாய் மனமே. (56)

எத்திசையும் பொருந்தியொளி வாக—ஒரே
ஏகமாய்த் தெரியுமதே ஆதியொளி வாச்சு. (57)

முட்டித்த தும்பியெழுஞ் சோதி—ஒளி
முன்னவனின் சமுகமதிற் சென்றிடுவாய் நலமாய். (58)

முத்திலொளி வானமஹ் மூதை—நிதம்
மூலமதைத் தொட்டுஅறி வாகவேநீ தொழுவாய். (59)

அட்ட திசை கோணம்பதி னாறும்—நிறைந்த
அன்புடைய ஆயிரத்தெண் மலரதையும் அறிவாய். (60)

பக்தியுடன் முச்சுடரை யறிவாய்—நிதம்
பாங்குடனே தெளிவாக நீதனையும் தொழுவாய். (61)

வட்டவடிவு முச்சுடரின் ஒளிவை—நிதம்
வணங்கினோர்கள் வல்லவர்கள் தெளிவாக உரைத்தேன். (62)

ஆதிய னாதிஜோதி மூன்றும்—நல்ல
அறிந்துதொழ வேணுமென்று அறிவனுமே விதித்தான். (63)

அறுஷுதனைக் கடந்து அப்பால் சென்று—நன்னா
அற்புதத்தின் குறுசான கஃபாவில் செல்வாய். (64)

கஃபாவின் தலமதனைக் கேளும்—அது
காரணமாய் நாலான பூரணமே யறிவாய். (65)

தெளிவான கஃபாவில் சென்று—நன்றாய்
சிறப்பாகக் கலிமாவை மொழிந்திடுவாய் கண்ணே. (66)

சுற்றுமல் சுற்றிப்பாதந் தொழுதால்—நன்றாய்
சுகமுடனே தெளிவாக வாழ்ந்திருப்பாய் பதியில். (67)

குறுசுமு ஹம்மதுவை யறிந்து—நன்றாய்
குறிப்பாகத் தெளிவுடனே யறிந்திருப்பாய் நலமே. (68)



அறிவான ஹிந்தீல்வடி வொளிவை—நன்றாய்
அறிந்துதெளி வாகிடுவாய் அருமையுள்ள கண்ணே. (69)

திட்டமதாய் நபிவடிவில் இலங்கும்—திரு
தெளிவான பளிங்கியிலும் தெளிவாகும் ஆதி. (70)

வடிவொன்று சுடர்மூன்றும் அறிந்து—நல்ல
வல்லபமாய்த் தொழுதிடுங்கள் தெரிசனையை யுகந்து. (71)

தெரிசிக்கின்ற வேளைசகல வுயிரும்—அழிந்து
தேகமென்ற சடலமின்ஸா னென்றபண்பு நீங்கி. (72)

அரூபியாக மௌத்தாகி யப்பொ—ழுது
அன்பாக ஹயாத்தாக்கி வைக்கிறானே றஹ்மான். (73)

அதுநாமும் முன்னிருந்த ரூபம்—இப்போது
அகிலமதில் சடலத்தோடு இருக்கும்ரூப மல்ல. (74)

நாமும்முன் னிருந்தரூப மதுதான்—ஹக்கு
நாயனுடை சமுகமதில் வணங்கிநின்ற ரூபம். (75)

அந்தரூப மாகஹயாத் தாக்கி—வைப்பான்
அழகாக இருக்குமந்த அறிவுதனைக் கேளும். (76)

அப்போது நாமென்பது இல்லை—நன்றாய்
அழகான தாத்தும்ஸிபத்தும் பொருந்திநிற்கு மொன்றாய். (77)

தாத்தும்ஸிபத்தும் பொருந்திநிற்கும் நேரம்—இந்த
தரணிவானம் மலைகடலும் மதிசுவனன் மறையும். (78)

சகலமதும் மறையுமந்த நேரம்—அப்போ
சடலமதற் கிருளென்பது இல்லையொளி வாகும். (79)

சகலமுமே பனாவாகி யவனில்—நன்றாய்
சரியான பகாவாகத் தரிபடுமந் நேரம். (80)

அப்போது வணக்கமது நன்றாய்—மேன்மை
அழகாக வணங்குவதும் கபூல்செய்வ தவனே. (81)

நிரப்பமாகக் கபூல்செய்வ தவனே—ஹக்கு
நிரப்பமாக எங்குநிறைந் தாதியருள் ஜோதி. (82)

இதுதானே ஜம்உசெய்யும் வணக்கம்—நன்றாய்
இதையறிந்து வணங்கிடுவாய்த் தெளிவாகச் சொன்னேன். (83)

பெரியகி யாமநாளை யறியும்—அவர்கள்
பேரின்பமா யிப்பேர்ப்பட்ட ஒளிவைத்தெரிசிப் பார்கள். (84)

இதுதான் அல்லாவுடைய இஸ்முல்—அஃலம்
இதுதானே உண்மையுள்ள நீதியுள்ள வணக்கம். (85)

இதுதானே லௌஹுல்மஹ் பூஸில்—தெளிவாய்
இறையோனும் தரிபடுத்தி வைத்தானே றஹ்மான். (86)

இவ்வணக்கம் ஆரிபீன்கள் ஒலிகள்—கல்பில்
இன்பமாகத் தரிபடுத்தி வைத்தானே ஆதி. (87)

இதுவே ஒலிமார்கள் வணக்கம்—நன்றாய்
இதைத்தானே வணங்குவார்கள் தெளிவான பெரியோர். (88)

கியாமத்து நாளல்லாத மற்ற—நேரம்
கிருபையாதி நபியொளிவை யறியார்க ளுலகில். (89)

தாத்துஸிபத்தை யறியார்கள் பாவி—மேன்மை
தரணிதனில் மஹ்ஷர்நாளை யறிவதுவும் பறுலே. (90)

பெரியகி யாமமென்ற மஹுஷர்—நாளை
பெலமாக ஹயாத்தாக இருக்கும்போதே யறிவாய். (91)

அறிவாயே இஸில்ஷஹறு வக்த்தில்—நன்றாய்
அருமையுடன் நித்தியமும் மஹ்ஷர்நாளை யறிந்து. (92)

மஹ்ஷர்நாளை யறிந்துஒலி மார்கள்—நன்றாய்
மகிழ்ச்சியுடன் தாத்துஸிபத்தை யறிந்துதொழு வார்கள். (93)

அறிவான முச்சுடரின் வணக்கம்—நல்ல
அறிந்திடுவாய் அறிவனவன் தீதாறு கிடைக்கும். (94)

அறிவனுமே மிஃறுஜில் நபிக்கு—நன்றாய்
அறைந்தானே ரகசியமாய்த் தெளிவுஉப தேசம். (95)

தெள்ளிவான நன்மையுப தேசம்—ஹக்கு
ஜெயமான ரகசியமாய் நபிக்குரைத்த செய்தி. (96)

தெரிசனையை யறிந்துதொழுத வொலிகள்—ஹக்கன்
தீதாறு கண்டுஅவன் பிறுதௌசி லாவார். (97)

இறையைவணங் காதபாவி யெல்லாம்—கொடிய
எரிநரகில் தாழ்ந்திடுவா னென்றுஇறை சொன்னான். (98)



தெரிசனையை யறிந்தவர்க்கு வல்லோன்—நன்றாய்
தெளிவாகத் தெரியுமப்போ சகறுத்தில் நல்லோன். (99)

வல்லோனும் மலக்குகளும் வந்து—உன்னை
வரிசையுடன் சகறுத்தில் அழைத்தல்லவோ போவார். (100)

அருமை பெருமைவல்லோர் கட்கு—இந்த
அற்புதத்தை யாரறிவார்·நல்லோக ளறிவார். (101)

கபுறுதனில் முன்கர்நகீர் வந்து—நன்மை
காக்ஷியுள்ள முகமதுவாய் மகிழ்ச்சியுட னிறங்க. (102)

மலக்குயென்ற இருமுன்காத்தி பான—இரு
மலக்குகளும் பட்டோலைமுன் கர்நகீருக் கீவார். (103)

மலக்கான முன்கர்நகீர் வாங்கி—நல்ல
மகிமையதாய்ச் சரிபார்த்து மகிழ்ந்திருப்பார் நன்றாய். (104)

கபுறுதனில் அருமையுள்ள மலக்கு—நன்மை
காரணத்தின் றப்பெங்கே நபியெங்கே யென்றும். (105)

நீயெந்தத் தீனிலுள்ளோ னென்றும்—இன்னும்
நீயெந்த கிபுலாவிலே தொழுதுவந்தா யென்றும். (106)

நன்மையுள்ள மலக்கவர்கள் கேட்க—ஒலிகள்
நாயனுடை உதவிகொண்டு அந்நேரமே மொழிவார். (107)

வளமான அரம்பைமாரும் கபுறில்—இருந்து
வண்ணமுள்ள பொன்மாலை யழகாக முடித்து. (108)

புகழாகக் கால்கழுவி நன்றாய்—ஒலிக்கி
பொன்மாதர் கூந்தலாலே கால்துடைப்பா ரழகாய். (109)

இவ்வரிசை யழகுளன்ன சொல்வேன்—மேன்மை
இறையவனைத் தொழுதவர்க்குத் தப்பில்லாமல் கிடைக்கும். (110)

கபுறிலேதான் ஒலிகளுக்கு நடக்கும்—இந்த
காரணத்தை யுரைத்தேன்யான் கனமாக அறிந்து. (111)

கனமாக மீஸானில் அழகு—ஒலிகள்
காரணத்தா லவர்களுக்கு நன்மைத்தட்டு முறுகும். (112)

முன்னேனின் மயிர்ப்பாலம் மெத்த—நீளம்
முப்பதினா யிரவருஷத் தடிபாடு ஆகும். (113)

தெளிவாகப் பாலமதை நொடியில்—கடந்து
தீபவொளி சொர்க்கமதி லேகிடுவா ரொலிகள். (114)

ஏகிடுவார் ஏகனுரைப் படிக்கு—ஒலிகள்
இறையவனின் சொர்க்கமதி லழகாகச் செல்வார். (115)

அழகாக ஒலிமார்கள் மெத்த—நன்மை
அன்பான பிறதௌசில் வாழ்வாரூழி காலம். (116)

சொர்க்கமதில் ஒலிகளுக்கு நடக்கும்—அழகு
சுயமதனை நல்விதமாய் மாந்தர்களே கேளும். (117)

சொர்க்கத்திலே ஈண்டுசுனை யுண்டு—ஒன்று
சுயமான தஸ்னீம்சல் சபீலாவும் ஒன்று. (118)

மதுரமான தண்ணீர்கஸ் தூரி—நல்ல
மலையில்நின்று பொங்கிவரும் தெளிவாக அழகாய். (119)

பூங்காவ னச்சுவர்க்க மதிலே—அழகு
புவிதனிலே யுள்ளகனி யடங்கலுமே யுண்டும். (120)

ஒன்றுபச்சை யொன்றுலர்ந்தி ருக்கும்—இன்னும்
ஒன்றுவழ காயிருக்கும் அறிவாயே கண்ணே. (121)

கனவழகு சொர்க்கமதில் இனிப்பு—கண்ணே
கலிமாவை யறிந்தவர்க்கு அருமையாகும் சொன்னேன். (122)

சொர்க்கலோக மாளிகையின் அழகு—வரிசை
சொல்லமுடி யாதருமை யெழுதமுடி யாது. (123)

சொர்க்கமதில் இருளென்பது இல்லை—அங்கே
சுயமான வொளிவதனால் சுத்தமான வண்ணம். (124)

சொர்க்கவாதி களுக்குஇருப்புச் சொல்வேன்—நல்ல
சுத்தமுள்ள நவரத்தினம் பொருந்தியகால் நாலு. (125)

நாலுகால்க ளுள்ளஅழகுக் கட்டில்—மீதில்
நலமாக வுட்புறம்இஸ் தபரக்கென்ற பட்டும். (126)

வெளிப்புறம் சுந்துஸ்துபட்டில் நின்றும்—முள்ள
விரிப்புகளின் மேலிலேதான் ராஜாக்க ளிருப்பாய். (127)

சாய்ந்தவர்க ளாகவுமே யிருந்து—அழகு
சங்கையுடன் பிறதௌசில் வாழ்வார்கள் ஒலிமார். (128)



சொர்க்கமதில் சூடுகுளிர்ச்சி காணார்—நன்மை
சொர்க்கமதின் நிழலதுவும் ஹக்குடைய வரிசை. (129)

வரிசைஹலீ ரத்தில்குதுஸி யான—அழகு
வலுப்பமாக இருக்குமப்பா தெளிவாக அறிவாய். (130)

சொர்க்கவாதி யானவர்க்குக் கனிகள்—நன்மை
சொர்க்கத்திலே கையெட்டியே பறிப்பதுபோல் கிடக்கும். (131)

கனியை யிருந்துஅருந்து வார்கள்—அழகு
காரணங்கள் தெளிவுகண்ட ஒலிமார்க ளப்பா. (132)

கனியழகும் ருசிசொல்ல முடியா—நல்வன்
காக்ஷியது அறிந்தஒலி மார்களுமே அருந்தி. (133)

அறிவனையும் புகழ்ந்திருப்பார் சொர்க்கம்—மேன்மை
அறிவுடைய தெளிவுவடிவு அன்புஒலி மார்கள். (134)

சொர்க்கலோக மாளிகையின் வண்ணம்—அழகு
சொல்லமுடி யாதுவண்ண மெழுதிமுடி யாது. (135)

மாளிகையில் குணங்கள்மேன்மை யான—திரு
மாதரசுப் பெண்களுமே இருப்பார்க ளதிலே. (136)

முகங்களிலழ கானதெளி வடிவும்—நன்மை
முத்தழகு பெற்றஹூறுல் ஈனெனும்நற் பெண்கள். (137)

தெளிவான மாணிக்கத்தைப் போலும்—வெளுமை
தெளிவுடைய அழகுபெற்ற ஹூறுல்ஈன்நற் பெண்கள். (138)

இன்பமுள்ள சிவந்ததுவும் வெள்ளை—மஞ்சள்
இனிமையான பச்சைநீலங் கலந்தவர்ணப் பெண்கள். (139)

அவர்கள்திரை கடலில்முங்கில் தண்ணீர்—மதுரம்
அவர்கள்வெளி யானாலெங்கு மொளிவுபிர காசம். (140)

கஸ்தூரி வாடையெங்கும் நிறையும்—நன்றாய்
கமகமென்று வாசமான தெங்குமே மணக்கும். (141)

அவர்கள்தலை தனிலிருக்கும் கூந்தல்—அழகு
அவனிதனில் ரோமத்திலும் அழகுடைய ரோமம். (142)

தெளிவுடைய கூந்தலது அழகு—இன்னும்
தேசத்தினி லுள்ளவஸ்து சகலத்திலும் அழகு. (143)

இந்தப்பெண்கள் கன்னியழியாப் பெண்கள்—அழகு
இனிமையான மாதர்களை ஹூறுல்ஈன்நற் பெண்கள். (144)

இப்படிமூவாயிரம்பெண் களையும்—அல்லா
ஏவுதலுக் கொலிமார்க்கு இறையோனும் கொடுப்பான். (145)

கொடுப்பானே ஒலிமார்க்கு ஏவல்—வேலை
குறைவில்லாமல் செய்வதற்கு இறையோனுங் கொடுப்பான். (146)

அருளான நற்கலிமா அறிந்து—ஹக்கை
அன்புடனே தொழுதவர்க்கு இவ்வரிசை கிடைக்கும். (147)

தெளிவான முச்சுடரை யறிந்து—ஹக்கை
செல்வமாக வணங்கினோர்க்கு இவ்வரிசை கிடைக்கும். (148)

தீபவொளி சொர்க்கமதில் ஒலியை—ஹக்கு
தீங்குகளை நீக்கிவைத்து நன்மையாக வைப்பான். (149)

ஒலிகள்முகம் பிரகாச வடிவாய்—ஹக்கு
உண்மையாக ஆக்கிவைப்பான் உறுதியாக வுரைத்தேன். (150)

அவர்களுக்கு ஊழூழி காலம்—காஷி
அழகாகத் தரிப்படுமே மகிழ்ச்சிஹக்குங் கொடுப்பான். (151)

ஒலிமார்கள் துன்யாவில் ஹக்கை—அழகாய்
உகந்திருந்து மாறுசெய்யா திருந்ததனால் நன்மை. (152)

நன்மைசபுர் செய்ததனா லவர்க்கு—நாயன்
நாடினனே பட்டுப்பணி யவர்க்குக்கொடுத்து சொர்க்கம். (153)

சொர்க்கமதில் பட்டுப்பணி யாடை கொடுத்து
சுத்தனுமே யழகாக நன்மையாக்கி வைப்பான். (154)

துனியாவை யுகக்காம லிருந்து—இன்னும்
சுகமான அகிலம்வஸ்துப் பெரிதில்லையென் றதனால் (155)

துனியாவை விட்டுச்சென்று போன—ஒலிக்கு
துய்யோன் றஹ்மத்துவும் வாழ்வதுவுங் கொடுப்பான். (156)

சொர்க்கத்தின் பாத்திரங்கள் ஒளிவால்—துய்ய
சுயமாகச் செய்யப்பட்ட தட்டுகளை அழகாய். (157)

அழகான பாத்திரத்திற் குடிப்பை—நன்றாய்
அருமையாகக் கொடுப்பார்கள் ஹூறுல்ஈன்கள் ஒலிக்கு. (158)



குடிப்பில்சுக்கு மதுரமது இருக்கும்—அந்த
குடிப்புவாசம் மதுரத்தையும் சொல்லமுடி யாது. (159)

சொல்லமுடி யாதுவாசம் ருசியும்—அன்பும்
சுகமாக அருந்திடுவார் சுவனபதி வாழ்வோர். (160)

குடிப்பின்வஸ்துப் பேருரைப்பேன் அழகாய்—நல்ல
குறிப்பான சுக்குவாசம் சல்சபீலா வாகும். (161)

அழகான சல்சபீலா அமுதம்—கலந்த
அருமையுள்ள தெளிவான அன்பான வஸ்து. (162)

தெளிவாகக் குடிக்கும்போது அழகாய்—நல்ல
தேன்போலே தொண்டையிலே வருத்தமதில் லாமல். (163)

வருத்தமில்லா திறங்கும்நல்ல மதுரம்—இன்பம்
வாசமதும் ருசியதுவும் சொல்லமுடி யாது. (164)

நரையாமல் எப்போதுங் குழந்தை—யாகும்
நன்மையுள்ள சிறுபிள்ளைகள் ஒலிகளைச்சூழ்ந் திருப்பார். (165)

ஒலிகளைச்சூழ்ந் திருப்பார்கள் அழகாய்—நன்றாய்
உண்மையுள்ள பாலகர்கள் தெளிவாக ஒளிவாய். (166)

அழகாக வுதிர்ந்தமுத்தைப் போலே—தெளிவாய்
அவர்களைத்தா னெண்ணுவார்கள் அருமைசொர்க்க வொலிகள்.(167)

அருமைசொர்க்க மதைப்பார்த்தால் நன்றாய்—அழகு
அன்புடையோன் நிஃமத்துவும் முடிவில்லாத பெருமை. (168)

பெருமையான ராஜாங்க மாக—ஹக்கு
பேரின்பமாய்ச் சொந்தமாக ஆக்கிவைக்கப் படுமே. (169)

துனியாவில் இருக்கும்போது ஒலிகள்—ஆதி
துய்யோன்நாடி யதுநடக்கு மென்றுசொன்னா ரொலிகள். (170)

இந்தஒலிக்கி சொர்க்கமதிலே நீங்கள்—நன்றாய்
இந்தநாளில் நாடியது நடக்குமென்று யுரைத்தான். (171)

என்னுடைய மஃரிபாவைக் கொண்டும்—மேன்மை
என்னுடைய தௌஹீதி னையத்தைக்கொண் டழகாய். (172)

அமலையழ காக்கித்தவம் புரிந்த—வர்க்கு
அருமைக்கூலி சொர்க்கமதி லாக்கிவைப்ப ததுவே. (173)

நான்அவனை யென்னுடைய சொர்க்கம்—அழகு
நன்மைஹலீ ரத்தில்குதுஸி தன்னில்குடி யிருத்தி. (174)

ஹலீரத்தில் குதுஸியென்னுந் தலத்தில்—அருமை
காரணத்தின் றஹ்மத்திலே குடியிருத்தி வைப்பேன். (175)

துன்யாவில் அமலால்இஹ்ஸான் செய்த—வனுக்கு
சொர்க்கமதில் இஹ்ஸான்செய்வே னென்று ஆதி யுரைத்தான். (176)

என்றுமுள்ளோன் குறுஆனில் நன்றாய்—மெத்த
இன்பமாக வுரைத்தானே தெளிவாக அறிவாய். (177)

அறிவனையும் அறிந்தவலி மார்கள்—நன்றாய்
அற்புதமாய்த் தெளிவாக வாழ்ந்திருப்பார் சொர்க்கம். (178)

தெளிவுடனே அழகாக வாழ்வார்—மேன்மை
செல்வமுள்ள பெரியோர்கள் திருவொளிவைக் கண்டோர். (179)

துனியாவில் அறிவனையும் வணங்கா—பாவி
துன்பமதைச் செவிகொடுத்து நல்விதமாய்க் கேளும். (180)

மூச்சுடரை யறியாத பாவி—நீயும்
மூடனாகித் திரிகிறாயே யுலகமதில் வீணாய். (181)

ஆசைபாசம் பணம்பொருளைக் கொண்டு—நீயும்
அலைந்துகெட்டுத் திரிகிறாயே அறிவுகெட்ட பாவி. (182)

காசாசை பொன்னும்பொருளை நம்பி—நீயும்
கவலைகொண்டுத் திரிகிறாயே கம்புபோலே வீணாய். (183)

வீடுமாடு பெண்டுபிள்ளை யென்று—நீயும்
வீணாசைகள் கொண்டல்லவோ கெட்டுப்போகிறாய்நீ. (184)

ஆகிதனை வணங்காத பாவி—நாளை
அமளிமெத்த சகறாத்தில் சொல்லமுடி யாது. (185)

சகறாத்தில் மலக்கல்மௌத்து வந்து—உன்னை
சதிசெய்வார் வருத்தமது சொல்லமுடி யாது. (186)

சகறாத்தில் ரண்டுகண்ணின் பார்வை—அப்போ
சடுதியிலே தட்டுக்கெட்டுப் போய்விடுமவ் வேளை. (187)

கண்ணிரண்டும் நீலமது பாய்ந்து—கேடாய்
கடுமையுள்ள பாவிகட்கு முகமதுவும் கறுக்கும். (188)



வணக்கமில்லாப் பாவிகளே நீங்கள்—நன்றாய்
வல்லமையாய்க் குதுஸியதை யிருக்கும்போதே யறிவீர். (189)

மாடகூடம் வீடெங்கே போச்சு—இந்த
மாயமதைத் தெரியாமல் அலைந்தாயேயென் னாச்சு. (190)

ஆடுமாடு பணங்களெங்கே போச்சு—அருளை
அறியாமல் காலமெல்லாம் வீணாகப் போனாய். (191)

மக்களென்ற பெருமையெங்கே போச்சு—நீயும்
மண்ணுக்கிரை யாவதுதான் நிசமாக ஆச்சு. (192)

கட்டில்மெத்தை சுகங்களெங்கே போச்சு—கத்தன்
காலன்வந்து வதைகள்செய்துன் சடலம்நாச மாச்சு. (193)

பெண்ணாசைவீண் மண்ணாசையு மெங்கே—அந்தப்
பெருமையெல்லாம் சடுதியிலே தொலைந்தல்லவோ போச்சு. (194)

அறியாமல் திரிந்தாயே வீணாய்—நெருப்பு
அக்கினியாய்க் கொளுத்துமேயுன் தேகமெல்லா முருக. (195)

அறியாமல் காலமெல்லாம் இருந்தாய்—ஒடுக்கம்
அறியப்போகும் றாஹானிநால் குதுஸியதைக் காண. (196)

அப்போது குதுஸியது நாலை—கேடு
அறிவுகெட்ட மூடர்களே வென்னஉங்கட் கிங்கே. (197)

என்றுமேதான் குதுஸியது நாலை—கீழே
எறிந்துமேதான் தள்ளிவிடும் கீழ்மூலம் விழுகும். (198)

என்றுமுள்ளோன் குதுஸியது இறையோன்—பரம்
இன்பமாகச் சேர்ந்துவிடும் குதுஸியதுதானே. (199)

எப்போதும் குதுஸியதை யறிந்தால்—ஒடுக்கம்
ஏகனுடை குதுஸியதை றாஹானிநா லறியும். (200)

சகறாத்தில் படும்பாடு மெத்த—நல்ல
சரியாக அறிந்திடுங்கள் மூடர்களே இதனை. (201)

சகறாத்தில் செம்புத்தரை யாகி—நல்ல
சரியாக நின்றிடுமே வல்லயப்பொழு துயர. (202)

பொழுதாக வந்துநின்று வுன்னை—யெரிய
பொசுக்கிடுமே மூளையெல்லாம் உருகிடவே கொதிக்க. (203)

திரேகமெல்லாம் பாகுபாகா யுருகி—உன்னைத்
தீயனலாய்க் கொளுத்திடுமே தீங்காகப் போவாய். (204)

இன்னம்சக ருத்தில்பாடு மெத்த—நன்றாய்
இறஸூலு ரைத்தனால் நானும்கவியிற் சொன்னேன். (205)

கபுறுதனில் கொண்டுபோய்தான் வைக்க—உன்னைக்
கபுறதுவும் நெருக்கிடுமே முள்ளுகளும் நொருங்க. (206)

அறியாத பாவிகளே கேளும்—நீங்கள்
அதாபுபடும் விபரமதை நன்றாக வுரைப்பேன். (207)

எண்ணியொரு வ்ழடிகள் வைத்த—உடனே
ஏகன்மலக்கு முன்கர்நகீ ரிறங்கிகபுறில் வந்து. (208)

கண்ணிரண்டும் அக்கினிபோல் பறக்க—மலக்கு
கடுமையுள்ள இடியைப்போலே சத்தமிட்டு அதிரி. (209)

கையில்சுக்கு மானென்றதோர் தடியும்—கொண்டு
கடுங்கோப மாகவுந்தான் வந்துகபுறு தன்னில். (210)

கடுமையாக வொருகேள்வி கேட்க—நன்றாய்க்
கரைந்திடாரே மறுமொழிகள் பாவியென்ற தோஷி. (211)

பாவிகளைச் சுக்குமான்கொண் டடித்து—கேடாய்
பறக்கப்பறக்க வீசிடுவார் பரமனவன் மலக்கு. (212)

கனமாக மீஸானில் தின்மை—மெத்தக்
கடினமாக தாழ்ந்துவிடும் தின்மைத்தட்டு மப்போ. (213)

அக்கினிமேல் போட்டிருக்கும் பாலம்—நேர்மை
அதுவல்லவோ மயிர்ப்பாலம் வாளிலையுங் கூர்மை. (214)

பாலங்க டக்கவுந்தான் வருத்தம்—வீறாய்
பழுதாக விழுந்திடுவான் நரகமதில் பாவி (215)

நரகமதில் ஏகிடுவான் பாவி—ஆகி
நன்மையுள்ள கட்டைபோல் தீயதனி லாவான். (216)

தீயதனில் பாரமான கொடுமை—அவனை
தீவினைகள் செய்திடுவார் மாலிக்கென்னும் மலக்கு. (217)

பாவிகளின் முகங்களெல்லாம் நெருப்பால்—கொடிய
பழுதாகி அழிவாகும் அவர்கள்முகம் கருகி. (218)



வெட்டி வெட்டிப்பிளக்கும் துண்டாய்—கொடிய
வேதனையாய் ஆயுதங்கள் பிளந்துமோசஞ் செய்யும் (219)

கட்டித் தளையும்சங்கி லியும்—இன்னும்
கடினமா யிழுப்பதோடு வருத்தஞ்சொல்ல முடியா. (220)

சொல்லமுடி யாதவருத்தம் அதிகம்—ஹக்கின்
சூக்ஷமறியாப் பாவிகட் கதாபுவருத்த மிகுதி. (221)

அமலில்லாத பாவிகளைக் கொடுமை—வருத்தம்
அதாபுசெய்யு மிகுதியாக நரகமென்ற நெருப்பு. (222)

அரிகின்ற ஆயுதங்க ளதையும்—மெத்த
அதிர்ச்சியாகத் தளைந்துகட்டும் பாரமான கொடிய. (223)

சங்கிலிகள் ஆயுதங்க ளதையும்—கொடிய
சட்டமாகக் காய்ச்சப்படும் மூவாயிர வருஷம். (224)

மூவாயிரம் வருஷம்எரிக்கப் பட்டு—கொடிய
மூர்க்கமாக நெருப்புப்பறக்க ஆயுதங்கள் காய்ச்சி. (225)

காய்ச்சியதோர் கருவிகளைக் கொண்டு—கொடிய
காபிரை மிகுதமான வருத்தஞ்செய்யப் படுமே. (226)

இன்னுமந்த நரகில்ஒரு ஆறு—கொடிய
இடுக்கஞ்செய்யும் நெருப்பினால் தண்ணீரது வோடும். (227)

பாவிகட்குத் தாகம்அதிக மாகும்—அப்போ
பாதகர்க்குக் கடுஞ்சூடான தண்ணீர்புகட்டப் படுமே. (228)

ஆற்றுத்தண்ணீர் புகட்டப்படுமே நன்றாய்—கொடிய
அதினுடைய தண்ணீர்தானும் பாரமான நெருப்பு. (229)

அந்தத்தண்ணீர் துன்யாவினின் மலையில்—கொஞ்சம்
அணுப்போலே விழுந்தாலும் பாகுபாகா யுருகும். (230)

பாகாக வுருகிடுமே மலைகள்—கொடிய
பாரமான நெருப்புத்தண்ணீர் பட்டவுட னேதான். (231)

அத்தண்ணீரைத் தாகம்பொறுக் காமல்— பாவி
அந்நேரமே முடுகுவார்கள் அருந்துதற்குத் தோஷி. (௨௩௨)

முகத்தினருகே கொண்டுபோகும் போது—கொடிய
முகங்கள்வெந்து விழுந்திடுமே துண்டுதுண்டாய்த் தானே. (283)

அந்தத்தண்ணீர் குடித்தாக்கால் உள்ளே—குடல்கள்
அப்போதே வெந்துதுண்டு துண்டாய்வெளி யாகும். (234)

வெளியாகும் பின்துவாரத் தாலே—கொடிய
வேதனைகள் பாவிகட்கு சொல்லமுடி யாது. (235)

அவர்களுக்குத் தீன்பதார்த்தங் கிடையா—கொடிய
அநியாயப் பாவிகட்குப் பசித்தாக மதிகம். (236)

பசியாறச் செய்யும்வஸ்து இல்லை—கொடிய
பாவிகட்கு தாகமது நீங்கவு மாட்டாது. (237)

அவர்களுகு ஓர்வகைத்தீ னுண்டும்—அதை
அறியவேதான் விபரமாகச் சொல்வேன்மாந்தர் கேளும். (238)

அவர்களுக்கு லரீஉயென்னுந் தீன்கள்—அது
அசுசியான முள்ளில்நின்றும் உண்டானதோர் வஸ்து. (239)

அதுமெத்தக் கசப்புஅதிக மாகும்—அதை
அருந்தாது மிருகங்கூட அப்பேர்பட்ட கசப்பு. (240)

அந்தகசப்பு எப்பேர்பட்ட தானால்—அது
ஆலத்துள்ள கசப்புக்கெல்லாம் அதிகமான கசப்பு. (241)

பாவிகட்கு நரகமதிற் கொடுக்கும்—கொடிய
பாரமான கசப்புஇது அறிந்திடுவா யப்பா. (242)

அப்பேர்பட்ட கசப்பான வஸ்தை—கொடிய
அநியாயப் பாவிகட்கு கொடுக்கப்படுமே நரகில், (243)

அந்தக்கசப்பைத் தின்னமாட்டே னென்று—மெத்த
அழுகுவார்கள் நரகவாதி யலறியலறித் தானே. (244)

அலறியழுதுக் கதறிமெத்தப் பாவி—மிகவும்
அதிகச்சத்தம் போடுவார்கள் நரகவாதி கொடியோர். (245)

லரீஉயென்ற முள்ளுதொண்டைக் குழியில்—குத்தி
நன்றாகச் சிக்கிமெத்த அழுகுவார்கள் தீயோர். (246)

இன்னுமந்த கசப்புத்தொண்டைக் குழியில்—சிக்கி
ரைந்துமேதான் கதறுவார்கள் கசப்புஞ்சொல்ல முடியா. (247)

அப்போது ஹக்கனுடை [illegible]க—மெத்த
அணியணியாய் வந்துஅவர்கள் பேரிலடர்ந் தமா. (248)



அடர்ந்தேறிப் பாவிகளை நரகில்—மெத்த
அநியாய மாகவுமே யழல்நரகில் தள்வார். (249)

அச்சமயம் அழுதழுது பாவி—மெத்த
அலறிவருத்தப் படுவார்கள் அறிவில்லாத தோசி. (250)

துனியாவில் பொன்னும்பொருளை நம்பி—நாம்
சுகமாக இருந்ததினால் இக்கெதியு மாச்சு. (251)

துனியாவில் ஹக்கென்பதை மறந்து—வீணாய்
தூஷணித்துத் தவம்செய்வோரைத் துஷ்டத்தனம் செய்தோம்.252

பெரியோர்களென்றுஅறிந் திருந்தும்—கொடிய
பேச்சுகளைப் பேசினதால் இக்கெதிநா மானோம். (253)

கொடியதான பாவமெல்லாஞ் செய்தோம்—ஹக்கின்
குதறத்தைநாம் மறந்ததினால் இக்கெதிதா னாச்சு. (254)

காசாசை சரீரமூர்க்கத் தாலே—ஹக்கின்
காரணத்தை மறந்ததினால் இக்கெதிதா னாச்சு. (255)

மக்கள்பெண்டு வீடுகளை நம்பி—ஹக்கின்
மகிழ்ச்சியதை யறியாததா லிவ்விதிதா னாச்சு. (256)

ஆடுமாடு மாடகூடம் பெரிதாய்—எண்ணி
அவனிதனி லிருந்ததினால் இவ்விதிதா னாச்சு. (257)

பெருமைபேசி யுலகமதில் திரிந்து—அறிவு
பேரின்ப மானவரைத் தூஷணித்தி தாச்சு. (258)

சரீரபெருமை பேசிக்கொலை செய்தோம்—நபி
சட்டமதை யறியாமல் இக்கெதிதா னாச்சு. (259)

புகாராக்க ளானமிஸ்கீனை—நாம்
பூதலத்தில் தூஷணித்தோம் இக்கெதிதா னாச்சு. (260)

ஆபரணம் ஆடைகளை யணிந்து—பெருமை
அடித்ததினால் நமக்கிந்த கொடுமைமிக வாச்சு. (261)

ஹக்கான றஹ்மானைப் பயந்து—நல்ல
காரணமாய் வணங்காமல் இக்கெதிதா னாச்சு. (262)

ஹக்கவனை வணங்காமல் மறந்து—கொடிய
கர்மங்களைச் செய்ததினா லிவ்விதிதா னாச்சு. (263)

ஹக்கான பாதையறிவ தற்கு—மேன்மை
காமில்ஷெய்கைத் தேடாமல் இவ்விதிதா னச்சு. (264)

முச்சுடரின் வணக்கமறி யாமல்—நாம்
மூடராகி யிருந்தோமிவ் வேதைநமக் காச்சு. (265)

என்றுமேதான் அச்சமயம் பாவி—மெத்த
ஏங்கியேதா னழுதிடுவார் நீதியில்லாத் தோசி. (266)

அச்சமயம் அழுததனால் என்ன—கொஞ்சம்
அணுவேனும் புண்ணியந்தான் கொடுக்காதே யப்பா. (267)

எப்படித்தான் அழுதிட்டாலும் ஹக்கு—அணுவும்
இறையவனும் இரக்கப்படுவ தில்லையப்பா வுரைத்தேன். (268)

இப்படியே யிறையவன்க லாமில்—றஹ்மான்
இறக்கியதால் அறிந்துநன்றாய்த் தெளிவாகச் சொன்னேன். (269)

இன்னும் நடக்கும்நரகிற் கொடுமை—நன்றாய்
எடுத்துரைப்பேன் மாந்தர்களே காதுதாழ்த்திக் கேளும். (270)

கடினமான நரகத்திற்குக் கொடிய—மூக்குக்
கயிறெழுபதி னாயிரமும் மாட்டியேயி ருக்கும். (271)

ஒவ்வோர்கயி றனைதையும் மலக்கு—நல்ல
ஒன்றுபோலே யெழுபதினா யிரம்பேர்கள் கையில். (272)

போட்டுஇழுப் பார்களேதான் மலக்கு—ஹக்கை
புகழாத நரகவாதி களுக்குமெத்த வருத்தம். (273)

அறிவில்லாத நரகவாதி களுக்கு—வருத்தம்
அதிகமாகிச் சத்தமது உண்டாகும்அப் போது. (274)

அந்தநரக மானதையச் சமயம்—ஹக்கு
அர்ஷதற்கு இடதுபாகம் நிறுத்திவைக்கப் படுமே. (275)

அச்சமயம் அமளியதின் அதிர்ச்சை—மெத்த
அழுகுநபிமா ரொலிமார்களும் முட்டுக்காலில் நின்று. (276)

யாநபுஸி யென்றுசொல்லு வார்கள்—நம்
யாறஸூல்மு ஹம்மதுவும் உரைப்பார்க ளப்போ. (277)

உம்மத்திஎன் உம்மத்தியே யென்றும்—நல்ல
உண்மையாகச் சொல்லுவார்கள் நாயகமச் சமயம். (278)



அப்பாலின்னும் நரகமதில் நடக்கும்—கொடுமை
அநேகஞ்சொல்ல முடியாது எழுதமுடி யாது. (279)

அப்போது நரகவாதி களுமே—நன்றாய்
அழகுடனே வலதுபக்கம் நிற்குமொலியைப் பார்த்து. (280)

ஒலிமார்கள் நபிமாரைப் பார்த்து—பாவி
ஓசையுடன் அழுகுவார்கள நரகவாதி களுமே. (281)

மணமான ஆகிறத்தின் வரிசை—நல்ல
மதிப்பிலடங் காதவொளி பிரகாச மாச்சே. (282)

துன்யாவில் ஹக்கைமறந் ததனால்—இந்த
துயரமான நரகமதிற் சேரவிதி யாச்சே. (283)

ஈமானை நிலைப்படுத்தி ஹக்கை—நாம்
இன்பமாக வணங்காமல் வீண்காலம் போக்கி. (284)

வீண்காலம் போக்கினோமே யென்று—மெத்த
விசனமாகப் புலம்புவார்கள் விம்மிவிம்மி யழுது. (285)

அப்போது நரகவாதி களையும்—கொடிய
அரவமதும் தேட்களுமே யதட்டியேதான் கடிக்கும். (286)

அக்கினிசு வாலையாயி ருக்கும்—கொடிய
அரவமதும் தேளதுவும் நெருப்பான நரகில். (287)

இப்படியே கொடியதுன்பஞ் செய்யும்—நன்றாய்
இறையோனை வணங்காத இடும்பர்களை யெல்லாம். (288)

கொடியவிஷம் பாவிகளின் பேரில்—மெத்த
கொடியதாக ஏறுமப்பா நஞ்சதுவும் நன்றாய். (289)

அப்படியே மெத்தமெத்தத் துன்பம்—கொடுமை
அநியாய மாகவுந்தான் நரகமதில் நடக்கும். (290)

அச்சமயம் நரகவாதி களுமே—எங்கள்
ஆண்டவனே யெங்கள்பிழையைப் பொறுத்தருளு வாயே. (291)

எங்களுடை கஷ்டங்களை நீக்கி—றஹ்மான்
எங்களைநீ நல்விதமா யாக்கிவைப்பா யென்பார். (292)

அப்போது ஆதியவன் மொழிவான்—நல்ல
அநியாயப் பாவிகளே பிழைப்பொறுப்ப ததுவும். (293)

தௌபாவைக் கபூல்செய்வ ததுவும்—நல்ல
தாரணியில் மௌத்துடைய தவணையோடே முடிவு. (294)

மௌத்துவரைத் தவணைசரி யாச்சு—இப்போ
மூடரேயென் சொல்லதுவும் உனக்குவிதி யாச்சு. (295)

என்னுடைய சொல்லும்பிர ளாது—இப்போ
என்னுடைய சொல்லின்று விதியாச்சு உனக்கு. (296)

அமலையழ காக்கினோர்க்கு சொர்க்கம்—நன்மை
அதிகமாக எழுதப்பட்டு பிறுதௌசிற் சேர்ந்தார். (297)

தின்மைசெய்த பாவிகட்கு நரகம்—கெடுதி
தீங்காகத் தெரியுதிப்போ என்சொல்பொய்யா காது. (298)

நீயறிவாய் இப்போது தெளிவாய்—நன்றாய்
நீதமாக அறிந்திடுங்க ளென்று ஆதி யுரைத்தான். (299)

ஹக்கான ஆதியுந்த னருளால்—சிறியோன்
காரணமாய் மஹ்ஷர்ஒளி மாலையதை மொழிந்தேன். (300)

இவ்வருத்தம் சகலமும் அணுகாமல்—றப்பே
இறையவனே யெனைக்காப்பாய் ஏகபெரி யோனே. (301)

இவ்வுலகில் துன்பவினை நீக்கி—எனக்கு
இறையவனே துயரமெல்லா மகற்றிவைப்பாய் ஜோதி. (302)

அறிவினைநல் வணக்கமதைத் தெளிவாய்—யானும்
அறிந்துதெளி வாகிடவே அறிவுதரு வாயே. (303)

ஒலிமார்கள் கூட்டமதிற் சேர்த்து—என்னை
உகப்பாக வைத்திடுவாய் றஹ்மானே நீதி. (304)

நோய்துன்பம் அசதிமறதி தூக்கம்—நீக்கு
நொடிப்பொழுதில் நன்மையாக்கு ஆதியருள் தீனே. (305)

எந்தனுக்கு முதிர்ந்தவயதைத் தருவாய்—றப்பே
இறையோனே தவப்பதியிற் சேர்த்திடுவாய் நிதமும். (306)

எந்தனக்கும் எந்தனுடை பீர்கள்—நல்ல
இனிமையுள்ள சீஷர்கட்கும் பதவிமுத்தி கொடுப்பாய். (307)

தாய்தந்தை பிறவிசெய்க ளனைத்தும்—றஹ்மான்
தப்பில்லாமல் நல்வழியி லாக்கிவைப்பாய் நீதி. (308)



கவியிற்சொற் பிழைகளிருந் தாலும்—றஹ்மான்
காரணனே யப்பிழையைப் பொறுத்தருள்வா யாதி. (309)

கலீபத்து ஷெய்குஷாஹுல் ஹமீது—அப்பா
காரணமாய் மஹ்ஷர்ஒளி மாலையதை மொழிந்தேன். (310)

இவ்வுலகில் நூலதனைப் படிக்கும்—பெரியோர்
இன்பமாகத் தயவுசெய்து பிழைதிருத்திப் படிப்பீர். (311)

படித்துஆதி அறிவன்தனை வணங்கி—நன்றாய்
பட்சமுடன் தெளிவாகப் பாரிலேதான் வாழ்வீர். (312)

ஆலமதில் அவனைவணங்கி னோரை—ஆதி
அன்புடனே சகலரையும் பிறுதௌசிற் சேர்ப்பான். (313)

பாவிகளே ஹக்கைமற காதீர்—நீங்கள்
பயந்துஅஞ்சி வணங்கிடுவீர் பரனையனு தினமும். (314)

சரிகையதும் கிரிகைநல்ல யோகம்—ஞானம்
தவறாம லறிந்திடுவீர் சம்பூர்ணந் தருவான். (315)

சம்பூர்ண வாழ்வதனைத் தந்து—நம்மை
சரியாகத் தவப்பதியிற் சேர்த்திடுவான் றஹ்மான். (316)

மஹ்ஷர்ஒளிமாலை முற்றிற்று.

## முஹ்யித்தீன் ஆண்டவர்கள் முனாஜாத்து.

### கோச்சகப்பா இன்னிசை.

அஹதாயிலங்கிவரும் அழகானமுத்தொளியில்
உஹதாயிலங்கிவரும் உட்பொருளினுள்ளிருந்து
வாஹிதாய்வந்ததிரு வடிவுசுடர்மூன்றுமொன்றாய்
பகுமாயறியவருள் பாக்யமுஹிய்யித்தீனே. (1)

பதியானமேலொளியின் பண்பானகாரணத்தை
மதியமுதமானதிரு மஹ்மூதிற்றெளிந்திடவும்
கதியானநல்வழியைக் காட்டிவைப்பீரெந்தனக்கு
அதிபதியாய்வந்தகௌதுல் அஃலம்முஹிய்யித்தீனே. (2)

தச்சில்லாமாளிகையில் சாத்தோடொளிவுதன்னை
இச்சையுடன் ஆராய்ந்து இரவிற்றெளிவதற்கு
முச்சுடராய்வந்ததிரு முத்தேசிகாமணியே
நிச்சயமாய்நித்திரையை நீக்குமுஹிய்யித்தீனே. (3)

தொண்ணூற்றிரண்டான சுருமாவடிவதனுள்
முன்னூறாய்வந்ததிரு முதலோன்ஒளிவாகும்
எண்ணிலடங்காதநல்ல இவ்வொளிவில்பொங்குமலர்
நன்னிலையுபதேசம் நாட்டும்முஹிய்யித்தீனே. (4)

ஜெயமானநல்லருளைத் தெளிவாயறிவதற்கு
நயமானநற்கலிமா நாடித்துதித்திடவே
தயவுசெய்யுங்கண்ணே தாஹாநபிபேரரே
ஜெயமருள்என்சகறாத்தில் செல்வமுஹிய்யித்தீனே. (5)

கருவறிந்துகல்பிற் கலிமாநிலையறிய
குருவினுடைஉபதேசம் குறிப்பாயருள்பெறவும்
திருவருளால்வந்தஎங்கள் செல்வமேயெந்தனக்கு
தருவாயருளைநிதம் தர்வேஷ்முஹிய்யித்தீனே. (6)

காடுசெடிகளான கானகத்தினூடெழுந்து
கூடும்அருளறிந்த குருவேயென்மாங்கனியே



தேடும்பொருளதான திவ்யமணிவிளக்கை
வாடாமல்பார்க்கவருள் வள்ளல்முஹிய்யித்தீனே. (7)

தத்துவங்களையடக்கித் தன்மையுள்ளநேர்வழியில்
பத்தியாயிருந்துதவம் பண்புடனேசெய்வதற்கு
எத்திசையும்புகழும் இன்பமுள்ளகாதிருவே
நித்தியம்கிருபைசெய்வீர் தீர்முஹிய்யித்தீனே. (8)

நாத்தும்ஸிபத்ததுவும் சரியாயிலங்கிவரும்
நேத்திரத்தினூடுவதை நேரேநிதமறிந்து
பார்த்துமனமகிழப் பரம்பொருளேயெந்தனக்கு
ஏற்றமுள்ளகலிமாவருள் இன்பமுஹிய்யித்தீனே. (9)

றஹுமானியிற்சேர்ந்த நல்லொளிவேநாயகமே
தகுதிபெறும்வலிமார்க்குத் தன்மையுள்ள அக்தாபே
மகிதலத்திலமளிகளை மாற்றிவைத்துஎந்தனக்கு
தகுமானநல்வழியைத் தாரும்முஹிய்யித்தீனே. (10)

சித்தாகவந்துதித்த செல்வமுள்ளகண்மணியே
முத்தாயிலங்கிவரும் முதல்வன்ஒலியுல்லாவே
தித்திக்குந்தேன்கனியைத் தெளிவாகயானறிய
நித்தியம்அருள்தருவீர் நீதர்முஹிய்யித்தீனே. (11)

சுழிமுனைதனில்நின்று சூக்ஷமதைத்தானறிய
வழியானகருவெழுத்தை வகையாய்மிகவறிந்து
தெளிவானசாமதனில் திறமாகத்தானேற்றி
ஒளிவுதனைக்காணவருள் உண்மைமுஹிய்யித்தீனே. (12)

சூட்சமதையிறுக்கச் சுடராகநின்றிலங்கும்
காட்சியையான்கண்டுநிதம் கதிபெறவேயெந்தனக்கு
மாட்சிமையாய்வந்ததிரு வள்ளல்அப்துல்காதிருவே
ஆட்சியுள்ளநல்வழியில் ஆக்கும்முஹிய்யித்தீனே. (13)

ஆறுதாரங்கடந்து அரூபவொளிவானதொரு
நூராகுஞ்சோதிதனை நுட்பமாயானறிய
பேரழகாய்ஜெயிலானி பிறந்தநவரத்தினமே
ஞானநல்வழிசேர் ஷெய்குமுஹிய்யித்தீனே. (14)

நேருள்ளநல்வழியில் நீதமாய்வந்துதித்த
கூருள்ளமுத்தே குணமான பூமலரே
பாரானவெளிதனிலே பரமானவோரெழுத்தை
தீரமுடன்காணவருள் ஷெய்குமுஹியித்தீனே. (15)

ஸாலிஹீன்கூட்டமதிற் சங்கையுள்ளநன்மைபெற
நூலதனைத்தெளிந்த நுட்பமுள்ளகுருவதனை
ஆலமதிற்கண்டுயான் அருளானவுபதேசம்
சீலமுடன்பெற்றேன்அருள் செய்யும்முஹியித்தீனே. (16)

முத்துமணிவிளக்கே மோனமுள்ளமெய்ச்சுடரே
சித்தெழுத்தினுட்பொருளே தெளிவானமரகதமே
கத்தியதிராமல்யானும் கருவானவோரெழுத்தை
சித்தியாயறியவருள் ஷெய்குமுஹியித்தீனே. (17)

ஆறுபத்துஆறு- அந்தரத்தில்நின்றிலங்கும்
[illegible]கும்நற்சுடரை நுட்பமாய்க்கண்டுதொழ
மாறுவில்லாஆயிரத்தெண் மலராகவந்தோரே
சீரானநன்மையருள் ஷெய்குமுஹியித்தீனே. (18)

ஐனுவடிவதுதான் அலிபுலாமீமாகும்
ஐனுவடிவதனுள் அடங்கிநிற்குஞ்சூக்ஷமது
ஐனுவடிவதனை யறிந்துதெளிவாக
ஐனில்திரைநீக்குமெங்கள் ஆரிபுமுஹியித்தீனே. (19)

எல்லாவொலிகளுக்கும் ஏற்றமுள்ளமேலொலியே
நல்லார்களெல்லார்க்கும் நலமானதங்கள்பதம்
செல்லமுடனேயழகாய் சீராகத்தான்தரித்தால்
வல்லவொலியாவார்கள் வள்ளல்முஹியித்தீனே. (20)

பார்த்திடுமேயென்னைப் பரமகுருகண்மணியே
சேர்த்திடுமேநித்தமெனை திருவொளிவைக்காணுதற்கு
காத்திடுமேமுத்தேதிரு கனகபதிவான்பொருளே
தீர்த்திடுமேபாவமெல்லாம் ஷெய்குமுஹியித்தீனே. (21)

கோனருளில்வந்த குதுபேமணியழகே
வான்புவியும்புகழும் மௌனத்தின்பாக்கியமே



நான்பாவிநேர்பெறவே நற்பாதம்தன்னைஎன்னில்
தீனேதரிபடுத்தும் செல்வமுஹியித்தீனே. (22)

மீமானபேரின்ப மேடைதனில்நின்றாடும்
பூமானைக்கண்டுநிதம் புகழ்ந்துஅடிபணிய
ஈமானைநிலையாக்கி யிருளின் திரையறுப்பீர்
சீமானாய்வந்தஎங்கள் செல்வமுஹியித்தீனே. (23)

நூனின்நடுவதனில் நுக்துஉதித்தெழுந்த
வானொளிவையறிந்த வரிசையுள்ளரத்தினமே
மானாகநின்றுலவும் மாக்கலிமாவானதுவை
தேனென்றருந்தவருள் ஷெய்குமுஹியித்தீனே. (24)

வித்திலுதித்ததிரு வேதமணிநற்சுடரே
பத்தியொளிரத்தினமே பாலகரேகண்மணியே
சித்தமிரங்கிநிதம் சிறியோன்முகம்பார்த்து
முத்தியருளுமெங்கள் முத்துமுஹியித்தீனே. (25)

கருவானசூக்ஷமதிற் கனமாகவூன்றிநன்மை
திருவொளிவைக்கண்டறிந்த திறமானரத்தினமே
குருவாகஎவ்வுயிர்க்கும் குதுபாகவந்தவரே
கருவானநற்கலிமா காட்டுமுஹியித்தீனே. (26)

அஞ்சாகவந்துதித்த அற்புதக்காக்ஷியதை
கொஞ்சிவிளையாடி குறிப்பாகயான்பார்க்க
வஞ்சகம்வினையறுக்கும் வடிவானபேரொளியே
நெஞ்சகத்திற்சஞ்சலத்தை நீக்குமுஹியித்தீனே. (27)

எந்தன்மேலிரக்கம்வைப்பீர் இருலோகவாழ்வுபெற
தந்தருளுமெய்ஞ்ஞானம் சரமானவாசிதன்னை
சிந்தையதனாலேற்றித் தெளிவாயறிந்திடவும்
வந்துதவிசெய்யுமெங்கள் வள்ளல்முஹியித்தீனே. (28)

பகுதாதில்அரசானும் பாக்கியஅப்துல்காதிருவே
தகுதிஅபுஸாலிஹுவின் சங்கைசுதனார்கௌதே
மிகுதியாய்மேன்மைதங்கும் வெற்றிபாத்திமாசெல்வரே
பகுதியுள்ளமுத்தியருள் பாக்கியமுஹியித்தீனே. (29)

பூமியிலுள்ளபலாய்ப் பொல்லாங்குதீவினைகள்
தாமதங்களில்லாமல் தங்கமேநீக்கிவைப்பீர்
காமியத்தைநீக்கியெந்தன் கல்பிற்கசடறுத்து
மூமீன்கள் கூட்டமதில் முன்னைக்குமுஹிய்யித்தீனே. (30)

செம்பொற்கமலமதில் தெளிவானநற்சுடரே
நம்பினேன்பொற்பாதம் நாயகமேகிருபையருள்
வம்புள்ளவஞ்சனைகள் வாராமற்காத்துநித்தம்
சம்பூர்ணநற்பதவி தாரும்முஹிய்யித்தீனே. (31)

எந்தனக்கும்பிருக்கட்கும் எந்தன்தாய்தந்தையர்க்கும்
சொந்தமுள்ளபிள்ளையைப்போல் சுகமாய்வளர்த்தவர்க்கும்
கந்தமுள்ளமுரீதவர்க்கும் கலிமாவைநிலைப்படுத்தி
நிந்தனைகள்நீக்கிடுவீர் நேர்மைமுஹிய்யித்தீனே. (32)

ஓதியமுனாஜாத்தை யுகப்பாய்உரைத்துவிட்டேன்
நீதுதீர்த்துகலீபத்து ஷெய்குஷாஹுல்ஹமீதை
நீதியுள்ளநல்லநளில் நிச்சயமாய் சேர்த்து நித்தம்
ஆதிஅப்துல்காதிரேநல் லருள்செய்முஹிய்யித்தீனே (33)

முஹியித்தீன் ஆண்டவர்கள் முனாஜாத்து முற்றிற்று.

## அபுல்ஹஸன் ஷாதிலி றஹிமஹுல்லா முனாஜாத்து.

நீதியே யுலகமெல்லாம் நிரப்பமா யமைத்துவைத்த
ஜோதியே உயிர்கள்யாவும் சுத்தனென் றுனைவணங்கும்
ஷாதிலீ ஒலியுல்லாமேல் சங்கையாய் முனாஜாத்தோத
ஆதியே யெந்தன்னாவில் அருளதை துதிக்கச்செய்வாய். (1)

தனியனி னருளைப்பெற்ற தங்கமே செல்வமுத்தே
பனியது கதிர்கண்டாப்போல் பாவமும் நீக்கிவைக்க
கனியவ னிடந்துஆவைக் கனமுடன் கேளும்நன்றாய்
தனியனி னருளைக்காட்டும் ஷாதிலி ஒலியுல்லாவே. (2)

திக்றுடன் வணக்கமெல்லாம் தெளிந்தவன் ஷெய்கேயின்பு
பிக்றுடன் இருந்துஹக்கைப் பிரியமா யறிந்தமுத்தே



ஹக்கையா னறிவதற்குக் கலியுடன் மாவுமான
தக்கதோர் பொருளைக்காட்டும் ஷாதிலி ஒலியுல்லாவே. (3)

குமைதரு நகரிலான குணமுள்ள மணியேயெந்தன்
இமையதால் தங்கள்பாதம் இயல்புடன் முத்தினேனே
அமைதியாய்த் தனியன்தன்னை அவனியில் வணங்கவேளச்
சமையமும் கிருபைசெய்வீர் ஷாதிலி ஒலியுல்லாவே. (4)

பார்த்திடும் முகத்தைநித்தம் பாவங்க ளகற்றிவைக்கச்
சார்திரு பொருளையீந்து ஜன்னத்தி லாகச்செய்வீர்
பூர்த்தியாய்க் கலிமாதன்னைப் புகழுடன் வாசியோடே
சாற்றியே யருளைக்கண்ட ஷாதிலி ஒலியுல்லாவே. (5)

சிறுவன்யான் செய்ததோசம் ஜெகத்தினி லனைத்தும்போக்க
குருவரு ளதனைக்காட்டும் குணமுள்ள அறிவேஷெய்கே
மறுவில்லாக் கலிமாதன்னை மகிமையாய்த் தெளிந்தெப்போதும்
சரியாக அறியுமெங்கள் ஷாதிலி ஒலியுல்லாவே. (6)

மாங்கமழ் குமைதருவில் வாழும்நன் மணியேஷெய்கே
பூங்கமழ் வாசமான புண்ணிய வரிசையோரே
தீங்குக ளகற்றிவைக்கத் தெளிவருள் தன்னைக்காட்டி
தாங்கியே ரக்ஷிப்பீரே ஷாதிலி ஒலியுய்லாவே. (7)

நிதநிதம் மஃறிபாவின் நேர்வழி யறிந்தகண்ணே
மதபேத கங்களெல்லாம் மாற்றியே யிருந்தமுத்தே
துதிசெய்ய எந்தனுக்கு தூக்கமோ டசதிநீக்கி
சதமுள்ள அருளைக்காட்டும் ஷாதிலி ஒலியுல்லாவே. (8)

கண்மணிக் குருவேயுங்கள் கதமதிற் சிரசைவைத்தேன்
பொன்மணி யருளைக்காட்டி பொற்பதி சேரச்செய்வீர்
முன்மணி யருளைக்கண்ட மோனமே யெந்தன்ஷெய்கே
சன்மணி அபுல்ஹஸனுஷ் ஷாதிலி ஒலியுல்லாவே. (9)

பாலத்தைக் கடந்துபோகப் பரம்பொருள் காட்டும்ஷெய்கே
தூலத்துள் அருளைக்காணத் துய்யவ னிடந்துஆவை
சீலமாய்க் கேட்டுநன்றாய்த் தெளிவதா யாக்கிவைப்பீர்
தாலமீ தருளாய்வந்த ஷாதிலி ஒலியுல்லாவே. (10)

நாயக மானஎந்தன் நன்மணிக் கொழுந்தேமுத்தே
தாயம்நற் பொருளையீந்து தவஞ்செய்ய அருளைக்காட்டி
சேயாக கலீபத்து ஷெய்குஷாஹுல்ஹமீதை
தாயாக வந்துகாட்பீர் ஷாதிலி ஒலியுல்லாவே. (11)

அபுல்ஹஸன் ஷாதிலி றஹிமஹுல்லா முனாஜாத்து முற்றிற்று.

## ஞானசூஸ்த்ரம்

—✿—

### விருத்தம் ஆசிரியம்.

ஆதியே அருமையான அற்புதத் தீபகோனே
நீதியே சுடர்மெய்யான நித்தனே யருளைத்தந்து
ஜோதியே நாவில்நன்றாய்த் துதிக்கவே ஞானசூஸ்த்ரம்
தீதிலா துரைக்கஎந்தன் தேசிகா துணைச் செய்வாயே. (1)

தேசிக னிடத்திற்சென்று தெளிவுள்ள பொருளைக்கேட்டு
வாசியில் கலிமாத்தன்னை வகையுடன் எற்றியூன்றி
நாசிக்குமேலேரண்டு நயனத்தின் மத்திதன்னிற்
பூசிலன் ஒளிவைக்கண்டு போற்றிடார் பொய்யராமே. (2)

பொய்கொலை களவுகாமம் பொருளும்முச் சுடர்காண்பித்த
மெய்க்குரு தோசம்ஒன்று மேன்மைகொண் டைந்தும்நீக்கி
வையகந் தனிலேநன்றாய் வளமுள்ள தவத்தைச்செய்வாய்
செய்பவன் சொற்கந்தன்னிற் சேருவ துண்மைதானே. (3)

உண்மையாய் நன்றாயூன்றி யுருக்கமாய்த் தெரிசித்தோர்கள்
இண்மையாய்ச் சொற்கஞ்சேர்வார் தேகமு மழிந்திடாது
மண்ணினி லடக்கினாலும் மன்னனை யறிந்தபேர்க்கு
கன்மங்கள் தொலைந்துநன்றாய்க் காக்ஷிகள் தோற்றுந்தானே. (4)

தானவ னருளைநன்றாய்ச் சங்கையா யறிவாயப்பா
கோனவன் ஸிபத்தின்பாதம் கூர்மையாய் வீழ்ந்துபின்னும்
தீனுள்ள காதிரான சீராயிரத் தெண்மலரும்
ஈனத்தை விட்டுநீங்கி யின்பமாய்க் காணுவாயே. (5)



### வெண்பா.

கல்லழகு பொருந்தியநற் கல்விடை மாநகரம்
செல்வசெய்யி தஹ்மதவர் சேயெனவே—சொல்லும்
ஷெய்குஷா ஹுல்ஹமீது சிறப்புடனே எந்தனையும்
கையணைத்துக் காவலனே கார். (6)

### விருத்தம் ஆசிரியம்.

பூரண அருளைத்தேடிப் பூதலத் தலையுங்காலம்
காரணக் குருநற்ஷெய்கு கைப்பிடித் துபதேசித்து
வாரண மதிலேயென்னை வளமுதா யிருத்தியபின்
தாரணி மறைந்துவண்ணத் தன்னொளி யறிந்தேன்கண்ணே. (7)

தன்னொளி கண்டபேர்கள் தரணியிற் பெரியோராகும்
முன்னவன் சொற்கந்தன்னில் முறையுடன் வாழ்வாரப்பா
சின்னமே படுவார்மெத்த செல்வனை யறியாமூடர்
துன்பமும் வினையும்நீக்குத் துய்யனை யருளுள்ளோர்க்கே. (8)

அருள்தரும் அறிவனைநல் லன்புள்ள வல்லகோனை
சிறுமைகள் தூஷணிப்பும் ஜெகமதி லெனக்குநீக்கி
திருவொளி சுடர்மூன்றுந்தான் தெளிவுடன் தினமுங்காண
அருகனை கிருபைசெய்வாய் அற்புத மருள்தாறப்பே. (9)

அற்புதம் அறுஷின்மேலே யமைத்ததன் னொளிவைக்கண்டு
பொற்பதம் சேர்வார்மேலோர் புகழுடன் தெளிவதாக
நற்பத மறியாப்பாவி நானிலந்தனிலே கேடாய்
பற்பல நோயில்மூழ்கிப் பாழ்நரகேகுவாரே. (10)

பாழ்நர கேகுவார்கள் பலனில்லாத் தோசியெல்லாம்
தாழ்குல மிவர்களாகும் தரணியில் தெரியச்சொன்னேன்
காழென வொளியின்வட்டம் கண்டறிந் தவரேயோகப்
பேழ்குல மாகுங்கண்ணே பிரியமா யருளைப்பாரே. (11)

### வெண்பா.

ஸ்ரீராறை யறியாத இடும்பர்களுக் கென்னபலன்
தேறார்கள் ஒருபோதும் தெளியார்கள்—தாரையருள்
நன்மையாய்க் கண்டு நலமுடனே தான்தொழுதால்
இன்மையெல்லாந் தான்விலகும் நிறம். (12)

### விருத்தம் ஆசிரியம்.

குணமதைத் தெளிந்தபேர்கள் குறைவிலாச் செல்வராகும்
மணமதிற் குடிதான்கொண்டு மாளுவார் மாளாமல்தான்
இணங்குவோர் மேலோராகும் இறையவன் சுவனந்தன்னிற்
கனமுடன் வாழ்வார்ஹக்கன் காக்ஷிக்கண் டோர்நல்லோரே. (13)

### வெண்பா.

கானலை நீரென்று கருதுகின்ற மான்போலே
வீணாக அலையாதீர் வீணர்களே—தேனருளை
கண்டு தொழுது காக்ஷிகளைத் தானறிந்த
தொண்டர்களைப் பிடி துணை. (14)

### விருத்தம் ஆசிரியம்.

அறிவான பூரணத்தை யறிந்தவர் மேலோராகும்
சரியிணை யற்றஜோதி தன்னொளி வதனைக்கண்டு
நெறியுடன் தெரிசித்தாக்கால் நித்தனுங்கிருபை செய்வான்
பரிவுள்ள வரிசையுண்டும் பஞ்சமு மவர்க்கேஇல்லை. (15)

இல்லைநல்ல வர்க்குக்கஷ்டம் எமனுடை வாதைபோகும்
மல்லிகை முல்லைவாசம் மானிலந் தனிலேமெத்த
சொல்லொணாப் பொருளைக்கண்ட சுயமுள்ள அறிவுள்ளோர்க்கு
நல்லொளி சொற்கம்உண்மை நாயனுங் கொடுப்பான்தானே. (16)

உண்மையா னவனையென்னை யுறுதிநல் வழியிலாக்கி
திண்மையாய் ஈமான்தன்னைத் திறமதா யாக்கிவைப்பாய்
தன்மையா யிருந்துயானும் தரமுடன் நித்தம்நித்தம்
வண்ணமாய் வணங்கவுந்தன் வல்லபந் தருவாய்றப்பே. (17)

வல்லபத் தீபந்தானும் வானிலே யிலங்கிநிற்கும்
நல்லவ ரறிவாரிந்த நலமுள்ள புதுமைதன்னை
தொல்லையை நீக்கிவைத்துச் சுயமுள்ள வணக்கஞ்செய்தால்
அல்லலும் விலகிப்போகும் அன்பனே பிறப்பேயில்லை. (18)

பிறப்புடன் இறப்புமில்லை பிரசங்கன் னபிபாதத்தில்
திறமதாய் வீழ்ந்தபேர்க்குச் செல்வமு மருளுண்டாகும்



சிறப்புள்ள அமிர்தந்தன்னைத் தெளிவுடன் தினமும்உண்பார்
நிரப்பமாய் நீதன்சொற்கம் நேருடன் சேர்ப்பான்தானே. (19)

சேர்ப்பது மவனேயன்றி ஜெகந்தனி லொருவருண்டோ
பார்ப்பது மவனேயன்றி பாரினி லொருவரில்லை
ஏற்பது மவனேவல்லன் இரணம்நல் வாழ்வுந்தந்து
கார்ப்பது மவனேமேன்மைக் காவல னிறையோன்கண்ணே. (20)

கண்ணொளி யுருகச்செய்து கனமுள்ள நடுவேநோக்க
விண்ணொளி ஜோதிநன்றாய் மேன்மையா யிலங்கிநிற்கும்
முன்னொளி யறிவதற்கு முறையுள்ள குருவைத்தேடி
நன்னிலை தீட்சைபெற்று நல்வனை யறிவாயப்பா. (21)

அறிவுள்ள அறிவன்தன்னை யன்புடன் தெரிசித்தேநல்
நெறியுடன் தொழுதுக்கொள்வாய் நித்தனைத் தினமும்நன்றாய்
சரியிணை யற்றவல்லன் சம்பூர்ண வாழ்வுந்தந்து
பரிவுள்ள சொற்கந்தன்னில் பாங்கதாய் வைப்பான்பாரே. (22)

பாருநீ சுடர்மூன்றுந்தான் பண்புட னுலாவிநிற்கும்
சாருநீ வடிவைக்கண்டு தன்மையாய்த் தவமேசெய்வாய்
கூறுநீ யவனைப்பார்த்துன் குறைகளை யனைத்துஞ்செப்ப
சீருடன் குறைகள்நீக்கிச் சிறப்பதில் யிறைவைப்பானே. (23)

ஆதியே தெளிவேயிந்த அவனியிற் பாவிகட்கும்
நீதவான் மூமீனோர்க்கும் நிரப்பமாய் றஹ்மத்தியும்
ஜோதியே யறிவில்லாத துச்சனை மேன்மையுள்ள
சாதியா னதிலேயாக்கிச் சமைத்தவா சொற்கஞ்சேர்ப்பாய். (24)

சமைத்தவ னீயேயெல்லாம் தவநபி யொளிவைக்கொண்டே
அமைத்தவன் உன்னையல்லால் அவனியி லொருவருண்டோ
எமைப்படைத் தவனேயெந்தன் இடர்வினை பிழையனைத்தும்
கமையுடை யோனேநீக்கி காட்சிகள் காணச்செய்வாய். (25)

காட்சிகள் தெளிவாய்க்காண ஹக்கனே கிருபைசெய்வாய்
மாட்சிமை யுடையநீதா வலியனே சுயமதான
சூட்சியப் பொருளைக்காட்டி சுத்தநல் வழியிலாக்கு
தாட்சிணை யுடையோனேயென் தனியனே சுவனஞ்சேர்ப்பாய். (26)

### வெண்பா.

சுவனமதை யெல்லோர்க்கும் சுத்தன் கொடுப்பானோ
தவமதனைச் செய்தோர்க்குத் தான்கொடுப்பான் — அவனிதனில்
அறிந்து தொழுது ஆசைதனை யற்றுநின்றால்
நெறியான இறைபொருத்தம் நேர். (27)

### விருத்தம் ஆசிரியம்.

பாவங்க ளணுகுமெத்தப் பலனுள்ள அருள்காணார்க்கு
தீவினை துன்பங்கேடு தெளிவில்லோர் தமக்குண்டாகும்
ஆவியோ டிணங்கிநின்ற அரும்பொரு ளறிந்தோர்க்கென்றும்
நோவினை வருத்தம்நீங்கி நூரொளி யருளிலாவார். (28)

அருளென்ற ஜோதிதன்னை யன்பனே தினமும்நீயும்
வரிசையாய்த் தொழுதுகொள்வாய் வண்ணமுள் ளொளிவதான
பொருளென்ற லிபத்தைநன்றாய்ப் புனிதமாய்த் தெளிந்துமேன்மை
திருப்பத மதிலேநாமம் திறமதாய்ச் செப்பிவீழ்வாய். (29)

வீழுவாய் நாமந்தன்னை விதமுடன் செப்பிவீழ்ந்து
வாழுவா யதிலேநன்றாய் வண்ணமாய்த் துஆவிரந்து
மாளுவாய் கண்ணேநீயு மலாயிரத் தெட்டைநன்றாய்த்
தாளாண்மை யாய்நீகண்டு தன்மையாய்த் தவஞ்செய்வாயே. (30)

மண்மகி பிருதிவியப்பு வரிசைநல் வாயுதேயு
வண்மையுளவா காயந்தான் வளமுட னைந்துங்கூடி
உண்மைநற் றவத்தைச்செய்ய வுகப்பாகக் கிருபைசெய்வாய்
நன்மையா னவனே நித்தம் நயமதாய் என்னைக்காப்பாய். (31)

### வெண்பாக்கள்.

உன்செயலா லொன்றுமில்லை யேகனே சகலமதும்
உன்செயலா லானதென் றுனைத்தொழுதேன் — றுன்செயலை
யெல்லா மகற்றி இறைவனே நல்லருளில்
வல்லோனே சேர்த்தருளு வாய். (32)

தன்பிரான் தானாக இலங்கிநின்ற நல்லொளிவாய்
தன்பிரான் தன்னொளியில் தான்பிரித்தான் — நன்புகழ்



வாசமு ஹம்மதிரு மலர்பாத மென்சிரசில்
பாசமுடன் வைத்தேன் பணிந்து. (33)

### விருத்தம் ஆசிரியம்.

பணிந்திறை பாதந்தன்னைப் பாங்குடன் தெரிசித்தேபின்
தணிந்துநற் குருவின்பாதம் தன்மையாய் வீழ்வாய்கண்ணே
இனிமையாய் நாலைக்கண்டுள் ளிலங்கியே நிறைந்துநின்ற
தனியனை யறிந்துநித்தம் தவஞ்செய்தோர் நல்லோர்தானே. (34)

நல்லவ ரறிஞராகும் நாயனைத் தொழுவோர்மேலோர்
வல்லபம் செறிவாய்நாவில் வந்துமே நிறைந்துநிற்கும்
சொல்லொணாப் பொருளைநித்தஞ் சுயமதாய்த் தெரிசித்தேநற்
றல்லிபக் கலிமாச்செப்பிச் சுடரொளி யதனிற்சேரோ. (35)

சேருவாய் கண்ணேநீயும் தெளிவுள்ளோன் பாதம்சேர்ந்து
கூறுவா யவனைக்கண்டுன் குறைகளைச் செப்பவல்லோன்
சீருடன் கேட்டதெல்லாம் செல்வனுந் தந்துஇன்னும்
நேருடன் குறைகள்நீக்கி நெடியவன் அருள்செய்வானே. (36)

### வெண்பாக்கள்.

கிருபைமெத்தத் தான்செய்து கேட்டவரந் தனைக்கொடுக்கும்
உறுதியுள்ள வல்லவனே யுண்மையே — சிறுமையுள்ள
காமத் துயாமதைக் கத்தனே நீயகற்றித்
தாமதமில் லாமலருள் தா. (37)

அருளான முச்சுடரை யனுதினமும் யான்கண்டு
திருவருளை தெரிசிக்க ஜெயந்தருவாய் — கருவழிக்கும்
காமத் துயாகற்றிக் காவலனே யென்தனையும்
சேமமுள்ள அறிவதனிற் சேர். (38)

### விருத்தம் ஆசிரியம்.

அறிவுநற் பெரியோர்சொன்ன அன்புள்ள வுபதேசத்தைப்
பெரிதென்று சரத்திலேற்றிப் பிரிசமாய் நாலும்வாங்கி
சரியுடன் நிறுத்திரண்டு சக்கதை மேலேநோக்க
திருவொளி வானநன்மைத் தீபமும் இலங்குந்தானே. (39)

தானவன் வடிவைக்காணத் தாரையைக் கொல்வாயப்போ
ஊனென்ற சடலந்தானும் உண்மையாய்த் தங்கமாகும்
ஈனத்தை நீக்கியேநல் லின்பமாய் நாலும்வாங்கி
மோனமாய் இருந்துநித்தம் முறையுடன் வணங்குவாயே. (40)

வணங்குவாய் வல்லோன்தன்னை வல்லப மறிந்துநன்றாய்
பிணங்கள்போ லலைந்திடாமற் பிசகறும் வாசிதன்னைக்
குணமுடன் மெள்ளவேற்றிக் குறிவிழி நடுவிற்சென்று
மணமுள்ள தவத்தைச்செய்தால் வாழலாம் சொற்கந்தானே. (41)

தானென்ற ஆகியந்தம் தன்மையாய்க் கூடும்வேளை
நீனென்ற கலிமாத்தன்னைத் தெளிவுடன் உரைத்துறைத்து
ஆனந்த ஞானஆதிக் கன்புடன் ஸுஜூதுசெய்தால்
நானென்ற சடலமற்று நாயனின் ஒளிசேர்வாயே. (42)

நாயனின் இஸ்றுயீல்தான் நலமுள்ள பிடரிதன்னில்
நேயமுள விருகண்பார்வை நேர்மைநல் முன்கர்நக்கீர்
காயமாய் நிற்குகின்ற கல்கிலே கேள்வியாகும்
தாயுமா யெழும்புகின்ற சரம்கிரு முன்காத்தீபே. (43)

சரமதை நிறுத்திக்கொண்டு தன்மையாய் வெளியில்நிற்க
நிறமுள்ள வொளிவுகாணும் நீதமாய்த் தவஞ்செய்தாக்கால்
பானுடை சொற்கந்தானும் பலனுடன் கிடைக்கும்நன்றாய்
திறமதாய் மௌத்தைமுன்னே திண்மையாய் அறிவாய்தானே. (44)

அறிகுவாய் மூன்றுநாள்முன் அன்பனே தெளிவாய்நன்றாய்
சரமதை யுன்னியேற்றி சக்கெழுத் துள்ளேதாக்கி
நெறியுடன் தூங்கநன்றாய் நேர்மைமுச் சுடருங்காணும்
பரிவுடன் பாசம்நீங்கும் பாரினில் வாழலாமே. (45)

வாழுவா ரருளைநித்தம் வண்ணமாய்த் தெரிசித்தோர்கள்
மீளுவார் வாதைதீர்ந்து மேன்மையாய்ப் பூமிதன்னில்
நீளித்த வயதுமாக நீதமாய் இருப்பார்பூவில்
தாழ்மையும் நீங்கித்துன்பம் சங்கடம் ஏகும்பாரே. (46)

பார்மன நாவுதன்னைப் பண்புஅண் ணுவிலொட்டி
நேருள்ள சுழுனைதன்னில் நேர்மையாய் நின்றாலப்பா



சீருள்ள ஐந்துபூதம் தெளிவுடன் ஒன்றாய்ப்போகும்
வாரணந் தனிலேமுழ்க வண்ணமுச் சுடர்காண்பாயே. (47)

காணுவாய் அருமையுள்ள கண்மணி மகனேகேளு
பூணவே யோகஞானம் பொருளருள் வெளியதாகித்
தோணுமே கதிர்வட்டம்போல் துலங்கிநின் றிலங்குஞ்சோதி
ஆணில்லாப் பெண்ணுமில்லா அறிவனென் றறிகுவாயே. (48)

கோச்சகக் கலிப்பா.

பேறுபெற்ற அருளுள்ள ஷெய்கின்கை
பிடித்துநன்றான முப்பொருள் தான்பெற்று
மாறுசெய்யும் கொடும்பாத கர்கட்கு
மங்கிமுப்பொருள் சூழும் இருளுமே
நேருள்ளஷெய்கைப் பற்றிப்பி டித்தருள்
நீதமுள்ளநல் முச்சுடர் தன்னையும்
சீருடன்கண்டு நித்தம் தெரிசித்து
செல்வன்பொருத்தத்தி லாகுவா ருண்மையே. (49)

உண்மையென்றநல் நந்தியைக் கண்டவர்
உறுதியாகிய மேன்மையிற் சேருவார்
திண்மையற்புதக் காக்ஷியைக் கண்டுமே
தெளிந்தவர்அரு ளானநற் றங்கமாம்
வண்மையாயெங்கும் வாசந்து லங்கிடும்
மகிமைபெற்றவர் வாழுவார் நன்மையில்
கண்மையோடு குருகையைத் தொட்டவர்
காலன்வருத்தத்தி லாகா ரறிவாயே. (50)

வெண்பா.

அறிந்துகொள் காரணத்தை யன்பாக மேல்நோக்கி
தெரிந்துகொள் மஹ்மூதிற் றெளிவருளை—நெறியுடனே
கண்டு தொழுவாய் கருவான பூரணத்தை
அண்டத்தில் தானே அறிந்து. (51)

அறுசீர் சந்தவிருத்தம்.

அறிவான வுடலதுள் அசனமது சென்றபின்
அன்பாக இருபங்கதாய்

நெறிசாறு வேறாக சக்கைவே றாகவே
　　நீதமாய்த் தான்பிரிக்கும்
குறியான ரசனையதில் அறுசுவை யானதைக்
　　கூறாகச் செப்புவேன்கேள்
சரியான இனிமையும் கசப்புஇலைப் பாகும்நல்
　　தன்மைபுளிப் பாகுமறியே. (52)

அறிகுவாய் துவர்ப்பொன்று கரிப்பொன்று இதுவாறும்
　　அறுசுவை யாகும்நன்மை
நெறியான தாமரை தனிலினிப் பானது
　　நேர்மையாய்ச் சேருமழகாய்
பரிவான நுரையீரல் தனில்புளிப் பானது
　　பண்மையாய்ச் சேருமின்னும்
குறியான கருஈரல் தனிலது கரிப்புமே
　　குணமாகச் சேரும்நலமாய். (53)

நலமிலாப் பித்திலே கசப்பதுஞ் செல்லுமே
　　நன்மையாய் இலைப்பானதும்
பெலமான மண்ணீரல் தன்னிலே குடலதில்
　　பிரிசமாய்த் துவர்ப்பானதும்
தலமான அறுதலந் தன்னிலே யறுசுவை
　　தன்மையா கக்கலந்து
குலமான அந்தந்தத் தலந்தனிலெ லாமுதிரம்
　　குணமாகத் தானறியே. (54)

ஊறியே யுதிரமும் நரம்புவழி யாய்ச்சென்று
　　உடலெலாந் தசையாகிய
சீரான தசையதிற் கொழுப்புமிக வேயேறிச்
　　சிரசுதனில் மூளையாகி
கூரான மூளையது இளகிவிந் தாகநற்
　　குணமாகப் பிடரிமார்க்கம்
நேரான நரம்புவழி யாலது இறங்குமே
　　நிறம்வெள்ளை விந்தானதே. (55)



தானான வுணவது இன்னுமொரு பங்குதான்
　　தன்மையாய் மூலஞ்சேர்ந்து
ஊனான அசனமது வெந்துகழி வாகவே
　　உண்மையாய்ச் சக்கைஜலமும்
தீனான அசனமது வெந்துமே புளிந்தநீர்
　　சிறுநீரும் சக்கைமலமாய்
கோனான வல்லவன் அமைத்தநல் விதமதை
　　கூறினேன் தெளிவாகவே. (56)

தெளிவான பூதமது ஐந்ததின் கூறதைச்
　　செல்வனே கேளுநலமாய்
வழியான மண்கூறெ லும்புதசை தொலிரோமம்
　　வண்மைநரம் பானதின்னும்
மொழியும்வாய் உமிழ்நீரும் சிறுநீரும் விந்துவும்
　　மூளைவேர்வை யுந்தண்ணீராம்
ஒளிவான நெருப்புபங் கதுசோம்பல் தாகமும்
　　உறக்கமும் பசிசெமித்தல்
கொழுமைநற் காற்றதின் பங்கது நடுக்கம்சொறி
　　கொட்டாவி துளும்பல்அசைவே. (57)

ஆசை பயம்கிருபை கோபம் பகைஐந்தும்
　　ஆகாயக் கூறறிகுவாய்
நேசமுள ஐந்துபூ தத்தினது கூறது
　　நேர்மையிரு பத்தைந்ததே
வாசமுள வருளான சுடர்மூன்றை யுங்கண்டு
　　மகிழ்வாய்த் தவஞ்செய்யவே
நீசமதை நீக்கியே வல்லவன் அழகுள்ள
　　நேரான சொர்க்கந் தருவான். (58)

### தாழிசை ஆசிரியவிருத்தம்.

தருமநீதியென் நாயனேயானும்
　　சங்கையான அருளிலே
சார்ந்திடவுன் கிருபைதந்தருள்
　　தனியனே தெளிவானவா

கருமம்வஞ்சனை சகலநோய்பிணி
கத்தனேயணு காமலே
காரணனெனைக் காத்திடுகொடும்
கருமவினையெல்லாம் நீக்கியே
அருகனேயிரு கண்ணும்நோக்கி
யருள்கண்ணால்தெரி சித்திட
அன்பனேவிழி கள்நிறைந்திட
அழகாய்முன்வந் திலங்கிடு
பெருமையாகிய ஆதியேகொடும்
பேதமணுகாம லென்றைக்கும்
பிசகறுத்துநின் கிருபைதந்தருள்
பெரியநாயனே யாஅல்லா. (59)

நாயனேயொளி வானமுச்சுடர்
நன்மையாகவே நித்தமும்
நலமதாகயான் கண்டுதொழுகவும்
நல்லோனேயருள் தருகுவாய்
தாயமெய்ப்பொரு ளானகனிமானவை
தன்மையாகவே யறியவும்
தந்தருள்ஒளி பெரியவேந்தனே
தன்மைசிந்தையும் மகிழவே
காயமானது முத்தியானதிற்
கனமாய்த்தேறிநல் லாகவும்
கத்தனேயருள் தந்துஎன்னையும்
கையணைத்துநீ காத்தருள்
மாயமானது சகலமும்எனை
மயக்கிடாமலே நீக்கியே
மாசில்லாமணி மந்திரப்பொருள்
வாகாய்த்தந்துசேர் யாஅல்லா. (60)

சேர்த்துவைத்தருள் பிறதௌசென்னும்
செல்வமாகிய சொற்கத்தில்
தீனதாகிய நாயனேயெனை
தீனமில்லாமல் காத்துயான்



பார்த்திடவெங்கும் நூரொளிவதாய்
பரமனேதெளி வாகவே
பழம்பொருளது நின்றிலங்கவும்
பளபளவெனக் கதிர்களும்
நேர்த்தியான அலிபுலாம்மீமும்
நீதமாகிய முச்சுடர்
நித்தியங்கண்டு தொழுகவும்அருள்
நேர்மைநாயனே யுதவிசெய்
சீர்த்தியாகளப் போதுமருளிற்
சேர்ந்துயானுமே மூழ்கிட
சித்தனேயுன் னுதவிதந்தருள்
சீமானாகிய யாஅல்லா. (61)

ஆசிரிய விருத்தம்.

முத்தனின் தொழுகையைந்தும் முறையுடன் சொல்வேன்நன்றாய்
பத்தேழு றகாஅத்தாகும் பதினேழு எழுத்துமாகும்
சித்துள்ள ஸுபுஹூரண்டு தெளிவுள்ள ஹேமீமாகும்
வெற்றிநல் லுஹறுநாலு மலிபுலாம் மீம்றேதானே. (62)

தானவன் அஸறுநாலும் தாஹாயா ஸீனுமாகும்
தீனுள்ள அலிபுலாம்மீம் தெளிந்தநல் மகுரிபாகும்
கோனவன் இஷாநாலுந்தான் குதறத் தல்லாஹூநாலு
தேனுள்ள பதினேழுந்தான் சிறப்புடன் சொன்னேன்பாரே. (63)

பார்காபுஹே எஐன்ஸாது பரிஹேமீம் ஐன்ஸீன்காபு
நேரலிபதும் லாம்மீம்றே நிகரில்லா அல்ஹம்தைந்தாம்
கூர்பதி னேழுரண்டும் குணமுள்ள இஸூமில்லஃலம்
சீர்பத்தும் ஒன்பதுந்தான் தெளிவிஸ்மில் லஃலமுத்தே. (64)

முத்தனே ஞானசூஸ்த்ரம் முறையுடன் உரைத்தேன்நன்றாய்
கத்தனே தெளிவதான காக்ஷிநல் லருளினாலே
சித்தனே கலீபத்து ஷெய்குஷா ஹூல்மீதை
அத்தனே யருளிலாக்கி ஆதியே கிருபைசெய்வாய். (65)

ஞானசூஸ்த்ரம் முற்றிற்று.

## றஹ்மான் கண்ணிகள்.

—✿—

ஈரடிக்கோச்சகம்.

ஆதிபெரியவனே யடங்காதமெய்ப்பொருளே
நீதியேயெந்தனக்கு நேர்வழிதா றஹ்மானே. (1)

நல்லார்க்குநன்மையுள்ள நாயகனே நேகடான
புல்லனுக்குநல்லருள்தா பூரணனே றஹ்மானே. (2)

காகமதுபோலாய்க் கதறிநிற்கும்பையலையும்
வாகாக நல்லருள்சேர் வல்லோன் றஹ்மானே. (3)

நாலாறுநற்கலிமா நன்மையுடன் கண்டுதொழ
மூலமேநல்லருள்தா முதலோன் றஹ்மானே. (4)

பாரில்பிழையனைத்தும் பார்த்திபனே நீக்கிவைத்து
நேரானசொற்கமென்னை நீசேர்ப்பாய் றஹ்மானே. (5)

சிங்கங்களானநல்ல சிதேவிகூட்டமதிற்
சங்கையுடனாக்கிவையென் தனியோன் றஹ்மானே. (6)

மும்மலத்தைநீக்கிவைத்து முத்தனேநல்வழியில்
எம்மைக்கரைசேர்ப்பாய் ஏகஒளிறஹ்மானே. (7)

நற்றவத்தின் நல்லமுத்தே நன்மையொளிமெய்ச்சுடரே
முத்தனேவினைநீக்கு முதலோன் றஹ்மானே. (8)

சாஸ்திரமும்வேதமுமே தானுணர்ந்துபார்க்கிலுமுன்
சூஸ்திரத்தையாரறிவார் தூய்யோன் றஹ்மானே. (9)

சூத்திரத்தையானறியச் சுயமேசுடரொளியே
மாற்றமெல்லாம்நீக்கியருள் மன்னன் றஹ்மானே. (10)

பித்தர்களைப்போலும் பிதற்றியேதானலற
கத்தனேகற்பித்தாய்என் கண்ணே றஹ்மானே. (11)

பொய்யானமாயையெல்லாம் புண்ணியனே நீக்கிவைத்து
மெய்யானவுன்னருள்தா வேந்தன் றஹ்மானே. (12)

பதரானசாவியைப்போல் பறக்கவிட்டாய்வல்லவனே
நிதமுமருள்தந்துவென்னை நிலைப்படுத்து றஹ்மானே. (13)



துன்பமெல்லாம்நீக்கித் துயரறவேசெய்திடுவென்
இன்பமுள்ளநற்சுடரே யிறையோன் றஹ்மானே. (14)

திரவியத்திலாசைகொண்டு தேசமெல்லாந்தானலையும்
கருமியுனையொருநாளும் காணார் றஹ்மானே. (15)

பழம்பொருளையனுதினமும் பார்க்கவேநன்மையருள்
தளதளென்றிலங்கவருள் தருவாய் றஹ்மானே. (16)

தளதளென்றிலங்கியொளி தன்மையுள்ளமுச்சுடரும்
தெளிவாகவரவருள்செய் சீமான் றஹ்மானே. (17)

இரவும்பகலுமற்ற எல்லையதில்ஜோதிதனை
மறையொளியிற்காணவருள் வல்லோன் றஹ்மானே. (18)

கடுகில்அருளனைத்தும் கத்தனேநீயமைத்தாய்
நொடிக்குள்ளறியநிதம் நூரொளிதா றஹ்மானே. (19)

உயிருக்குயிரான வுள்ளமையேதெள்ளமுதே
ஜெயமருளைத்தந்தருள்வென் சீமான் றஹ்மானே. (20)

தனமானநற்பரனே தாபரனேநித்தியமும்
இணையில்லாமுச்சுடர்நல் இலங்கவருள் றஹ்மானே. (21)

எத்தனைபோபேரிருந்தும் இறையோனே யுன்னையன்றி
உற்றொனக்கு இல்லை உடையோன் றஹ்மானே. (22)

தூங்காமல்தூங்கிச் சுடரான பேரொளிவைப்
பாங்குடனே பார்க்கவருள் பரனே றஹ்மானே. (23)

ஐயோஅடியவனுன் அற்புதத்தைக் காண்பதற்கு
கையணைத்துவைத்தருள்தா கண்ணே றஹ்மானே. (24)

என்னசெய்வேனென்னிறையே யென்துயரந்தானகற்றி
நன்மைவழிசேர்த்திடுவாய் நாயன் றஹ்மானே. (25)

தேடக்கிடையாத செல்வமேதீன்பொருளே
மூடனையுமுன்னருள்சேர் முதலோன் றஹ்மானே. (26)

செய்ததெல்லாங் குற்றம் சிறியோனின்வன்பிழையை
செய்பவனே நீக்கிவையென் செல்வன் றஹ்மானே. (27)

குற்றங்களான பெரும் கொடிதானபாவமெல்லாம்
கொற்றவனே நீயகற்றிக் குணந்தருவாய் றஹ்மானே. (28)

ஊனகாயமது வுன்னருளிலாகிடவே
ஞானவல்லவனே சிறப்பருளென் றஹ்மானே. (29)

மாய இபுலீஸவன் வன்கொடுமைசெய்யாமல்
மாயம் விட்டு நீக்கியருள் மன்னன் றஹ்மானே. (30)

மாமலரே பூமலரே வாசமுள்ள தேன்கனியே
தாமதமில்லாமலருள் தருவாய் றஹ்மானே. (31)

சித்திதரும்நல்லருளைத் தெளிந்துதவமேறுதற்கு
நித்தனேமாயவினை நீக்கியருள் றஹ்மானே. (32)

காமக்கொடியவினைக் காவலனேயென்னிலது
தாமதிக்காமல்விலக்கு தனியோன் றஹ்மானே. (33)

பூரணமேதற்பரனே பொற்பதமேவஞ்சவினை
காரணனேநீயகற்று கண்ணே றஹ்மானே. (34)

எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணிவாடுகிறேன்
மன்னனே யுன்னருள்சேர் வல்லவன் றஹ்மானே. (35)

முதிர்ந்தவயதுக்கிருந்து முதலோனே யுன்னருளை
பதியானமஹ்முதிற் பார்க்கவருள் றஹ்மானே. (36)

பதியானமஹ்முதிற் பண்மையுள்ளமுச்சுடரைக்
கதியாகயானறியக் கருப்பொருள்தா றஹ்மானே. (37)

எட்டாமலைநின்று இலங்கும்திருரூஸ்திரம்நல்
தட்டுவட்டமானவருள் தருவாய் றஹ்மானே. (38)

தட்டுவட்டமானவருள் தன்மையுள்ளமுச்சுடரைத்
திட்டமாய்க்காணவருள் செல்வன் றஹ்மானே. (39)

பாலந்தனைக்கடத்திப் பரகதிக்காளாக்குளனை
மூலமேவல்லவனே முத்தே றஹ்மானே. (40)

சன்னிதானமதிலே தற்பரனேசென்றுநிதம்
நன்னிலைக்கலிமாத்தன்னை நானுரைப்பேன் றஹ்மானே. (41)

நன்மைக்கலிமாவை நாயகனேயானுரைத்து
வண்மையுடன்தொழுவேன் வல்லன் றஹ்மானே. (42)

பாவியெனைக் கையணைத்துப் பரமனேநேர்வழியில்
நோவினையெலாம்நீக்கி நூரருள்வாய் றஹ்மானே. (43)



மாதவ மதைச்செய்ய மன்னவனேயுன்னருளில்
தீதைவிட்டுநீக்கிஎன்னைச் சேர்ப்பாய்றஹ்மானே. (44)

தீதைவிட்டுநீங்காமல் ஜெகந்தனிலேவாழ்பவர்க்கு
வாதைப்படத்தீயில் வைப்பாய்றஹ்மானே. (45)

வாதைப்படும்வருத்தம் வல்லவனேநீக்கிவைத்துன்
பாதைவழிகாணவருள் பரமன் றஹ்மானே. (46)

விண்ணுடிப்பார்க்க விதவிதமாய் நூரொளிகள்
கண்ணுக்குத்தோன்றவருள் கத்தன் றஹ்மானே. (47)

எங்கும்நிறைந்தவனே யேகனேஎந்தனக்குப்
பொங்கும்திருவருள்தா பூரணமே றஹ்மானே. (48)

சங்கையுள்ளநற்கலிமாச் சரியாயனுதினமும்
திங்கள்ரவிபோலிலங்கத் திருவருள்தா றஹ்மானே. (49)

மதிரவியும்ஒன்றான வண்ணமுள்ளகும்பகத்திற்
கதியானமுச்சுடரைக்காண வருள் றஹ்மானே. (50)

பூரணரேசகமும் பூரகமும் கும்பகமும்
சீராயறிந்துதவஞ் செய்யவருள் றஹ்மானே. (51)

காமத்துயரமது கட்டோடே வெந்திடவே
கத்தாகிருபைசெய்யென் கண்ணே றஹ்மானே. (52)

உன்பதம்பதமெனக்கு ஒருவரில்லைசொல்வதற்கு
என்துயரம்நீக்கியருள் ஏகன் றஹ்மானே. (53)

நாளும்தவறாமல் நன்மையுள்ளமாதவத்தை
பாழைவிட்டுநீங்கிச்செய்யப் பரனருள்தா றஹ்மானே (54)

கத்தியே நூல்களெல்லாம் கதறிப்படித்திட்டாலும்
முத்தியருள்காணார் முதலோன் றஹ்மானே. (55)

கூட்டிலேபூட்டைக் குணமாய்த்திறவாதோர்
காட்டிலலைந்தாலுமுனைக் காணார் றஹ்மானே. (56)

பசப்பிபாவத்தைவருத்தும் பாவையர்கள்யாவரையும்
கசப்பாகக்காணவருள் கண்ணே றஹ்மானே. (57)

மாதர்களினாசை மயக்கமெல்லாம்தூராக்கி
மாதவத்தில்மூழ்கநிதம் வரமருள்வாய்றஹ்மானே. (58)

பாசவினைநீக்கிப் பாமனைநல்வினையில்
ஆசையுடன்மூழ்கஎனக் கருள்தா றஹ்மானே. (59)

தெள்ளமுதையானருந்தித் தெவிட்டாமல்யானிருக்க
உள்ளவனேயுன்கிருபை உதவியருள் றஹ்மானே. (60)

மத்திதனில்நின் றிலங்கும் வண்ணவொளிமெய்ச்சுடரை
நித்தியங்காணவருள் நீதன் றஹ்மானே. (61)

அல்லும்பகலுமின்னும் அந்திசந்திஎவ்வேளையும்
வெல்லும்கலிமாவறிய விதமருள்வாய் றஹ்மானே. (62)

சின்னமிருதமுள்ள சிற்றின்பக்காமத்துயரம்
என்னிலணுகாமல் எடுத்தெரிவாய் றஹ்மானே. (63)

மாயநினைவுவந்து மருட்டாமல்நீக்கிவைத்து
தூயனேநேர்வழிசேர் துய்யறஹ்மானே. (64)

நாலானபூரணத்தை நன்மையுடன்யான்காண
மூலமேகிருபைசெய்வாய் முதலோன் றஹ்மானே. (65)

தாய்தந்தைசேய்களையும் தன்மைமுரீதுகளையும்
தீநரகிலாக்காமல் சிறப்பாக்குறஹ்மானே. (66)

எந்தனையும்எந்தனுடை இன்பமுள்ள குருக்களையும்
கந்தபிறுதௌசிலாக்கென் கண்ணே றஹ்மானே. (67)

மூமின்முஸ்லிம்கள் முதன்மைபெரியோர்களையும்
ஆமீன்தனத்திலாக்கென் அன்பேறஹ்மானே. (68)

சித்தனேகலீபத்து ஷெய்குஷாஹுல்ஹமீதை
நித்தம்அருளிலாக்கி நேராக்குறஹ்மானே. (69)

படிப்பவர்க்கும்கேட்பவர்க்கும் பாரில்கொடும்வினைகள்
படைத்தோனேநீக்கிவைத்து பலன்கொடுப்பாய்றஹ்மானே. (70)

தந்தைதாயானோர்கள் தமர்வழிக்கும்நற்பதவி
சந்தமாதியேகொடுப்பாய் சங்கையுள்ளறஹ்மானே. (71)

றஹ்மான் கண்ணிகள் முற்றிற்று.



## மூச்சீர்க் கண்ணிகள்.

### ஞானச்சுடர்.

ஆதியான துய்யவனே யேகபரனே
அன்புடைய அருள்தருவாய் நீதனேகோனே. (1)

ஜோதியான நற்பொருளை ஞானச்சுடரைச்
சொல்லவும் என்னுவிலே துதிக்கச்செய்கோனே. (2)

ஆலமதி லுள்ளஅறி வானமாந்தரே
அருமையாகச் சொல்லும்ஞானச் சுடரைக்கேள்கண்ணே. (3)

பத்தியுள்ள ஞானச்சுடர் கேட்டுநடந்தால்
பயகாம்பர் நபிதீனி லாகுவாய்கண்ணே, (4)

காபகவு சைனியென்னுங் கருணைநாடினால்
கனமான சொற்கந்தன்னில் வாழுவாய்கண்ணே. (5)

நேர்மையான முச்சுடரைக் கண்டுதொழுதால்
நீதமான வல்லன்சொற்கஞ் சேருவாய்கண்ணே. (6)

முத்துபவளம் பச்சையாக நின்றிலங்கிய
மோனமுள்ள முச்சுடரைப் பாருநீகண்ணே. (7)

பாலதான வெள்ளைபோ லிலங்குதுவொளி
வேலதான விழியைநோக்கிப் பாருநீகண்ணே. (8)

இடப்புறத்தி னொளியினுள்ளே ஹக்கிலங்குது
இன்பவல தொளியிலேமு ஹம்மதுகண்ணே. (9)

சூரியனிற் சந்திரனும் நின்றிலங்குது
சுயமான மதியில்கதி ரிலங்குதுகண்ணே. (10)

தாத்தினுள் ஸிபாத்தது மிலங்கிநிற்குது
தன்மையான ஸிபத்தில்மல ரிலங்குதுகண்ணே. (11)

ஹூவுக்குள்ளே மீமதுஇ லங்கிநிற்குது
மாவுக்குள்ளே ஹூவும்நின் றிலங்குதேகண்ணே. (12)

மாவுக்குள்ளே ஆயிரத்தெண் மலரிலங்குது
மானிடனே யனுதினமும் நோக்கிடுகண்ணே. (13)

முச்சுடரும் கண்டுதினம் தொழுதுநீவந்தால்
மோட்சமான சொற்கந்தன்னிற் சேருவாய்கண்ணே. (14)

ஆலமெல்லாம் ஆளும்வாச நீதனைக்கண்டு
அன்புடனே வணங்கினோர்க்கு நன்மைதான்கண்ணே. (15)

மூலப்பொரு ளறியாத மாந்தரையெல்லாம்
மோசமான நரகிலாதி ஆக்குவான்கண்ணே. (16)

பெண்டுபிள்ளை யென்றுசொல்லி பேதலித்திடும்
வண்டனெல்லாம் வருத்தந்தன்னி லாகுவான்கண்ணே. (17)

எழிரண்டு வாசலும்இ ருத்தியேசாத்தி
இறைகலிமா வோசைகேளு இன்பமாய்க்கண்ணே. (18)

உள்ளெழுத்தைத் தானிருத்தி யுண்மையறிந்து
ஓங்கார மானஈமான் காணுஎன்கண்ணே. (19)

ஓங்கார மானஈமான் ஹேயதுக்குள்ளே
உண்மையான கல்புக்கடல் வருகுதுகண்ணே. (20)

கல்புக்கடல் மீமதுதான் கருவுமாகுமே
கருவுக்குள்ளே நினைவதும் இலங்குதுகண்ணே. (21)

கருநினைவு என்பதுதான் ஹக்குறஸூலும்
கலங்காம லனுதினமும் பார்த்திடுகண்ணே. (22)

பார்த்துநீயும் அவ்வல்கலி மாவும்மொழிந்து
பண்புடனே தீனிலாகிச் சேருநீகண்ணே. (23)

ஹக்குமு ஹம்மதுடைப் பாதந்தொழுது
கனமான நல்லருளி லாகுவென்கண்ணே. (24)

அன்பாக ஏழுதோற்றம் சொல்லுவேன்கேளு
அழகான தேவர்கூட்டம் ஒன்றுதான்கண்ணே. (25)

இன்பமான மனுமிருகம் பறவையூர்வனம்
இனியமுள்ள விருட்சம்மச்சம் ஏழுமேகண்ணே. (26)

இனமான யோனிநாலின் விபரஞ்சொல்லுவேன்
ஏற்றமுள்ள மானிடனே கேளுஎன்கண்ணே. (27)

அருமையுள்ள பிறவியதாய்ப் பிறந்துமேவந்த
அன்புடைய யோனியதுவொன் றுஎன்கண்ணே. (28)



முட்டையிட்டுக் குஞ்சுகளும் பொரித்திடும்நல்ல
முறையான யோனியது வொன்றுஎன்கண்ணே. (29)

சினையினாலே ஜலமதிலுண் டாகுமேமெத்த
சிறப்புள்ள மீன்யோனி யொன்றுஎன்கண்ணே. (30)

வித்தினாலே புற்பூண்டு மரமுமுண்டாகும்
மேன்மையுள்ள யோனியது வொன்றுதான்கண்ணே. (31)

செல்வமுடன் யானுரைக்கும் விபரந்தனைநீ
சிறப்பாகத் தான்தெளிவா யப்பாஎன்கண்ணே. (32)

வல்லபத்தைச் சார்ந்தவர்கள் வல்லபமுள்ளோர்
வளமான சொர்க்கமதிற் சேருவார்கண்ணே. (33)

கல்லையு ருக்கி நோக்கிப் பார்த்திடுநன்றாய்
கனமான முச்சுடரைக் காணுவாய்கண்ணே. (34)

அட்டதிக்கும் முட்டிநின்ற ஜோதியைக்கண்டு
இட்டமாகத் தொழுதவர்க்கு சொற்கந்தான்கண்ணே. (35)

நாலாறு நற்கலிமாச் சொல்லியறிந்து
நன்மைதவஞ் செய்தவர்க் கழிவில்லைகண்ணே. (36)

அல்லாமு ஹம்மதையும் கண்டுதொழுது
ஆனந்த மானவரே வல்லவர்கண்ணே. (37)

ஷரீஅத்தும் தரீகத்தும் தானுமறிந்து
சங்கைஹகீ கத்தையும றிந்திடென்கண்ணே. (38)

மஃரிபத்துந் தானறிந் தருளைநீநோக்கி
வண்மையுடன் பார்த்திடுவாய் அன்புள்ளகண்ணே. (39)

அருளிலாத ஆசைபாசம் விட்டுநீநீங்கி
அன்புடைய ஆண்டவனைத் தொழுதுக்கொள்கண்ணே. (40)

இரவில்நீயும் தூங்கிடாமல் தவத்திலாகுவாய்
இன்பமுள்ள என்மகனே பாலனேகண்ணே. (41)

வீடுமக்கள் பெண்டுபிள்ளை கூடவாராது
மேன்மையுள்ள தவமதுவும் துணையென்கண்ணே. (42)

ஆடுமாடு பணமும்வாழ்வும கூடவாராது
ஆண்டவனைத் தான்தொழுதால் துணையேயென்கண்ணே. (43)

உறவினோர்கள் பந்துஜனங் கூடவராது
உடையவனை வணங்கினுக்கால் நற்கெதிகண்ணே. (44)

எண்ணியொரு வழுதான் வைத்தவுடனே
ஏகன் மலக்குகேள்வி கேட்பாரென்கண்ணே. (45)

கபுறிலேதான் முன்கர்நக்கீர் மலக்குமேயங்கே
கண்ணிரண்டும் அக்கினிபோல் வருவாரென்கண்ணே. (46)

சுக்குமானெ னுந்தடியும் கையிற்பிடித்து
துய்யோன் மலக்குமே வருவாரென்கண்ணே. (47)

வந்துமே மலக்கவரும் பாவிகளைத்தான்
வண்ணஞ்சுக்கு மானைக்கொண் டடிப்பாரென்கண்ணே (48)

இவ்வகை சகலமும் அறிந்துபயந்து
இறைவனைத் தொழுதுகொள்ளு அன்பாயென்கண்ணே. (49)

வல்லோனே யெந்தனுக்கு வுன்னருள்தந்து
மணமான சொர்க்கமதிற் சேர்ப்பாயென்கோனே. (50)

துன்பவினை நோயனைத்தும் நீக்கியேவைத்து
துய்யோனே யருளைத்தந்து சொர்க்கஞ்சேர்கோனே. (51)

பூவுலகில் வாழுகின்ற மாந்தனேநன்றாய்
புனிதமுடன் நரகமேழின் விபரங்கேள்கண்ணே. (52)

முன்துவாரம் பின்துவாரம் சிற்றின்பம்மூன்று
மோசமான பித்தநீரும் நாலுதான்கண்ணே. (53)

தசையெலும்பு தோலியுடனே யேழுமேயாச்சு
தன்மையில்லா நரகமது ஏழுந்தான்கண்ணே. (54)

எட்டு சுவர்க்கமதின் விபரங்கேள்நன்றாய்
இன்பமுள்ள கண்மணியே பாலனேகண்ணே. (55)

எல்லா வுணவதுவும் செல்கின்றதானம்
இனிமையுள்ள என்மகனே யொன்றுதான்கண்ணே. (56)

உச்சந் தலையுச்சியும் இருகண்ணத்தின்
உகப்பான நிமையும்இரு புருவமுங்கண்ணே. (57)

திட்டமுள்ள கடைக்கண்ணும் நல்விலாயத்தாம்
திறமான கழுத்துமுகம் எட்டுமேகண்ணே. (58)



அன்பான சொர்க்கமெட்டின் விபரஞ்சொன்னேன்
அருமையாகப் பார்த்தறிவா யப்பாவென்கண்ணே. (59)

நாயனே நீ யென்துயரந் தானகற்றியே
நன்மையான பொருத்தமதி லாக்கிக்கொள்என்னை. (60)

கலீபத்து ஷெய்குஷாஹுல் ஹமீதப்பாவை
கத்தனே நீ சொற்கமதி லாக்கிடு ஆமீன். (61)

ஞானச்சுடர் முற்றிற்று.

## ஞான ஒளிவு.

வெண்பா.

ஆதியே நீதியே அற்புதனே தீபவொளி
ஜோதியே நன்மைச் சுடர்மணியே—நீதியுள்ள
ஞானஒளி யானுரைக்க நல்லவனே யென்னாவில்
தானமுள்ள நல்லருளைத் தா.

ஐஞ்சீர்க் கண்ணிகள்

ஆதியே யுனைத்துதிக்க அனுதினமும்
நாவிலருள் தருவாய்
அற்புதநற் காட்சிகண்டு ஆவலுடன்
வணங்கவுதவி செய்வாய். (1)

நீதியுடன் துய்யவனே திக்குயாது
தனையுரைக்க அருளை
நித்தனேயென் னாவில்தந்து சொல்வதற்கு
வுதவிசெய்யென் னிறையே. (2)

எங்குமிறைந் தோர்பொருளா யிலங்கிநின்ற
வல்லவனே யானும்
இன்பமாக ஞானவொளிவு தெளிவாகச்
சொல்வதற்கு அருள்தா. (3)

வாசமுள்ள மானிடரே வண்ணமுடன்
சொல்லுகின்ற பொருளை

வகையுடனே கேட்டுநீங்கள் சரியாகத்
தவத்தைச்செய்வீர் நன்றாய். (4)

அழகான ஷரீஅத்தினின் திக்றுலாஇ
லாஹ இல்லல் லாஹு
ஆறிரண்டு எழுத்ததுதான் ஜல்லியாகும்
அறிந்துக்கொள்ளு நலமே. (5)

வளமான ஒன்றும்மகாம் நாஸூத்து
திக்றுஜல்லி யாகும்
வண்ணமுடன் செய்யும்விதம் சொல்லுகிறேன்
நன்றாகக் கேளு. (6)

நாஸூத்து மகாமான கல்பிலிருந்
தெடுத்திடுலா வென்று
நலமாகச் சிரமதனை வலமாகச்
சுழற்றிஇலா ஹாவை. (7)

விதமாக மேன்மையுள்ள இருவிழியும்
புருவத்திடை நோக்கி
மேன்மையுள்ள இல்லல்லாவைச் சொல்லிஹூவை
கல்பில்லறபு செய்வாய். (8)

சரியான ஷரீஅத்ததின் திக்றுஇது
வாகுமிக அழகே
தன்மையுடன் வாயாலே சொல்லிச்செய்யும்
திக்றுஇது தானே. (9)

அலங்கார ஷரீஅத்தின் திக்றுதனைச்
சேர்ந்தயாது ஐந்து
அருளான லாஇலாஹ இல்லல்லாஹு
என்பதுதான் ஒன்று. (10)

அன்புடைய அல்லாவொன்று ஆதமொன்று
இல்லுமொன்று தானே
அஹமதுமு ஹம்மதொன்று யாதுஐந்தும்
ஷரீஅத்துவின் நிலையே. (11)



பூதலத்தில் வாழுகின்ற புனிதமுள்ள
மானிடரே கேளும்
புகழாகச் சொல்லுகிறேன் தரீக்கத்தின்
விபரமதை நன்றாய். (12)

தெளிவான கலிமாவில் இல்லல்லாஹு
தரீக்கத்தின் திக்று
செல்வமுள்ள ஏழெழுத்து கல்பியாகும்
அறிந்துகொள்ளு நலமாய். (13)

அழகான ரண்டாம்மகாம் மலக்கூத்து
திக்றுகல்பி யாகும்
அன்புடனே செய்யும்விதம் சொல்லுகிறேன்
அருமையாகக் கேளு. (14)

அருமையுள்ள திக்றதையும் வாயினாலே
மொழியாமல் நாபி
அந்தஇட மிருந்துசா மதிலேற்றி
நாசிநடு நிலையில். (15)

நாசிநடு நிலைதனிலே இருவிழிகள்
ரண்டையுமே இருத்தி
நன்மையுள்ள ஹூவதையும் மார்புக்குழி
தனிலேதான் விடுவாய். (16)

விதமான தரீக்கத்தின் திக்றதனைச்
சேர்ந்தயாது ஐந்து
விபரமாகச் சொல்லுகிறேன் அறிவுடனே
கேளுஎந்தன் கண்ணே. (17)

இன்பமுள்ள இல்லும்அல்லும் அல்லாஅல்லா
ஹூஹூக்கல்லா ஹூவும்
இதுவைந்து யாதாகும் தெளிவான
தரீகத்தின் நிலையே. (18)

அவனியிலே வாழுகின்ற அன்புடைய
மாந்தர்களே யானும்

அருமையுடன் சொல்லும்ஹகீ கத்தினுடை
விபரமதைக் கேளே. (19)

வழியான கலிமாவிலே அல்லாதான்
ஹகீகத்தின் திக்று
வண்ணமுள்ள எழுத்துநாலு றாஹியாகு
மிதையறிவாய் கண்ணே. (20)

பெலமான மூன்றும்மகாம் ஜபறாத்து
திக்றுறாஹி யாகும்
பிரியமுடன் செய்யும்விதம் சொல்லுகிறேன்
அருமையாக நன்றாய். (21)

உந்திதனி லிருந்துசர மதிலேதான்
திக்றதனைப் பூட்டி
உகப்புடனே ஏற்றிஇரு புருவத்திடை
நோக்கியேதான் நின்று. (22)

தெளிவாக இறக்கிடுவாய் மார்புக்குழி
விழும்படியே யழகாய்
சிறப்புடனே இந்தவிதம் நற்றவத்தைச்
செய்திடுவாய் கண்ணே. (23)

அலிபெழுத்தை நிறுத்திநன்றாய் அழகான
மேன்மைத்தவஞ் செய்ய
ஆதியவன் மேன்மையுள்ள கிருபைசெய்வான்
அடங்காத நன்மை. (24)

அன்புடைய ஹகீகத்தின் திக்றைச்சேர்ந்த
யாதுஐந்து வுண்டும்
அருமையாகச் சொல்லுகிறேன் தெளிவுடனே
அறிந்துகொள்ளு நன்றாய். (25)

ஏற்றமுள்ள யாக்கறீமும் யாறஹீமும்
நிர்றஹீம் மஹ்பூபு
இனியம்ஹக்கு மௌஜூது இதுவைந்தும்
ஹகீகத்தின் நிலையே. (26)



பொருளான மஃரிபத்தின் விபரமதை
யானுரைப்பேன் அழகாய்
பூவிலுள்ள மாந்தர்களே அறிவாகக்
கேட்டிடுங்கள் நலமாய். (27)

குலமான கலிமாவில் அல்லாஹு
மஃரிபத்தின் திக்று
குலமுயர்ந்த தங்கமது நாலெழுத்து
சிர்றியாகும் அறிவாய். (28)

திறமான நாலாம்மகாம் லாஹூத்து
திக்றுசிர்றி யாகும்
செல்வமாகச் செய்யும்விதம் அருமையாகச்
சொல்லுகிறேன் கேளே. (29)

தெளிவாகச் சரமதிலே திக்றதனைப்
பூட்டியேற்றி நிறுத்தி
சிறப்பாக இறக்கிடுவாய் மார்புக்குழி
விழும்படியா யழகாய். (30)

அழகான மஃரிபத்தின் திக்றைச்சேர்ந்த
யாதுஐந்து வுண்டும்
அன்பாகச் சொல்லுகிறேன் அருமையுள்ள
கண்மணியே கேளு. (31)

நலமான ஹூஅல்லா அல்லாஹூ
ஹூஹக்கு மாகும்
நன்மையுள்ள குன்ஹூவும் யாதுஐந்தும்
மஃரிபத்தின் நிலையே. (32)

தெளிவுநல் முஹப்பத்தென்ற விபரமதை
நன்றாக யானும்
திறமாகச் செப்புகிறேன் திசைபுவியி
லுள்ளவரே கேளும். (33)

அருளான கலிமாவில் ஹூவதுமு
ஹப்பத்துவின் திக்று

அன்புடைய எழுத்ததுவும் திக்றுகபீ
அறிந்துகொள்ளு நலமாய். (34)

அருமையுள்ள ஐந்தாம்மகாம் ஜம்ஹூத்து
திக்றுகபீ யாகும்
அறிவாகச் செய்யும்விதம் அன்புடனே
சொல்லுகிறேன் கேளு. (35)

முறையான திக்றதையும் சரமதனி
லேற்றியேதான் நிறுத்தி
மோனமாக நோக்கிமூடி ஜம்ஹூத்து
ஹக்குல்எக்கீன் நிலையில். (36)

நலமாகச் சரமதனை மார்புக்குழி
விழும்படியே அழகாய்
நன்மையுடன் செய்திடுவாய்த் தெளிவாக
அருமையுள்ள கண்ணே. (37)

அழகுநல்மு ஹப்பத்துவின் திக்றைச்சேர்ந்த
யாதுமூன்று வுண்டும்
அன்புடைய ஹாஹீயும் ஹாஹூவும்
யாஹூவல்லா இதுவே. (38)

இதுதானே ஜம்ஹூத்து யாதுநிலை
யாகும்தெளி வான
இன்பமாக அறிந்திடுங்கள் நலமாக
மேன்மையுள்ள கண்ணே. (39)

நலமருள்மு ஹப்பத்துவின் திக்றுகபீ
யாகும்அதைச் சார்ந்த
நன்மையுள்ள பாஹூத்து நிலையதனைச்
சொல்லுகிறே னழகாய். (40)

தெளிவான பாஹூத்து ஆறும்மகாம்
அதற்கிரண்டு யாது
திறமுடனே சொல்லுகிறேன் யாஹூவும்
யாஹும்மு மாகும். (41)



நலமான யாதையுந்தான் சரமதிலே
பூட்டிஏற்றி நிறுத்தி
நன்மையுடன் சரமதையும் மார்புக்குழி
விழும்படிதான் விடுவாய். (42)

அகிலமதில் வாழுகின்ற அன்புடைய
மானிடரே கேளும்
அருமையுடன் ஆறுண பாதைமுஃதி
தாத்துநிலை சொல்வேன். (43)

நலமான திக்றுகபீ அதைச்சேர்ந்த
முஃதிதாத்து மாகும்
நன்மையுள்ள ஆஹூத்து ஏழாம்மகாம்
அறிவாயே சொன்னேன். (44)

தெளிவான ஆஹூத்து அதற்கிரண்டு
யாதுமிக வழகு
சிறப்புடனே சொல்லுகிறேன் ஹூவும்மீமும்
ஹும்மென்பது ஒன்று. (45)

நலமான காபுமீமும் ஹும்மென்பது
ஒன்றுதானே அறிந்து
நன்மைத்தவம் செய்திடுவாய் தெளிவுடனே
தானிருந்து கண்ணே. (46)

அருளான கலிமாவில் ஹூவும்மீமும்
மேன்மையுள்ள யாது
அன்புடனே தான்தவங்கள் செய்து ஆகி
தீதாரைக் காண்பாய். (47)

நவவாசல் அடைத்திருந்து நன்மைசரம்
கலிமாவிற் பூட்டி
நலமாக ஏற்றமிறக்கம் செய்தவர்கள்
தெளிவுடைய மூமீன். (48)

பூவுலகில் வாழுகின்ற புண்ணியமுள்ள
மானிடரே கேளும்

புனிதமருள் ஆறான பாதைமுஃதி
தாத்து நிலை சொல்வேன். (49)

தெளிவுடைய திக்றுகபீ அதைச்சேர்ந்த
முஃதிதாத்து மாகும்
சிறப்பான தம்ஹூஅத்து எட்டாம்மகாம்
விபரமதைக் கேளு. (50)

பரிவுடைய தம்ஹூஅத்து அதற்கொரு
யாதுமிக வழகு
பண்பான யாதத்துவும் மீமாகும்
தெளிவாகச் சொன்னேன். (51)

ஓரெழுத்து மீமாகும் உண்மையுள்ள
யாதுநிலை யாகும்
உகப்புடனே யாதுதனை சரமதிலே
ஏற்றிடுவா யழகாய். (52)

அழகான கலிமாவைச் சரமதிலே
ஏற்றியேதான் நிறுத்தி
அன்புடனே தெளிவாக மார்புக்குழி
விழும்படியே விடுவாய். (53)

நலமான கலிமாவைச் சரமதிலே
யேற்றியூன்றிப் பார்க்க
நன்மையுள்ள முச்சுடரும் தோன்றிநிற்கும்
சத்தியமாய்ச் சொன்னேன். (54)

அருமையுள்ள இதனை யறிந்தவர்கள்
மேலான பெரியோர்
அன்புடைய வல்லவனும் அழகான
சொற்கமதைக் கொடுப்பான். (55)

நலமான முச்சுடரும் தோன்றிநிற்கும்
வேளையிலே நன்றாய்
நாயனுக்கு அருமையாய் ஸுஜூதுதனைச்
செய்திடுவா யழகாய். (56)



அருமைநபி பாதமதில் அன்புடனே
தான்வீழ்ந்து நின்று
அழகான ஆயிரத்தெண் மலரதிலே
ஒடுங்கிடுநற் றெளிவாய். (57)

மேன்மையுள்ள அருளதைத்தான் மேதினியிற்
காண்பதுவே அரிது
மேலான காமில்கையைத் தொட்டவுட
னப்போதே யறிவாய். (58)

அருளான வல்லவனே என்பிழைக
ளனைத்தையுமே பொறுத்து
அன்புடைய தவஞ்செய்ய அழகான
வரிசைமெத்தத் தருவாய். (59)

பொருளான பொருளையெல்லாம் பூதலத்தி
லெந்தனக்குத் தந்து
பூரணனே என்துயரம் தானகற்றி
நல்லுதவி செய்வாய். (60)

நலமான வல்லவனே முற்றும்வரை
காத்துஎனக் கருளே
நன்மையுடன் தந்துயானும் தவஞ்செய்ய
நல்லுதவி செய்வாய். (61)

தெளிவான மாந்தர்களே யானுரைத்த
ஞானமதை யறிந்து
திறமாகத் தான்தவத்தைச் செய்திடுங்க
ளாதிகிருபை செய்வான். (62)

கூரான இறையவனே கூர்மையுடன்
யான்தபசு செய்ய
குறைகளொன்றும் அணுகாமற் காத்திடுவாய்
ஏகபெரி யோனே. (63)

அகிலமதில் வாழுகின்ற அருமையுள்ள
மானிடரே யானும்

அருமையாகச் சொல்லுவதைத் தெளிவாகக்
கேட்டுநல மாவாய். (64)

ஜோதியென்ற வடிவதுதான் துலங்கிநிற்கும்
நேரமதில் மூச்சு
சுயமான பன்னீர்வாசம் சுழிமுனையில்
வீசுமப்பா அழகாய். (65)

நீதமுள்ள அருளான ஸிபத்ததுதான்
துலங்கிநிற்கும் வேளை
நிரப்பமாகப் பஞ்சாமிர்தம் வாசமது
வீசுமப்பா நலமாய். (66)

பஞ்சபூதம் மண்ணுந்தண்ணீர் நெருப்புக்காற்று
ஆகாயம் அறிவாய்
பண்பாக நல்விதமாய்த் தெளிந்துதவஞ்
செய்வாயென் கண்ணே. (67)

நலமான முச்சுடரும் இன்னதென்று
தெளிவாகக் காணு
நன்மையுள்ள முச்சுடரும் மூன்றுநிற
மாகநிற்கும் அழகாய். (68)

அழகான மேன்மைநிலை யறிந்தவர்க்கு
அன்புடைய வல்லோன்
அருமையுள்ள நற்கூலி சுவனமதைக்
கொடுப்பானே நலமாய். (69)

இரண்டெழுத்து இன்னதென்று அறிந்தவர்கள்
ஈமானில் திறமை
இன்பமான மேன்மையுள்ள சீமான்தான்
இவர்களாகும் கண்ணே. (70)

தெளிவுடைய நீதிநெறி யுள்ளவரே
மேன்மையுள்ள இஸ்லாம்
சிறப்பாக அனுதினமும் வல்லவனைத்
தொழுவார்கள் உண்மை. (71)



அறிவான கண்மணியே யானுரைக்கும்
விபரமதை நன்றாய்
அன்பாக ஆராய்ந்து அழகுடனே
சொல்லுஎந்தன் கண்ணே. (72)

அலிபுமென்ன ஜோதியென்ன ஆலமெல்லாம்
நிறைந்தவஸ்து வென்ன
அழகாக நம்பிறஸூல் தெளிவாக
வந்ததலஞ் சொல்வாய். (73)

ஒளிவான ஓங்கார வட்டமென்ன
ஈமான்தா னென்ன
உள்ளமைநற் பொருளான கலியுமென்ன
மாவுமென்ன சொல்வாய். (74)

தெளிவான கனியுமென்ன ஹிந்தீல்வடி
வொளிவுமென்ன இன்னும்
சிறப்பான சுருமாவின் வடிவுமென்ன
நலமாகச் சொல்வாய். (75)

கோட்டையென்ன கொலுவுமென்ன கொலுமீதில்
வந்தவொளி வென்ன
குணமனமும் இன்னதென்று அறிவுடனே
சொல்லிடுவாய் கண்ணே. (76)

மெலிவாக வோடியேதான் வருவதென்ன
அழகான வொளிவு
மெலிவில்லா ஸிபத்துமென்ன மேன்மைபெருந்
தலமதெங்கே சொல்வாய். (77)

வில்லுமென்ன நாணுமென்ன விசையாக
இருந்துமிட மென்ன
மேன்மையாகத் தவஞ்செய்யும் தலமதுதா
னென்னசொல்லு கண்ணே. (78)

மேன்மையாகச் சென்றுதவஞ் செய்துஅடி
பணியுந்தல மென்ன

வெற்றியுள்ள அத்தலத்தை யின்னதென்று
தெளிவாகச் சொல்வாய். (79)

பிறந்ததெங்கே விண்ணதிலே யொளிவாக
இலங்குகின்ற தென்ன
இறந்துநாமும் எத்தலத்தில் ஒடுங்கிநின்றோம்
அத்தலத்தைச் சொல்வாய். (80)

வரமதைத்தான் ஆதியவன் தருவதெங்கே
தெளிவாக நன்றாய்
மகத்தான தாயமுது குடிப்பதெங்கே
இதுவிபரஞ் சொல்வாய். (81)

முழுதுமென்ற பூர்ணமென்ன முக்கால்தான்
என்னமிக வறிந்து
முறையான காலதிலே யடிபணியும்
விபரமதைச் சொல்வாய். (82)

முச்சுடரும் என்ன அதின் நிறமதுவும்
இன்னஇன்ன தென்று
முறையாக எந்தனக்கு அறிவாகச்
சொல்லுவெந்தன் கண்ணே. (83)

முத்துப்பச்சைப் பவளமென்ன முதலவனு
மென்னஒளி வான
மௌனமுஹம் மதுவும்முஹிய் யித்தீனு
மென்னசொல்லு கண்ணே. (84)

காபகவு ஸைனியென்ன கருநினைவு
வருந்தலந்தா னென்ன
கண்மணியே மக்காமன் மஹுமூது
தலமதைச்சொல் கண்ணே. (85)

ஜோதியென்ன சுயமான சுருமாவின்
வடிவுமென்ன அழகாய்
சுழலுகின்ற ஆயிரத்தெண் மலருமென்ன
அறிந்துநன்றாய்ச் சொல்வாய். (86)



அருஷுமென்ன குருஸுமென்ன அறிவாக
நிற்குந்தல மென்ன
அன்புடைய தாத்துமென்ன ஸிபத்துமென்ன
அறிந்துசொல்வாய் கண்ணே. (87)

மட்டிலடங் காதவொளி வானதென்ன
கண்ணாடி யென்ன
மகிமையுள்ள கண்ணாடிக்குள் நின்றிலங்கும்
சுரூபமென்ன சொல்வாய். (88)

பாலமென்ன பரியான தென்னநாமும்
சென்றுநல மான
பதியான நடுநிலையில் அறியுஞ்சுடர்
மூன்றையும்நீ சொல்வாய். (89)

ஆதமென்ன அதினுடைய ஸூறத்தென்ன
நலமாக அறிந்து
அன்புடைய ஸூறத்தது அமைந்தஎழுத்
ததனைச்சொல்லு கண்ணே. (90)

மறையான துள்ளிலேநல் நினைவாக
வந்ததென்ன நன்றாய்
மறைநினைவு வந்தவுடன் தொழுகும்விதம்
என்னசொல்லு கண்ணே. (91)

மீமும்மு ஹம்மதுதான் மேன்மையாக
வுதித்ததலம் என்ன
வெற்றிதரும் அவ்வொளிவைத் திட்டமதாய்
அறிந்துநீயுஞ் சொல்வாய். (92)

திருநாமம் அல்லாமு ஹம்மதையும்
சேர்த்துவொன்றாய்ச் செப்பி
ஜெயமாகத் தானுரைத்துக் கலிமாவை
தொழுந்தலத்தைச் சொல்வாய். (93)

ஐனை தென்னமேன்மை அலிபுலாமும்
மீமுமென்ன நன்றாய்

அறிவுடனே தெளிவாக அன்பாயு
ரைத்திடுஎன் கண்ணே. (94)

கஃபாவும் மக்காமதீ னாவுமென்ன
அழகான மேன்மை
கனமுள்ள பைத்துல்மஹ் மூறும்முகத்
தீசைச்சொல்லு வாயே. (95)

நலமான பீங்கானும் பாலுமது
தானுமென்ன அழகு
நன்மையுள்ள பீங்கானில் அமுதுகொண்டு
கொடுத்ததாரு சொல்வாய். (96)

தெளிவாக அறிந்திடுவாய் செல்வமுள்ள
கண்மணியே யானும்
சிறப்பாக வுரைத்ததெல்லாம் சிதறாமற்
சொன்னவரென் குருவே. (97)

அறிவான கண்மணியே யருளுகின்றேன்
வேதஸுஹ்பு விபரம்
அருமையாகக் கேட்டிடுங்கள் தெளிவான
நல்லறிவை நன்றாய். (98)

ஆதமுக்கு ஸுஹ்புபத்து அன்புடைய
ஆதியவன் இறக்கி
அருமையுள்ள நபிஷீதுக் கைம்பதுஸுஹ்
பிறக்கிவைத்தான் வலியோன். (99)

இதுரீஸு நபிக்குஇறை முப்பதுஸுஹ்
பிறக்கிவைத்து இன்னும்
இபுறாஹீம் நபிக்குப்பத்து ஸுஹ்பிறக்கி
வைத்தானே நன்றாய். (100)

மூஸாநபிக்குப்பத்து ஸுஹ்பதுவும்
இறக்கிவைத்து இன்னும்



முதன்மையான தௌறாத்து வேதமதும்
இறக்கிவைத்தான் வல்லன். (101)

தௌறாத்து வேதமதை அபறானி
பாஷையிலும் நன்மை
சங்கையுள்ள மூஸாவுக் கிறையவனும்
இறக்கிவைத்தா னழகாய். (102)

தாவூது நபிதமக்கு ஸபூர்வேதம்
யூனானி பாஷை
தன்னிலாதி யிறக்கிவைத்தான் நன்மையுடன்
தெளிவாக நன்றாய். (103)

ஈஸாநபிதமக்கு ஏகனவன்
இன்ஜீல்வேத மதனை
இறக்கி வைத்தான் சுரியானிப் பாஷையிலே
யழகாகத் தெளிவாய். (104)

அன்புநல்மு ஹம்மதுநந் நபிக்குப்புறுக்
கான்வேத மதனை
அறபிபாஷை தன்னிலாதி அருமையுடன்
இறக்கிவைத்தான் அழகாய். (105)

தெளிவான குறுஆனுக் குயர்ந்தமறை
யில்லைநன்றாய்ச் சொன்னேன்
தீனவரே குறுஆனும் ஜுசுமுப்ப
தாச்சுமிக அழகே. (106)

ஆறாயிரத் தறுநூற்றறு பத்தாறு
ஆயத்து முள்ள
அடங்காத குறுஆனில் சகலமறை
யெல்லாமு மடக்கம். (107)

அருளான குறுஆனை அணுப்போலே
சுருக்கியேதான் நன்மை
அன்புடைய குல்ஹுவல்லா ஸூறத்திலோர்
தாயத்திலே யொடுக்கி. (108)

தெளிவான குல்ஹுவல்லா ஸூறத்திலே
 ஐந்துதாலில் சுருக்கி
சிறப்புள்ள அல்ஹம்து ஐந்தெழுத்தி
 லொடுக்கிவைத்தா னிறையோன் (109)

அல்ஹம்தில் சகலமதும் அடங்கினது
 என்றுமேதான் வல்லன்
ஆதியவன் கடுகுக்குள்ளே யமைத்தவித
 மாகநல்ல அழகாய் (110)

சுத்தமுள்ள அல்ஹம்து அதுதனையும்
 ஒடுக்கிமிக மேன்மை
தூய்யவனின் திருநாமம் பிஸ்மிலதில்
 தெளிவாக்கி வைத்தான். (111)

தெளிவான பிஸுமிலதில் மூன்றெழுத்து
 உண்மையாக வுண்டும்
சிறப்பாக அவ்வெழுத்தை நன்மையுடன்
 கேட்டுஅறி வீரே. (112)

முதல்மீம்தான் உந்தியென்ற கமலந்தன்னில்
 தரித்திருக்கும் மேன்மை
முத்தான றஹ்மானென்ற மீமதுதான்
 இருதயத்தின் கல்பு: (113)

அடங்காத றஹீமென்ற மீமதுதான்
 முண்டகநற் கமலம்
அன்பாக அறிந்திடுவீர் அருமையுடன்
 ரகசியமாய்ச் சொன்னேன். (114)

இவ்வெழுத்து மூன்றிலொன்று இன்பமுள்ள
 பொருளென்று காணு
இனிமையுள்ள சுடர்மூன்றும் அடங்கிநிற்கும்
 தெளிவான எழுத்தாம். (115)

தெளிவாக இப்பொருளைக் கண்டுஅருள்
 சொன்னவரென் குருதான்



சிறப்பாகச் சகலதவம் அறிந்தவரென்
 றெண்ணுவது நிஜமே. (116)

தானான தன்சுரூபம் தானேதான்
 அறிந்தவர்க்கு வல்லோன்
தான்வேறு நான்வேறென் றென்பதுவும்
 போய்விடுமே யுண்மை. (117)

அவனியிலே வாழுகின்ற அன்புடைய
 மாந்தர்களே யானும்
அருமையாகச் சொல்லுவதைக் காதுதாழ்த்திக்
 கேட்டுநல்ல அறிவீர். (118)

ஆதியான வல்லவனுக் காயிரம்பேர்
 தானறிவாய் கண்ணே
அன்புடைய நபிமூஸா தௌறாத்தில்
 முன்னூறுபே ரமைத்தான். (119)

நீதியுள்ள தாவூது நபிஸபூரு
 வேதத்திலே யாதி
நேர்மையுடன் முன்னூறு பேரமைத்தான்
 தெளிவாக வலியோன். (120)

வாசமுள்ள நபிஈஸா வேதம்இன்ஜீல்
 தன்னில்அழ காக
வல்லோனும் முன்னூறுபே ரமைத்தானே
 யருமையுடன் நன்றாய். (121)

தெளிவுநல்மு ஹம்மதுடை செல்வபுறுக்
 கான்வேத மதிலே
சிங்கார மாகத்தொண் ணூற் றென்பதுபே
 ரமைத்தானே பெரியோன். (122)

நாலுவேதம் அடங்கியபேர் தொளாயிரத்தி
 தொண்ணூற்றென்ப தாகும்
நன்மையுள்ள பேரொன்றை மறைத்து வைத்தான்
 புர்கானில் நெடியோன். (123)

சிர்றான பேரறிய ஜெகமதிலே
காமில்தனைத் தேடி
தெளிவான தீட்சைபெற்றுத் தெரிந்துகொள்ளு
அறிவுள்ள கண்ணே. (124)

ஒருபேரை யறிந்துதவம் உண்மையாகச்
செய்தவர்க ளொலியே
உகப்புடனே சகலரும்நல் லறிவதற்குத்
தெளிவாகச் சொன்னேன். (125)

அறிவாக இன்னமொன்று அருளுகிறேன்
நன்றாகக் கேட்டு
அன்புடைய மாந்தர்களே யருமையாகத்
தவத்தைச்செய்வீ ரழகாய். (126)

முன்னுள்ள தௌறாத்து இன்ஜீல்ஸபூர்
வேதமூன்றும் இன்னும்
முறையான நூற்றிபத்து ஸுஹுபதையும்
இறையவனும் மாற்றி. (127)

தெளிவான புறுக்கானில் சகலதிலு
முள்ளபொருள் யாவும்
சிறப்பாக அமைத்துநன்றாய் தெளிவுபுறுக்
கானையுமே யிறக்கி. (128)

அடங்காத கடல்மலையும் அணுவுக்குள்ளே
சுருக்கினது போலே
அருமையுள்ள புறுக்கான்மு ஹம்மதுக்கு
இறக்கினானே றஹ்மான். (129)

வெற்றியுள்ள புறுக்கான்தான் மேலான
வேதமென்று இறக்கி
விஷயதுக்குள் ளடங்காத வெகுகோடி
தவமதிலே வைத்தான். (130)

மேலான மறைபுறுக்கான் வேதப்படித்
தவஞ்செய்யாத தவந்தான்



வெற்றியில்லா மும்மறையி லுள்ளதவ
மாகிவிடுங் கண்ணே. (131)

மும்மறையி லுள்ளதவஞ் செய்தவர்க்கு
முதலோனின் தீதார்
முத்தான கண்மணியே யணுவளவுங்
கிடையாது அப்பா. (132)

வெற்றியுள்ள வேதபுறுக் கானின்படி
யறிந்துதவஞ் செய்தால்
மேலோனின் தீதாறு கிடைத்துப்பிறு
தௌஸினிலே வாழ்வாய். (133)

இத்தொழுகைத் தொழுகாதோர் எல்லோருங்
கொடும்பாவி யென்று
இறையோனும் புறுக்கானில் இறக்கினானே
யழகாக நன்றாய். (134)

இறையோனின் கட்டளைபோல் ஆதம்தனை
வணங்காத பாவி
இபுலீஸை நரகமதி லாக்கிவிட்டான்
வல்லவனும் அறிவாய். (135)

அலங்கார மாகஇதை யறிந்தவர்க்கு
முத்தியது வுண்மை
அன்புடனே யின்னமொன்று அறிவதற்குச்
சொல்லுகிறேன் கேளே. (136)

ஷரீஅத்துத் தோலாகும் தன்மைதரீ
கத்ததுவும் சதையே
சங்கைஹகீ கத்ததுதான் ரத்தமது
தானறிவாய் கண்ணே. (137)

நலமான மஃரிபத்து எலும்பாகும்
இன்னுந்தெளி வான
நன்மைமு ஹப்பத்துவும் மூளையது
தானாகுஞ் சொன்னேன். (138)

முறையான புவிதனிலே வாழுகின்ற
மானிடரே கேளும்
முழுக்கறுக்கும் விதமதையும் மொழியுகிறேன்
நன்றாக யானும். (139)

அழுக்கான முழுக்கதுவும் விதிக்கமுன்னே
அறுக்கவேணும் நன்றாய்
அழிம்பான முழுக்கதுவும் விதித்துவிட்டால்
முழுக்கறுக்க முடியா. (140)

முழுக்கதுவும் விதிக்கமுன்னே முதலோனின்
கலிமாவை யறிந்தால்
முழுக்கதுவும் அற்றுவிடும் முதன்மையுள்ள
கண்மணியே சொன்னேன். (141)

தெளிவான வாசியில்தான் திறமான
கலிமாவைப் பூட்டி
செல்வமுள்ள விழிநடுவில் சிங்கார
மாகத்தாக்கிப் பார்க்க. (142)

ஒளிவான கதிரொளிதான் தளதளென்
றிலங்கிநிற்கும் அழகாய்
உண்மையாக வுலகபாசம் அற்றுவிடும்
முழுக்கதுவும் அறுமே. (143)

முழுக்கதுவும் விதிக்கமுன்னே முழுக்கறுக்கும்
விதமதைத்தான் சொன்னேன்
மோகமுடன் அவனருளை யனுதினமும்
பார்த்திடுஎன் கண்ணே. (144)

அல்ஹம்து ஐந்தெழுத்தை யருமையுடன்
அருளுகிறேன் கேளும்
ஆலமதில் வாழுகின்ற அருமையுள்ள
மானிடரே நன்றாய். (145)

அலிபென்ற எழுத்து அல்லா அழகுலாம்மு
ஹம்மதுதான் இன்னும்



அன்புடைய ஹேகாற்று மீம்உருவு (146)
தால்ஆதம் தானே.

இவ்வெழுத்து அஞ்சும்கூடி அல்ஹம்து
என்றநாமம் ஆச்சு
இன்பமான அல்ஹம்து மதிப்பிலடங் (147)
காதபொருள் கண்ணே.

அறிவான ஸுபுஹுலுஹர் அஸர்மகுரி
புத்தொழுகை யின்னும்
அன்புஇஷாத் தொழுகையுடன் வக்தைந்து (148)
தெளிவான தொழுகை.

முறையான ஷரீஅத்து வணக்கமது
பூவுலக வாசம்
முன்னோனின் தொழுகையதைத் தொழுதுநோன்பு (149)
தனைவிடாமற் பிடிப்பாய்.

இறையோனின் வணக்கமது மேல்மையுள்ள
அழகான ரத்னம்
இனிமையுள்ள தொழுகையது அஹமதுவின் (150)
விபரந்தனைச் சொல்வேன்.

அலிபுநிலை ஹேறுக்கூட மீம்ஸுஜூது
தாலிருப்பு மாகும்
அஹ்மதென்ற நாலெழுத்து அஞ்சுபத்து (151)
மூன்றுலக்க மறியே.

முஹம்மதுவின் கோலமதை மொழியுகிறேன்
நன்றாகக் கேளு
முஹம்மதுதன் ஸூறத்து முதன்மைநாலு (152)
எழுத்ததுதான் பாரே.

நாலெழுத்தும் பத்தொன்பது ரண்டிலக்கந்
தானறிவாய் கண்ணே
நலமான பிஸ்மிலது பத்தொன்பது (153)
எழுத்ததுதான் அறிவாய்.

பேஸீனும் மீமலிபு லாம்ஹேறே
ஹேறான்வ பத்தும்

பிசகறுக்கும் ஹறுபுபத்தாய் வந்ததுதான்
பிஸ்மிலென்று காணே. (154)

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்
என்றதற்கு லக்கம்
பிரியமுடன் சொல்லுகிறேன் எழுநூற்றி
யெண்பத்தாறு அறியே. (155)

அல்லாஹு நாலெழுத்து அன்பான
லக்கம்அறுபத் தாறு
அருமையுள்ள நாலெழுத்து அலிபுரண்டு
லாமும்ஹேயொன் றாகும். (156)

ஆதமது தம்மாகும் அவ்வெழுத்து
அலிபுதால்மீம் சொன்னேன்
அந்தெழுத்தை யின்னதென்று அறிந்திடுவாய்
அருமையுள்ள கண்ணே. (157)

ஆதமது மூன்றெழுத்து அன்பான
லக்கம்நாற்பத் தைந்து
அருமையுள்ள நாற்பத்தைந்து ஆதமென்று
தானறிவாய் கண்ணே. (158)

அவ்வல்கலி மாவின்பொருள் அருளுகிறேன்
மாந்தர்களே கேளும்
அறுநான்கு எழுத்ததுதான் அமைந்திருக்கும்
அதிலேநன்றாய்ச் சொன்னேன். (159)

லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர்ற
ஸூலுல்லாஹி இதுதான்
நலமான தையிபுமே ஹறுபுஅது
ஒன்பதுதா னறிவாய். (160)

அலிபுலாமும் ஹேயுமீமும் ஹேதாலும்
றேஸீன்வாவு மாகும்
அன்புஹறு பொன்பதுந்தான் அவ்வல்கலி
மாவாகும் அறியே. (161)



அவ்வல்கலி மாவதுதான் அறுநான்கு
எழுத்தனின் லக்கம்
அறுநூற்றி பத்தொன்பது அறிந்துகொள்ளு
நல்விதமாய்ச் சொன்னேன். (162)

அறுநான்கு எழுத்ததுவின் விபரமதை
யழகுடனே கேளு
அருமையுள்ள மானிடரே யன்பாகச்
சொல்லுகிறேன் நலமாய். (163)

லாஇலாஹ இல்லல்லாஹு தலையாகும்
அருமையுள்ள மேன்மை
நலமான முஹம்மதுர்ற ஸூலுல்லாஹி
உடலாகும் அறிவாய். (164)

லாவென்ற ரண்டெழுத்தும் சிரமாச்சு
இலாஹமூன்று எழுத்தும்
நன்மையுள்ள ஐந்துபூதம் ஆச்சுஇன்னும்
இல்லல்லாஹு ஏழும். (165)

இல்லல்லாஹு ஏழுமது ஸிபத்தாச்சு
மேன்மைமுஹம் மதுவும்
இன்பமுள்ள ஸூறத்தாச்சு நாலெழுத்தும்
அறிந்துகொள்ளு சொன்னேன். (166)

றஸூலென்ற நாலெழுத்தும் றூஹாச்சு
தெளிவான நாலு
நலமான அல்லாவென்ற தறிவான
வெளியாச்சு நன்றாய். (167)

இன்னும்நன்றாய் எடுத்துரைப்பேன் கலிமாவை
யறிந்தவர்க்கு வரிசை
இன்பமாக இறையவனும் கொடுத்திடுவான்
மேன்மையாகத் தானே. (168)

அன்பான கலிமாத்தான் லாஇலாஹ
இல்லல்லாஹு இன்னும்
அருமைமுஹம்மதுர்ற ஸூலுல்லாஹி
இதுவேஅவ்வல் கலிமா. (169)

வழியான மேன்மை அவ்வல் கலிமாத்தான்
ஈமானின் நிலையே
வகையான இஸ்லாத்தின் மேன்மைக்குல
மாவதித னாலே. (170)

முறையான ஷஹாதத்துக் கலிமாத்தான்
மிக்கநல்ல அழகு
முதலோனின் வரிசைதரும் பெலமுள்ள
வாசமான கலிமா. (171)

அழகுடைய தம்ஜீது கலிமாத்தான்
பெருமையுள்ள வல்லோன்
அருமைதனைக் காட்டிவைக்கும் அன்புநல
மானகலி மாவே. (172)

மேலோனின் தௌஹீதுக் கலிமாத்தான்
மிக்கநல்ல வரிசை
மேன்மையுள்ள கலிமாவில் சொல்லமுடி
யாதநன்மை அழகே. (173)

கலிமாவைக் கொண்டுகரை சேர்வதுவும்
உண்மையுள்ள உறுதி
ஹக்குடைய தௌஹீது நிலைதனையும்
பிடித்துக்கரை சேரே. (174)

அலிபதுவும் அல்லாதான் ஈயதுமு
ஹம்மதுதான் கண்ணே
அன்பான ஊவதுவை யுணர்ந்துபார்க்கச்
சகலமதுந் தோன்றும். (175)

அலிபுமுதல் ஏவையும் உள்ளஹுரு
பதையும்யானுஞ் சொல்வேன்
அன்புடைய மானிடரே மகிழ்வாகக்
கேட்டுஅறி வீரே. (176)

அருளான புருவமத்தி அலிபதுதான்
அன்பான பேயும்



அருமையுள்ள வலப்புருவம் இடப்புருவம்
தேயென்று அறிவாய். (177)

முறையான தேயதுதான் நெற்றியாகும்
தெளிவான ஜீமும்
முதலான தலையாகும் ஹேவலத்தோள்
இடத்தோள்கே கண்ணே. (178)

விதமான தாலதுதான் வலமுழங்கால்
இடமுழங்கால் தாலே
மேன்மையுள்ள றேயதுவும் வலதுவிலா
இடதுவிலா ஸேயே. (179)

கனமான ஸீனதுவும் வலதுமார்பு
இடதுமார்பு ஷீனே
கருணையுள்ள வலதுசெவி ஸாதாகும்
இடதுசெவி ழாதே. (180)

சரியான தோயதுவும் வலக்கரண்டை
இடக்கரண்டை ளோயாம்
சங்கைவலக் கரம்ஐன் தான் இடக்கரமும்
கைனுகு மறிவாய். (181)

முறையான பேயதுவும் வலப்புறங்கை
யிடப்புறங்கை காபு
முதுகெலும்பு காபாகும் துடைப்பொருத்து
லாமாகும் அறியே. (182)

மீமதுவும் நெஞ்சுமுதல் மூளையாகும்
றூஹின்மகாம் நூனே.
வெற்றியுள்ள நபுசுகொப்பூழ் வாவாகும்
கல்புஹேயு மாகும். (183)

லாமலிபு மூச்சாகும் நன்மைஅய்ஸூ
விந்தாகும் இன்னும்
நலமான ஏறாஹூ தெளிவாகச்
சொன்னேன்நற் பொருளே. (184)

தெளிவாக இன்ஸானில் அமைந்திருக்கும்
ஹறுபுகளைச் சொன்னேன்
சிறப்புடனே நல்விதமாய் மாந்தர்களே
யறிந்திடுங்கள் நலமாய். (185)

அறிவாகச் சொன்னபொரு ளனைத்தையுமே
ஆராய்ந்து நன்றாய்
அன்புடனே தெளிந்தவர்க்கு ஆகிரீதார்
கிடைக்குமிதுவுண்மை. (186)

அருமைமு ஹம்மதுக்கு அடையாளஞ்
சொல்லுகிறேன் நன்றாய்
அன்புடனே கேட்டிடுங்கள் அறிவான
கண்மணியே யழகாய். (187)

புவியிலடி தோயாது புகழ்நபிக்கு
நிழலுமில்லை யின்னும்
புழுபூச்சி அங்கமதி லொட்டாது
மேகங்குடை நிழலும். (188)

முன்கண்ட தூரம்பார்வை பின்காணும்
கஸ்தூரி மணமும்
முதலோன் அறுஷுக்குமேற் சிரசும்தக்க
ருகீழே பாதம். (189)

பாதம்ரண்டுங் கண்டதில்லை பரமநபி
சிரமதுவுங் காணார்
பாங்குடைய மேனியைத்தான் பாரில்காணார்
மலஞ்சலமு மில்லை. (190)

துயிலாடை களைந்ததில்லை தூதருக்குப்
போதமறதி யில்லை
சுத்தநபி தமக்குநகம் ரோமமதும்
வளர்ந்ததில்லை யறிவாய். (191)

அறிவணவன் நபிதமக்கு அடையாளம்
அவனியிலே சொன்னேன்



ஆண்டவனே யெனக்கருளை யனுதினமும்
தருவாயென் னிறையே. (192)

வையகத்தில் வாழுகின்ற மானிடரே
நல்விதமாய் யானும்
வழுத்துகிறேன் தெளிவாக அருமையுடன்
கேட்டுமகிழ்ந் திருப்பீர். (193)

அலிபதுவும் அல்லாதான் ஆலமெல்லாம்
நிறைந்தஜோதி யதுவே
ஐனதுவும் கண்ணாகும் அலிபுலாம்மீம்
முச்சுடர்தா னறியே. (194)

தெளிவாக நம்பிறஸூல் தாத்திலுள்ளே
தான்வருகும் ஒளிவாய்
சிறப்பான அவ்வொளிவு நிறமதுவும்
சுருமாவே கண்ணே. (195)

பூரணந்தான் உயிராகும் பொற்கமலம்
மீமதுதான் உள்ளே
புகழாக இலங்கிநின்ற சுடரதுவும்
வல்லவனே அறிவாய். (196)

அழகான கோட்டையது ஈமான்தான்
நற்பொருளே மேன்மை
அன்பான கோட்டையுள்ளே கொலுமேடை
நாலதுதா னறியே. (197)

முச்சுடரும் முத்துப்பச்சைப் பவளமது
தானாகும் நன்மை
முதலோன் முஹம்மதுவும் முஹிய்யிதீனும்
மூன்றாகு மறியே. (198)

கருவான காபகவு ஸைனியது
கண்மணியே நன்மை
கலப்பிலாத புருவமத்தி மஹ்மூது
என்றறியுங் காணே. (199)

விசையா யிருத்துந்தலம் எழுத்ததுதான்
என்மகனே யழகாய்
விரைவாகப் பார்க்கையிலே தீதாறு
காண்பார்கள் நலமாய். (200)

ஆயிரத்தெண் மலரதுவும் அருமையுள்ள
காதிருவே நன்றாய்
அழகுடனே நடக்கும்பாலம் அருமையுள்ள
தன்மூச்சு அறியே. (201)

ஆதமது ஸுறத்துதான் அழகான
தாத்திலுள்ளே ஸிபத்து
அன்புடைய மறையிலுள்ளே நினைவதுவும்
ஹக்காகும் அறிவாய். (202)

உந்தியது மக்கம்நெஞ்சு கஃபாவாம்
புருவத்திடை மதீனா
உயர்ந்தபைத்துல் முகத்தீஸு குரல்முடிச்சு
அறிந்துகொள்ளென் கண்ணே. (203)

உகப்பான மஹ்ஷறும் அண்ணவுக்
குழியதுதான் நன்மை
உண்மையான அறுஷுகிரம் குறுஸுநெற்றி
அறிந்துகொள்ளு நலமாய். (204)

ஒளிவான பிங்கானில் அமுதான
பாலதனைத் தெளிவாய்
உகப்பாகக் கொண்டுவந்து கொடுத்ததுதான்
இன்னதென்று அறிவாய். (205)

மத்ததுவும் றாஹாகும் வலிமையுள்ள
ஹம்ஸதுதான் விந்து
வாகான ஷத்ததுவுங் கல்பாகும்
சங்கையுள்ள கண்ணே. (206)

மஹ்பூலு மனமதுதான் வரிசையாக
எழுதும்கலம் நாவே



வண்மையுள்ள தந்தையது விந்ததுவென்
றறிந்துகொள்ளு நலமாய். (207)

வேதமதும் ஆதமதும் விபரமதாய்
அறிந்தவர்க்கு வொன்றே
விதமான ஹவ்வதுதான் விழியென்று
தானறிவாய் நன்றாய். (208)

தெளிவான நெஞ்சதுவே சிறப்பான
சுவர்க்கமாச்சு இன்னும்
சிறுமையுள்ள நரகமது உந்தியின்கீழ்த்
தானறிவாய் சொன்னேன். (209)

தருத்தருத்தான் பாதமது தன்மையுள்ள
நரம்பதுவும் ஆறு
சங்கையான மலையெலும்பு செடிகள்ரோமம்
அறிந்திடுவாய் நலமாய். (210)

மீம்தலைதான் பொற்கமலம் மேன்மைஸல்த்தான்
நஸீறுவும் மூளை
விதமான தூர்ஸினவும் நாசியென்று
அறிந்திடுவாய் கண்ணே. (211)

கண்ணதுதான் சூட்சமது கருவான
முச்சுடரும் மேன்மை
கனமான மும்மண்டலம் மும்மூல
மதுதானே அறிவாய். (212)

ஆதிஅறுதிஜோதி அலிபுலாமு
மீமாகும் நன்மை
அழகான பைத்துல்மஹ்மூறு கருத்
தாவதுதான் அறியே. (213)

மும்மண்டலம் சூரியனும் சந்திரனும்
அக்கினிதான் மூன்றே
முறையான குதறத்தது வாஸிலாத்து
அபுவ்வத்துதான் ஸிபத்தே. (214)

காபிரவன் மறந்தவனே காமில்ஹக்கை
    நினைத்தவனே யாகும்
கனமான மீஸானும் திருக்குயென்று (215)
    தானறிவாய் நலமாய்.

பொருளாகச் சொன்னதெல்லாம் அறிந்துணர்ந்து
    பாருளந்தன் கண்ணே.
புதுமையான மறைபொருளைக் குருவிடத்திற் (216)
    கேட்டுஅடி பணியே.

சரியாகக் கலிமாவை யங்கத்துக்குள்
    அறியார்க்குத் தீயே
சங்கையுள்ள தீயாரைச் சொல்லிவைக்கும் (217)
    குருவிடத்திற் சேரே.

தீதாரை யறிந்தவர்கள் ஜன்னபதி
    சேர்வதுதான் உண்மை
செல்வமுள்ள முச்சுடரைக் கண்டுதெரி (218)
    சித்தவர்க்கே யென்மை.

தெளிவாக அருமையுடன் யானுரைக்கும்
    விபரமதை நீயுன்
சிந்தையெல்லாம் மகிழ்ச்சியாக வுகப்புடனே (219)
    காதுதாழ்த்திக் கேளே.

அறிவான வணக்கந்தன்னை யன்புடனே
    செய்வதற்குக் கண்ணே
அனுதினமும் இரவிலேதான் ஷஹறுடைய (220)
    வக்திலேயும் முழித்து.

சிறப்பாக உலுவெடுத்துத் தெளிவாகத்
    தொழுதுதானே முடித்து
செல்வமுடன் அதின்பின்னே பனஉலுவும் (221)
    உள்தொழுகை தொழுவாய்.

சரியாகத் தொழுகையெல்லாம் முடித்ததின்பின்
    ஹறுபுகளை நாட்டு



தப்பில்லாமல் அலிபுமீமும் லாமும்றேயும்
    அதின்கீழே லாமும். (222)

முறையான இல்அலிபும் நாட்டியபின்
    கமலந்தன்னில் மேலே
மோட்சமுள்ள கலிமாவில் ஹேயும்மீமும் (223)
    ரண்டெழுத்தும் மேன்மை.

அன்பான ஹேயும்மீமும் கும்மென்ற
    எழுத்ததுவு மாகும்
அருளான ரண்டெழுத்தை யுந்திதன்னில் (224)
    இருந்துசர மதிலே.

சரமதிலே யேற்றியுந்தான் புருவமத்தி
    தன்னில்நிலை நிறுத்தி
சரியாகத் தவத்தைச் செய்து இருந்தினலே (225)
    சுடரொளிவுந் தோன்றும்.

தோன்றுகின்ற சுடரொளிவைச் சுயமாகப்
    பார்த்திடுவாய் நீயும்
சுத்தமான கலையதையும் நலமாக (226)
    நிறுத்திடுவா யழகாய்.

அழகுநல்மு ஷாஹிதாவை அகிலமதிற்
    பேசாரே நல்லோர்
அன்புடைய பெரியோர்கள் அருமையென்று (227)
    தானறிவா ரருளே.

கெடுதியான மயக்கந்தூக்கம் இபுலீஸு
    தானேஅறி வாயே
இருபையெல்லாம் நீக்குகின்ற தோசிதனை (228)
    வெருட்டிவிடு நலமே.

அறிவாக வோர்நினைவாய் இருக்கையிலே
    அங்கேதெளி வாக
அன்புநல்மு ஹம்மதுவும் வந்திடுமே (229)
    யொளிவாக நன்றாய்.

ஹக்கன்மு ஹம்மதுக்குக் கலிமாவைச்
சொல்லீசமான் கொண்டு
கருத்துடனே தீனிஸ்லா மாகியமு
காகநீயும் நின்று. (230)

தெளிவுநல்மு ஹம்மதுடை சீர்பாதம்
தன்னிலுந்தன் சிரசை
செம்மையுடன் வைத்துப்பணி திங்கள்முடி
மீதிலெழும் சுடர்தான். (231)

பளிங்கியிலுந் தெளிவாகும் பரமனவன்
ஒளிவேநின் றிலங்கும்
பார்த்துநீயும் கருணைப்பதம் கண்டுதொழு
ஓர்மையுடன் அழகாய். (232)

அழகான ஆயிரத்தெண் மலர்விரிந்து
இலங்கிடுமே நன்மை
அன்புடைய மலரதிலே ஒடுங்கிடுவாய்
அறிவாகச் சொன்னேன். (233)

ஒளிவான மலரினுள்ளே ஒடுங்கினவர்
பெரியோர்க ளாகும்
உண்மையான வல்லவனின் வரிசைமெத்த
அவர்களுக்குக் கிடைக்கும். (234)

அழகான ஜபறூத்தின் கண்ணொடிக்குள்
ஒளிரூபங் காணும்
அதுதானே தன்ஸீறத் தாகும்அறி
வானபெரி யோரே. (235)

இத்தொழுகைத் தொழுதவர்கள் றஹ்மானின்
அடியார்க ளுண்மை
இருபதிக்கும் தன்மையுள்ள காரணர்க
ளிவராகும் அறிவாய். (236)

கூரான ஒலிமார்கள் செய்யுகின்ற
வணக்கத்திலே இதுவே



குணமாகத் தானுரைத்தேன் தெளிவாக
வுலகவர்க்கு யானும். (237)
முத்துப்பவளம் பச்சையது மூன்றுசுடர்
தானாகும் கண்ணே
முச்சுடரை யறிந்தவர்கள் அருளுடைய
பெரியோர்கள் நிசமே. (238)

ஒலிமார்க ளென்ற திருநாமமது
இவ்வருளை யறிந்த
உண்மையுள்ள பெரியோர்க்குத் தெளிவாக
வல்லவனுங் கொடுப்பான். (239)

பாவமெல்லாம் பறந்துவிடும் பாருலகில்
தபசுசெய்த பேர்க்கு
பரனுடைய கிருபைமெத்த வுண்டாகும்
தெளிவான கண்ணே. (240)

நலமான நந்நபியின் பாக்கியந்தா
னென்று அழகான
நன்மையுள்ள முஹிப்பீத்தீனின் நாமத்தையும்
போற்றிடுவாய் நலமே. (241)

குறைவில்லாத செல்வமதை வல்லவனுங்
கொடுத்திடுவான் மேன்மை
குதறத்தையும் அறிந்தபெரி யோர்களுக்கு
இந்நிலைதான் கிடைக்கும். (242)

தெளிவான ஜம்ஹூத்தின் மாளிகையில்
மலரதுவும் விரிந்து
செல்வமுள்ள ஆயிரத்தெண் மலரதுவுங்
காணுமிது வுண்மை. (243)

அருள்மகாமன் மஹ்மூதுப் பதிதலந்தான்
புருவமத்தி யான
அலங்கார மண்டபத்தில் முச்சுடரின்
திலங்கும்ஒளி வாக. (244)

பொருளாகச் சொன்னதெல்லாம் பூதலத்தி
லுள்ளபெரி யோர்கள்
புனிதமுடன் அறிந்துதவஞ் செய்தாக்கால்
ஆதிதீதார் காண்பார். (245)

தன்னையுமே அறியமுன்னே தெளிவில்லையே
அறிவுள்ளகண் மணியே
தலைவனென்ற இறையவனை அறிந்தவுடன்
இஸ்லாம்தான் உண்மை. (246)

அருளான ஞானவொளிவு அருமையாக
வுலகவர்க்கு வுரைத்தேன்
அன்புடனே யிந்நூலைத் தெளிவாகப்
பார்த்துமகிழ்ந் திருப்பீர். (247)

உற்றுலகி லுள்ளபெரி யோர்களே நூ
லில்பிழைதி ருத்தி
உகப்புடனே படித்திடுங்கள் நன்மையுடன்
கேட்டுக்கொண்டேன் சிறியோன். (248)

நான்சொன்ன நூலிற்பிழை யிருந்தாலு
மழகாகத் திருத்தி
நன்மையுடன் படித்தவர்க்கு நாயனவன்
நற்கதியும் கொடுப்பான். (249)

ஆலமெல்லாம் புகழுகின்ற வல்லவனே
என்பிழையைப் பொறுத்து
அலங்கார மானபிறு தௌஸூதனிற்
சேர்த்திடுவாய் றஹ்மான். (250)

மூமீன்கள் முஸ்லிம்கள் முறையான
பெரியோர்க ளனைத்தும்
முதலோனே நல்வழியிற் சேர்த்திடுவாய்
தவறாமல் அழகாய். (251)

எந்தனையும் தந்தைதாயும் என்பிறவி
சேய்களையும் றப்பே



இன்பமுள்ள என்குருமார் சீஷரையும்
நல்வழிசே ரிறையே. (252)

வல்லவனே கவியிற்பிழை சொற்பிழைக
ளனைத்தையும்நீ பொறுப்பாய்
மங்காத மணிவிளக்கே நல்லருளை
எந்தனக்குத் தருவாய். (253)

கலீபத்து ஷெய்குஷாஹுல் ஹமீதவன்யான்
சிறியவனும் உரைத்த
கனமான ஞானஒளிவு துலங்கிநிற்க
வுதவிசெய்யென் னிறையே. (254)

ஆலமெல்லாம் படைத்தாளும் ஆதிபெரி
யோனேயெனைக் காத்து
அருளான கலிமாவின் தவமதிலே
சேர்த்திடுவாய் ஆமீன். (255)

ஞானஒளிவு முற்றிற்று.

## ஞானப் பிரகாசம்.

இராகம் : காம்போதி—ஆதி தாளம்.

காயமு மென்னநிலை கண்ணே—நிதம்
ஹக்கனை மறக்காம லெண்ணே
மாயமாய்ப் போகுமுன்னே நீயும்—நன்மை
மாதவம் செய்திடுவாய் சொன்னேன். (1)

மக்கள்பெண் டுவீடிருந் தென்ன—நாளை
வருகுமோ வுனக்கதி லென்ன
சக்கில்லை யிதுஉண்மை சொன்னேன்—நிதம்
தற்பரனைத்தொழுவாய் கண்ணே. (2)

வானம் பூமியுங்கடல் மலையும்—கதிர்
மதியும்தா ரைகள்இன்னும் பலதும்

தானவ னமைத்தானே நமக்காய்—அந்தத்
தாபர னைத்தொழுதா லறிவாய். (3)

முச்சுடர் கண்டுவனு தினமும்—கண்ணே
முறையாகத் தொழுதுக்கொள் நலமாய்
அச்சுதனைக் காணாப்பெரும் பாவி—கெடு
அழல்நர கேகுவார்கள் பெலமாய். (4)

காசாசை பணம்பொரு ளென்று—நீயும்
கவலை கொள்ளுகிறாயே நன்றோ
தோசமும் துன்டங்களும் நீக்கி—மேன்மைச்
சுத்தனைத் தொழுகுவாய் நலமே. (5)

பூரண முச்சுடரைக் கண்டு—தினம்
புகழ்ந்தவர் பெரியோர்கள் மேன்மை
காரணச் சொற்கமதில் வைப்பான்—ஆதி
அனமுள்ள பேர்களைநல் லழகாய். (6)

காடு மலைபோய்த்திரிந் தாலும்—நாயன்
காட்சியைக் கண்டுதெளி வாரோ
கூடுதனிற் பூட்டையும் உடைத்த—மாந்தர்
குலமான தங்கமாவார் அறிவாய். (7)

ஜெகத்தி லுள்ள ஆலய மெல்லாம்—நீயும்
திரிந்ததால் தவமாமோ கண்ணே
அகத்தினி லிருக்கும்நம் மாதி—தன்னை
அறிந்தாலோ மோட்சநிலை காண்பாய். (8)

சாஸ்திர வேதமறிந் தாப்போல்—ஞானம்
சங்கையாய்ப் பேசுவானே வீணன்
சூஸ்திரந் தானறிந்த பெரியோர்—நன்மை
சுயவேதம் ஓதுவாரே யழகாய். (9)

ராஜனாய்ப் பூவாண்டிருந் தாலும்—நாளை
நன்மை தவஞ்செய்யாரை நரகில்
நேசனும் போட்டுமிக வருத்தம்—செய்வான்
நிச்சய மறிந்துநீ தொழுவாய். (10)



பொய்கொலை களவுவீண் காமம்—மேன்மைப்
பொருள்தந்த குருநிந்தை நீக்கி
மெய்த்தவஞ் செய்துஎந்தன் கண்ணே—தினம்
விருப்பமாய் ஆதியைநீ தொழுவாய். (11)

யாரிருந் தாலும்நமக் கென்ன—இந்தப்
பாரினி லொன்றுமில்லை கண்ணே
கூரான ஆதியவன் துணையே—நித்தம்
குணமாகத் தான்தொழுவாய் நலமே. (12)

மூலத்தில் நின்றெழும்புஞ் சோதி—மேன்மை
முச்சுடர் கண்டுதொழு வாயே
காலனும் வந்தால்உயிர் வதைகள்—செய்யான்
கத்தனி னருளதி லாவாய். (13)

ஆசை பாசங்களைநீ நீக்கி—வல்லன்
அன்புள்ள ஆசையதிற் சேரே
நாசங்க ளோடிவிடும் விரைவாய்—நன்மை
நலமருளிற்சேருவாய் கண்ணே. (14)

எத்தனை காலமிருந் தாலும்—பூவில்
இறப்பது உண்மையறி யாயோ
சுத்தனைத் தொழுதுநல் வழியில்—ஆனால்
சுயமான சொற்கந்தன்னில் வாழ்வாய் (15)

சாடுக ளைகளெல்லாம் அலைந்து—வஸ்திரம்
காவியா யணிந்தாலுங் கதியோ
கூடுத னிலருளைக் கண்டு—நன்றாய்க்
குணமாக வணங்கிக்கொள் பரனை. (16)

கண்ணதைத் தானிறுக்கிக் காட்சி—கண்டு
கருத்தாக வணங்கிடு தெளிவாய்
கண்ணமு டியாநன்மை யுனக்கு—ஆதி
இறைபவன் தருவது நிசமே. (17)

மச்சு மாளிகைகூடம் கட்டி—நீயும்
வாழவே நினைக்கிறாய் சதமோ

சச்சிதா னந்தனையு மறிந்து—கண்ணே
சார்ந்து வணங்கமோக்ஷம் பெறுவாய். (18)

உப்பி ருக்கும்நீரிலே ரத்ன—முத்து
உண்மையா யிருக்குது அழகாய்
தப்பியெ டுத்துத்தின மதனை—நன்றாய்
தன்மையாய்ப் பார்த்துக்கொள் கண்ணே. (19)

சூரிய வட்டத்துள்ளே மேன்மை—மதி
சோமனும் இலங்குது அழகாய்
நேருடன் பூமலரைக் கண்டு—நித்தம்
நெடியோனைப் பூசித்துக்கொள் கண்ணே. (20)

அப்பென்ற நீரதனில் முத்தை—நன்றாய்
அன்புடன் தானெடுத்துப் பாரு
தப்பில்லா மலேநீயு மறிந்து—மேன்மை
தனியனைத் தான்தொழுவாய் கண்ணே. (21)

ஆதிய ஞதிஜோதி மூன்றும்—மேலே
அருமையா யிலங்குது அழகாய்
நீதமாய்ச் சுடர்மூன்று மறிந்து—நீயும்
நேர்மையாய்த் தொழுதுக்கொள் கண்ணே. (22)

தாய்தந்தை சேய்களிருந் தாலும்—நாளை
தனிவழி போகும்போது துணையோ
பேய்போலே திரிந்தலை யாமல்—பரன்
பேரின்பத் தவஞ்செய்தால் துணையே. (23)

கலியாப் பொருளதனை யறிந்து—நிதம்
கருத்துடன் தவஞ்செய்வாய் நலமே
சலியாமல் வணக்கம்நீ செய்தால்—தேகம்
தங்க மாகிவிடுமே யறிவாய். (24)

கட்டில்மெத் தைகள்பணங் காசுப்—நாளை
கடைவழிக் கிவருமோ அறிவாய்
மட்டியாய்த் திரியாமற் பரனை—நீயும்
வணங்கிட மோக்ஷமாதி தருவான். (25)



கதிர்மதி மலரிந்த மூன்றும்—நன்றாய்க்
கண்டு தெரிசித்தோர்க்கு நன்மை
மதியாயிம் முச்சுடர்மூன் றதையும்—கண்ணே
வணக்கமாய்த் தொழுதுக்கொள் மேன்மை. (26)

சக்கு இடையில்நின்று பார்த்து—அங்கே
சங்கை திருவொளிவைக் கண்டு
தக்கோன் நிறைந்தவனென் றெண்ணி—நீயும்
தன்மையாய்த் தெரிசிப்பாய்ப் பரனை. (27)

அம்பகந் தன்னையுமே யுருக்கி—பார்க்க
அருமை முத்துப்பவளம் பச்சை
சம்பூர ணமாகவே தெரியும்—அறிந்து
தற்பரனைத் தொழுவாய் நலமே. (28)

நாவைப் பிடித்திழுத்து நேரே—அண்
ணாவினி லொட்டிடுவாய் கண்ணே
மேவிய பூதமஞ்சு மொன்றும்—ஆதி
மேன்மைச் சக்கரம்நடு விலங்கும். (29)

மட்டில டங்காதமெய்ஞ் ஞானம்—அது
முட்டித்த தும்பியெழும் முனையில்
இட்டமாய்த் தானறிந்தால் வல்லன்—நம்மைச்
சிறப்புள்ள சொற்கமதிற் சேர்ப்பான். (30)

அஞ்செழுத் தானதென்ன அறிந்து—நன்மை
பிஞ்செழுத் தானதிலே யூன்று
நஞ்செழுத் தானசரம் ஏற்றி—நடுவில்
கொஞ்சிக் குலாவியருள் பாரே. (31)

ஆறுதாரம் மேல்மூல வீடு—அதில்
அணையாமல் தீபமிலங் குதுபார்
கூரதைத் தானறிந்த பெரியோர்—தன்னை
நேராகச் சொற்கமாதி சேர்ப்பான். (32)

நாலான பூரணம்நல் வீடு—அது
நலமாக இலங்குது அறிவாய்

காலென்ற பாதந்தொட்டுத் தினமும்—நீயும்
கனமாகத் தான்தொழுவாய் கண்ணே. (33)

தாத்துஸி பத்துமொன்றாய்க் கூடி—நிற்கும்
சமயம் அறிந்துநன்றாய்த் தொழுது
பார்த்து பாதம்பிடித்து வீழ்ந்து—துஆ
பண்பாகக் கேட்கப்பரன் தருவான். (34)

நாலைந்து வாசலையும் சாத்தி—நிற்க
நலமான கடலோசை யின்னும்
தூலத்துள் சங்குநாதத் தொனியும்—நன்றாய்
சுயமாகக் கேட்கும்அதை யறிவாய். (35)

கல்லையு ருக்கவொளி யதுவும்—ஏகக்
காரண மாகத்தோன்றும் தெளிவாய்
முல்லைமா மலர்கண்டு நன்றாய்—மேன்மை
முதலோனைத் தொழுதுக்கொள் கண்ணே. (36)

அஞ்சென்ற அம்புசரந்தன்னில்—நன்மை
அழகான கலிமாவை யேற்றி
கொஞ்சிக் குலாவிமஹுமூதில்—நிற்க
வஞ்சமில் லாப்பொருளைக் காண்பாய். (37)

வாழ்வ தற்குவகையைச் சொல்வேன்—கண்ணே
மகத்தான நடுஅமுதங் கொண்டால்
பாழான ஆசைமூன்றும் அற்று—நீயும்
பரம னருளிற்சேர்வாய் நலமே. (38)

மதியமு தானதை அறிந்த—நன்மை
மானிடர் கோடியிலே யொன்று
கதியான அமுதிறங்கி யுண்டால்—நீயும்
காரண மாகிடுவாய் கண்ணே. (39)

விதியறிந்தால்மதியை யறிவான்—மதி
வேகமாய்த் தேய்ந்தால்ரவி யமுதம்
கதியான வான்மதியி னமுதம்—அறிந்து
கனமுடன் உண்ணுவெந்தன் கண்ணே. (40)



கண்ணான கண்ணறிந்து ஊன்றி—நன்மை
காலறிந்து யோகமாய் நின்றால்
விண்ணான மதியமுதம் அருவி—பாயும்
மேன்மையா யருந்துவாய் நலமே. (41)

நன்மை மதியமுதம் மௌனம்—அப்பா
நாநிலத் தாரறியா ரிதனை
சொன்னாலும் தெரியாதிந்த மௌனம்—கண்ணே
தொட்டுக் காட்டினாலுடனே தெரியும். (42)

அம்பென்ற சரத்தையும் ஏற்றி—மேன்மை
அழகுநா வையண்ணாவி லொட்டு
சம்பூர்ண மாய்மத்தியில் பாரு—அமுதம்
தன்மையாயிறங்கும்நீ யருந்தே. (43)

ஞான மென்ன புருவ மையம்—பாரு
நலமுள்ள தீபவொளி துலங்கும்
வான மாகியவொளி தன்னில்—நன்மை
மதியமுத மிறங்கும்நீ அறிவாய். (44)

அமுதுண்டால் மாயையெல்லாந் தீயும்—நன்மை
அருளான யோகப்பயிர் விளையும்
கமல மலர்உருண்டு திரளும்—கண்ணே
காக்ஷிமுச் சுடர்காண்பாய் அழகாய். (45)

மதிரவி யின்சூஸ்திர மதனை—மேன்மை
மகத்தான குருசொன்னால் தெரியும்
கதியான சந்ரகலையை ரவியிற்—சேரு
கனமுள்ள பாலகனா யாவாய். (46)

கலீபத்து ஷெய்குஷாஹுல் ஹமீது—மொழிந்த
காரண ஞானப்பிர காசம்
சலிப்புத் துயரனைத்தும் நீக்கி—ஏகா
சம்பூர்ண வாழ்வுதருவாய் ஆமீன். (47)

ஞானப்பிரகாசம் முற்றிற்று.

## சூஸ்த்ர மெய்ஞ்ஞானம் பதினாறு.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

ஆதியென்ற பராபரத்தைப் போற்ற வேணும்
அருமையுடன் தான்தவங்கள் செய்ய வேணும்
நீதியுள்ள பூரணமே தெய்வம் தெய்வம்
நினைத்துநீ யனுதினமும் தொழுக வேணும்
ஜோதியுள்ள ஆண்டவனை வணங்க வேணும்
சுடர்விளக்கே யுலகுயிர்க ளமைத்த ஈசன்
வேதமது நான்குமா றாறு சாஸ்திரம்
விதவிதமாய் இறக்கிவைத்தான் ஏகன்தானே. (1)

ஏகபரா பரமேதான் தெய்வ மாகும்
இன்பமுடன் தெய்வமதை வணங்கி நில்லு
ஆகமென்ற தேகமதை மண் தின்னாது
அறிவுடையோ ரறிவார்கள் இந்த நூலை
தேகமது போகுமுன்னே யருளைப் பார்த்து
ஜெகத்திலே தவஞ்செய்தால் செல்வ னாவாய்
சாகரத்தில் மூழ்கிநிதம் அருமை கண்டோன்
சம்பூர்ண வொளிகாண்பான் நன்றாய்த் தானே. (2)

நன்றான சூட்சமெய்ஞ் ஞான மப்பா
நன்மையாய்ச் சொல்லுகிறேன் பதினா றாகும்
குன்றாத ஜோதியதை யறியாமல் தான்
குணங்கெட்ட மடையர்களும் உலகத் துள்ளே
அன்றாடம் உதித்தடையும் சூரியன் சந்த்ரன்
அதையுமே தெய்வமென்று வணங்கி நிற்பார்
நின்றெரியுந் தீபத்தை யுருவந் தன்னை
நிலையான தெய்வமென்றோர் கோடியாமே. (3)

நிலையான தெய்வமது ஆதி யந்தம்
நிச்சயமே அண்டபிண்ட மதுவே யாகும்
கலையான ரவிமதியும் அதுவே யாகும்
கனமான சத்திசிவ மதுவே யாகும்



சிலையான வுருவமது தெய்வ மாமோ
சிறப்பாக அதைநாமும் வணங்க லாமோ
பெலமான சச்சிதா னந்தன் தன்னை
பிரியமுடன் தவஞ்செய்தால் முத்தி தானே. (4)

தானான வாசியதின் விபரந் தன்னை
சங்கையுடன் சொல்லுகிறேன் அருமை யாக
ஊனுள்ள சடலமதுள் வருகும் போகும்
உகப்பான கண்மணியே அதுவும் வாசி
தேனுள்ள வானில்வரும் ரவிமதியுந் தான்
சிறப்பான வாசியது தெளிவாய்ச் சொன்னேன்
தீனான திருவாசி யறிந்து நித்தம்
சிந்தைதெளிந் திருந்துநன்றாய்த் தவஞ்செய் வாயே. (5)

சிந்தையது தெளிவில்லாப் பாவி யெல்லாம்
ஜெகத்திலே குருவென்றும் பெரியோ ரென்றும்
வந்திடுவார் ஞானமதைப் பேசிப்பேசி
வகைகெட்ட மூடரைப்போல் உளறி மெத்த
நொந்தமீன் போல்நாற்றம் மிகவுண்டாகும்
நுட்பமதை யறியாத பாவிகட்கு
சொந்தமுள்ள வீடிழந்து செத்தால் பின்னே
சுடுநரகந் தனில்சேர்வார் பாவி தானே. (6)

பாவியென்ற பாவியவன் உலகந் தன்னில்
பரிவான பெரியோர்கள் தன்னைக் கண்டால்
பூவிலே தானிருந்து நளினம் பேசி
புறம்பேசிப் பரிகாசஞ் செய்வா னப்பா
தீவினைகள் செய்யுகின்ற பாவிகட்கு
செகதலத்தில் நோய்கள் துன்பம் ஏகனீவான்
ஆவியது போகுமுன் முச்சுடரைக் கண்டு
அன்புதவஞ் செய்ஆசை யாகத் தானே. (7)

ஆசையுள்ள கண்மணியே யோகந் தன்னை
அனுதினமும் தான்செய்வாய் அருமை யாக
பாசமுள்ள பூரணந்தான் ஒன்றே தெய்வம்
பட்சமுடன் அதுதனைநீ வணங்கி நில்லு

நேசமுடன் அறிந்தவர்க்கு ஞானம் சித்தி
    நிச்சயத்தை யறியார்க்கு முத்தி யுண்டோ
வாசமுள்ள கருவதனி லமைத்து நன்றாய்
    வணங்கினோர்க் கருள்பெருகும் உண்மை தானே. (8)

உண்மையுள்ள ஆதிவஸ்தை யறியாமல் தான்
    உலகிலே நல்லோரைப் பழிப்பான் பாவி
கன்மமதைச் செய்யாதே வீண்பேச்சாகா
    கழிவாக எண்ணாதே யருளுள்ளோரை
திண்மையுள்ள பெரியோரைக் கண்டால் நீயும்
    செகத்திலே நல்விதமாய் வணங்கி நில்லு
பண்மையுள்ள ஏகனையும் தொழுது நீயும்
    பக்ஷமுடன் தவஞ்செய்தால் பலன்காண்பாயே. (9)

காணப்பா பூரித்து மேலே வாங்கி
    கனமான சுழிமுனையில் கும்பகமே செய்வாய்
பூணுவாய் சக்கதனில் நன்மை யாக
    புகழான இத்தவம்நீ அழகாய்ச் செய்வாய்
கோணாமல் ரேசகமே செய்வாய் கண்ணே
    குணமுடைய நல்வினைநல் ராஜ யோகம்
பேணியே யெட்டுடனே நாலைச் சேர்த்து
    பிசகாமற் சுழிமுனையில் அறிவாய் நில்லே. (10)

நில்லப்பா எட்டுடனே நாலைச் சேர்த்து
    நிச்சயமாய் ஊதியங்கே முனையில் நில்லு
நல்விதமாய் நீயுமங்கே நிற்கும் போது
    நன்மையுள்ள எட்டுநா லொன்றாய்க் கூடும்
சொல்வதற்கு அடங்காத பதியாம் மத்தி
    சூக்ஷமுள்ள பதியதுவும் பதினா றாகும்
அல்லலெல்லாம் நீக்கிவைக்கும் பதியதனில்
    அருளான ஆண்டவனைக் காணலாமே. (11)

அருளான பதினாறும் பதியே யாகும்
    அன்புடைய எட்டதுவும் குருவின் பாதம்
பொருளான நாலதுவும் உயிரே யாகும்
    புனிதமுள்ள பூரணமும் மூன்றே யாகும்



கருவான பதினாறில் எட்டு நாலை
    கனமாகச் சேர்ப்பவர்கள் மேலோ ராகும்
திருவொளிவை யனுதினமும காண்பார் வல்லோர்
    தெளிவாக நிச்சயம்நல் லருமை தானே. (12)

நிச்சயமாய்ச் சொல்லுகிறேன் அப்பா கேளு
    நீசமுள்ள பொய் கொலையும் களவு காமம்
பட்சமுள்ள அருள்குருவின் தோசம் ஐந்தும்
    பரிவுள்ள மோக்ஷத்துக்குக் கெடுத லாகும்
அச்சமுடன் ஆண்டவனைத் தொழுது கொள்ளு
    அடங்காத கோபத்தை யடக்கி வைப்பாய்
நச்சுள்ள சள்ளைதனை விலக்கி வைத்து
    நல்வனையு மனுதினமும் வணங்குவாயே. (13)

வணங்குவாய் கலிமாவைச் சரத்தி லேற்றி
    வளமுடனே விழியதனை யடைத்துப் பாரு
குணமான சுழிமுனையிற் சரத்தை நாட்டி
    குறிப்பாக நோக்கியங்கே பார்க்கும் போது
மணமான ஜோதியது துலங்கும் நேரே
    வரிசையுடன் பார்த்திடவே கண்கள் கூசும்
கனமாக வுலகமெங்கும் ஒளிவாய்த் தோன்றும்
    காக்ஷிதனைத் தானறிந்து தவத்தைச் செய்யே. (14)

தானான ஆதியவன் கடவு ளாகும்
    தன்மைமுச் சுடருமொன்றாய்க் கூடும் போது
தீனான கருப்பிடித்துக் கலிமாத் தன்னை
    ஜெயமாக நாட்டியதில் உறைப்பாய் நன்றாய்
கோனான பரமகுரு மௌனி சொன்னேன்
    குவலயத்தில் லக்ஷத்தில் ஒருவருண்டு
தேனுள்ள பூரணத்தின் நிலையை லேசாய்
    சிறப்புடைய கண்மணிதான் சொல்லார் முத்தே. (15)

முத்தாக யானுரைத்தேன் ஈரெட் டாக
    முறையான சூத்திரமெய்ஞ் ஞானந் தன்னை
கத்தனே கலீபத்து ஷெய்கு ஷாஹுல்
    ஹமீதப்பா வானவனைக் காப்பாய் ஏகா

சித்தனே நல்லருளை யெனக்குத் தந்து
சிறப்பாகச் சுவனபதி தன்னிற் சேர்ப்பாய்
அத்தனே யனுதினமும் குறைவில் லாமல்
அருமைமுச் சுடர்காண அருள்செய்வாயே. (16)

சூஸ்த்ர மெய்ஞ்ஞானம் பதினாறு முற்றிற்று.

## நபிநாயகம் அவர்கள்பேரில் முனாஜாத்து.

கோச்சகப்பா இன்னிசை.

அஹதானநல்லொளியில் அன்பாயிலங்கிவந்த
உஹதானமேன்மைபெற்ற வுண்மையுள்ளகாஸீமே
தகுதியுள்ளமுச்சுடரைத் தன்மையாய்யானறிய
மிகுதியாய்க்கிருபைசெய்வீர் வேந்தர்தாஹாநந்நபியே. (1)

பகுமானநல்லறிவைப் பாரிலுள்ள மானிடர்க்குத்
தகுதியுடனேயுரைத்துத் தன்மையுள்ளகலிமாவை
செகமெல்லாந்தீன் துலங்கச் செப்பிவைத்தகண்மணியே
அகக்கண் திறக்கச்செய்து அருள்வீர்தாஹாநந்நபியே. (2)

தாரைதனைச்சாத்தி சம்பூர்ணமாயிறுக்கிப்
பேறுனமஹ்மூதிற் பிசகாமல்நோக்கிடவே
நேரானமுச்சுடராய் நீதமாய்வந்தமுத்தே
சீரானகண் திறக்கச் செய்வீர்தாஹாநந்நபியே. (3)

தாஸீமேசங்கையுள்ள தன்மையொளிஜோதிதன்னில்
வாசமாய்வந்தரத்ன வன்னிமலர்மாக்கொழுந்தே
வாசியென்றநீதமதை வழியோடறிந்துநிதம்
தேசிகனைக்காண அருட் செய்வீர்தாஹாநந்நபியே. (4)

ஜெயமானமேன்மைபெற்ற செல்வமேமாக்கனியே
நயமானகலிமாவை நலமாய்நிதமறிந்து
பயமுடனேயாதிதன்னைப் பண்பாகயான்தொழுக
தயவுசெய்து அருளெனக்குத் தருவீர்தாஹாநந்நபியே. (5)



கருவானநன்மையுள்ள கண்மணியேரத்தினமே
திருவொளியில்வந்துதித்த சிறப்பானமாமலரே
குருவேயருளான குணமானமுச்சுடருஞ்
சரியாகவரவுதவி தருவீர்தாஹாநந்நபியே. (6)

காவலன்தூதரான கண்மணியேநற்குருவே
பூவுலகில்மாயையெல்லாம் புண்ணியரேநீக்கிவைத்து
மாவானதேன்கலிமா வளமுடனேயானறிந்து
ஆவலுடனேதொழுக அருட்தாஹாநந்நபியே. (7)

தண்மையுள்ளமாமதியின் சம்பூர்ணவானொளியில்
வண்மையாய்வந்திலங்கும் வரிசையுள்ளநல்லொளிவே
திண்மையுள்ளகாரணரே சிறப்பானமுச்சுடரைக்
கண்மணியேயறியவருள் காரும்தாஹாநந்நபியே. (8)

தாத்தொளியில்வந்துதித்த தன்மையுள்ளசற்குருவே
பூத்தமலர்வாசனையைப் புகழாயனுதினமும்
நேத்திரத்தினூடுகண்டு நேர்மையாய்தொழுகவருள்
காத்திமுல்லன்பியாவே காரும்தாஹாநந்நபியே. (9)

றஹ்மானின்தூதரான நன்மையேயாஸீனே
பகுமானநல்லறிவைப் பண்புடனேதந்துநிதந்
தகுதியுள்ளமுச்சுடரைச் சங்கையுடன்யான்காண
மகிமையேகிருபைசெய்வீர் வள்ளல்தாஹாநந்நபியே. (10)

ஸீனதுள்ளகண்மணியே சிறப்பானபூரணமே
வானொளியில்வந்திறங்கும் மதியமுதப்பாற்கடலே
தானமென்றதவமஞ்சையுஞ் சங்கையாய்யானறிய
ஈனனுக்கருள்தருவீர் ஏகன்தாஹாநந்நபியே. (11)

சங்கையுள்ளமக்கமதில் தன்மையாய்வந்தமுத்தே
மங்கைஆமினாள்பாலரே வரிசையுள்ளரத்தினமே
எங்கும்புகழ்பெற்றநன்மை இறஸூல்முஹம்மதுவே
தங்கள்ஷபாஅத்திற்சேரும் சங்கைதாஹாநந்நபியே. (12)

சூக்ஷமுள்ளகாரணத்திற் சுயமாகநின்றிலங்கும்
காக்ஷியையான்பார்த்துநித்தங் கலிதீரநல்லருளை

மாக்ஷிமைதங்கியநன்மை மன்னன்தூதரேமதீனா
ஆக்ஷிசெய்யும்காரணரே யருள்தாஹாநந்நபியே. (13)

ஸாலிஹீனானவர்க்குத் தங்கமணிரத்தினமே
காலானுயர்த்தியிரு கண்ணிடையில்தாக்கிநிற்க
நீலவட்டமாகவந்த நேர்மையுள்ளமாமதியே
தாலமதிற்காத்தருளைத் தாருந்தாஹாநந்நபியே. (14)

வாகானஷரீஅத்ததை வண்மையுடன்நல்லறிவாய்
ஆகமமாய்த்தானுரைத்த அப்துல்லாபாலகரே
மோகதாபங்களான மோசமென்றமாயையெல்லாம்
ஆகமதில்அணுகாம லருள்தாஹாநந்நபியே. (15)

தபீஅத்தாகியநெருப்பு தன்மையுள்ளகாரணத்தின்
ஹபீபிறஸூல்கண்மணியே கனலணுகாமற்காத்து
தபசானதவமதனைச் சம்பூர்ணமாகவருள்
நபிகட்கெல்லாம்நாயகமே நன்மைதாஹாநந்நபியே. (16)

வாகானலாஹிறதின் வகையானசூக்ஷமதை
பாகானபாலதுபோற் பண்பாய்ப்புகட்டிவைத்த
வாகானநாயகமே வரிசைபொளிவைக்கண்டு
சாகாமற்சாகவருள் தாருந்தாஹாநந்நபியே. (17)

ஐனானஐன்கலிமா அறியவுதவிசெய்யும்
ஐனானகண்மணியே அலிமா அமுதுவுண்ட
ஐனானநாயகமே அலிபுலாமீமான
ஐன்கலிமாக்கண்டுதொழ வருள்தாஹாநந்நபியே. (18)

கனியவன்தானுகந்த கண்மணியேகாரணமே
தனியனின்நுபுவ்வத்தது தங்கியநல்மாமதியே
முனையானமத்திதன்னில் முச்சுடரையானறிய
வினைநீக்கியருள்தருவீர் வேந்தர்தாஹாநந்நபியே. (19)

பலமுள்ளபேரின்பப் பாற்கடலேதெள்ளமுதே
நலமானநாயகமே நாநிலத்தில்மாயைவினை
குலைந்தோடக்கிருபைசெய்வீர் கோமான்திருத்தூதரே
சலிகையொளிகாணவருள் தாருந்தாஹாநந்நபியே. (20)



கருப்பொருளானகுரு காரணத்தின்நல்லொளிவே
மருவானவாசமுள்ள மங்காமணிவிளக்கே
திருவருளின் முச்சுடரைத் தெளிவாகயான்காண
விருப்பமுடன்கிருபைசெய்வீர் வேந்தர்தாஹாநந்நபியே. (21)

கசடானஇருள்மாயைக் கன்மமெல்லாம்நீக்கிவைத்து
நிசமானமெய்ப்பொருளை நித்தியமுங்கண்டுதொழ
பசையானமதீனாவின் பதியானநாயகமே
பிசகில்லாமற்காரும் பெரியோன்தாஹாநந்நபியே. (22)

லாமலிபுமீமாய் நடுவிலேநின்றெரியும்
ஹாமீமாய்வந்தமுத்தே கருப்பொருளானசித்தே
தாமதங்களில்லாமற் றன்மையுள்ளதீபமதை
நேமமுடன்காணவருள் நீதர்தாஹாநந்நபியே. (23)

மதியானபூரணமே மௌனமுள்ளமெய்ச்சுடரே
பதியானமஹ்மூதிற் பார்க்கவருளாகநிற்கும்
கதியானசுருமாவின் கனவொளிவாய் வந்தமுத்தே
விதிசுடரையறியவருள் வேந்தர்தாஹாநந்நபியே. (24)

நாயகமேயெல்லா நபிகளுக்கெல்லாமரசே
தாயமுள்ளநற்பொருளே தங்கமேதீன்விளக்கே
காயமதுஅழியாமற் கலிமாவையானறிந்து
நேயமாய்வணங்கவருள் நீதர்தாஹாநந்நபியே. (25)

வானென்றஜோதியினுள் மதியமுதமாகவந்த
தேனானகாரணரே செம்மல்முஹம்மதுவே
தீனென்றமுச்சுடரைத் தெளிவாகயானறிய
கோனேகிருபைவருள் கோமான்தாஹாநந்நபியே. (26)

கண்ணின்மணியேமலரே கருவேநற்பூரணமே
விண்ணொளிவோத்தினமே வேந்தன்திருவிளக்கே
நிண்ணயம்நற்சரமதனை நிரப்பமாய்ஏற்றியிரு
கண்ணின்நடுபார்க்கவருள் காஸீம்தாஹாநந்நபியே. (27)

லாமலிபானமூச்சை நலமாகத்தானேற்றித்
தாமதமில்லாமலிரு தாரையினிடைநிறுத்தி

நேமமுடன்பார்க்கநிதம் நீதமுச்சுடர்துலங்க
ஹாமீமேநல்லருள்செய் ஹாஷீம்தாஹாநந்நபியே. (28)

எந்தனையும்பிர்களையும் இன்பமுரீதுகளையுஞ்
சொந்தமுள்ளதாய்தந்தை சுந்தரப்பிறவிஎல்லாம்
கந்தமுள்ளஷபாஅதிற் கரைசேர்ப்பீர்நாயகமே
அந்தமுள்ள ஹாமீமே அருள்தாஹாநந்நபியே. (29)

தத்துவத்தின்மாயைகாமம் சகலதுன்பமும்நீக்கிச்
சித்தானமுச்சுடரைத் தெரிசிக்கஅருள்தருவீர்
புத்தியுள்ளபாற்கடலே பொற்பதியேமதியுமதே
நித்தியம்அருளைத்தரும் நீதர்தாஹாநந்நபியே. (30)

பாரினிற்பாவிசெய்த பாரமுள்ளபிழையனைத்துங்
கூர்மையுள்ளநாயகமே குற்றமெல்லாந்தான்பொறுத்துச்
சீரானநற்கலிமா செல்வமதிலாசைகொள்ள
வீறுமயல்நீக்கியருள் வேந்தர்தாஹாநந்நபியே. (31)

கலீபத்துஷெய்குஷாஹுல் ஹமீதுஅப்பா தாஜுத்தீன்
நலமாய்முனாஜாத்தை நன்மையுடன்தானுரைத்தேன்
பெலமானநாயகமே பிழைபனைத்துந்தான்பொறுத்துக்
கலிமாவின்நேர்மைதந்து காருந்தாஹாநந்நபியே. (32)

படிப்பவர்க்கும்கேட்பவர்க்கும் பலனறிந்தயாவருக்கும்
திடமுடையதீன்கலிமா திறமதனைத்தான்கொடுத்து
கடிகமழும்வாசமுள்ள கனமானசொற்கமதில்
அடியனையும்சேர்த்திடுவீர் அன்புதாஹாநந்நபியே. (33)

நபிநாயகம் அவர்கள் முனாஜாத்து முற்றிற்று.

---



## வேதத் திருப்புகழ்ச்சி.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

அத்தனே அரும்பொருளே யேகனான
  அன்புடைய வல்லவனே அருளே நன்மை
சுத்தனே பழம்பொருளே சுயமே ஞானச்
  சுடர்மணியே தீபவொளி ஜோதி யான
நித்தனே அருளொளியே அடிமை தன்னை
  நேர்மையாய் முற்றும்வரை யிரங்கிக் காத்து
கத்தனே நற்றிருவா யமுதந் தன்னை
  கருவாகத் தருவாயென் தலைமையேகா. (1)

தலைவரவர் ஹாறூத்து மாறூத்து தாமும்
  தன்மையுள்ள விருப்பமதை வெறுத்தே யெண்ணம்
கலைந்திடவே கள்ளுண்டு பிதற்ற மாது
  ஹக்கனேயுன் னடைக்கலந்தா னென்று கூற
மலைவில்லா இறையவனும் அறிந்து அங்கண்
  மாதுதுயர் தீர்த்துவைத்த வல்ல கோனே
சலிகையுள்ள ராஜமக ராஜா வுன்னைத்
  தரணிதன்னில் மறந்தவர்தான் மதிகெட்டோரே. (2)

ஆதமுடன் ஹவ்வாவை சுவனம் விட்டு
  அன்புடனே இறக்கிடவே அவனி தன்னில்
நீதமுள்ள பெரியவனே கஷ்டம் நீக்கி
  நெடியவனே யெங்கள்பிழை பொறுப்பா யென்று
தோதகமாய் அலறிடவே கண்டி ரங்கி
  சுயமான மெய்ப்பொருளாய் நின்று அங்கண்
வேதனே துயர்தீர்த்த அரசே யுன்னை
  மேதினியில் மறந்தவர்தான் மதிகெட்டோரே. (3)

மிகுதியாய்ப் புனலதுவும் பொங்க நூஹு
  மேன்மைதரும் வல்லவனே ஆகாயத்தில்
தகுதியுள்ள காற்றுனைமற் கிருபை செய்நற்
  றன்மையாய் துலுகிரந்துன் னமான மென்க

பகுதியுள்ள தாரையதின் நடுவதாக
பளபளெனச் சுடரொளிவா யிலங்கி வந்து
நகையாகக் கிருபைசெய்த அரசே யுன்னை
நாநிலத்தில் மறந்தவர்தான் மதிகெட்டோரே. (4)

கெடுதிசெய்யும் பிறஔனும் செய்யுந் தோஷம்
கெடுதியில்லா மூஸாவும் விதனத்தாலே
அடிமுடிவு மில்லாத நாயனே யுன்
னடைக்கலம்யா னென்றுசொல்லி யிருக்கு மந்நாள்
மடிந்திடவே குபிரான பிறஔனைத் தான்
மாய்த்தசிறப் புடையோனே வல்ல னேகா
இடுக்கமுள்ள துயர்தீர்த்த இறைவா வுன்னை
இவ்வுலகில் மறந்தவர்தான் மதிகெட்டோரே. (5)

தெளிவுள்ள இபுறுஹீம் நபியைத் தானும்
தீவினைகள் நம்றூது செய்ய அன்று
அழிவில்லா ஞதியேநீ யெனக் கிரங்கி
அன்புடனே காத்திடென்று துஆ விரக்க
பொழிவாகக் குளிர்ந்துமலர் வீசுந் தென்றல்
புனிதமுடன் நீர்சொரிய வுதவி செய்த
பழிப்பில்லாப் பழம்பொருளே அருளே யுன்னை
பார்தனிலே மறந்தவர்தான் மதிகெட்டோரே. (6)

திரைகடலின் கயலதுவும் யூனுசைத் தான்
தீவிரமாய்ப் பிடித்துமே விழுங்கும் நேரம்
அருமையே ஏகபெரி யோனே றப்பே
அடைக்கலம்மீன் வயிற்றிலுந்தன் காவ லென்க
கருவாகக் கமலத்து டெழுந்து மேன்மை
கனமான சுடரொளிவா யிலங்கியங்கண்
அருந்துயரை தீர்த்துவைத்த அரசே யுன்னை
அகிலமதில் மறந்தவர்தான் மதிகெட்டோரே. (7

தன்மையுள்ள யூஸுபைத் தமையருந் தான்
தாழைமுள் ளொடித்துநல் லடித்து வீசி
திண்மையுள்ள கேணியதில் தள்ளும் போது
சிறப்புடைய நாயனேயுன் காவ லென்று



வண்ணமுடன் அலறிடநற் சுடராய் வந்து
வளமுடனே ஏழையென் றிரங்கிக் காத்து
நன்மையாய்க் கிருபைசெய்த இறையே யுன்னை
நாநிலத்தில் மறந்தவர்தான் மதிகெட்டோரே. (8)

இப்படிப்போல் நீபடைத்த வுயிர்கட் கென்றும்
இறையவனே அழகுநன்மை யீந்த வல்லன்
அப்படிப்போல் அருந்துயரம் மிடிமை மாயை
அனைத்தையுமே நீக்கியேநல் நினைவைத் தந்து
மெய்ப்பொருளே பசிதூக்கம் கெடுநினைப்பும்
மேலவனே நீக்கிவைத்து எனக் கிரங்கி
தப்படியான் செய்தபிழை யனைத்தும் போக்கி
தலீலதனைத் தந்தருள்வாய் தம்பிரானே. (9)

தம்பிரா னென்றபழம் பொருளே யாதி
தனியனே யெளிமைகண்டு இரங்கும் நீதா
அன்புடைய அடியவர்க்கு இன்பம் மேன்மை
அருள்செய்யும் ஆண்டவனீ பாவி யென்னை
நண்பாகக் காத்துநன்மை யருளைத் தந்து
நலமான முச்சுடருந் தெளிவாய்க் காண
துன்பவினை கெடுதியெண்ணம் கோபம் நீக்கி
சுத்தனே கிருபைசெய்வாய் நலமாய்த் தானே. (10)

நலமான வல்லவனே யுலகந் தன்னில்
நாயனே யானும்ஒரு கொடிய பாவி
பெலமான பாவியைப்போ லுலகி லில்லை
பெரிதான பாவமெல்லாம் செய்ததோசி
குலமான இறையவனே பாவிசெய்த
கொடூரமுள்ள குற்றமெல்லாம் நீபொறுத்து
இலக்கமுள்ள யோகனேயுன் பொருத்தந் தன்னில்
இயல்புகெட்ட பாவியைச்சேர் ஆதி நீயே. (11)

ஆதியே யெனைப்படைத்த இறைவன் நீயே
அருந்துயர மனைத்தையும்நீ யெனக்கு நீக்கு
நீதியே யுனைத்தவிர யாரு முண்டோ
நேர்மையுள்ள ஏகனேயுன் தஞ்சம்தஞ்சம்

பாதகன்யான் கேட்டதுஆ வெல்லாம் என்னைப்
படைத்தோனே கையேற்றுக் கிருபை செய்வாய்
வேதத்திருப் புகழ்ச்சியாய் மேன்மை யாக
வேந்தனே யுனைப்புகழ்ந்தேன் நலமாய்த் தானே. (12)

நலமான வல்லவனும் உனையல்லாது
நானிலத்தில் வேறுவொரு நாயனுண்டோ
பெலனான றஹ்மானும் நீயே யாகும்
பிசகறுத்துக் கிருபைசெய்யும் ஆதி நீயே
கலீபத்து ஷெய்குஷாஹுல் ஹமீதை
கனமான அருளதனில் நிரப்ப மாக்கி
தலமான நன்மையுள்ள சொற்கந் தன்னில்
தன்மையுடன் சேர்த்துவைப்பாய் நிகரில்லானே. (13)

வேதத்திருப்புகழ்ச்சி முற்றிற்று.

ஹாமீம்

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

# ஞானவேதாந்தம்.

## ஞானவுபதேசம் இருபத்திரண்டு.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

ஆதியே பொற்பதமே அருமை யுள்ள
அன்புடைய தற்பரனே ஏகனான
ஜோதியே குருபரனே நன்மை வல்லச்
சுடர்மணியே தீபவொளி வடிவுள்ளோனே
நீதியே வுலகமெங்கும் புகழுகின்ற
நேர்மையுள்ள அருட்கடலே கெடுதியான
தீதுடைய இருள்நீக்கி வணங்க மேன்மை
சிறப்பருளைத் தாவெனக்குக் காப்புத் தானே. (1)

தானான ராசிபனி ரண்டி லப்பா
தன்மையுள்ள துலாராசி யுயர்ந்த ராசி
கோனான ராசியுள்ளோன் ஞானி யாவான்
கூர்மையுள்ள துலாராசி யாயி ருந்து
தேனான சுக்கிரனுந் துலாத்தில் தானே
திறமாகத் தானிருந்தால் சகலசித்தாம்
வீணாகத் திரிந்தாலுந் திரிய வொட்டா
வேதாந்த சிவயோகி யாவான் பாரே. (2)

யோகமுடன் காயசித்தி வாத சித்தி
யுயர்ந்துநின்ற வாசிசித்தி ராஜ யோகி
ஆகமென்ற சடமதுவும் அழியா வாழ்க்கை
அன்பான தவமுடையோன் அருளு முள்ளோன்

தேகமதைப் புவிதனிலே வைத்தாலுந் தான்
    தீண்டாது மண்ணதுவுந் திரேகந் தங்கம்
வேகமுள்ள தவமதனை நித்தஞ் செய்தோர்
    மேன்மைபெற்று வாழ்வார்கள் சொற்கந் தானே. (3)

தானான துலாராசிக் காரனப்பா
    தன்மையுள்ள ஆண்பிள்ளைச் சிங்க மாகும்
தேனான ஆண்பிள்ளை யாரென்றாக்கால்
    திறமான தவஞ்செய்தோன் செல்வப் பிள்ளை
கோனான குருவிடத்தில் தீட்சை பெற்று
    குணமாகத் தவக்கெடுத லனைத்தும் நீக்கி
தீனமதை விட்டுமுச் சுடரைக் கண்டு
    தெளிவாகப் பிராணாயாமம் செய்வாய் நீயே. (4)

தெளிவாகப் பிராணாயாமஞ் செய்த பேர்க்கு
    திறமாக முதல்வருஷம் நடக்குஞ் சித்து
வழியான தாதுவெல்லாஞ் சுத்தி யாகும்
    வாகாகப் பழக்கஞ்செய் முனையில் நின்று
பழிப்பில்லா லட்சியத்தைத் தொட்டுத் தொட்டு
    பரிவாக ஏற்றமிறக்கஞ் செய்தோன் யோகி
அழிம்பதனை நீக்கிப்பிரா ணாயாமஞ் செய்வாய்
    அன்பனே இரண்டதனில் விபரங் கேளே. (5)

கேளப்பா பிராணாயாமஞ் செய்யும் போது
    கிளம்பியே வேர்வையது வடியு மப்பா
பாழான சடத்திலுள்ள தோஷ மெல்லாம்
    பரிவாக வெளியாகும் நெய்யைப் போலே
மாளாமல் மாண்டு வருள் தவத்தைச் செய்தால்
    வளமான மூன்றிலே திரைகள் நீங்கும்
தேளான கொடியவிஷ நோயனைத்தும்
    திறமாக நீறிப்போம் நாலில் தானே. (6)

தானான ஐந்திலருள் தவத்தைச் செய்தால்
    தன்மையுள்ள தேகமதில் கசடு நீங்கும்



தேனான திரேகமது ஒளிவு போலே
    சிவப்பாகும் நேத்திரங்கள் தேகம் சித்தி
கோனான தவமெல்லாம் சிறக்கு மப்பா
    குணமாகக் கேட்டதெல்லாம் நடக்குங் கண்ணே
மானான ஆறில்நின்று தவத்தைச் செய்தால் (7)
    வாகுடனே தூரதிஷ்டி தோன்றும் பாரே.

பாரப்பா சடமதிலே திரையும் நீங்கும்
    பரிவாக வினைமுழுதும் அகன்று போகும்
கூரான பூட்டுடைந்து அருளுந் தோன்றும்
    கூர்மையுள்ள முச்சுடருந் தெளிவாய்க் காணும்
நேரான மதிதேய்ந்து ரவியா யோடும்
    நிரப்பமாய்த் திரையெல்லாம் விலகிப் போகும்
சீரான ஏழில்நின்று தவஞ்செய்தாக்கால் (8)
    செல்வனே சடமதுவும் மதிபோலாமே.

மதியான சடமதுவும் பிரகாசிக்கும்
    மகத்தான வருளதுவும் துலங்கி நிற்கும்
கதியான எட்டில்நின்று தவஞ்செய் தாக்கால்
    கனமான சடமதுவைத் தூக்கும் பாரு
விதியாக நினைத்ததெல்லாம் அப்படியே யாகும்
    மேன்மையுள்ள தவமிதுவே யாகு மப்பா
பதிவான அருளிதுதான் வேறே இல்லை (9)
    பரிவுள்ள கண்மணியே அறிவிற் கூடே.

அறிவுடனே ஒன்பதிலே நின்று நீயும்
    அன்பாகத் தவமதனைச் செய்தா லப்பா
நெறியாகச் சடமதுதான் ஒளிவாய் நிற்கும்
    நேர்மையுள்ள திரேகமது அழிந்திடாது
குறியான புருவமத்தி தன்னில் நின்றால்
    குணமுடைய முச்சுடருந் துலங்கி நிற்கும்
பரிவாக எங்குமீ தானே யாகும் (10)
    பாங்குடனே சகலசித்தும் சித்தியாமே.

சித்தியடா ஈரஞ்சில் நின்று நீயும்
சிறப்புடனே தவஞ்செய்தால் அழியாத் தேகம்
முத்தியடா சடமதுவும் பிரகாசிக்கும்
முறையான தவமதனைச் செய்வாய் கண்ணே
நத்துதலாய்ச் செய்தவர்க்கு வாதஞ் சித்தி
நலமான காயசித்தி வாசி சித்தி
தத்துவங்கள் தொண்ணூற்று ஆறு மப்பா
தானடங்கி நற்சென்மம் ஆவாய் தானே. (11)

நற்பலனி லாவதற்குத் தவமே வேணும்
நலமில்லாப் பாவத்தை நீக்க வேணும்
பொற்பதத்தை யறிந்தவர்கள் பாவஞ் செய்யார்
பூரணமாய்த் தவஞ்செய்வார் மௌனி யாக
தற்பரனை மௌனமா யிருந்து கொண்டு
தன்மைவற்ற மிறக்கமும் கலிமா வாலே
நற்பொருளின் தவமதனைச் செய்வார் நன்றாய்
நாதாக்க ளென்பதுவும் இவர்கள் தானே. (12)

நாதாக்கள் எந்தவிட மிருந்தாலுந் தான்
நலமழிக்கும் வினைகளொன்று மணுகிடாது
நீதமுட னவர்களையும் நித்தங் கண்டு
நிரப்பமாய்ப் போற்றிசெய்வாய் கண்ணே யப்பா
வேதமுறை யறிந்துதவம் யாரு செய்வார்
மேன்மையுள்ள யோகிசெய்வார் அன்பாய்த் தானே
போதமருள் ஞானவுப தேசந் தன்னை
பூரணமாய் அன்புடனே இன்னுங் கேளே. (13)

அன்பான அருள்தவத்தி லாவதற்கு
அருமையுள்ள வாசிதனை மேலே வாங்கி
இன்பமருள் நெற்றிக்கண் ணதிலே யூன்றி
இயல்புடனே இருவாசல் சாத்தி நிற்க
நண்புள்ள முச்சுடருந் தெளிவாய்க் காணும்
நலமான முப்பூவும் மூன்றே யாகும்
துன்பமறும் முச்சுடரைக் கண்ட பேர்க்கு
சுயமான வருளதுவும் முப்பூ வாமே. (14)



முப்பூவைக் கண்டறிந்தோன் மௌன யோகி
மூடமனத் தகத்தழுக்கை யறுத்தோன் ஞானி
அப்பூவைக் கண்டுபதம் பணிந்து தூங்கி
ஆனந்த மாகநின்றோர் ராஜ யோகி
தப்புள்ள செயலனைத்தும் அதட்டித் தள்ளி
தன்மையில்லாப் பெண்போக மதனை நீக்கி
எப்பொழுதும் ஓர்நினைவாய்ப் பரத்தை நோக்கி
இருந்துதவஞ் செய்வதுவே தபசு தானே. (15)

தானான ஞானவுப தேசம் நன்றாய்
தன்மையாய் யானுரைத்தேன் இன்ப மாக
தேனான இந்நூலை யுணர்ந்து பாரு
திறமாகக் காரணங்க ளனைத்துஞ் சொன்னேன்
கோனான வருள்குருவே தங்கமப்பா
குவலயத்தி லலைந்தலைந்து தேடினாலும்
காணுமோ கோடியிலே ஒருவ ருண்டு
கண்டுஅவர் பதம்பணிந்து நிலையில் நில்லே. (16)

நில்லப்பா அவரிடத்தில் தீட்சை கேளு
நேர்மையாய் மனமிரங்கத் தொண்டு பண்ணு
நல்லாக மனதுவந்தால் உபதே சிப்பார்
நலமாக இரும்புதங்க மாகும் போலே
புல்லறிவு வுடையவர்க்கு ஈயமாட்டார்
புகழான கண்மணிதான் அருளைப் பற்றி
சொல்லவில்லை யென்றுமே கோபம் வேண்டாம்
தொல்லுலகில் நாதாக்கள் புண்ணிய வானே. (17)

வானென்ற முப்பொருளும் பிரித்துச் சொன்னேன்
வடிவுமுப்பூ இன்னதென்று அறியச் சொன்னேன்
தேனென்ற முப்பொருளை யறிந்த பேரை
தெளிவில்லா மூவாசை விலக்கச் சொன்னேன்
கோனென்ற குருவின்மேல் வருத்தம் வேண்டாம்
குவலயத்தி லறிந்தவர்க்குக் கதியு முண்டு
வீணாகத் திரிந்ததினால் கதியே இல்லை
மேன்மைபெற்றோர் மெய்ஞ்ஞானி யாவார் பாரே. (18)

பாரப்பா அருளைவிட்டால் கெதியு மில்லை
பராபரம்போல் வேறேயொரு ஒளிவு மில்லை
சேரப்பா பரம்பொருளி னொளிவிலே தான்
சிறப்பாகக் கூடுவதும் தவமே யாகும்
வீறாகப் பேசுவதும் ஞான மில்லை
வேஷமது பூண்டதினால் தபசி யில்லை
கூறான ஞானவுப தேசஞ் சொன்னேன்
குறிப்பறிந்தோர் முத்திவழி சேர்வார் தானே. (19)

வழியான நல்வழியிற் சேர்வதற்கு
மகத்தான பத்துவகை நாதங் கேட்டு
தெளிவான அண்டத்தின் மேலே நோக்கி
திறமுடனே நடுஅமுத மதனை யுண்டு
பழிப்புகளை நீக்கும்இதழ் மலரைக் கண்டு
பண்பாகத் தானொடுங்கு அப்பா நீயும்
ஒளிவான பரனொளியே மூல மாச்சு
ஒடுங்கினோர்க் கருள்பெருகும் முத்தி தானே. (20)

முத்திபெற ஞானவுப தேசந் தன்னை
முறையாகத் தானுரைத்தேன் நன்மை யாக
சித்தியாம் சகலசித்தும் நடக்கு மப்பா
தெளிவுடனே அறிந்துதவஞ் செய்த பேர்க்கு
பத்தியுள்ள வல்லவனை அடிமை செய்த
பாரமுள்ள தீவினைக ளனைத்தும் போக்கி
எத்திசையும் படைத்தறஹ் மானே என்னை
ஈடேத்தஞ் செய்துசித்தம் கலியைத் தீரே. (21)

கலீபத்து ஷெய்குஷா ஹறுல்ஹ மீது
கனமான ஞானவுப தேசந் தன்னை
கலமாக வுலகவர்க்குத் தெளிவாய்ச் சொன்னேன்
நன்மையுள்ள மானிடரே நீங்கள் நன்றாய்
பலமாக அறிந்துணர்ந்து தெளிவாய் நீங்கள்
பண்புடனே வணங்கிடுவீர் பராபரத்தை
குலமான வல்லவனை மேன்மை யுள்ளோன்
குருவருளைத் தந்திடுவான் கோமான் தானே. (22)

ஞானவுபதேசம் இருபத்திரண்டு முற்றிற்று.

---



## வண்ணம்.

தனதன தான தனதன தான
தந்தன தந்தன தனதன தான
தனன தனந்த தனன தனந்த
தானன தானன தானன தந்த
தந்தன தான தனதா னனனா.

ஆதியி லாதி நுக்தா யிருந்து
அலிபாய் வளர்ந்து தெளிவொளி வாக
நீதிமு ஹம்மதை யவ்வொளி தன்னில்
நேர்மையு டன்அழ காகப்பி ரித்து
ஜோதிநல் முச்சுட ராகவ மைத்து
துலங்கிய கதிர்மதி தாரைகள் மலையும்
கடல்புவி வானம் காற்றுநீர் மண்ணும்
கனலதுஞ் சொர்க்கம் நரகமு மின்னும்
உயிர்க ளனைத்தும் சகலமும் நபியின்
ஒளிவில்ப டைத்தா னுயர்ந்தபெ ரியோன்
அறுஷும் குறுஸும் லௌஹு கலமும்
அன்பா யடங்கலும் அருமை நபியின்
திருவொளி வதனாற் சிறந்திடும் றஹ்மான்
சிறப்புட னமைத்தான் தெளிவழ காக
அழகுள்ள வஸ்து அடங்கலும் நன்மை
அன்புந பியின் ஒளிவில்ப டைத்தான்
தாஹாந பியைத் தன்னொளி தன்னில்
சங்கையு டன்பிரித் தாண்டிடும் மேலோன்
வல்லோ னெனும்பே ரவனலா தின்னும்
மற்றவர் தமக்குத் தகுமோ இல்லை
நன்மைப் புவியில் வாழுமா னிடரே
நலமுள வலனைத் தொழுதுமே போற்றும்
புகழ்பெறும் வலனைப் பூரண மாகப்
போற்றிவ ணங்கிப் புகழ்ந்திட வேணும்
பொற்பதங் கண்டு மேவிளை யாடியே.

ஆதந பிதனை மண்ணில் படைத்து
அன்பத்தோர் தலைமுறைக் குள்ளன்பி யாக்கள்
நபிமா ரனைத்து முலகில மைத்து
நந்நபி அஹமதைக் கடைசிந பியாய்
தெளிவுள ஹாஷீம் குறைஷிக் குலத்தில்
சிறப்புப் பொருந்திய செல்வந பியாய்
அமைத்த பெரியோன் றஹ்மா னவனே
அன்புள்ள மேலோ னாதியே யாகும்
வானி லுள்ள மலக்கடங் கலுமே
வண்ணமு டன்நிதம் ஸுஜூதுசெய் வார்கள்
பூவி லுள்ளவ ரடங்கலும் வல்லன்
புகழுடை யோனைஸு ஜூதுசெய் வார்கள்
மலைக ளனைத்தும் மரங்க ளனைத்தும்
வல்லவ னைத்தொழும் தெளிவுடன் நிதமே
கதிர்மதி நட்சத் திரங்க ளனைத்தும்
ஹக்கனைத் தெளிவாய் வணங்கிடும் நிதமே
ஊர்ந்து திரியு முயிர்கள னைத்தும்
உடையோ னைத்தொழு திடுமனு தினமே
ஏகபெ ரியோன் ராஜா வாகும்
இறைவனை யனுதினந் தொழுதிடு நன்மை
தெளிவுள றஹ்மான் ஹிக்குமத்து டையோன்
சிறப்பாய்ச் சகலமு மறிந்தவ னவனே
முன்பின் னறிந்தவன் றஹ்மா னாகும்
முறையுட னாதியை வணங்கிட வேணும்
மோகமு டன்கண் டுவிளை யாடியே.

(2)

களிமண்ணில் நின்றும் கனமுள நன்மை
காரண ஆதம் நபியைப் படைத்து
தெளிவுள ஆதம் பிச்சளங் களையும்
திறமுடன் கெற்பக் குவளை தன்னில்
பனித்துளி போன்ற மணியது தன்னை
பரிவுடன் தரிப்பிட மாக்கிய றஹ்மான்
மணியதை ரத்தக் கட்டியு மாக்கி



வளமுட னதைச்சதைக் கட்டியு மாக
அழகுட னதையெலும் பாகப்ப டைத்து
அவ்வெலும் புக்குச்ச தையைப்பொ திந்து
நலமுடன் றூஹை யூதியே நன்மை
நாயனு மழகுள ஸூறத்த மைத்து
ஒளிவுபொ ருந்திய வல்லவ னெல்லா
வுயிர்க்கு மேலுள றஹ்மா னானன்
மௌத்தும் ஹயாத்தும் அவனலா தின்னும்
மற்றவர் கைவச மேஅது இல்லை
அருளும் பொருளும் பொருந்திய ஆதி
அன்பு பொருந்திய மேலோ னாகும்
உதவிகள் செய்த மானிடர் தமக்கு
உண்மைநல் லுதவி செய்திடும் பெரியோன்
தத்துவ முடையோன் தானவ னாகும்
தன்மை பொருந்திய ஏகனு மவனே
ஈமான் கொண்டமல் தெளிவுடன் செய்து
இன்புட னேநிதம் வணங்கிட வேணும்
இறைவ னைக்கண் டுவிளை யாடியே.

ஆதிபெ ரியோன் நீயே யாகும்
அன்புள வல்லவன் தானவன் நீயே
ஜோதிநல் முச்சுடர் நீயே யாகும்
சுடர்மணி விளக்கொளி தானதும் நீயே
நீதமு டையோன் நீயே யாகும்
நிறைந்த வொளிபரி பூரணம நீயே
எங்கும் நிறைந்தோன் நீயே யாகும்
இறையவன் நற்புக ழுடையவன் நீயே
சங்கை யுளதிரு விளக்கதும் நீயே
தானவ னாகிய தற்பர னானேன்
மங்கிவிடா மணித் தீபமும் நீயே
மாசிலா முச்சுட ரொளியழ கானேன்
திங்கள்மு ஹம்மது நபியொளி தன்னை
சிறப்புடன் தன்னொளி தன்னில் பிரித்தோன்

முஹியித் தீனை யருமை யொளிநல்
　　முச்சுட ரிலொன் றாகவ மைத்தோன்
வல்லபெ ரியோன் நீயே யாகும்
　　மறுவிலா வான்பொருள் வடிவதும் நீயே
ஆரிபு ரோஷன் தர்வேஷ் றாஹுல்
　　அஃலம் கலீபத்து ஷெய்கு ஷாஹுல்
ஹமீது அப்பா தாஜுத்தீன் அப்துல்
　　காதிர் செய்த பாவங்க ளெல்லாக்
கொடிய பிழைக ளனைத்தும் பொறுத்து
　　கோமா னேஉன் பொருத்தத்தி லாக்கி
　　　　குறைதனை நீக்கு வாய்றஹ் மானே. (4)

வண்ணம் முற்றிற்று.

---

## பூரண நூல்.

---

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

பூரணனே நன்மையுள்ள தெளிவே யாதி
　　புண்ணியனே அருமையறி வுடைய கோனே
காரணனே எவ்வுயிர்க்கும மேன்மை யான
　　கருப்பொருளே கண்மணியே கருணை யேகா
வீரமுள்ள வல்லவனு முனையல் லாது
　　மேதினியெவ் வுலகிலுமே வேறே யில்லை
நேசமாய்ச் சகலமுமே படைத்து ஆளும்
　　சிறப்புடைய பெரியவனீ காப்புத் தானே. (1)

தானான தற்பரனை யறிந்து கொள்ளும்
　　தாரணியி லுள்ளமா னிடரே நீங்கள்
கோனான பராபரமும் அவனே யாகும்
　　கூர்மையுடன் முப்பொருளைத் தேடிநன் றாய்
தீனான வணக்கமதைத் தெளிவாய்ச் செய்து
　　திறமாக அவன்பதத்தில் தொழுவாய் நித்தம்
வீணான அஞ்ஞானம் விட்டு மேன்மை
　　மெய்ஞ்ஞான முத்திபெற்று வாழுவாயே. (2)



முத்திபெற மேதினியி லுலகத் தோரே
　　மோனமருள் முச்சுடரை யறிந்து நன்றாய்
சத்தியமாய் யான்சொன்னேன் நூலனைத்தும்
　　தாரணியில் வாழுமா னிடரே நீங்கள்
சித்திபெற்று ஜெயமான வருளிற் சேர
　　தெளிவான எந்நூல்க ளனைத்தும் பார்த்து
நத்துதலா யறிந்துணர்ந்து வணக்கஞ் செய்து
　　நாயனையும் அனுதினமுந் தொழுவாய் கண்ணே. (3)

கண்ணான கண்மணியே இந்நூல் தன்னை
　　கருத்துடனே தானுணர்ந்து தெளிவாய்ப் பாரு
பொன்னான மாந்தர்களே ஆனை யாக
　　பூரணத்தைக் கண்டுசொன்ன நூல்தா னப்பா
மண்ணூகு முன்னேதான் யானும் சொன்ன
　　வகையான நூலுணர்ந்து அருளைப் பெற்று
விண்ணான பரஞ்ஞொளிமுச் சுடரைக் கண்டு
　　வேதாந்தச் சுடரொளியில் சொக்கி நில்லே. (4)

சொக்கிநின்று ஆதியைநீ தொழுது போற்றி
　　சுயமான பதந்தனிலே தெளிவாய் வீழ்ந்து
எக்கால மும்வலனைத் துதித்து நில்லு
　　இறையவனே மேன்மையுள்ள றஹ்மானாகும்
துக்கமெல்லாந் தானகலும் வினைகள் நீங்கும்
　　சூஸ்த்ரமுள்ள ஆண்டவனை யறிந்த பேர்க்கு
தக்கபடி யானஎந்நூ லனைத்தும் பார்த்து
　　சம்பூர்ண வல்லவனை யிறைஞ்சுவாயே. (5)

வல்லவனைக் கண்டறிந்து தொழுவதற்கு
　　வகையான இந்நூலை யுணர்ந்து பாரு
நல்லாக யானுரைத்தே னுலகத்தோர்க்கு
　　நலமான நாதாக்கள் பாதம் போற்றி
தொல்லுலகி லுள்ளமா னிடரே நன்றாய்
　　சூஸ்திரமாய் நூலனைத்தும் அறிந்து சொன்னேன்

சொல்லதனின் பிழைதிருத்திப் படித்த பேர்க்கு
சுத்தனுமே கிருபையருள் செய்வான் தானே. (6)

கிருபையுள்ள கண்மணியே நீங்கள் யானும்
கிருபைவைத்துத் தான்மொழிந்த நூலனைத்தும்
அருமையுட னாய்ந்து வுணர்ந்து பார்த்தால்
அப்போதல்லோ என்னருமை தெரியும் நன்றாய்
குருவருளைப் பெற்றுஇந் நூ லனைத்தும் நேர்மை
கூருடைய முச்சுடரை யறிந்து சொன்னேன்
திருவாதி யுதவியினால் நூலைப் பார்த்து
தேர்ந்தறிந்து வணங்கிடவே சிறப்புமாமே. (7)

சிறப்பான அருளறிந்து எந்தன் நூலை
திறமுடனே ஆராய்ந்தால் எல்லாந் தோன்றும்
மறலற்ற முப்பொருளுந் தெளிவாய்க் காணும்
மாந்தர்களை யுற்றுணர்ந்து பாரும் நன்றாய்
நிரப்பமுள்ள பூரணத்தி லூன்றி னாக்கால்
நேர்மையொளி முச்சுடருந் தோன்றி நிற்கும்
அருமையுட னவ்வொளிவை யுணர்ந்து பாரு
அச்சமயம் சகலமுமே மறையுந்தானே. (8)

தானான தற்பரனின் ஒளிதான் நிற்கும்
தன்மையுள்ள ஒளிதவிர வேறொன் றில்லை
மானான முச்சுடரை யறிந்தோன் யோகி
மகத்தான அவன்தேகம் தங்க மாகும்
ஊனான தேகமது தவத்தால் தங்கம்
உத்தமனே அதைத்தானே மண் தின்னாது
தீனறிந்த சிவராஜ யோகிக் கெல்லாம்
செல்வனே வினைமுழுது மகன்று போமே. (9)

வினைகளொன்று மணுகாது யோகிகட்கு
மேதினியில் தவத்தோர்க்கு அருமை மெத்த
தினைப்போலுஞ் சாடாது தீங்க தப்பா
செல்வமாய்ச் சகலமுமே சிறப்புற் றோங்கும்
உனைநம்பி னேன்அடியேன் சிறுவன் தொண்டன்
உண்மையுள்ள வல்லவனே நித்தங் காத்து



## ஞானவல்லபப்பதிகம்

சந்தவிருத்தம்.

திருவொளிவது இலங்கிநின் றிடுஞ் சிறந்தமுச்சுடராகவே
மருவெழுந் திடும் வெளியில்கலி மாவில்பூசைசெய் ஓர்மையாய்க்
கருவதானதுட் குள்ளிலேயொளி கனகம்ஆயிரத் தெண்மலர்
கிருபைவைத்தருள் நாயனைபார்க்கக் கெடுதிநீக்கிக்கார் வல்லனே. (1)

அலிபுலாமொடு ஹேயுமீமும்நல் லன்புதாலில டக்கமாம்
கலியுமாவுமொன் றாகிவந்திடுங் கனமதாகவே நன்மையாய்
நலமுள்ள இரு நயனத்திடைநடு நாட்டமாகயான் பார்க்கவும்
பெலமதாகிய அருளைத்தந்தெனை பிசகறுத்துக்கார் வல்லனே. (2)

நாபமானதில் நின்றுவாசியை நயனமிடைநடு நிறுத்திநல்
காபகௌலைனி யானதலமதிற் கருத்தையூன்றியே பார்க்கவே
தீபமாகிய மெய்ச்சுடர்நின்று தெளிவதாக விளங்கிடும்
சோபமுடனேயான் பார்க்கஅருளைத்தா துய்யனாகிய வல்லனே. (3)

அறுஷின்மேலதா யிலங்கும்வடிவது அருமையான ஹிந்திலொளி
குறஸீதன்னிற்பார் நடுவிற்சித்தொளி குணமாய்த்துலங்குமவ் வேளையில்
கருபுவிகடல் ரவிமதிமலை சுகலம்சகலமும் மறைந்திடும்
பெருமைமுச்சுடர் மறையாமல்நிற்கப் பிசகைநீக்குவாய் வல்லனே.()

வாசியென்ற பகாவெழுத்திலே மாற்றிப்பிடித்தேற்று மந்திரம்
தேசுமயமென்ற சிறந்தமுச்சுடர் தெரியுமுகக்கண்ணின் நடுவிலே
காஸிம்முஸ்தபா நபியைக்கண்டுநற் காக்ஷிபார்க்கவே யேகனே
ஆசையாகிய மகிட்சிதந்தென்னை அடிமையாக்கிக்கொள் வல்லனே.()

சித்திரக்கதிர் தீபமெய்ச்சுடர் தெளிவதாக இலங்கிடும்
பத்தியாகவே பார்க்கவோர்மையாய்ப் பரமனருளது துலங்குமே
முத்தியாகிய மோக்ஷகதியினில் முதல்வனேயெனைச் சேர்த்துமே (6)
குற்றம்நீக்கியுன் பொருத்தந் தந்தருள் கோமானாகிய வல்லனே.

கூட்டுநன்றாக மூலமானதைத் தொட்டுவிளையாடு அன்பதாய்
காட்டிப்பூட்டியே நேர்மையாகிய கனமுள்ளமஹ் றூதிற்பார்
கோட்டையாகிய வடிவுஜோதியுங் கொலுமண்டபங்க ளானதும் (7)
சாட்டியில்லாப் பம்பரமாடிடும் தன்மையருள்தாவென் வல்லனே.

முத்தனாகிய சித்துநீயருள் முத்தான றஹ்மானும்நீ
சித்தனாகிய வல்லபமுள்ள தெளிவதாகிய வொளிவுநீ
பத்தியாயுன்னைப் பார்த்தபேர்கட்குப் பரம்பொருளான பரமனீ
நித்தியமென்னைக் காத்தருள்தாவென் நீதனாகிய வல்லனே. (8)

காரணக்கட லானவிபத்திலே கருணைத்தீபமுச் சுடரும்நீ
பாரமாகிய படைப்பனைத்தையும் படைத்து ஆள்கின்ற தேவனீ
தீரமாகவே யெவ்வுயிர்கட்கும் தீனளித்திடும் செல்வனீ
சீரதாகவந் நேரமுமென்னைச் சிறப்பாய்க்காத்தருள் வல்லனே. (9)

வல்லபப்பொரு ளாகிநின்றிடும் மௌனசக்கர மொளிவுநீ
துல்லியமுள்ள ஞானமெய்ச்சுடர் துலக்கமாகிய ஆதிநீ
கல்லினுக்குள்ளே தேரைகட்குமே கனவமுதியும் துய்யனீ
குல்லுமடங்கலும் பானும்நீயெனைக் கூராய்க்காத்துக்கொள் வல்லனே. (10)

வானம்புவியெல்லாம் படைத்து ஆள்கின்ற வரிசையாகிய தெளிவுநீ
ஞானமெய்ச்சுடர் தீபமாகிய நன்மைபொருந்திய தெளிவுநீ
தானமாகிய தலமதஞ்சையும் சார்ந்தவர்க்குநல் லருளும்நீ
ஸனத்தானதைத் தந்தெனக்கருட் செய்வாய்காரண வல்லனே. (11)

சலிகையானசம் பூர்ணமாகிய தனிப்பொருளொளி ஜோதிநீ
மலிதலான நிறைந்தசச்சித மானவருளுள்ள சுடரும்நீ
கலீபத்துஷெய்கு ஷாஹுல்ஹமீதையும் காத்திடும்றஹ்மானும்நீ
வலியனாயக ஞானபானும்நீ வாகாயருள்தாவென் வல்லனே. (12)

ஞானவல்லபப்பதிகம் முற்றிற்று.

---

## அருளானந்தப் பதிகம்.

ஆசிரிய விருத்தம்.

அன்னையின் வயிற்றில் நன்றாய் அற்பநல் ஜலத்தைக்கொண்டு
நன்னிலே யுருவமாக்கி நானிலந் தனிலே நன்றாய்
வன்னமாய்ப் பிறப்பித்தென்னை வளமுடன் வளர்த்தகோவே
என்னையுங் காத்தாட்சி யிறைவனே யருள் அல்லாஹுவே. (1)

ஆதிநீ யொருவனென்றும் அன்புட னுனைப்புகழ்ந்தேன்
நீதியாய் உயிர்கள்யாவும் நித்தனே படைத்தாய்



நாமமு முள்ளகனியே
பொல்லாத பாவியெனைக் காத்தா ஷித்துங்கள்
பொன்னடி தரிப்படுத்தி
புகழுள்ள வல்லவன் அருளதனி லாக்கிடும்
பூர்ணவொளி ராஜ மணியே.

## காஜாமுஈனுத்தீன் ஆண்டவர்கள் பேரில்

ஆசிரியவிருத்தம்.

மதிராஜபு மாதத்தி லஜ்மீரை நாடியே
வருவார்கள் கோடிகோடி
மங்கள மாலதொரு தங்கள்திரு ஆலயம்
வந்துநிற் பவர்கள்கோடி
துதிசெய்து காஜாமு ஈனுத்தீ னென்றுதன்
துயர்கஷ்டஞ் சொல்வர்கோடி
துன்பங்கள் பிணிகளை நீக்குங்க ளென்றுபலர்
சொல்லியழு வார்கள்கோடி
கெதியான செல்வமதை நாடியே வாதித்து
கெஞ்சிநிற் பவர்கள்கோடி
கெடுதியனு காமலே காருங்க ளென்றுவரம்
கேட்டுநிற் பவர்கள்கோடி
விதியான நன்மையுள பெரியோர்கள் வந்துதான்
வேண்டிநிற் பவர்கள்கோடி
மேன்மையுள நல்வரங் கேட்டுமன் றாடியே
வீற்றிருப் பவர்கள்கோடி
பதியான வுலகெங்கும் ஹிந்தில்வலி அதாயிர்றஸூல்
பரிபூர்ண மென்பர்கோடி
பாக்கியந் தனைநாடி காசுகா சென்றுதான்
பாதவிப் பவர்கள்கோடி
குதிகொண்டு காபகொள ஸைனியிற் சென்றுதான்
கூர்மையுள மஹ்பூதிலே

குணமான முச்சுடர் தன்னையுந் தெரிசித்த
குதுபே யருட்செல்வமே
சதிசெய்யும் இபுலீஸு கொடிதான மாயையெனை
தான்வந்து அணுகிடாமல்
தங்கமே காப்பாற்றி நற்கிருபை செய்தருளும் -
சம்பூர்ண மதியமுதமே
விதமென்ன சொல்குவேன் ஆலயத் தழகுவொளி
மேன்மைய தலங்காரமும்
மேலான புகழெலாம் மட்டிடவு முடியாது
மிக்கஅழ கானதெளிவு
பதமான ஜிஸ்திக்கு ராஜராய் வந்தமா
பரிபூர்ண மானவொளிவே
பாவியெனைக் கையணைத் தாண்டிடும் கொடியவினை
பாவமது அணுகிடாமல்
நிதம்நிதம் முச்சுடர் தன்னையுந் தெரிசித்து
நீதமாய் யான்வணங்க
நெறியுள்ள ஹிந்தில்வலி யாசரே கிருபைசெயும்
நேர்மையருள் தீபமணியே.

## ஷெய்கு ஸிந்தா மதார் நாயகம் அவர்கள்பேரில்

ஆசிரியவிருத்தம்.

திருமக்காம் பூர்தனில் தெளிவுடன் வாழ்கின்ற
ஜெயபதீஉத் தீனே அரசே
ஸிந்தா மதாரொலி காரணச் செல்வமே
சிறப்பருள் பரிபூர்ணமே
குருவாக வந்தமெய் நவநீத ராஜரே
குணமுள்ள தபக்காத்தியா
குருவழி தனக்குநிலை யாய்வந்த தெளிவுள்ள
குலமான நற்சிங்கமே
மருவழகு பாத்திமா அருட்செல்வ மேநல



மாய்வந்த பூவாசமே
மட்டிடவு முடியாத பேரின்ப ஞானமே
வாகுள்ள மதியமுதமே
பருதிதிங் கள்மதி ரவியையுஞ் சேர்த்திடை
பதியான மஹ்மூதிலே
பரமான முச்சுடர் தன்னையுந் தெரிசித்த
பரிபூர்ண மானகனியே
அருளான மதிரவி முச்சுடர் கண்டுயான்
அன்பாய்த் தினந்தொழுகவும்
அடியன்மேல் நற்கிருபை வைத்தர க்ஷித்திடும்
அருள்பதீஉத் தீனே ஒளிவே.

## சுல்தானுல் ஆரிபு செய்யிது அஹமதுல்கபீர் நாயகம் ஆண்டவர்கள் பேரில்

ஆசிரியவிருத்தம்.

திருவொளி வறிந்தநல் சுல்தானுல் ஆரிபே
சிறப்புடைய கண்ணின்மணியே
செல்வமே தீனுக்கு நிலையாக வந்ததிரு
செய்யிதஹம துல்கபீரே
மருவுள்ள வாசமே மங்காத தீபமே
வாகான தங்கமயமே
மாசற்ற ஞானமெனு மௌனமே தெளிவுள்ள
மதியமுத நிறைவுகடலே
நெறியான றபாய்த நீக்குக்கு ராஜராய்
நேர்மையாய் வந்தசுடரே
நீதமணி யானகபீ ரென்றதிரு நாமமும்
நிறைவாய் அமைந்ததெளிவே
குருவான செல்வமே குணமதிற் குடிகொண்ட
கோனே யருள்தீபமே
குறைவிலா ரவிமதி தன்னையுஞ் சேர்த்திடை
குணமான மஹ்மூதிலே

கருவாக வனுதினம் கண்டுதெரி சித்து ஒளி
ஹக்கனைத் தொழுதகனியே
காரணச் செல்வமே யுலகெலாம் புகழ்பெற்ற
கமலமலர் பூவாசமே
பருதிமதி முச்சுடர் கண்டுயான் தெரிசித்து
பதமாக யான்வணங்க
பாவிஅடி யன்தனைக் காத்துர க்ஷித்திடும்
பரிபூர்ண ரத்னமணியே.

—❀—

## காதிர் ஒலி மீருன்சாஹிபு நாயகம் அவர்கள் பேரில்

ஆசிரிய விருத்தம்.

ஏகபிர பலியமாய் எங்கும்பிர காசமாய்
எழுந்துவருவா ரனேகர்
இன்பங்க ளாகவும் துன்பங்கள் போகவும்
எண்ணிவருவா ரனேகர்
பாகமுடன் ஆலயந் தனில்வந்து கையேந்திப்
பண்பு கூறுவ ரனேகர்
பாதகா ணிக்கைகொண் டழகாக வேசென்று
பலன்பெற்றபே ரனேகர்
வாகான ஒலிமார்கள் அழகாக வேவந்து
வரங்கேட்பவ ரனேகர்
வரிசைநந் நபியுடைய ஸலவாத்தும் திக்றதும்
வந்துரைப்பவ ரனேகர்
நாகமாய் வசனித்து நிற்கவே கொலுவுமுன்
நன்மைநற்றீப வொளிவை
நாவினுற் புகழவுஞ் சொல்லவும் முடியாது
நலமான காரணத்தை
மோகனின் அருள்பெற்ற ஷாஹுல் ஹமீதொலியே
முறையுள்ள சங்கைமேரே
முத்திவழி யாகவும் எந்தனுக் கருள்செயும்
முழுமுதலை தீபமணியே.

ஆசிரியவிருத்தங்கள் முற்றிற்று.

---



எனைத்தவத்தில் நிரப்பமா யாக்கி நன்மை
இறையேஉன் பொருத்தமென்ற அருளிற் சேரே. (10)

அருள்ஞானக் கமலமணி மாலை சொன்னேன்
அகிலமதி லுள்ளவர்க்கு அமுதம் போலே
பொருளான ஞான அலங் காரஞ் சொன்னேன்
பூதலத்தி லுள்ளவர்க்குப் பொன்னைப் போலே
மருவான ஞானஅற் புதமுஞ் சொன்னேன்
மகிதலத்தி லுள்ளவர்க்கு மாணிக்கம்போல்
கருவான ஞானவே தாந்தம் சொன்னேன்
காசினியி லுள்ளவர்க்குக் கனமாய்த்தானே. (11)

கனமான எந்நூல்கள் தன்னைப் பார்த்துக்
காசினியி லறிந்துதவம் செய்வாய் கண்ணே
தனமான நூல்கள்தனில் யோக ஞானம்
தானுரைத்தே னடக்கமுள்ள பொருளனைத்தும்
மனமான சிந்தையது தெளிந்து சொன்னேன்
மகத்துவ முச்சுடரை மகிழ்ந்து பார்த்து
தினமறிந்து தவறுமல் முப்பூக் கண்டு
தெளிந்துதவம் செய்தவர்க்குச் சிறப்புத் தானே. (12)

சிறப்பான மேன்மையுள்ள வுலகத்தோரே
செல்வமுள்ள நூலனைத்தும் தெளிந்து சொன்னேன்
மறப்பில்லா மானிடரே என்னை நீங்கள்
மதிகேடாய்த் தூஷணித்துப் பேச வேண்டாம்
நிரப்பமுள்ள அருள்கிடைத்த தாலே யானும்
நிலையுலக வாழ்வனைத்தும் நீக்கி விட்டு
தரமான பூவுலகி லொடுக்க மாக
தன்மையாய்த் தானிருந்து தவஞ்செய்தேனே. (13)

தவமுள்ள பெரியோரைத் தூஷணித்தால்
தரணிதனிற் கருமங்கள் மெத்த மெத்த
பவமதுவும் சாபமதுந் தொடருஞ் சொன்னேன்
பழுதுள்ள தீவினைகள் அணுகு மப்பா
குவலயத்தில் நன்மையுள்ளோர் கொஞ்சம் கொஞ்சம்

கோடியிலே ஒன்றுவுண்டுங் குணமாய்ச் சொன்னேன்
அவனியிலே அருளில்லார் அருளுள்ளோ ரென்றால்
அன்பனே கலியென்ற குற்றந் தானே. (14)

கலீபத்து ஷெய்குஷா ஹுல்ஹ மீது
கனமான பூரண நூல் தெளிவ தாக
நலமுள்ள வுலகவர்க்கு வுரைத்தேன் நன்றாய்
நன்மையாய் மானிடரே அறிந்து நீங்கள்
பலனுக நற்றவத்தைச் செய்து மேன்மை
பரமனையும் வணங்கிடுங்கள் பண்புள்ளோரே
வலனுன வல்லவனும் கிருபை செய்து
வளமுள்ள பொற்பதியில் ஆக்குவானே. (15)

பூரணநூல் முற்றிற்று.

—❀—

## முஹிய்யித்தீன் ஆண்டவர்கள் பேரில்

ஆசிரிய விருத்தம்.

அல்லாவி னருள்பெற்ற ஒலிகட்கு மேல்குதுபுல்
அக்தாபாய் வந்தகொளதே
அவனிதனில் யாவர்க்கும் தங்களுட திருவழகு
அடிபதந் தரிபடாமல்
வல்லார்களென்றபேர் வாராது வாராது
மகிமையுள வொலியுமாகார்
வாகான தங்களின் நாமம் உரைத்த வுடன்
மலையதும் தானுருகிடும்
உல்லறிவு சந்நியாசி பிள்ளையைத் தான்பிடித்
துண்டிடக் கிருபைகொண்டு
உண்மைவெளி யாகவே குடல்தனைப் பிறியே
உகப்புபிள் ளையையழைத்தீர்
நல்லகடல் தன்னிலே தாழ்ந்ததோர் கப்பலை
நலமா யழைத்ததெளிவே
நாயகம் நன்மையப் துல்காதி றென்றதிரு



வேதனே இரந்துகேட்கும் விதமதை யறிந்தென்பேரில்
ஜோதியே கிருபைசெய்யென் துயர்நீக்கி யருள் அல்லாஹு. (2)

ஆருந்தா னுலகிலுன்னை யன்புடன் புகழும்மேலோன்
பாரினில் அடியேன்நெஞ்சம் பயந்துன்னைத் தேடிநாடிக்
கூருடன் நித்தம்பானுங் கூர்மையாய்த் தொழுவதற்கு
தாரிலென் முகத்தைப்பார்த்துத் தபவுசெய் தருளல்லாஹு. (3)

சொல்லவுந் தெரியவில்லை சுத்தனே நிகரில்லானே
நல்லவுன் திருக்கண்ணாற்பார் நாயனே யென்னைநித்தம்
வல்லவா துயரங்காமம் வன்பிழை கர்மமெல்லாம்
புல்லனுக் கணுகாமற்கார் பூரண மருளல்லாஹு. (4)

இறையேவல் லவனேயெந்த னிடர்வினை காமத்தால்யான்
உரிமையாய் யானும்கேட்கும் உகப்புள்ள துஆவைநீயும்
நானேநீயேற்றுக்கொள்வாய் நாயனே யடியேன்செய்த
வறிதென்ற குறைவுநீக்கி வரிசைதந் தருளல்லாஹு. (5)

செல்லனே யுலகிலென்னைத் தெளிவுடன் படைத்தவகா
அல்லும்நற் பகலுங்காம வதிர்ச்சியா லுருகிவாடிப்
புல்லன்உன் னிடத்திற்கேட்கும் புகழுள்ள துஆவைநீயும்
நல்லனே யேற்றுக்கொள்ளென் நாயனே அருளல்லாஹு. (6)

அண்ணலே யுலகமெல்லாம் அன்புடன் நிறைந்துநின்ற
திண்ணமுள் ளவனேகேடு தீங்குசஞ் சலங்கள்யாவும்
கண்ணேறு நாவேறின்னுங் கர்மங்கள் தனைத்தொலைத்து
வண்ணமே கிருபைசெய்யென் வல்லவா அருளல்லாஹு. (7)

ஈந்தநற் கொடையேமேன்மை யின்பமே யிறையேநன்மை
காந்தமும் ஊசியும்போற் கருவுடன் இழுத்துவென்னை
ஆய்ந்தநல் லாதிரியே அருமைமுச் சுடரைக்காட்டு
வேந்தனே கொடுமைநீக்கி வெற்றிதந் தருளல்லாஹு. (8)

பாவியான் செய்ததோஷம் பாரினி லனைத்தும்போக்கி
நோவினை வருத்தமெல்லாம் கொடியினில் நீக்கிவைப்பாய்
நாவினாற் புகழவுன்னை நலமதைத் தருவாயாதி
தாவிஷ மதிலேசேரு தனியனேயருளல்லாஹு. (9)

பண்புடன் சகலமெல்லாம் பரிவதாய் அமைத்தநீதா
அன்புட னுனைவணங்கார் ஆகுவார் கெடுதியாக
நண்புடன் இரக்கம்வைத்து நாயனே கெடுதிதூக்கம்
துன்பங்க ளனைத்தும்நீக்கு தய்யனே அருளல்லாஹூ. (10)

உன்பதம் பதமேயல்லா லொருவரும் உதவியில்லை
நண்புடன் வினைகள்நீக்கு நாயனே முடிவில்லானே
இன்புள்ள மோகதாபம் இடருள்ள காமமெல்லாம்
அன்பனே நீக்குயானுன் னடைக்கல மருளல்லாஹூ. (11)

பஞ்சபூ தங்களைந்தும் பரிவுட னொன்றுபட்டு
நெஞ்சில்நல் லோர்மையாக நிற்கச்செய் யன்பனேயுன்
தஞ்சமே தஞ்சம்நன்மை சம்பூர்ண தவத்தைச்செய்ய
சஞ்சல மனைத்தும்நீக்குத் தனியனே யருளல்லாஹூ. (12)

மேகநீர் பித்தநீர்கள் மிடிமைகள் கஷ்டம்யாவும்
ஏகனே யென்னைவிட்டும் இடரெல்லாம் நீக்கிவைப்பாய்
மோகதா பங்கள்துன்பம் முஸீபத்தும் பசிதூக்கமும்
தேகத்தில் வினைகளெல்லாம் தீர்ந்திட அருளல்லாஹூ. (13)

ஜெகமெல்லாம் படைத்து ஆளும் செல்வனே ஜுரம்நோய்துன்பம்
அகமதிற் கசடுஎல்லா மதிரியே போகச்செய்வாய்
முகஞ்சினத் தோரிடத்தில் முறைசொல்லிக் கையேந்தாமல்
பகவனே கிருபைக்கண்ணாற் பார்த்துநீ அருளல்லாஹூ. (14)

வினையச்சங் கொடுமைபாவம் மிடிமைகள் துன்பமெல்லாம்
தனைவந்து அணுகிடாமற் றனியனே நீக்கிவைப்பாய்
உனையல்லா லெந்தனுக்கு வொருவரும் உதவியில்லை
தினைவந்து சார்ந்திடாமற் செல்வனே அருளல்லாஹூ. (15)

மெலிவுநோய் குறைவுநீக்கி மேலவா நன்மையான
பலியதைத் தந்துஎன்னைப் பரிவுடன் காத்துக்கொள்வாய்
கலியெனும் வறுமைகுற்றங் கன்மங்கள் முஸீபத்தெல்லாஞ்
சலிகையா னவனேபோக்கு தனியனே அருளல்லாஹூ. (16)

துன்பங்கள் வருத்தம்யாவும் தொண்டனுங் கணுகிடாமல்
நண்புள்ள வேந்தனேநீ நலமுடன் காத்துக்கொள்வாய்



இன்புவல் லவனேதின்மை இடருள்ள முஸீபத்தொன்றும்
அன்பனே யணுகிடாமல் ஆதியே அருளல்லாஹூ. (17)

சிலந்திகள் சிறுமைபுண்கள் சிலுகாய்வந் தணுகிடாமல்
நலமுள்ள ஆதியேகா நாயனே காத்துக்கொள்வாய்
பெலமுள்ள காமமோகம் பெலஹீன மாகவேதான்
விலகிடக் கிருபைசெய்யென் வேந்தனே அருளல்லாஹூ. (18)

சலிகையா னவனே யென்னைச் சங்கைநல் லருளிற்சேர்ப்பாய்
கலீபத்து ஷெய்குஷாஹூல் ஹமீதப்பா தாஜுத்தீனும்
நலமருள் ஆனந்தத்தில் நன்மையா யிரந்து கேட்டேன்
பெலனுள்ள ஏகாநீயும் பிசகறுக் தருளல்லாஹூ. (19)

அருளானந்தப்பதிகம் முற்றிற்று.

---

## காரணமாலை

ஈரடிக்கண்ணிகள்

அல்லாஹும்மஸல்லி அலாமுஹம்மது
யாறப்பிஸல்லி அலைஹிவஸல்லிம்

ஆலமெல்லாம்படைத் தாள்கின் றவல்லவன் (1)
ஆதியொளிவினில் வந்தநபியே.

ஹாஷிம்கிளையினில் வந்தமுஹம்மது (2)
காத்திமுல்லன்பியா வானநபியே.

மக்கந்தனிலே பிறந்தமுஹம்மது (3)
வள்ளலிறஸூலாய் வந்தநபியே.

கார்குடைநிழற்றரும் அன்புமுஹம்மது (4)
காரணமாகிய மேன்மைநபியே.

மதீனத்திலேயா சாளுமுஹம்மது (5)
வரிசைமிகுந்த தெளிவுநபியே.

மதியைநிலத்தி லழைத்தமுஹம்மது (6)
மன்னவனின்தூத ரானநபியே,

சுரத்திற்புனலை யழைத்தமுஹம்மது
சூக்ஷமுடையநல் மேன்மைநபியே. (7)

தசையைப்பெண்ணாக்கிய மாமுஹம்மது
சங்கைபொருந்திய மேன்மைநபியே. (8)

முத்திலொளிவா யுதித்தமுஹம்மது
முதன்மையாகிய தாஸீம்நபியே. (9)

ஆமினாளீன்றநல் லன்புமுஹம்மது
ஆலமெல்லாம்புக ழானநபியே. (10)

அலிமா அமுதுண்ட ஆசைமுஹம்மது
அஹதானவல்லவன் தூதர்நபியே. (11)

மானுக்குப்பிணையாய் நின்றமுஹம்மது
வரிசைமிகுந்த குதுஸிநபியே. (12)

அலிக்கிமாதுல ரானமுஹம்மது
அன்புள்ளகாரண வேதநபியே. (13)

சுருமாவொளிவா யிலங்குமுஹம்மது
சுயமாய்ப்புவியிலே வந்தநபியே. (14)

சாயைநிழலில்லா நீதமுஹம்மது
தனியனுக்குப்புக ழானநபியே. (15)

அங்கத்திற்பூச்சிக ளணுகாமுஹம்மது
ஆண்டவனின் தூதானநபியே. (16)

கஸ்தூரிகாதங் கமழுமுஹம்மது
கஸ்புக்கடலாக வந்தநபியே. (17)

பாதம்மண்ணில்தோ யாதமுஹம்மது
பண்புள்ளகாரண மானநபியே. (18)

மலஞ்சலமில்லாத வள்ளல்முஹம்மது
மாதவமாகிய நீதநபியே. (19)

முன்கண்டதுரப்பின் காணுமுஹம்மது
மோனமதாகிய தாஸீம்நபியே. (20)

மேனியையுலகவர் காணார்முஹம்மது
மேன்மைபொருந்திய காஸீம்நபியே. (21)



அறுஷுக்குமேற்சிர முள்ளமுஹம்மது
அல்லாதிருத்தூத ரானநபியே. (22)

தக்தருகீழ்பாத முள்ளமுஹம்மது
தன்மையழகுள்ள வள்ளல்நபியே. (23)

கல்பேனுங்கஃபா வானமுஹம்மது
கனமுள்ளகண்மணி யானநபியே. (24)

எல்லாநபிகட்கும் ராஜர்முஹம்மது
இறையோன்திருத்தூத ரானநபியே. (25)

மதியானகுறு ஆனாய் வந்தமுஹம்மது
மணமுள்ள அப்துல்லா பாலர்நபியே. (26)

முச்சுடராய்வந்த மேன்மைமுஹம்மது
மூலமதாகிய சங்கைநபியே. (27)

காபுஹேஸஜன் ஸாதுமுஹம்மது
காந்தியொளிவுள்ள நீதநபியே. (28)

மிஃறாஜுக்கேகிய மேன்மைமுஹம்மது
வேந்தனிடம்பேசி வந்தநபியே. (29)

கற்பூரத்தீபமாய் வந்தமுஹம்மது
ஹக்கன்திருத்தூத ரானநபியே. (30)

ஷபாஅத்திலேகரை சேர்க்குமுஹம்மது
சம்பூர்ணமாகிய யாஸீன்நபியே. (31)

ஜெம்ஹூத்து ஆகாய மானமுஹம்மது
சிறப்புள்ளவல்லப மானநபியே. (32)

மயில்வடிவாகிய வண்ணமுஹம்மது
வாசம்பொருந்திய வள்ளல்நபியே. (33)

எனைநேர்வழியினி லாக்குமுஹம்மதே
ஏகனவனழ கானநபியே. (34)

மறதிதூக்கத்தையும் நீக்குமுஹம்மதே
வல்லவனின்திருத் தூதர்நபியே. (35)

மாயைகாமத்தையும் நீக்குமுஹம்மதே
மன்னவனின்அழ கானநபியே. (36)

கண்ணோயு மாயையு நீக்குமுஹம்மதே
கனமுள்ளகாரண மானநபியே. (37)

நோய்களனைத்தையும் நீக்குமுஹம்மதே
நுட்பமுள்ளதெளி வானநபியே. (38)

வஞ்சனைசூனியம் நீக்குமுஹம்மதே
வள்ளலையாறஸூ லானநபியே. (39)

ஆணவத்தை யகற்றுமுஹம்மதே
அருமையானநல் வேதநபியே. (40)

கொடியபவத்தையும் நீக்குமுஹம்மதே
கோமான் திருத்தூத ரானநபியே. (41)

தவத்தில்நிரப்பமா யாக்குமுஹம்மதே
தானவனின்தன்மை யானநபியே, (42)

தாய்தந்தையானோரை யெங்கள்முஹம்மதே
தன்மைசுவர்க்கத்திற் சேரும்நபியே. (43)

சீஷர்குருமாரை நல்லமுஹம்மதே
சிறப்புள்ளசொற்கத்திற் சேரும்நபியே. (44)

பிறவிசெய்தன்னையும் மாமுஹம்மதே
பிரியமாய்சொற்கத்திற் சேரும்நபியே. (45)

கலீபத்துஷெய்கு ஷாஹுல்ஹமீதையுங்
கனமானபிறுதௌசிற் சேரும்நபியே. (46)

காரணமாலை முற்றிற்று.

## தவயோகசூஸ்த்ரம்

### வெண்பாக்கள்

ஆதிஜோதியொளி வல்லவனே அன்புடைய தற்பரனே
நீதியேயோக சூஸ்த்ரம் நிலைபரமாய்—ஜோதியே
நன்மையாய் யானுரைக்க நாவிலருள் தந்தெனக்கு
வண்மையுள்ள கிருபைசெய் வாய். (1)



வானின்கலை யோர்கலையே வல்லோ னழகுகலை
தீனின்கலை ரவிமதியும் திரிசுடராம்—மேனிமுப்பூ
கண்டால் கலிதீரும் கனம்ஞானம் தான்பலிக்கும்
விண்டால் பவந்தொடரு மே. (2)

இரும்பான மேனியது இனிமையருளால்தங்கம்
அரும்பரும் முப்பூவால் சுயமாவார்—கருவதனை
அறிந்து குருமுடித்து அருமைத் தவஞ்செய்து
நெறியுடனே யோகஞ்செய் நேர். (3)

கல்லான கல்லதனைக் காசினியில் யாரறிவார்
அல்லுடைய பாவியறியார்களே—கல்லொளிவை
கண்டாலே மேனிதங்கம் கருயோகஞ் சித்தியப்பா
பண்டமுள்ள குருவறிந்து பார். (4)

ஆகாசச் சங்கிரண்டு அதினடுவில் முனையிருக்கும்
வாகாய்த் துருத்திக்கொண்டு வளமாயூதி—ஏகவே
இலங்கும் ரவிமதியும் இனிமைமலர் கண்டவர்க்கு
துலங்குமே யோகமது சுயம். (5)

எட்டெட்டு விண்கலையை இன்பமுடனேகண்டு
திட்டமாய் மேல்நோக்கத் திறமான—வட்டமுள்ள
முப்பூவுங் காண்பாய் மோனமுள்ள யோகசித்தி
தப்பாது காயசித்தி தான். (6)

கனியான கருநெல்லி கருவான பூரணமே
இனிமையுள்ள பெரியோரே இதையறிவார்—கனிகண்டால்
காரணங்கள் மெத்தவுண்டு கருவான தேகமது
பூரணம்போ லேயிலங்கும் பொன். (7)

அந்தரமாய் நிற்குமது ஆகாச நீரதுக்குள்
சுந்தரம்போல் நின்றிலங்கும் ஜோதிக்கல்—அந்தரத்தில்
பூரணக் கற்கண்டு புதுமையதைத் தானறிந்தால்
தீரமுள்ளயோகமது ஜெயம். (8)

நாட்டமது ரண்டாகும் நடுவிலொரு அம்பகமாம்
தேட்டமா யவ்விடத்திற் சென்றுதிரு—நாட்டமாய்

நித்தம் அமுதருந்து நின்றேயம் தங்கமதாம்
சுத்தமுள்ள அருள்துலங்கும் சுயம். (9)

கணையான அம்புகொண்டு கனமலரைத் தானெடுத்து
இணையில்லாத் தலத்தி லிருந்தரைத்து—கனமான
இரும்புள்ள தேகமதி லின்பமுடன் தான்தேய்த்து
குருமுடித்து யோகஞ்செய் குணம். (10)

கருவான குருவறிந்தால் காணுமே முப்பூவும்
திருவான முப்பூவும் திரிசுடராய்—திருவருளை
அறிந்தாலே யோகசித்தி அன்புடைய முப்பூவால்
சிறந்தஉடல் தானிலங்கும் திறம். (11)

எட்டிரண்டு பூநாதம் இனிமைவிந்து நாதமதாம்
மட்டில்லா முப்பூவின் வகைகண்டால்—திட்டமாம்
நீதமுள்ள யோகசித்தி நிலையறிந்து செய்தவர்க்கு
பூதலத்தில் மேனியுடல் பொன். (12)

நாதவிந்து முப்பூவை நானிலத்தில் தானறியார்
நாதவிந்து பாய்ந்தவிடம் நன்னிறைவு—நாதவிந்தை
இட்டாலே மேனிதங்கம் என்னசொல்வேன் விணையணுநா
திட்டமாய் யோகசித்தி திறம். (13)

கழிம்புபோம் கெடுதிபோம் கசடுபோம் நல்லருளின்
வழியான முச்சுடரின் வகையறிந்தால்—கழிம்பற்று
எல்லா முயர்ந்தகுலம் என்னசொல்வே னற்புதத்தை
சொல்லாமற் சொன்னேன் சுயம். (14)

சரமூலி யைந்ததனைத் தன்மையாய்த் தானரைத்து
பரமான மேனியதிற் பரிவுடனே—நிறைவாக
பூசவே துருவற்றுப் பொன்னாகும் உடலதுவும்
நாசமெலாந் தான்விலகும் நலம். (15)

வழலைசவுக்காரமது வளமான பூநாதம்
நளிர்விந்து நாதமது நன்னீராம்—நளிரான
பண்புடைய நாதவிந்து பரிகார சாரமப்பா
நண்பாக அறிந்தவர்க்கு நயம். (16)



கண்டிடுவாய் அண்டத்திற் கனமான முத்துண்டும்
தண்டியுள்ள கருவாளி தானறிவான்—கண்டுமுத்தைத்
தொட்டவுடனே நன்மை ஜோதியொளி தான்துலங்கும்
திட்டமா யறிந்திடுவாய் ஜெயம். (17)

கண்ணான தையறிந்து காலதனைத் தூக்கிநின்று
விண்ணான நற்றலத்தில் மேல்நோக்கி—விண்ணொளிவைப்
பார்த்து மனமகிழ்ந்து பருகினா லமுதமதை
சேர்த்தியுள்ள தேகமெலாம் தெளிவு. (18)

பூத்தமலர் வாசனைதான் புகழான கல்லுப்பு
வற்றமுள்ள பூநாதம் இனிமையாய்ப்—பார்த்தறிந்தால்
பலிக்குமடா காயசித்தி பண்புடைய யோகசித்தி
சலிப்பொரு நாளுமில்லை தான். (19)

செய்யிதஹமதவர் சேயான கலீபத்து
ஷெய்குஷாஹுல்ஹமீது சிறப்புடைய—மெய்யான
தவயோக சூஸ்திரத்தைத் தன்மையாய்த் தானுரைத்தேன்
பவம்நீங்கும் அறிந்தவர்க்கே பலன். (20)

## தவயோக சூஸ்த்ரம்

முற்றிற்று.

—✿—

## அடைக்கல மாலை

தொங்கல்

ஆதியாகிய பெரியவனே
    ஆலமடங்கடலும் புகழ்ச்சியுள்ள
நீதிறஹ்மானே வல்லவனே
    நெறியுள்ளோர்க்கெல்லாந் தயாளவேந்தே
ஓதியுணராத பாவிகட்கும்
    உதவிசெய்கின்ற பழம்பொருளே
பாதகன்என்மேற் பாரிலுள்ளோர்
    பகையாமற்காருன் னடைக்கலமே. (1)

நல்லோர்துஆவைக் கையேற்றுநீ
　　நலமாய்நாட்டங்கள் முடிப்பவனே
பொல்லாப்பாவிசெய் கின்றதையும்
　　பொறுத்துஅவர்நாட்டம் முடிப்பவனே
எல்லாகுதறத்தும் றஹ்மத்துள்ள
　　இறைவனேயேகக் கொடையுள்ளோனே
கல்லாரெனைப்பகை செய்யாமலே
　　காத்துக்கொள்ளுந்தன் னடைக்கலமே. (2)

ஜோதியொளிவான கண்மணியே
　　தொடரின்பதுன்ப மற்றவனே
நீதியாகவே யாவருக்கும்
　　நிரப்பமாய்றஹ்மத் திரணமீயும்
ஆதிபெரியவ னுனையல்லாது
　　அவனியிலொரு நாயனுண்டோ
நீதமில்லாத பாவியெனை
　　நேர்சேர்யானுந்தன் னடைக்கலமே. (3)

பெருமையாகிய வல்லவனே
　　பேரின்பம்நன்மை யுள்ளவனே
வறுமைமுஸீபத்தும் பலஆபத்தும்
　　வந்துதொடாமற் காத்திடுவாய்
தருமமாகவே கலிமாப்பொருள்
　　தந்துஅருள்வாய்என் ஸகறாத்திலே
சிறுமைவாராமல் ஈமானுடன்
　　சேர்த்துக்கொள்யானுன் னடைக்கலமே. (4)

நாடுந்துஆவெல்லாம் கையேற்றுநீ
　　கலமாய்நாட்டத்தை நிறைவேற்றுவாய்
தேடும்பொருளான வல்லவனே
　　தெவிட்டாவமிர்தான பாற்கடலே
கேடுள்ளபவக் கடலானது
　　கெடுதிசெய்தெனை மூடிடாமற்
கூடுகுலைந்திடக் கிருபைசெய்வாய்
　　குதாவேஅருள்தாவுன் னடைக்கலமே. (5)



கேட்டோரவரவர் நினைவின்படி
　　கிருபைசெய்கின்ற றஹ்மானும்நீ
நாட்டமறிந்துநற் கிருபைசெய்யும்
　　நாயனுனையல்லால் வேறில்லையே
எட்டிலடங்கானே யாறப்பேயென்
　　னிதயமலரது விரிந்துவுனை
தேட்டமுடனேயான் புகழ்ந்திறைஞ்ச
　　தெளிவருள்தாவுன் னடைக்கலமே. (6)

ஆதியாகிய வித்தானது
　　அஹதென்னுமொரு மரமானது
ஜோதிமரமது தான்படர்ந்து
　　சூக்ஷுமுஹம்மது மலரானது
நீதமாமலர் கனியுமாச்சு
　　நிரப்பமாயுள்ள வாஹிதான
வேதனே அல்லா மலரில்நல்ல
　　விதமாயொடுங்கவரு ளடைக்கலமே. (7)

தெளிவுள்ளஈமான் கோட்டையுள்ளே
　　சிறப்புப்பொருந்திய ஹிந்தீலாச்சு
அழிவில்லாஹிந்தீ லொளிவானது
　　அற்புதமுள்ள கொலுமேடையே
ஒளியுள்ளகொலு மேடைதன்னில்
　　ஒழுங்குடன்சென்று வுனைவணங்கி
அழகுஅமுதத்தை யானருந்த
　　அல்லா அருள்செய்யுன் னடைக்கலமே. (8)

அழகுபொருந்திய பெரியோர்கள்தான்
　　அன்பாய்ச்செய்கின்ற தவத்தின்நிலை
தெளிவுள்ளதவஞ் செய்தபேர்கள்
　　சிறந்தறஹ்மானின் நலமிலாவார்
அழிவில்லானே யா ஹல்அஃலம்
　　அடிமைதனைக்காத்துன் னருளொளிவை
களம்நீக்கித்தெரி சித்துணர
　　ஹக்கேஅருள்செய்யுன் னடைக்கலமே. (9)

நினைத்ததுஆவெல்லாம் கபூல்செய்துஎன்
நினைவின்படியருள் மகராஜனே
உனைத்தான்வணங்கின நல்லோர்கட்கு
ஒடுக்கம்வேளையில் நன்மையீவாய்
எனைத்தான் றஹ்மானே நீகையேற்று
இடர்வினைகஷ்ட மனைத்தும்போக்கி
தினைப்போலும்பவ மணுகிடாமல்
சிறப்பருள்சேருன் னடைக்கலமே. (10)

எல்லாமறிந்தோனே இறையவனே
ஏழையடியவர்க் கிரங்குந்தீனே
வல்லானேஎங்கள் மனச்சலிப்பும்
வஞ்சனைநோய்கள் பலதுன்பமும்
நில்லாதகற்றிநற் கிருபைசெய்வாய்
நிகரில்லாஏகப் பரம்பொருளே
சொல்லால்வரும்பிழை யெல்லாம்பொறுத்து
சூட்சமருள்தாவுன் னடைக்கலமே. (11)

வரிசைறஹ்மத்தும் கனசெல்வமும்
வாகுள்ளபெரும் வாழ்வுகளும்
பரிவுஇரணமும் ஈடேத்தமும்
பாங்குஸலாமத்தும் ஆபியத்தும்
பெரிதானநிஃமத்தும்நன்மை
பேரின்பவருட் சிறப்புந்தந்து
நெறியான ஆதியே பாவியென்னை
நேர்சேர்யானுந்தன் னடைக்கலமே. (12)

நல்லார்பொல்லார்க்கும் துனியாவிலே
நலமாய்க்கிருபைகள் செய்கின்றோனே
நல்லோர்க்குமட்டும் ஆகிறத்தில்
நன்மைமிகச்செய்யும் பெரியவனே
தொல்லையணுகாமல் நீக்கிவைப்பாய்
சுயமாயனுதினம் தொழுதிரந்து
எல்லையறிந்துயா னுனைப்புகழ
இறைவா அருள்செய்யுன் னடைக்கலமே. (13)



வானம்புவிகடல் மலைகள்தாரை
மதிசூரியனெல்லாந் தான்படைத்த
தானவனுனை யன்றிவேறே
தரணியிலொரு நாயனுண்டோ
தீனமணுகாமற் காப்பாற்றியே
தெளிவேமுதிர்ந்ததோர் வயதுந்தந்து
தீனேவருத்தங்கள் மிடிமைநீக்கி
சிறப்பாய்க்காப்பாற்றுன் னடைக்கலமே. (14)

அன்மையில்லாத அறிவன்நீயே
அழிவில்லாப்பொருள் நீயேயாகும்
நன்மைபொருந்திய றஹ்மான்நீயே
நாட்டம்நிறைவேற்றும் வல்லோனாகும்
என்மேலுலகவர் பகைசெய்யாமல்
இறையேகாவல்செய் நன்மையாக
உன்மேலெப்போதும் என்னினைவு
உருகிஇறைஞ்சவரு ளடைக்கலமே. (15)

அற்பஜலமது அழிந்திடாமல்
அன்னைகெற்பத்தி லமைத்தமேலோன்
தற்பரனான வல்லவனீ
தன்மையுருவாக்கிப் பிறப்பித்தவன்
நற்பரந்தரும்நாயனீயே
நன்மைத்தவஞ்செய்யக் கிருபைசெய்வாய்
பொற்பதிதன்னிற் குறைவுநீக்கி
பூரணசேருன் னடைக்கலமே. (16)

இறையேயுனக்குத்தான் நிகரில்லையே
எந்தவுலகிலும் பெரியவனீ
மறைநாலமைத்தநல் லரும்பொருளே
மறைபொருள்தன்னைத் தெளிவதாக
முறையோடெனக்கருள் துய்யவனே
மோனமுச்சுட ரொளிவானது
குறைவில்லாமலேதெரியச்செய்வாய்
குதாவேயானுந்தன் னடைக்கலமே. (17)

எட்டுத்திசைபதி னறுகோணம்
    எங்குந்நிறைந்தொளி பிரகாசமாய்
மட்டிலடங்காத ஜோதியாக
    வந்துஇலங்கிய மணிவிளக்கே
திட்டமாகிய தெளிவொளிவை
    தெரிசித்தவனு தினம்வணங்க
கட்டம்கெடுதியும் மறதிதூக்கம்
    கத்தனே நீக்குன் னடைக்கலமே. (18)

சகலவஸ்தையும் படைத்தவகா
    சம்பூர்ணமான தூய்யவனே
முகத்தின்கண்களை மறைத்தபோது
    முன்னின்றிலங்கிய மணிவிளக்கே
அகக்கண்எப்போதும் திரையில்லாமல்
    அன்பாய்த்திறக்கநீ கிருபைசெய்வாய்
ஜெகத்திலெனக்கருள் துலங்கதீபே
    சிறப்பாயருள்செய்யுன் னடைக்கலமே. (19)

மூலப்பொருளான முதலவனே
    முடிவில்லாதநற் றவப்பொருளே
சீலமாகிய தெளிவுள்ளோர்க்கு
    சிறப்பும்றஹ்மத்தும் கொடுப்பவனே
வலமதில்தவம் நிரப்பமாக
    அனுது...ஞ்செய்யக் கிருபைசெய்து
பாலங்கடத்திப்பொற் பதியிலென்னை
    படைத்தோனே சேருன் னடைக்கலமே. (20)

வாருள்ளமேன்மைக் குணமெனக்கு
    வளமாய்த்தரிப்படக் கிருபைசெய்வாய்
சாகாமற்செத்து அருள்தவத்தை
    சரியாகச்செய்யக் கிருபையருள்
தாகம்வகருத்தில் அணுகிடாமல்
    தனியனைநீக்கிக் கனியாத்தன்னை
மோகமுடன்தக்குமானுடன்
    முதல்வனே சேருன் னடைக்கலமே. (2



சங்கையாகிய தம்பிரானே
    சகலவுயிர்க்கெல்லாம் மேலவனே
எங்குந்நிறைந்தோர் காரணனே
    இடைஞ்சல்வருத்தங்கள் ஆபத்தெல்லாம்
தங்காமற்போகக் கிருபைசெய்வாய்
    தாணிதனில்தவம் பழுதில்லாமல்
மங்காமணியேயான் செய்தீடேற
    வரிசையருள்தாவுன் னடைக்கலமே. (22)

தாணியில்மனு வானவர்கள்
    தப்புக்குறைசெய்த பாவியென்னை
பரனேவருத்தங்கள் செய்திடாமல்
    பாதுகாத்துக்கொள் யாறஹீமே
சரணம்சரணம்உன் னடைக்கலமே
    தயாளனேயானுன் தஞ்சம்தஞ்சம்
கருணைக்கடல்திறந் தருளைக்காட்டும்
    ஹக்கேயானுந்தன் னடைக்கலமே. (23)

தந்தையெனதுதாய் வழிகட்கெல்லாம்
    தனியனேபிழை தான்பொறுத்து
எந்தன்பிழைகளும் நீபொறுத்து
    இறைவாவுன்னுடை பிறுதௌஸினில்
சொந்தமாக்கிநீ வைத்துநன்மை
    ஜோதிமுஹம்மது நபிஷபாஅத்தும்
கந்தத்திருமணக் காட்சிகாட்டு
    ஹக்கேயானுந்தன் னடைக்கலமே. (24)

அல்லாவுன்திரு நாமமது
    ஆயிரத்திலே நிரப்பமுள்ள
வல்லானேஒரு திருநாமத்தை
    மறைத்தபெரியவன் றஹ்மானும்நீ
நல்லபுறுக்கானில் அமைத்துவைத்தாய்
    நன்மைமேலான திருநாமத்தை
எல்லாப்புகழ்ச்சியும் உனக்கேயாகும்
    ஏழைதனைக்காருன் னடைக்கலமே. (25)

மறைத்ததிருநாமம் தன்னைநீயும்
வண்ணமுஹம்மது நபியைநன்றாய்
சிறப்பாய்மிஃறாஜுக் கழைத்துமேன்மை
திருநாமந்தன்னை யுரைத்தறப்பே
குறையில்லாமலே ரகசியமும்
கூர்மையாகிய பாரசியமும்
நிரப்பமாகவே மொழிந்தவகா
நேர்சேர்யானுந்தன் னடைக்கலமே. (26)

மறையில்மறைத்ததோர் திருநாமமே
வளமுள்ளபெருந் தவமுமாகும்
குறைகள்நீக்கிநல் லருளைத்தாநற்
குணமுள்ளஎந்தன் கண்மணியே
சிறப்புடன்தொட்ட வுடனேயருள்
ஜோதிதுலங்கநற் கிருபைசெய்து
நிறைந்தபொருளதை யெனக்குத்தந்து
நேர்சேர்றஹ்மானுன் னடைக்கலமே. (27)

ஷரீஅத்தானது புகழ்ச்சியுள்ள
தன்மைஇல்மான கடலானது
ஷரீஅத்தின்படி நடந்துவந்தால்
சரியாய்மஃரிபா வழியைக்காட்டும்
ஷறஹுக்காகவே மஃரிபாவைத்
தானேசிர்றாகப் பேசுநித்தம்
நிரப்பமறிந்துயான் தொழுதிறைஞ்ச
நேர்சேர்றஹ்மானுன் னடைக்கலமே. (28)

புகழும்புகழ்ச்சியும் உனக்கல்லாது
புவியில்யாருக்கு மில்லைறப்பே
ககனம்கடல்மலை மதிரவியும்
கனமுள்ளபுவி தாரையின்னும்
சகலவுயிர்களும் உனைப்புகழும்
சம்பூர்ணமான துய்யவனே
அகக்கண்திறந்தருள் தெரியச்செய்வாய்
அல்லாயானுந்தன் னடைக்கலமே. (29)



புரிவுநாயக னுனைத்தவிர
பூதலந்தன்னில் யாருமில்லை
அரியபெரியோனே யாறஹீமே
ஆலமடங்கலும் படைத்தவனே
சரணம்யான்கலீ பத்துஷெய்கு
ஷாஹுல்ஹமீதுமே லிரக்கம்வைத்து
நிரப்பமுடனுந்தன் பொருத்தந்தன்னில்
நேர்மையாய்ச்சேருன் னடைக்கலமே. (30)

அடைக்கல மாலை முற்றிற்று.

—✿—

## கற்பஞானம் பதினாறு.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்

தெளிவுள்ள வல்லவனின் அருளிற் சேர
சிறப்பான கற்பமுறை யுலகத்தோர்க்கு
களிராகச் சொல்லுகிறேன் யானும் நன்றாய்
நலமாக யான்சொல்லும் முறையைக் கேட்டு
அழிவில்லா திருந்துமே நடந்தா ராலல்
அன்பான தேகமது வச்ர காயம்
வழியுடனே யிந்நூலை யறிந்து நித்தம்
மகிமையுள்ள மெய்ஞ்ஞான வருளைப் பாரே. (1)

அருளான ஞானமதி லாவதற்கு
அன்புடைய கண்மணியே விபரஞ் சொல்வேன்
கருவான சுண்ணாம்புபுகை யிலையு மாகா
கனமுள்ள கொலைகளவும் பொய்யும் நீக்கு
மறுவான கல்லெண்ணை கடுகும் நீக்கு
மானிடனே குருநிந்தை கோபம் தள்ளு
தெரிவையரின் ஆசைதனைப் போக்கு போக்கு
செல்வனே கெடுதலுள்ள தெல்லாந் தள்ளே. (2)

தள்ளப்பா தானியங்கள் காய்கள் தன்னில்
தன்மையில்லா கேடுள்ள தெல்லாம் நீக்கு

கள்ளமுள்ள புளியிளகாய் கசப்பு முப்பும்
கனமான மானிடனே யருந்து லேசாய்
சள்ளைசெய்யாப் பசும்பயறும் பசுவின் நெய்யும்
சர்க்கரைதேன் கற்கண்டும் பசுவின் பாலும்
எள்ளலில்லாப் புழுங்கல்பச்சை யரிசி யின்னும்
இன்பமுள்ள கோதுமைமா வதுவுஞ் சேரே. (3)

சேரப்பா இந்தவஸ்து அனைத்தும் நீயும்
செல்வனே நடுத்தரமா யருந்து சொன்னேன்
பாரப்பா தள்ளுகின்ற வஸ்தைத் தள்ளி
பாலகனே சேர்க்குகின்ற வஸ்தைச் சேர்த்து
தீரமுள்ள அருளான தவத்தைச் செய்வாய்
சிறப்புடனே தினந்தோறுந் தெளிவ தாக
வீரமுள்ள அருள்தவத்தைச் செய்த பேர்கள்
மேன்மைசொற்கப் பதிவாழ்வார் நன்மை தானே. (4)

நன்மையுள்ள கண்மணியே யறிவுள் ளோனே
நானிலத்தி லுள்ளமா னிடனே கேளு
இன்மையற்று உனதுசடம் வலுப்பதற்குத்
தெளிவாக அருந்தும்வஸ்தை யருந்தி நன்றாய்த்
தன்மையுள்ள முப்பூவைத் தானறிந்து
சங்கையாய்த் தினந்தோறும் நன்றாய் நீயும்
வண்மையுடன் அமுதமதைக் குடித்தா யானால்
வளமான வுன்தேகந் தங்கம் பாரே. (5)

தேகமது தங்கமப்பா அருளினாலே
சிறப்புடனே யருள்ஞானம் அறிவாய்ச் சொன்னேன்
ஆகமம் பார்த்துமே யனேகம் பேர்கள்
அலைந்து கெட்டுப் போனார்க ளுண்மை யாக
போகமென்ற பெண்ணாசை யகற்றி வைத்துப்
புனிதமுள்ள குருவிடத்திற் தீட்சை பெற்று
ஏகபர மானவஸ்து இன்னதென்று
இன்பமுட னவர்களிடம் நன்றாய்க் கேளே. (6)

கேளப்பா ஆதிவஸ்தை யறிந்து நீயும்
கெட்டியுடன் நற்றவத்தை யழகாய்ச் செய்து



வாழப்பா நன்றாக வுலகிலே தான்
மகத்தான கண்மணியே யறிவுள்ளோனே
ஆளலாம் அவனருளை யறிந்த பேர்கள்
அன்பான சுவனபதி தன்னில் நேராய்
மாளாமல் மாண்டவர்கள் பெரியோ ராகும்
மகிமையுடன் தெளிவாகச் சொன்னேன் பாரே. (7)

தெளிவான கண்மணியே யோகந் தன்னைச்
சிறப்புடனே யறிந்தவர்கள் தங்க மாகும்
வழியான பெரியோர்க ளிவரே யாகும்
வளமுள்ள தீன்குலத்தி லுள்ளோ ராகும்
அழிவில்லை அவனிதனிற் புதைத்திட்டாலும்
அன்புள்ள பெரியோரை மண் தின்னாது
நளிரான தங்கமதை மண் தின்னாது
நலமான பெரியோரும் அதுபோலாமே. (8)

நலமான சிவராஜ யோகஞ் செய்தோர்
நன்மையுள்ள சீதேவி யாவார் நன்றாய்
புலமான பேரின்ப மறிந்த பேர்க்குப்
போகுமே வினைகளெல்லாந் தூளைப் போலே
நிலமான பூமிதனிற் புகழும் மெத்த
நேர்மையுள்ள பெரியோர்க்கு அப்பா சொன்னேன்
குலமான தங்கமது இதுதான் மேன்மை
குணமுள்ள அறிஞரையுங் கண்டுபோற்றே. (9)

போற்றினால் வினைகளெல்லா மோடிப் போகும்
பூரணத்தை நன்றாகத் தெளிந்து நீயும்
ஏற்றிடுவாய் வாசியையும் ஹேயு மீமாய்
இன்பமுடன் நாட்டிடுவாய் நன்மையாக
மாற்றியே பிடித்திடுநல் முன்பின் னாக
மகிமையுள்ள சரமதிலே யழகாய்க் கண்ணே
சாத்தியே யிருவாசல் தன்னைப் பூட்டி
சங்கையுள்ள மத்திதனில் நோக்கிப் பாரே. (10)

பாரப்பா நோக்கியங்கே பார்க்கும் போது
பண்பான தீபவொளி தோன்றும் நன்றாய்
நேரப்பா அதுதனைநீ யறிந்து பாரு
நேர்மையுள்ள பாலகனே கண்கள் கூசும்
ஆரப்பா இப்பொருளை யறியப் போறார்
அன்புள்ள குருமாரை யண்டினோர்க்குக்
கூறுவார் சற்குருவும் அருளதனை
குணமருள்பெற் றோரறிவார் நன்றாய்த் தானே. (11)

நன்றாக அந்திசந்தி யோகஞ் செய்வாய்
நலமாகக் காயாதி கற்பங் கொண்டு
குன்றாத ஜோதியதைத் தினமும் போற்றிக்
குணமான சந்திரனில் நிலையாய் நின்று
மன்றாடி யத்தலத்தில் வணக்கஞ் செய்து
வள்ளலிடந் துஆவிரப்பாய் நலம தாக
என்றுமுள்ள ஆண்டவனைப் புகழ்ந்த பேர்கள்
இன்பமுள்ளோர் நன்றாக அறிவாய் கண்ணே. (12)

கண்ணான கண்மணியே கற்ப ஞானம்
கனமாக யானுரைத்தேன் ஈரெட் டாக
பொன்னான பூவுலகி லிருந்து நன்றாய்
புகழான கற்பமதை யுண்டோர் நல்லோர்
எந்நாளும் அதைப்போலே நீங்க ளெல்லாம்
இன்பமுள்ள யான்சொன்ன வஸ்தைச் சேர்த்து
நன்னிலையாய் யான்சொன்ன வஸ்தைத் தள்ளி
நலமான நல்லுணவை யருந்து வாயே. (13)

அருந்துவாய் தள்ளுகின்ற வஸ்தைத் தள்ளி
அருந்தினா லதுதான்கா யாதி கற்பம்
திருந்திடுவாய் யோகத்தி லழகாய் நீயும்
செல்வனே தேகமது வலுத்துப் போகும்
மறதியில்லா திருந்துஅனு தினமும் நன்றாய்
வணங்கிடவே வல்லவனின் அருளிற் சேர்ந்து



சறுகுதலில் லாமலேநீ சொற்கந் தன்னிற்
சங்கையுடன் வாழ்வாயே நலமாய்த் தானே. (14)

நல்முள்ள அழகுகற்ப ஞானந் தன்னை
நன்மையாயுரைத்துவிட்டேன் தெளிவதாக
கலீபத்து ஷெய்குஷா ஹூல்ஹமீது
கனமான வல்லவனே நலமதான
பெலமான பேரின்ப மதனை நித்தம்
பிசகாமற் செய்துவரக்கிருபை செய்வாய்
குலமான தங்கம்போ லெனைநீயாக்கு
கோமானே யேகபராம் ஆதி நீயே. (15)

ஆதியே துன்பவினை யகற்றி வைத்து
அன்புடைய அருள்தனையுந் தெளிவாய்த் தந்து
நீதியாய் யான்நடந்து தவத்தைச் செய்ய
நேர்மையுள்ள ஏகவஸ்தே யருள்வா யென்னை
ஜோதியே யென்துயர மெல்லாம் நீக்கிச்
சுடரொளியே நன்மையதைத் தினமுஞ் செய்ய
வேதனே தீபப்பெருஞ் சுடரே நன்றாய்
மேன்மையருட் கிருபைசெய்வாய் நிகரில்லானே. (16)

கற்பஞானம் பதினாறு முற்றிற்று.

## கருமெய்ஞ்ஞானம் பதினொன்று.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

ஆதியென்ற பராபரனே யருளே யெந்தன்
அருமையுள்ள நற்சுடரே யழகே யேகா
நீதியுள்ள பெருமைநல மான கோனே
நேர்மையே தாபரனே நிரப்பமான
ஜோதிவடி வானவனே கருமெய்ஞ் ஞானம்
சொல்லவே யென்னாவி லருளைத் தந்து
நீதமுடன் யானுரைக்க வுதவி செய்வாய்
நிச்சயநற் பூரணனே நிகரில்லானே. (1)

பூரணமாய்க் கருவமைக்கும் விபரந் தன்னை
புனிதமுடன் சொல்லுகிறேன் தெளிவ தாக
தீரமுள்ள மாதாவின் பங்கிரத்தம்
திறமான தசைமூளை யபிர்தந் தோலாம்
காரமுள்ள பிதாபங்கு சவ்வுவித்து
கனமான எலும்புநகம் நரம்பு ரோமம்
வீரமதாய்ப் பதினொன்றும் அமையும் போது
விதமதனை வண்மையா யுரைப்பேன் கேளே. (2)

வண்மைமண் தண்ணீர்நல் வாயு வன்னி
வளமான ஆகாயங் கலந்து வொன்றாய்
தன்மையாய்த் தான்கருவின் குழியிலே தான்
தனமாகத் தானமைந்து வுருவ மாகும்
பண்மையுள்ள தசமாதம் ஆகிப் போனால்
பரிவாக வுருவமெல்லாம் நிரப்ப மாகும்
நன்மையுடன் நற்கலிமா அறுநான் குந்தான்
நலமன்பு தேகமதி லமையும் பாரே. (3)

அன்பனே கலிமாவில் ரண்டெழுத்தை
அருமையுடன் சொல்லுகிறேன் நலமதாக
இன்பமுள்ள லாஇலாஹ இல்லல்லாஹு
இனிமையுள்ள கடைசிஹே எழுத்துவொன்று
நண்புதரும் முஹம்மதுர் றஸூலுல்லாஹி
நலமான கடைசிஹே எழுத்து வொன்று
பண்புள்ள மாவுக்குள் ரண்டுஞ் சேர்ந்து
பலமாக அதிர்ச்சிதிறம் செய்யுந் தானே. (4)

திறமாக அதிர்ச்சிதான் செய்யும் போது
செல்வனே நோவதுவுந் தானுண் டாகிச்
சிரமதுவும் நோக்குமப்பா புவியிலே தான்
சிறப்பாகப் பாலகனும் பிறக்கும் நன்றாய்
தீரமான குழந்தையது புவியில் வீழ்ந்தாற்
சத்தமதும் மூச்சதுமுண் டாகு மப்பா
பானுமே யுலகுயிரைத் தெளிவதாகப்
பார்தனிலே யமைத்தவிதம் அழகு தானே. (5)



அமைத்தநல்ல வல்லவனை வணங்காப் பாவி
அகிலமதி லிருந்தாலும் பலன்தா னென்ன
சமைத்தவொரு ஆதிதனை வணங்கினோர்கள்
தப்பாமல் நற்கெதியு மடைவா ரப்பா
இமைப்பொழுதும் ஆண்டவனை மறக்க லாமோ
ஏகனவன் யாவரையும் படைத்த கோமான்
கமையுடைய வல்லவனை யறிந்து நித்தங்
காரணமாய்த் தொழுதவர்க்கு முத்தி தானே. (6)

காரணத்தின் முச்சுடரைக் கண்டு நன்றாய்க்
கனமாகத் தொழுதவர்க்குக் காய சித்தி
பூரணத்தைத் தெளிந்தவர்கள் கோடிக் கொன்று
பூதலத்திற் காணுவது அரிது மெத்த
ஆரணத்தைப் பார்த்துமிகப் பேசிக் கெட்ட
அறிவில்லாப் பாதகர்கள் உலகி லுண்டு
வீரமுள்ள பாவியிடம் பேசிடாதே
மேனியுள்ள முப்பொருளை யடக்கம் பண்ணே. (7)

மேனிபெற்ற பெரியோரை யண்டினோர்கள்
விவேகமுள்ள நல்லோர்க ளாவார் நன்றாய்
கோனவனைக் கண்டுதெரி சித்து நன்மைக்
குணமான பதியதிலே சேர்வாய் கண்ணே
தாமென்ற அகம்பிடித்த சண்டாளர்க்குத்
தன்மையுள்ள மௌனமதைச் சொல்ல வேண்டாம்
தீனென்ற கலிமாவை யுலகந் தன்னிற்
சிறப்பாக விளக்கிவைத்தோர் தங்கமாமே. (8)

தங்கமென்ற தங்கமப்பா தவத்தோர்கள்தான்
ஜாதியிலே மேன்மையுள்ள ஜாதி யாகும்
சிங்கமென்ற தவராஜ சிங்க மாகும்
சிறப்புடைய அறிவுள்ள குலமு மாகும்
எங்குமே புகழுகின்ற வல்லனுக்கு
ஏற்றமுள்ள அடியார்க ளிவரே யாகும்
பங்கமுள்ள அஞ்ஞானி தனக்கு நன்றாய்
பார்தனிலே குருடனென்று நாமம் ஆச்சே. (9)

குருடன்தான் கண்கெட்ட மடையனப்பா
குவலயத்திற் கெதிபற்றுத் திரிவான் கேடாய்
கருப்பொருளை யின்னதென்று அறியமாட்டான்
கன்மிகள்தான் வாய்ஞானம் பேசிப் பேசித்
திருவருளை யறிந்தவரைக் குறையுஞ் சொல்வான்
சிறப்பில்லாப் பாதகர்க்குத் தணிந்தால் மேன்மை
மருவான முப்பொருளை யறிந்து நித்தம்
வணக்கமாய்த் தொழுதுநலம் தவஞ்செய்வாயே. (10)

நலமான வல்லவனே யருளைத் தந்து
நன்மையுள்ள தவஞ்செய்ய வுதவிசெய்வாய்
குலமான மேன்மையே ராஜ கோனே
கோமானே யேற்றுக்கொள் ளென்து ஆவை
கலீபத்து ஷெய்குஷா ஹுல்ஹமீது
கனமான அழகுடைய கருமெய்ஞ் ஞானம்
பெலனுகச் சொல்லிவிட்டேன் ஈரைந் தொன்றாய்
பிரியமுடன் அறிந்திடுங்கள் உலகத்தோரே. (11)

கருமெய்ஞ்ஞானம் பதினொன்று முற்றிற்று.

---

## ஞான மலர் முப்பது

—✿—

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

குருவான ஞானமலர் சொல்லக் கேளு
குணமுள்ள கற்பமதை யுண்ணும் போது
மருவான வெயிலாகா வோட்ட மாகா
வளமில்லா சத்தித்தல் காற்று மாகா
கருவழிக்கும் பொய்கொலையும் களவு மாகா
கடுகுநல் லெண்ணை குரு நிந்தை யாகா
அருள்கெடுக்கும் பெண்மாதர் மடவார் தங்கள்
அனுபோக மானதைநீ அதட்டித் தள்ளே. (1)

தள்ளப்பா சுண்ணாம்பு கஞ்சா வாகா
தன்மையில்லாப் புகையிலையும் பொடியு மாகா



கள்ளுஅபின் சாராய மதனை நீக்கு
கடினமுள்ள கோபமதை விரைந்து தள்ளு
சள்ளையுள்ள புவிவாழ்வை யொருங்கத் தள்ளு
சம்பூர்ண முச்சுடரின் அமுத முண்ணு
விள்ளுதற்கு அரிதான அமுத முண்டால்
வேகமுள்ள நாதவிந்து கட்டிப் போமே. (2)

கட்டுதற்குக் குறியொன்று சொல்லக் கேளு
கனமான பதிமூன்று வருஷ மட்டும்
திட்டமாய்ப் போகமதை விலக்கி வைத்து
திறமான தவமதனைச் செய்தா லப்பா
கட்டிப்போம் நாதவிந்து தொண்ணூற் றாறு
கருவான நாள்வரைக்கும் வராமல் நின்றால்
மட்டில்லா நாதவிந்து கட்டிப் போச்சு
வளமுள்ள நாதனென்ற குருவு மாச்சே. (3)

குருவான தத்துவங்கள் தொண்ணூற் றாறும்
குணமாகத் தானடங்கும் கூர்ந்து பாரு
திருவருளு மேதுலங்கும் தெளிவ தாக
திரையேழுந் தான்விலகும் இருளும் நீங்கும்
மருவுள்ள தேகமது தங்க மாகும்
மண்ணதிலே வைத்தாலும் அழிந்தி டாது
கருவான நாதவிந்தால் அருளு மாச்சு
கண்மணியே அருளமுத முண்டு தேறே. (4)

அமுதவிழி யோகநித்திரை செய்யவே தான்
அன்பாகப் பாதமதை நீட்டிக் கொண்டு
மமதையுள்ள வலக்கைமேல் தலையை வைத்து
வளமான சரமதனைக் கலிமாக் கொண்டு
சமரசமாய் அம்பதனை யிழுத்து நீயும்
சரியான மஹ்மூதில் நினைவை மாட்டி
அமதியாய்ப் பூரணத்தைக் கண்டு போற்றி
அருமையுடன் அத்தலத்தில் துயிலுவாயே. (5)

அருமையாய் அத்தலத்தில் தூங்கினுக்கால்
அன்புடைய அருளதுவுஞ் சிறந்து நிற்கும்

பெருமையுள்ள இம்முறையை யறிந்திடாமல்
பேய்போலே திரிந்தலைந்து மாண்டோர் கோடி
கருவதனைத் தானறிந்து சொன்னே னப்பா
கண்மணியே அறிந்துசெய்வோர் கோடிக் கொன்று
திருவருள்கண் டோர்வயது நீளித்தே தான்
ஜெகத்திலே பாலரைப்போ லிருப்பார் தானே. (6)

தானென்ற வுலகத்தின் மாயை தள்ளி
சம்பூர்ண அருள்தவத்தைக் கூர்ந்து செய்வாய்
கோனென்ற குருபதத்தைக் கண்டோ ரெல்லாம்
குவலயத்தில் மானிடரில் கோடிக் கொன்று
தேனென்ற அமுதைமெத்த வுண்டிடாதே
சிறப்புள்ள அமுதைநீ யொருபோ துண்ணு
தீனென்ற வூணதையுங் குறைத்து வுண்டால்
செல்வனே தூக்கமது புன்மையாமே. (7)

புன்மையாம் தூக்கமது அருளுள்ளோர்க்கு
புனிதமுள்ள வல்லவனும் விலக்கி வைப்பான்
திண்மையில்லா வல்லவனே மேலோ னாகும்
தெளிவான ஞாயிறுநா ளதனிலே தான்
நன்மையுள்ள புவியேழுங் கதிர்வெவ் வேறும்
நலமாக வேயமைத்த முதலோ னப்பா
வண்மையுள்ள பெரியோனும் அவனல்லாது
மகிதலத்தில் வேறில்லை வரிசை தானே. (8)

வரிசையுள்ள திங்களிலே வான மேழும்
வளமாக வேபடைத்தான் வரிசை நாயன்
கருமமுள்ள செவ்வாயில் நரக மேழும்
கனமான வொயிலோடை நடக்கும் பாலம்
பெருமையில்லா விஷமுள்ள பாம்புந் தேளும்
பிசகான குமனையும் அமைத்த நீதன்
தருமமுள்ள புதன்நாளில் சுவர்க்க மெட்டும்
தன்மையருள் சொற்கத்துக் கனிதேன் பாலே. (9)

தன்மையுள்ள சொற்கத்து வஸ்து வெல்லாம்
தானவனும் புதன்கிழமை தனில மைத்தான்



நன்மைதருங் குருநாளி லுயிர னைத்தும்
நலமான இன்பதுன்பந் தின்மை நன்மை
தின்மையறும் புற்பூண்டு இமையோ ரெல்லாம்
சிறப்பில்லா ஷைத்தானும் பரிஜின் தேவும்
வண்மையுள்ள வாரிநவ மேக மெல்லாம்
வல்லோனும் வியாழனிலே அமைத்திட்டானே. (10)

வல்லவருள் வேதம்நாலும் ஸுஹுபு நூறும்
வளமான தவநிலையும் வெள்ளி நாளில்
நல்லனுடை கிருபையினால் அமைந்த தப்பா
நலமான கோமான்தான் அமைத்த தெல்லாம்
சொல்லாலே வல்லவனைப் புகழ்ந்து போற்றி
ஸுஜூதிலே விழுந்திறைஞ்சி தொழுவதற்கு
செல்லவெள்ளிக் கிழமையதை வுண்மை நாளாய்
திறமான நன்மையுள்ளோ னமைத்திட்டானே. (11)

நன்மைஇறை யோனும்சனிக் கிழமை நாளில்
நலமொழிக்கு மடங்காத கோப மாகி
தின்மையுள்ள இபுலீஸை நரகில் வைத்தான்
தெளிவில்லா இபுலீஸும் பிறந்த நாளாம்
வன்மையுள்ள அவதியுண் டான நாளாம்
மகிதலத்தி லுயிர்களெல்லாம் இறந்த நாளாம்
தின்மையில்லா சனிக்கிழமை நாளு மாகும்
சிறப்பான அருள்தவத்தைச் செய்து தேறே. (12)

அருளான முச்சுடரை யறிவா யப்பா
அன்புடைய பொருளதையுங் காணு காணு
திருவருளைக் கண்டுதெரி சித்த பேர்கள்
ஜெகத்திலே மானிடரிற் கோடிக் கொன்று
மறுவில்லா முச்சுடரைத் தெளிவாய்க் கண்டு
மகத்தான கருவதிலே சொக்கி நில்லு
கருவான கலிமாவைப் பிடித்து நன்றாய்
காரணநந் நபிபதத்திற் கனமாய் வீழே. (13)

காரணனே கலீபத்து ஷெய்கு ஷாஹுல்
ஹமீதப்பா அழிம்புள்ள நீசனுகும்

பூரணனே கொடிதான பாவி யென்னை
    புகழான நன்மையுள்ள வழியி லாக்கி
நேரான முச்சுடருந் தெளிவாய்க் காண
    நித்தனே திரையேழும் விலக்கி நன்றாய்
கூரான வல்லவனே கிருபை செய்து
    குணமுள்ள அருளமுதம் தருவா யேகா. (14)

அருளான முப்பூத்தான் வழலை யப்பா
    அன்புடைய மதிரவிநல் லண்ட பிண்டம்
பொருளான அண்டபிண்டம் நாத விந்து
    பூரணமாம் நாதவிந்து கார சாரம்
கருவான நாதவிந்து ஒன்றாய்ச் சேர்ந்து
    கனமுடனே பாய்ந்தவிடம் பூர்ண மாகும்
மருவான நாதவிந்தை யறிந்தோன் யோகி
    மகிமையுள்ள வாதமுந்தான் பலிக்குந் தானே. (15)

தானான நாதவிந்தும் ஒன்றாய்ச் சேர்ந்தால்
    தன்மையுள்ள ரசவாதந் தானுண் டாகும்
வானான மதிரவியும் கலைதா னாகும்
    மகத்தான இடகலையை ரவியிற் சேரு
தேனான மதிதேய்ந்து ரவியானக்கால்
    செல்வனே மகத்துவத்தை யென்ன சொல்வேன்
கோனான குருவிடத்தில் முறையைக் கேட்டு
    குணமான அருளதனை யுணர்ந்து பாரே. (16)

பாரப்பா அருள்ஞானம் பொருள் வாதத்தை
    பகர்ந்ததெல்லாம் யோகிகட்கும் மௌனிகட்கும்
சீரில்லா மாயையுள்ள பாவி யான
    ஜெகத்தோர்க்கு ஈய்ந்தாக்கால் கொடிய பாவம்
நேருகெட்ட துன்பமெய்தும் மிகுதி கஷ்டம்
    நீதமில்லாப் பாவிகட்கு சொல்ல வேண்டாம்
கூரான ஆதியவன் அருளுள் ளோரை
    குணமான நன்மைதனி லாக்குவானே. (17)

குணமான வல்லவனே பாவி யென்னை
    குலமுள்ள நற்குலத்தி லாக்கு நன்மை



மணமான அருள்தவத்தில் நிரப்ப மாக்கி
    மகிமையுள்ள றஹ்மானே நித்தங் காத்து
கனமான பாவமெல்லாம் பொறுத்து நேர்மை
    கருவுள்ள மயிர்ப்பாலங் கடத்தி மேன்மை
தனமான வுன்னுடைய பொருத்தந் தன்னில்
    தன்மையாய்ச் சேருஇறையோனே நீதா. (18)

தன்மையுள்ள வாசியதின் முறையைக் கேளு
    தனமான ரேசகமும் விடுத லாகும்
நன்மையுள்ள பூரகமும் நிறைத்த லாகும்
    நலமான கும்பகமும் நிறுத்த லாகும்
வண்மையுள்ள ரேசகபூரகமு மின்னும்
    வளமான கும்பகமும் செய்வாய் நன்றாய்
தின்மையறும் சுழிமுனைதான் திறந்து மேன்மை
    தெளிவான ஜோதியொளி தோன்றும் பாரே. (19)

பாரப்பா முப்பொருள்முச் சுடரு மாகும்
    பரிவான பூரணத்தின் நடுவ தாக
சீரப்பா ஜெகஜோதி யிலங்கு முள்ளே
    திறமுடனே மனமுருகிச் சாடி நின்று
கூராகச் சார்ந்துபதந் தனிலே வீழ்ந்து
    குணமான மலர்தனிலே ஒடுங்கி நன்றாய்
நேரான அமுதமதை அருந்து அப்பா
    நீதமில்லாப் பசிமயக்க மற்றுப்போமே. (20)

மயக்கமுடன் பசிதூக்கம் நின்று போகும்
    வளமாகச் சாகாமற் செத்தபேர்க்கு
நயமுண்டும் நன்மையது மிகுதி யுண்டும்
    நந்நபியின் பதமதனில் வீழ்ந்த பேரை
ஜெயமான வல்லவனும் பொருந்திக் கொள்வான்
    சிவராஜ யோகிகட்குத் தீங்கே இல்லை
பயமில்லை யெமன்வாதை விலகிப் போகும்
    பராபரத்தி னருளதுவுஞ் சிறக்குங் காணே. (21)

காணுதற்கு வரிதான நீதனே நீ
    கனமான நேர்வழியைத் திறமாய்க் காட்டி

ஊணிநிற்க நல்லறிவைத் தருவாய் நன்மை
உகப்பான தற்பரனே அருளு மோங்கி
தோணுதற்குக் கிருபைசெய்வாய் சுடர்மூன் றுந் தான்
சுழிவாசல் திறந்துதிரை யெழும் நீங்க
தானவனே பாவியென்மே லருள்செய் நித்தம்
தன்மையுந்தன் பொருத்தமதிற் சிறப்பாய்ச் சேரே. (22)

சிறந்தபரா பரமேநற் சோதியான
தெளிவான பூரணமே செல்வ முள்ள
மறதியில்லா மணிவிளக்கே நன்மை யான
மங்காத மார்க்கலிமா மருவே தேனே
குறைவில்லா முப்பொருளா யிலங்கி மேன்மை
குணமதிலே குடிகொண்ட அருளு மான
திறமான முச்சுடரே ஏகனேநீ
தெளிவருளை முறையாகத் தருவாய் றப்பே. (23)

முறையாகத் தொழுதவர்க்குக் காய சித்தி
மூவுலக மானதிற்கும் தன்மையுள்ளோர்
திரையான கொடும்வினைகள் தெரித்தே யோடும்
தீவினைகள் அடங்கலுமே மாளும் மாளும்
குறைவெல்லாந் தானகலும் அருட் சிறக்கும்
குணமுள்ள மெய்ஞ்ஞானிக் கெல்லா மென்று
மறைபொருளைத் தானறிந்த குருவுஞ் சொன்னார்
வாகாகச் சித்தறிந்து யான்சொன்னேனே. (24)

சித்தான அருட்சித்து சகல சித்தும்
சித்தியடா பேரின்ப அருளினாலே
முத்தியடா நன்மையது பெருகும் நன்றாய்
முறையான குருவிடத்திற் றீட்சை பெற்று
சித்தனையுந் தானறிந்து தொழுது நில்லு
நீதமது தான்துலங்கும் வினைக ளோடும்
புத்திமதி யுண்டாகும் கசடும் நீங்கும்
பூரணன் பொருத்தமதி லாக்குவானே. (25)

ஆக்கிடுவான் தவநிலையை யறிந்து செய்தால்
அன்புடைய பெரியோர்க்கு முத்தி முத்தி



வாக்குமன மொன்றாகக் கூர்ந்து நில்லு
வல்லவனை யனுதினமும் தொழுதிறைஞ்சு
நோக்குவது பூரணத்தை நோக்கு நோக்கு
நோக்காதே போனக்கால் என்ன ஜென்மம்
தாக்குநீ அருள்பணியில் தாக்கி நின்று
தனியனுக்கு அனுதினமும் சரணம் பண்ணே. (26)

சரணம்அடி யேன்உந்தன் தஞ்சம் தஞ்சம்
தற்பரனே நற்கெதியி லெனைநீ யாக்கி
பரிவுடைய முச்சுடருந் துலக்கமாக
பண்பாக வரக்கிருபை செய்யென் னேகா
திருவருளே துன்பம்நோ யனைத்தும் நீக்கு
தெளிவாக யானிருந்து தவத்தைச் செய்ய
குருபரனே நற்கிருபை யென்மேல் வைத்து
குணமதில்யான் குடிகொள்ள அருள்செய்வாயே. (27)

அருளான வல்லவனும் உனையல்லாது
அகிலமதில் வேறுவொரு நாயனில்லை
பொருளான பாப்பிரமம் நீயே யாகும்
புனிதமுள்ள பூரணநற் கடலு மாகும்
குருவாகச் சகலமுமே காட்டுகின்ற
கோமானும் நீயாகும் எனைநீ காத்து
சறுகாமல் நற்றவத்தைத் தினமும் செய்ய
தனியனே கிருபைசெய்வாய் நிகரில்லானே. (28)

தனியனீ தற்பரனீ சங்கை யுள்ள
சம்பூர்ண மானதொரு அருளும் நீயே
கனியான கருநெல்லிக் கனியும் நீயே
கனமுள்ள அரிதான பொருளும் நீயே
இனிப்பான முச்சுடரும் நீயே யாகும்
இனிமையுள்ள முச்சுடர்யான் தெளிவாய்க் கண்டு
அனுதினமுந் தவஞ்செய்யக் கிருபை செய்வாய்
அன்மைதனை நீக்கிவைத்து அருளல்லாஹு. (29)

அன்மைவிட்டு சரண்புகுந்த அடியார்க் கெல்லாம்
அருமையாய்க் கிருபை செய்யும் அறிவ னீயே

தன்மையுள்ள சீஷர்களும் யானும் நோக்கி
தவமான முச்சுடரை யறிந்து செய்ய
தின்மைதொல்லை நீக்குவருள் தவத்தைச் செய்து
திறமான வுன்னருளில் நித்தம் மூழ்க
நன்மையுள்ள முப்பொருளே கிருபை செய்வாய்
நாயனே ஏகபெரியோனே றப்பே. (30)

ஞானமலர்முப்பது முற்றிற்று.

—✿—

## ஞான நிலை.

### ஆசிரிய விருத்தம்.

நிறைந்தறஹ் மானும்நீ நேர்மையாய்க் காத்திடும்
நிரப்பமுள ஆதிநீயே
நிறைவுபரி பூரண சச்சிதா னந்தனீ
நிலையான பொருளும்நீயே
குறைவிலாச் செல்வனீ குருநாதனுனை திரு
குணமான அருளும்நீயே
குற்றங்க ளற்றபே ரின்பவொளி வாய்நின்ற
கூர்மையுள ஜோதிநீயே
பிறந்தவுட னேதாயின் மார்தனி லமுதமதைப்
பிரியமா யருந்தவைத்த
பிறப்பிறப் பற்றபெரி யோனும்நீ அழகுள்ள
பிசகிலாப் பரனும்நீயே
மறுவற்ற தங்கமே திருவருள் சிங்கமே
மகிமையுள வேதனீயே
மாசிலா மணியான பெருமையே கிருபையருள்
வலியமக ராஜமணியே. (1)

செல்லனே ஜெயராஜ அதிபனே நாளும்நற்
சிறப்பருள் தவமானதை
திறமாக அனுதினம் செய்யநீ கிருபைசெய்
தெளிவுள்ள ஏகவொளியே
நல்லனே வுலகுயிர்க ளெல்லாம்ப டைத்தாண்டு
நயமான இரணமதனை



நன்மையா யுயிர்களுக் கெல்லாங் கொடுத்திடும்
நலமான றஹ்மானும்நீ
கல்லான பொதிகைமலை யுள்ளிலே சென்றுயான்
கருவான குகையில்மூழ்கி
கனமான அமுதுண்டு சுடர்மூன்றை யுங்கண்டு
கருவுடனே தொழுதிறைஞ்ச
வல்லவா நற்கிருபை செய்திடு நன்மையுள
வாகான மேன்மையருளே
வளமாய் வணங்கவும் நின்னுதவி செய்தருள்
மகிமைமக ராஜமணியே. (2)

ஊருணி யதனிலே இருகெண்டை யுள்ளிருந்
தொளிவுபோல் மின்னுதழகாய்
உகப்புடன் சென்றுயான் போயதைத் தான்பிடித்
துறவுகொள அருள்செய்கெடுக்
துறொடுத் துச்சேறு இருளெலாம் நீக்கியே
சுயமுடன் தினமும்மூழ்கி
சுத்தமாய்ப் பகமுடன் தெளிவான நிஷ்டையிற்
சுகமாக வேஇருந்து
நேரான முச்சுடர் திருவருள் தன்னையும்
நிரப்பமுட னேயறிந்து
நெறியான வல்லபப் பொருளையனு தினமுமே
நீதமாய்த் தானிறைஞ்சி
கூருடன் தொழுநல் லருளைநீ தருகுவாய்
குணமான ஞானவொளியே
கூடியே முச்சுடர் தெளிவுடன் வரவருள்
கூர்மைமக ராஜமணியே. (3)

தங்கமய மானதோர் வஞ்சமில் லாப்பொருள்
தன்மையா யானறிந்து
தவமதைச் செய்யநற் கிருபைசெய் ஏகனே
தற்பரனே சுயஞானமே
பங்கமது கேடுகள் கொடியபவ மெனையுமே
பற்றிப்பி டித்திடாமல்

பாமனே காமக்கு ரோதங்க ளெல்லாம்நீ
பற்றறவே நீக்குவானே
எங்கும் புகழ்பெற்ற இறைவனே என்துயர்க
ளெல்லாம்நீ நீக்கிநன்மை
இனிமையுள முச்சுடர் கண்டுதெளி வாகிட
ஏகனே நல்லுதவிசெய்
மங்கையர்க ளைத்தாய்க ளென்றெண்ணி யெப்போதும்
மனமதுநி னைத்திடவருள்
மாயையெல் லாம்பறந் தோடிடக் கிருபைசெய்
வல்லமக ராஜமணியே. (4)

மூலமுத லாறுவரை தாண்டியே நோக்கிட
முச்சுடர் அருளானது
முன்னிலே நின்றிடும் ஜெகஜோதி யொளிவுதான்
முறையான கண்கள்கூசும்
காலமதி லேஎழுந் தறிவாக வேநின்று
கனமான நிஷ்டைகூடி
கருவான தவமதைச் செய்யநீ கிருபைசெய்
கண்மணியே மௌனநாதா
பாலகுணம் தந்தருள் ஏகபெரி யோனேநற்
பராபரம் நன்மையொளிவே
பக்ஷம் வைத் தென்னையும் உன்னருளி லாக்கியே
பரிபூர்ணம் தந்தருளுவாய்
சீலமுள வல்லனே தஞ்சமுன் தஞ்சம்யான்
தெளிவாக முச்சுடரதும்
திரையெல்லாம் நீங்கிச் சிறப்புடன் தெரியவருள்
செல்வமக ராஜமணியே. (5)

ஞானநிலை முற்றிற்று.

—✿—



## பஞ்சபக்ஷி

### வெண்பாக்கள்.

ஆதியே வல்லவனே அன்புடைய தற்பரனே
ஜோதியே ஏகபரி சுத்தனே—நீதிபக்ஷி
நெறியாகச் சொல்வதற்கு நேர்மையுள்ள நல்லருளை
அறிவனே தந்தெனை ஆளு. (1)

வல்லூறு ஆந்தை வளமான காகம்மயில்
நல்லகோழி பஞ்சபக்ஷி நன்னிலையாம்—நல்லபக்ஷி
எழுத்துஅ இஉஎஒ இன்பமுட னிவ்வெழுத்தை
வழுத்தினே னறிந்துபார் வளம். (2)

உண்டி நடை அரசு உபத்திரவத் துயில்சாவு
வண்டில்லா மல்நடக்கும் வளர்பிறையில்—கண்டுகொள்ளு
ஊண்சாவு தூக்கம் உண்மையுள்ள அரசுநடை
தான்சாரும் அபரபக்ஷம் தான். (3)

அரசாண்டு நாழிகையாம் ஐந்துகால் தான்நடையாம்
உரிமையுள்ள ஆறுகால் ஊணதுவாம்—திரையான
தூக்கமது முக்காலாம் துஞ்சும்அரை நாழிகையாம்
நீக்கியே சொன்னேன்பார் நேர். (4)

மத்திபமே நடையதுவும் வன்அதமம் துயில்சாவு
சித்தியுள்ள அரசுஊண் செல்வமாம்—நித்தியமும்
நலமான காரியங்கள் நன்மையதைச் செய்வதற்கு
பலனுக யானுரைத்தேன் பார். (5)

வல்லூறு அஎழுத்து வளமாந்தை இஎழுத்து
இல்லழகு உகாகம் எகோழி—நல்லமயில்
அருமையுள்ள ஒஎழுத்து அன்புடனே பார்த்தறிந்து
உரிமையுடன் பெயர்பக்ஷி உரை. (6)

வல்லூறு குருசனிநாள் மாஆந்தை ஆதிவெள்ளி
நல்லகாகம் திங்கள்கோழி நற்செவ்வாய்—நல்லமயில்
புதன்கிழமை தான்நடக்கும் பூர்வபக்ஷம் படுபக்ஷி
விதமாகப் பெயரறிந்து விள்ளு. (7)

வல்லூறு செவ்வாய்நாள் வாகாந்தை திங்களறி
நல்லகாகம் ஞாயிறுநாள் நன்குஅறி—நல்லகோழி
விதியான குருசனிநாள் மேன்மையயில் புதன்வெள்ளி
மதிதேய்வில் படுபக்ஷி மதி. (8)

ஆறுநாழி கைதானும் ஐந்துபக்ஷி தான்நடக்கும்
கூறுவாய் படுபக்ஷி கூறறிந்து—நேராக
தெளிவுள்ள வளர்பிறைக்கும் தேய்பிறைக்கும் நாளிதென்று
அழிவில்லா மல்சொல்வாய் அறிந்து. (9)

கலீபத்து ஷெய்குஷாஹுல் ஹமீதப்பா வானவனும்
பலமாக வுலகவர்க்குப் பஞ்சபக்ஷி—நலமாக
அருமை யுடனுரைத்தேன் அதின்பொருளைத் தானுணர்ந்து
திருவருளால் அறிவீர் தினம். (10)

பஞ்சபக்ஷி முற்றிற்று.

---

## திருவருள் வெண்பா

### வெண்பாக்கள்.

அல்லா வொருவனென்று அஞ்சியே தான்புகழ்ந்து
நல்லாக வணங்கினவர் நன்மையுள்ளோர்—வல்லறுவில்
அஞ்சும் நிறைவானல் அருளொளிவு நின்றிலங்கும்
வஞ்சமில்லா ஆதியொளி வலன். (1)

வண்மை ஐபறாத்தின் வாகுக்கண் ஞுழிதனில்
திண்மைநபி யொளிமுழுதுந் தெரியுமே—நன்மையுடன்
அருமை நபிபதத்தை அன்புடனே தான்கண்டு
நெறியுடனே பணிந்தவர்க்கே நேர். (2)

அருமையருள் ஜோதியது அன்பாகத் தான்விரிந்து
திருநபியின் ஒளிவருமே சிறப்பாக—மருவுள்ள
தீனப்துல் காதிரொளி தெரியும் நலமுடனே
தேனருந்தும் பெரியோர்க்கு சீர். (3)



இருத்தியே பார்க்க இலங்குஞ் சுடர்மூன்றும்
கருத்துடனே தானுயர்த்திக் கண்டறிந்து—நிரப்பமுடன்
தெளிவாக நின்றுகொண்டு சீரறிந்து மேல்நோக்க
ஒளிரூபங் காண்பதுண்மை உயர்ச்சி. (4)

சரமதனையேற்றிச் சக்கரத்தைத் தானிறுக்கி
நிறமான சந்திரனின் நிலைபிடித்து—திரைநீக்கி
முனைதனி லேநில்லு முச்சுடரும் வருமெதிர்பார்
வினையகலுங் கண்டுதொழு மேல். (5)

தாக்குலா மலிபைத்தான் தனைநாத வோசைகொண்டு
வாக்குமன மொன்றுபட்டு மஹ்மூதில்—நோக்குதலாய்
கலிமா தனையறிந்து காக்ஷிதனைக் கண்டவர்க்கு
நலமுள்ள தாவிஷந்தான் நயம். (6)

மறையில் மலர்விரிந்து வந்துநிற்கும் ஒளிவாக
இறையுள்ள ஆயிரத் தெண்மலராய்—நிறைவுடனே
அருள்நுக்தும் அலிபும் அன்பாக நின்றிலங்கும்
குருமீமில் தங்கிநின்றால் குணம். (7)

தீதிலா வாசியைத் திறமாகத் தானேற்றி
ஊதும்போ துபாயமா யூதிவிடு—வாதைசெய்து
நேத்திரத் தைநோக்கி நேர்மையாய்ப் பார்க்கவொளி
தோற்றுமே முச்சுடரும் சுயம். (8)

ஈராறைக் கண்டறிந்தால் இலங்கும் ரவிமதியும்
கூரான சரவாளைக் குணமுடனே—பாரதனில்
நாட்டிமுனை தனில்நின்று நன்மையருள் தவஞ்செய்து
காட்டினவனைக்கொண்டு காண். (9)

இருளை விலக்கியே இன்பமாய்த் தானுகந்து
குருவருளைப்பெற்றுக் குணமாக—கருவுடனே
அந்தரத் தைநோக்கி அருமைமுச் சுடர்கண்டு
இந்திரனைத் தெரிசித்து இரு. (10)

ஊருணியில் கெண்டைரண்டு உள்ளே பிறமுதையோ
தீரமாய்ப் பிடித்திடவே திட்டமுடன்—பூரணமாய்

மின்னியே ஜோதியொளி மேதினியெ லாம்நிரம்பும்
நன்னிலையைக் கண்டவர்க்கே நயம். (11)

அருமைமீன் சினையதுவும் ஆல்வித்தி லும்சிறிது
பெருமையர சரின்படைகள் பிரிசமாய்—நிரப்பமுடன்
ஒதுங்க நிழலாகும் உறுதியருள் பேரின்பம்
பதமுள்ள கடுகதுபோல் பார். (12)

நிரப்பமுள்ள கடுகதுபோல் நிறைவான மெய்ஞ்ஞானம்
பருப்பமுள்ள பனங்காய்போல் பாழ்ஞானம்—சிறப்புடைய
மெய்ஞ்ஞா னம்தன்னை விரும்பி யறிந்தோர்கள்
அஞ்ஞானம் விடுவதுண்மை அறி. (13)

அறிவுடைய மனிதனுக்கு ஐந்தறிவு தானாகும்
பரிவான மானிடனே பண்புடையோன்—நெறியான
ஞானமதையறிந்து நலமான மேன்மைபெற்று
தீனம் விட்டு நீங்கிநின்றால் ஜெயம். (14)

அல்லாமு ஹம்மதையும் ஆசையுட னாய்ந்து
நல்லழகா யுள்ளறிந்து நாடியபேர்—வல்லார்கள்
தாவிஷத்தில் மேன்மையுடன் தன்மையாய் வாழ்வதுண்மை
பாவியென்ற பேரொடுங்கும் பார். (15)

அருமையுள்ள இந்நூலை அன்பாகத் தானுரைத்தேன்
திருவருளை யானறிந்து திறமாக—கருவுடனே
கண்டு தொழுதவர்க்கு ஹக்கன்கிரு பையுண்மை
விண்டலத்தைப் பார்த்தவரே மேல். (16)

திருவொளிநல் மெய்ச்சுடருந் தெளிவாக யான்காண
உருளைமணித் தாமரையும் உள்மலரக்—கிருபையருள்
பூரணமாம் ஜோதியொளி பொருந்திநிற்கும் ஆதியந்தம்
காரணமாய்க் கண்டவர்க்கே கனம். (17)

சிறுவயதி லுன்னைத் தேடாமல் யானிருந்தேன்
குருவிடம்போய் உனையறியக் கூறிநின்றேன்—திருவருளே
நெஞ்சி லிருளகன்று நேர்தாம ரைமலர்ந்து
அஞ்சில்நின்று ஒளிவறிய அருள். (18)



அருட்பா லருந்தும் அடக்கமுள்ள தபசிகட்கு
இருப்பால்மே லெண்ணமது தெவிட்டாது—பொருட்பாலை
கண்டு தொழுதவர்கள் கனமான மாதவத்தோர்
விண்டலத்தி லென்னாளும் மேல். (19)

மாதவத்தோர் மாதரிச்சை வைத்திடா ரொருபோதும்
சீதமுள்ள மெய்ச்சுடரை நித்தியமும்—காதலுடன்
தெரிசித்து வாய்மூடித் தேவனையும் தான்பணிந்து
நிரப்பமுடன் நிற்பவரே நேர். (20)

துறவிகளை பூட்டுடைத்துச் சுயமாகப் பார்த்தவர்கள்
துறவியென்று ளிவர்களே சுத்தமுள்ளோர்—துறவுகோல்
கொண்டுகம லந்தனிலே குணமுடனே தானூன்றி
கண்டுதெரி சித்தவர்க்கே கனம். (21)

துறவியென்றால் இல்வாழ்வைத் தொலைத்தபெரி யோராகும்
துறவியென்றால் அருளறிந்து சுயமானோரா—துறவியாய்
வெளியாகும் தபசிகளே மேன்மையுள்ள கண்மணிகள்
அழியாது தேகமுண்மை அறி. (22)

தூக்குவாய் ஒருகாலைச் சுடர்கதிரைத் தாழவிடு
வாக்குமதி யேற்றுங்கால் வளமாக—தாக்கிநின்று
விடுவதுவுங் கதிரவனை மேன்மையதி காலையிலே
வடுநீக்கிச் செய்கற்பம் வளம். (23)

ஆதி யொருவன் அனாதி முஹம்மதுவாம்
ஜோதியரு ளானதுவும் சுத்தநன்மை—நீதியாய்
இறைவனையும் வணங்கார்க் கென்னகதி யொன்றுமில்லை
கறையான துன்பமப்பா காண். (24)

மதிதேய்த்து ரவியிற்சேர் மாயையெல்லாந் தீய்ந்துவிடும்
கதியான நல்லருளைக் கண்டுதொழு—விதிதருமே
பெண்வாழ்க்கை நீக்கிப் பிரிந்து இருந்தாலும்
பெண்வருமே துயிலும்போது பேண். (25)

பெண்ணதுவும் சொற்பனத்தில் பிரிசமுடன் நேசிக்க
எண்ணங் குலைந்துபோகும் இந்திரியம்—திண்ணமுள்ள

தவமெல்லாந் தானழியும் தன்மையருள் தோன்றாது
பவமிகுதி யாகிடுமே பார். (26)

அழியாத தவமதுவும் அனுதினமும் ஓர்நினைவாய்
தெளிவான மஹ்மூதில் திடமாய்ப்பார்—விழிமூடி
மூலக் கனலமரும் மோசமுள்ள மாயைபோம் (27)
சீலமுள்ள வருள்சிறக்குஞ் சேர்.

உந்திக் கனலெழும்பி ஓங்கியே நின்றபசி
செந்தீயைத் தானமர்த்தத் திறமான—நந்திகண்டு
அமுதமுண்ணு கமலமென்ற ஆயிரத்தெண் மலரதிலே (28)
சமுகமாய்ச் சென்றுநின்று தான்.

கண்டவனை வீரமுள்ளோன் கறுப்புவெள்ளை யுள்ளவனும்
விண்டலத்தில் இன்னதென்று மேன்மையாய்—கண்டுநின்று
பார்த்தவனு மவனே பரமவொளி சூஸ்திரத்தை (29)
தீர்த்தமுடன் நற்றவத்தில் சேர்.

அஞ்செழுத்து மேன்மையுள்ள அழகான ஹுவாகும்
பிஞ்செழுத்து மீமாகும் பேரின்பம்—வஞ்சமில்லா
அம்பாகும் நஞ்செழுத்து அருமையுடன் கண்டறிந்து (30)
கும்பகத்திற் சொக்கிநின்றால் குணம்.

கீழான மூலமம்மைக் கிருமையாய்த் தானிழுத்து
பாழில்லா மஹ்மூதில் பற்றிநின்று—நாமான
இருதயத்தில் மெல்லினமாய் இன்பமுடன் தானூது (31)
கருவெழுத்தை யறிந்துவருள் காண்.

முச்சுடரும் முப்பொருளாம் முப்பூ வதுவாகும்
அச்சுடர்தான் மேன்மையுள்ள அற்புதமாம்—பச்சையாய்
ஆயிரத்தெட் டிதழ்மலரில் அன்புடனே தானிறைநின்று (32)
சாயலாய் வணங்கிநின்று தான்.

காமம் கொலைகளவு கடுங்கோபங் குருநிந்தை
நேமமில்லாப் பொய்கபடு நீக்காமல்—வாமதவம்
செய்ய வெணுவளவுஞ் சிறப்பில்லை யோகமது
பொய்யாகும் சித்தனைத்தும் போம். (33)



வடுநீக்கி யோகமதை வளமாகச் செய்தோர்க்கு
முடியான நாதாக்கள் முன்வந்து—திடமாக
வருந்தியே கேட்டதெல்லாம் வகையாகச் சொற்பனத்திற் (34)
குருவருளால் வந்துசொல்வார் குணம்.

சிவராஜ யோகிக்கு தீங்கொன்றும் வாராது
பவமெல்லாம் பறந்துவிடும் பண்பாக—தவமுள்ள
யோகமுள்ளோ ரிவரே யுண்மையொளி கண்டவர்கள் (35)
தேகமழி யாதிவர்க்கே திறம்.

முப்பாழை நீக்கி முச்சுடரைத் தானுணர்வாய்
அப்பான தில்மூழ்கி அன்புடனே—தப்பெல்லாம்
தீர்த்துநீ நல்லருளிற் சேர்வாய் குருபானும் (36)
பார்த்துவுனை யாதரிப்பான் பார்.

மங்கைபோல் சொற்பனத்தில் வந்துமே தான்கெடுத்து
அங்கமதில் விந்துருகி அழியாமல்—சங்கைவல்லா
அழிம்பான இபுலீஸின் அமளியெல்லாம் நீக்கிவைத்து (37)
தெளிவான நல்லருளிற் சேர்.

சொற்பனத்தில் பெண்வந்து தொந்தரவு செய்யாமல்
நற்பரனை நீக்கு நன்றாக—தற்பரனை
பாவியெனக் காருமில்லை பாத்திபா வுன்துணைதான் (38)
பாவியெனை யாதரித்து பார்.

நிறைவுள்ள யோகமதை நேர்கொண்ட மானிடர்க்கு
குறையொன்றும் அணுகாது குவலயத்தில்—மறையாமல்
முச்சுடருந் தோன்றும் மோனமுத்தி தான்கிடைக்கும் (39)
பக்ஷமுடன் அவ்வொளியைப் பார்.

மும்மல முமற்று மூவாசை தானுமற்று
எம்மானே யானிருக்க இன்பமருள்—அம்மையுள்ள
ஜோதியொளி முச்சுடருந் தோன்றியே நின்றிலங்க (40)
ஆதிபெரி யோனே அருள்.

அனைத்தும் படைத்திரணம் அளக்குகின்ற வல்லவனீ
உனைப்போ லொருவரில்லை யுலகமதில்—தனிமுதலே

இறையேநீ யென்துயரம் எல்லா மகற்றிடுவாய்
நிறைவுபரி பூரணமே நேர். (41)

செய்யி தஹமதவர் செல்வமுள்ளோர் தன்பாலன்
ஷெய்குஷா ஹுல்ஹமீது சிறப்பாக—மெய்யான
வண்ணமுள்ள நூலாய் வளமாகத் தானுரைத்தேன்
திண்ணமாய்த் தானே திறம். (42)

திருவருள் வெண்பா முற்றிற்று.

—✿—

## நிறைவருள் வெண்பா.

வெண்பாக்கள்.

எறும்புமுதல் யானைவரை யெல்லா வுயிர்களையும்
திறமாகக் காப்பாற்றும் சீமானே—சிறுமையுள்ள
கொடியபா வஞ்செய்த கொடுமையுள்ள மாபாவி
அடியனுக்கு அருள்தந்து ஆளு. (1)

ஆசை தனைநம்பி அகிலத்தி லேயலைந்து
நீசமுள்ள மூவாசை நினையாமல்—பாசமாய்
நித்தம் உனதருளில் நேசமுட னேமூழ்க
சித்தனே நற்கிருபை செய். (2)

உடலைவிட் டுயிரும் ஓடியே போனவுடன்
திடமுடனே மண்ணிலே சேர்த்திடுவார்—சடமதனை
அனுதின மும்ஏகா அன்புடனே தான்தொழுது
தினமகிழ்வு பெற்றிருக்க செய். (3)

பட்டதெல்லாம் போதும பரமனே காமவினை
திட்டமா யணுகாமல் தீர்த்துவிடு—கெட்டியாய்
வைராக்கி யங்கொண்டு வல்லவனே புனைவணங்க
தைரியத்தை ஆதியேநீ தா. (4)

சோற்றுப் பொதியுடலைத் தொல்லுலகில் தான்வளர்த்து
வீற்றிருந்து வாழ்ந்ததினால் வீண்பலனே—நாற்றமுடல்



இன்றைக் கிருப்பதும்பொய் யென்றைக்கும் போவதுமெய்
நன்றாக யோகமதை நாடு. (5)

மாது சுரோணிதமும் வளம்ஆணின் சுக்கிலமும்
நீதிலா ரண்டையும்நீ சேர்த்துருவாய்—நீதமுடன்
பத்துத்திங்கள் வைத்துப் பாலகனாய் பிறப்பித்து
நித்தமும் காத்தவல்லன் நீ. (6)

மூடனாய்ப் போகாமல் மோனவருள் சேரெனையும்
ஆடியே காடுமலை அலையாமல்—கேடில்லா
ஆனந்த நீதமுள்ள அன்பனே நல்வழியில்
ஈனம்வினை நீக்கியெனை எண்ணு. (7)

திங்கள்பத் தும்நிறைந்து சிறப்புடனே தான்பிறந்து
எங்குமுள்ள வல்லவனை இன்பமாய்—சங்கையுடன்
நாடித் தொழுகாத நலமிலா னைநினைத்துத்
தேடினதால் பலனென்ன தெளி. (8)

இல்லந் துறந்து இவ்வுலகில் இரந்துண்டு
பல்லுங் கறையற்றுப் பரமனை—நல்லாக
அந்தி பகலற்ற அருளிடத்திற் பார்த்துநின்றால்
நந்தியொளி தோற்றும்பொருள் நயம். (9)

கோபமற்றுக் கொடிய குணபேத கமுமற்று
தாபமோ கங்களது தானுமற்று—தீபகமே
நல்லவனாய் யானாக நன்மையுள்ள நற்கிருபை
வல்லவனே செய்திடுநீ வண். (10)

எத்தனையோ மனமே எடுத்துரைத்துங் கேட்டிலையே
பித்தமது உன்னைப் பிதற்றுதோ—செத்திடுமுன்
அறிவனையும் அன்றாடம் அம்பரத்திற் கண்டிறைஞ்சி
நெறியுடனே தொழுதாக்கால் நேர். (11)

தானவனைக் கண்டு தவம்புரிந்தால் மேன்மைநலம்
போனதெல்லாம் நினைக்காதே பூமிதனில்—தீனம்விட்டு
நல்லா றுறவைநிதம் நாடிப் பிடிமனமே
பொல்லா றுறவைவிட்டுப் போ. (12)

வரும்போது ஒன்றும் வந்ததில்லை வையத்தில்
திரும்பிப்போ கும்வழிக்குத் தேடிக்கொள்—திரும்பிப்போம்
கடைவழிக்கு நன்மையது காரணமாய்த் தான்துலங்கும்
இடையறிந்து முச்சுடரை எண்ணு. (13)

உனைப்போ லொருவரில்லை யுடையோனே நலமேயுன்
தனைத்தொழுதால தீங்குவினை தானகலும்—வினைகளெல்லாம்
சற்றேனும் அணுகாமல் தானவனே நீயகற்றி
நற்றவத்திற் சேர்த்திடுவாய நயம். (14)

தள்ளாசை மாயையெல்லாம் தன்மையதைத் தானறிந்து
தள்ளிநில்லு கேடனைத்தும் தனியோனைத்—தெள்ளிமையாய்
பதம்பணிந்து தானிறைஞ்சி பாங்குடனே யெந்நாளும்
நிதந்தொழுதால் முத்தியுண்மை நேர். (15)

முகஞ்சினத் தோரிடத்தில் முறைசொல்லித் தாழ்வாக
அகம்வெட்கி நிற்காம லாதியே—மகத்துவமாய்
கிருபைசெய்து காத்தருள்வாய் கெடுதிமன நோவினையைக்
குருபரனே நீக்கிவைநீ குணம். (16)

பெண்மயக்கம் தன்னைப் பிரிசமாய் யெண்ணாதே
வன்மைகொடுங் கர்மங்கள் வந்துவிடும்—தின்மையதாம்
நெஞ்சே கொடியவினை நிறைவுவருள் தானறிந்தால்
சஞ்சலங்கள் நீங்கிடுமே தான். (17)

என்பசிக்கு அன்னம் இன்பமுடன் கொண்டுவந்து
தன்பரனே தயவுதவி தான்செய்வாய்—துன்பமுடன்
ஒருவரிடம் போய்நின்று ஒஞ்சியொன்றுங் கேட்காமல்
திருவருளே கிருபைசெய்வாய் தினம். (18)

சரம்பெலமாய் நின்று சரீரமிளைப் பில்லாமல்
திறமுடனே தவஞ்செய்யச் சிறப்பருள்வாய்—குருபரனே
நித்த முனதருளே நேர்மையுடன் கன்டிறைஞ்ச
சுத்தனே கிருபைசெய்வாய் சுயம். (19)

ஆதாரம் ஆறையுமே அறிந்துகடந் தப்பாலுன்
பாதார விந்தமதிற் பணிந்திடவே—நாதாந்தா



உன்னை வணங்க வுன்னுதவி தந்துநிதம் (20)
என்னையும் கைதூக்கி எண்ணு.

திரவியத்தைத் தேடித் திரிகின்ற பாழுடம்பு
அரவின்விஷம் போற்கொத்த அன்புபெண்ணைக்—கருதியே
உருகியான் நிற்காம லுடையோனே யுன்னருளில் (21)
உருகவே கிருபைசெய்வாய் உள்.

வீடு நமக்குவருள் மேன்மைநபி மாளிகையே
நாடு நமக்கதுவே நல்லோனை—தேடி
உருகுதற்கு நல்லிடந்தா னுடையோனுங் கேட்டதெல்லாம் (22)
தருவானே நெஞ்சேசெய் தவம்.

ஐம்பூத மெல்லாம் ஐந்துவிதம் நாடாமல்
ஐம்பூத மொன்றுபட்டு அருமையுள்ள—அம்புதவஞ்
செய்யக் கிருபையருள் செல்வமுள்ள நன்மையதாய் (23)
கையணைத்து வல்லவனே கார்.

மனைவிமக் கள்வாழ்வும் வாசல்மட்டும் கண்டுகொள்ளு
சனம்உறவு பந்துக்கள் சமாதிவரை—உனதோடு
ஆரும்வரப் போறதில்லை அறிவில்லா மானிடனே (24)
கூரான ஆதிபதம் கொள்.

கல்லுருகு மோர்காலம் கனமலையில் பாவிமனக்
கல்லதுவு முருகுதில்லை காரணனே—வில்லுருகி
பாவியா னுன்னைப் பணிந்திறைஞ்சி நாடுதற்கு (25)
தேவனே நல்லுதவி செய்.

கற்றூணு வீடும் கனமான மாளிகையும்
வற்றாத செல்வம் வாழ்வதனால்—பற்றில்லை
எமன்வந்து நிற்கையிலே என்னசெய்வாய் இதுவெல்லாம் (26)
சமயத்துக் குதவாது தான்.

இப்பூவை நம்பி இருக்காதே நெஞ்சகமே.
தப்பில்லா முச்சுடரைத் தானறிந்து—எப்பொழுதும்
குருநபியின் பாதமலர் குணமுடனே தான்வீழ்ந்து (27)
இறக்குமுன் நல்லோனை எண்ணு.

பூரணத்தை யன்றிப் பூதலத்தி லாசையில்லை
வேறுவொரு ஆசையொன்றும் வேண்டாங்காண்—வீறுக
அய்ஞ்ஞானம் பேசி யலைந்து திரியாமல் (28)
மெய்ஞ்ஞான மானதிற்சேர் மெய்.

காமக்கு ரோதத்தைக் காரணனே நீக்கிவிடு
தாமதமில் லாமலொளி தான்தெரிய—நேமமாய்
கிருபைசெய்வாய் வல்லவனே கெடுமாயை தான்நீக்கி (29)
திருவருளை எனக்குதவி செய்.

கேடுள்ள மாயையெல்லாம் கிருபைவைத்துத் தான்விலக்கு
வாடுதே நெஞ்சமது வல்லோனே—தேடியுனை
உருகுதே தேகம் உடையோனே நன்னினைவை (30)
திருவருளை தந்துவருட் சேர்.

மாயையென்ற காமம் மண்ணாசைப் போகவருள்
தாயைபோல் மாதர்களைத் தானினைத்து—தாயமுடன்
நிரப்பமாய் முச்சுடரை நேர்மையுடன் கண்டுதொழ (31)
பரமனே கிருபைசெய்நீ பரம்.

கடும்நினைப்பு வெல்லாம் காவலனே நீக்கிவிடு
நடுவிருக்கும் நல்லொளிவை நானறிய—திடமாக
கிருபைசெய்வாய் மேலவனே கேடான மாயைதுன்பம் (32)
குருபரனே நீக்கிவைநீ கோன்.

பிறந்ததுவும் மண்மேல் பேதைமட நெஞ்சமே
நிறைவுமண்மேல் இறப்பதும் நிச்சயமே—இறந்தபின்
கூடியேகூட்டமிட்டுக் கொண்டுபோய் மண்ணில்வைத்து (33)
வீடுவந்து சேர்வாரே விதி.

இறப்பை நம்பி வாழ்மனமே இவ்வுலகில் ஆசையில்லை
இறந்தபின்பு யாருறவும் இல்லைஇல்லை—நிறைந்தவனை
கண்டுதொழுது காரணமாய்த் தானிருப்பாய் (34)
விண்டலத்தின் காரணமே மேல்.

தேடிவைத்த முதலும் செல்வமும் வீடுகளும்
கூடிநின்ற மனைவிமக்கள் குடும்பத்தார்—கூடவே



வருவதில்லை நாளை வையகத்தி லாசையற்று (35)
திருவருளைத் தேடிநின்றால் ஜெயம்.

ஒருவனென்று நம்பியிரு ஓர்மையுடன் உடையோனை
பெருமையுள்ள வல்லவனும் பெரியவனே—குருவருளை
அறிந்து தொழுதால் ஆணவங்க ளற்றுவிடும் (36)
அறிவனும் கிருபைசெய்வான் அறி.

நாய்போ லடியன் நலமாகக் காத்திருந்தேன்
சேய்போ லெனையணைத்துச் செல்வந்தா—பேய்போலே
அலைந்து திரியாமல் அன்பான காரணனே (37)
நிலைதவத்தி லாக்கிடுவாய் நேர்.

ஆரிடத்திற் சொல்வேன் அருந்துயர மானதெல்லாம்
கூறிவிட்டே னுன்னோடு கொற்றவனே—சீரில்லா
நடுவாற்றில் தள்ளாமல் நலமான நன்மையருள் (38)
வடுவில்லா மற்றெரிய வை.

பொன்னாசை யற்றுப் பூதலத்தின் வாழ்வுமற்று
மண்ணாசை பெண்ணாசை வாழ்வுமற்று—திண்ணயமாய்
இருந்து தவஞ்செய்ய இறையவனே கிருபையருள் (39)
திருவாதி யுதவிசெய்வாய் தினம்.

நாட்டி லுள்ள யாவர்களும் நல்லுதவி செய்வார்கள்
தேட்டமெல்லாம் ஹக்குடைய தேட்டமாய்—நாட்டமுடன்
இருந்து தவஞ்செய்வாய் இன்பமுள்ள நல்மனமே (40)
கருப்பொருளை யனுதினமுங் காணு.

பூவுலக வாழ்வதுவும் பொய்யாகும் மேலவனை
நாவுகொண்டு தான்புகழ்வாய் நன்மையாய்—தீவினையின்
ஆசைதனை விட்டுவிடு அகிலத்தில் மேன்மையுள்ள (41)
பாசத்தை ஆதிபேரில் பற்று.

வேசைகட்கு எப்போதும் மேனியிலே தானினைவு
பாசமுள்ள முத்தர்கட்கு பரமன்மேல்—ஆசைகொண்டு
நன்னினைவு மாறாது நானிலத்தில் மானிடர்க்கு (42)
பெண்ணின்மேல் நோக்கம்நீ பேணு.

என்றைக் கிருந்தாலும் இறப்பதுவும் நிச்சயமே
குன்றுதலின் வாழ்வுதனிற் கூடாதே—குன்றலைநீ
ஒருவருக்குஞ் செய்யாதே ஓர்மையுடன் முப்பொருளை
திருவருளாற் கண்டுதொழு சீர். (43)

உண்மையில்லாப் பாவியென்று உலகிற்பே ராகாமல்
திண்மையுள்ள வல்லவனே சீர்பெற—வண்மையாய்
எனக்குவரக் கிருபையருள் ஏகபெரி யோனேயுன்
தனக்குப்புக ழடங்கலுமே தான். (44)

என்நினைவு வுன்பேரில் எப்போதும் மாறாமல்
என்நினைவு வுன்னருளில் இணைந்திடவே—நன்னிலையைச்
செய்யேநீ என்னிறையே சீர்கெட்ட பாவியெனை
கையணைத்துக் காவலனே கார். (45)

தந்தைதாய் தன்பிறவி தனமெல்லாம் கடைவழிக்குச்
சொந்தமது ஒன்றுமில்லை சூஸ்த்ரமுள்ள—நந்தியொளி
எமன்வாதை தீர்வதற்கு ஏகனருளேமருந்து
நமன்வாதை விலகிவிட்டால் நலம். (46)

கற்பமது செடிகொடிகள் காசினியிற் பூண்டல்ல
சற்பவிஷம் போற்கொத்த சம்பூர்ணம்—கற்பமதை
உண்டுநீ முச்சுடர்பார் உன்தேகம் தங்கமயம்
சண்டிபெண் கடுகுளண்ணை தள். (47)

நாவினால் வந்தசொற்போல் நலமாக யானடக்க
பாவியெனைக் கையணைப்பாய் பாக்கியனே—தாவினையாய்
காப்பாற்றிக் கரைசேரு காவலனே யுன்னையன்றி
காப்பா ரொருவரில்லை கார். (48)

ஊத்தைச் சடலமது உப்பிட்ட பாண்டமது
நாற்றமுள்ள படுகுழியை நம்பாதே—பாக்கியனை
நெஞ்சே யறிந்துநித்தம் நேர்மையுள்ள முச்சுடர்பார்
தஞ்சமென்று ஆண்டவனை சார். (49)

காவிவஸ்த்திர மணிந்து காட்டிற் றிரிந்தாலும்
தாவிஷத்தி லாகார்கள் தவமில்லார்—தாவினையாய்



முத்தியடைந்தால் மோனமதிற் சேர்வதுண்மை
சித்துடைய ஆதிதனைத் தெளி. (50)

காட்டிற் றிரிந்தாலும் நன்மையுள்ள நல்லவனே
வீட்டி லிருந்தாலும் மேன்மையாய்—கூட்டிநீ
தன்மையுடன் கேட்டதெல்லாம் தந்தாசிர்த்திடுவாய்
வண்மையுள்ள வல்லவனீ வளம். (51)

முப்பாழைத் தள்ளி முன்னோனைத் தான் வணங்கு
முப்பாழும் மூன்றான மும்மலமே—தப்பாமல்
வாசி கொண்டு ஆதி மையத்திற் றூக்கிநின்றால்
தேசிகனைக் காண்பதுண்மை திறம். (52)

மாயைபெண் மண்ணாசை மருட்டும் பொருளாசை
தீயான மூன்றாசை தீர்த்துநின்று—தாயமுடன்
இருப்பவர்க்கு ஏதுகுறை இலங்குமே முப்பொருளென்
குருவுரைத்த கற்பமிது குணம். (53)

அன்புடைய வாசிகொண்டு ஆராய்ந்தால் மூலமதில்
இன்பவருள் ஜோதிமயம் எழும்பிநிற்கும்—நண்பாக
முப்பாழுஞ் சுட்டுவிட்டால் மோசமுள்ள வினைகளில்லை
தப்பில்லாக் குருவருளாற் றான். (54)

செய்யிதஹமதவர் செல்வமுள்ளோர் தன்பாலன்
ஷெய்குஷா ஹுல்ஹமீது தெளிவுடனே—மெய்யாக
நிறைவருள் வெண்பாவை நீதமாய்த் தானுரைத்தேன்
பரிவுள்ள மானிடரே பார். (55)

நிறைவருள்வெண்பா முற்றிற்று.

---

## ஞானகலை

—✿—

ஈரடிக்கண்ணிகள்

தேகமானது பொய்யடா தெளிவருளைப் பாரடா
ஆகம்விட்டு வுயிர்பிரிந்தா லழிவதுண்மை தானடா. (1)

அஞ்சுபூதம் தானிருக்கும் அழகதான மெய்யடா
கொஞ்சிக்கொஞ்சி முச்சுடரைக் கூடிநின்று பாரடா. (2)

வாசலேழு ரண்டிருக்கும் வண்ணகாய மாமடா
ஈசனை யறிவதற்கு இருத்திவாசல் நோக்கடா. (3)

கனிகள்காய்க ளிலைகளுண்ணும் கன்மத்தேக மாமடா
இனிமையான வஸ்த்தையெல்லாம் எடுத்தடைக்கும் கூடடா. (4)

கோரைப்புல்போல் ரோமமானது கூடிநிற்கும் காடடா
தாரைதன்னை இறுக்கிநோக்கத் தன்மை ஜோதி ஒளிவடா. (5)

மூலமுதல்நின் றுறுதலமே முனையில்நின்று பாரடா
ஆலவட்ட மானஜோதி யங்கிலங்கும் அறியடா. (6)

உப்புநீரும் நல்லநீரு முள்ளகாயந் தானடா
அப்பினுள்ளே முத்தெடுத் தறிந்துதவஞ் செய்யடா. (7)

நாற்றத்தேக மானகாயம் நன்மைஉப்புத் தானடா
காற்றுநீர்ப் படாதுபோனால் கசங்கிவீசும் மெய்யடா. (8)

கல்லதான கல்லது ககனமணி முத்தடா
வல்லவனைக் கண்டறியும் வண்ணமுத் தறியடா. (9)

தேடினபேர் கோடியில் தெளிந்தறிந்தோர் ஒன்றடா
நாடிநாடி முத்தறிந்து நன்மைத்தவஞ் செய்யடா. (10)

ஆயிரத்தெட் டுறுப்பமைந்த அருமையான மெய்யடா
தேயம்தொண் ணூற் றுறுதத்துவம் சிறப்புள்ளஉடல் தானடா. (11)

மூலமான நரம்பு தசையை மூடிப்பொதிந்த கூடடா
சிலமுள்ள தேகமானதின் சிர்றின்சூட்ச மறியடா. (12)



முத்துப்பவளம் பச்சையான முச்சுடரைப் பாரடா
நித்தம்தாரை மத்திதன்னில் நீதவொளி காணடா. (13)

வாளைநட்டி முனையில்நின்று வண்ணத்தவஞ் செய்யடா
வேளைகண் டெடுத்துநோக்கி மேன்மைத்தீபம் அறியடா. (14)

மூலமான பதியிலேகல் முச்சுடரைப் பாரடா
நாலுவேதம் ஓதியேக நாயனைத் தொழுவடா. (15)

ஞாஹுல்அஃலம்கலீபத்து ஷெய்குஷாஹுல் ஹமீதடா
பாகம்ஞான கலையைநன்றாய்ப் பண்பாய்மொழிந்தே னறியடா. (16)

ஞானகலை முற்றிற்று.

---

## மெய்ஞ்ஞானப் பொற்பதி

—✿—

வெண்பா

பொங்கு மெய்ஞ்ஞானப் பொற்பதிநல் லின்னூலை
சங்கையாய் யானுரைத்தேன் தன்மையுடன்—பங்கமற்ற
திருவருளே யுன்பதத்தில் தெளிவா யெனைச்சேர்த்து
கருப்பொருளே கையணைப்பாய் காப்பு. (1)

ஆசிரிய விருத்தம்.

நெறியுள்ள ஷரீஅத்தி னைந்துநே ரந்தொழுது
நேருள்ள ஜும்ஆவையும்
நீதமாய்த் தொழுதுநற் றொழுகைநெறி யாகிய
நிறைவான வல்லனைவல்
அறிவாக வேயெடுத் ததுபோல் நடந்தறிவன்
அழிவான விலகல்விட்டு
அன்புடைய தரீகத்து ஹகீகத்து மஃரிபா
ஆசையுள வழிபுகுந்து
குறியுடன் முஹப்பத்து முஃகிதாத் தானநற்
குணமுள்ள அருளிலாகி

கோமானை நித்தியங்கண்டுதெரி சித்துவருள்
    கோனவன் பதமுத்தியே
பரிமகா மெட்டையுந் திக்றைந்து யாதுவகை
    பண்பா யறிந்துநிதமும்
பாங்குட னருள்தவஞ் செய்தபெரி யோர்களே
    பரஞ்சேர்வார் நற்பதியிலே. (2)

வெண்பாக்கள்.

மேதினியி லுள்ளவர்க்கு மேன்மையுள்ள கண்ணிரண்டு
ஆதியருள் ஞானிகட் கதிகக்கண்—நீதமுடன்
சேருவா ரருட்பதத்திற் றெளிவான மேலோர்கள்
சீருடனே அவர்கள்பதம் சேர். (3)

நாதமதை யறிய நண்பனே பாடுமெத்த
நாதமதைச் சற்குருவே நாட்டிவைப்பார்—நாதனுமே
நற்றவப் பொருளதனை நலமான சீஷனுக்குப்
பற்றுதலா யீவாரே பார். (4)

இடம்வேணும் பொருள்வேணும் ஏவலது தான்வேணும்
திடமான நல்லருளிற் சேர்வதற்கு—கொடையுள்ள
பரன்தனையுங் கண்டு பற்றுதலாய் நின்றவர்க்கு
சிறப்புகளு முலகமதிற் சீர். (5)

சிந்தைமன தொன்றான சீஷனே மேன்மையுள்ளோன்
நிந்தைசெய்யான் குருவுக்கு நிச்சயமாய்—விந்தையுள்ள
கருக்குருவும் முச்சுடரைக் காட்டிவைப்பார் சீஷனுக்கு
மருவுள்ள மேன்மையருள் மா. (6)

கலித்துறை.

பதினெ லெழுத்தும் சமைந்து எழுந்தருள் பரம்பொருள்காண்
மதியாக நின்றுற ஸல்பதம் வீழ்ந்தெழும் வல்லவர்கள்
கதியான பூமலர் ஆயிரத் தெட்டையுங் கண்டுசொக்கி
விதியாக நின்றவரே ஜெயம்பெறு வாரிறை மேலருளே. (7)

இறைறசூல் முஹியித்தீன் பதினெ லெழுத்து இன்பமுள்ள
குறைவிலா முச்சுடர் முப்பொரு ளாயிது கூறறிவே



மறைநாலு வேத முஹம்மதைக் கண்டு மகிழ்ந்தவர்க்கு
திரையேழும் நீங்கித் திருவாசற் பூட்டுத் திறந்திடுமே. (8)

வெண்பாக்கள்.

உன்னைப் புகழ்ந்து வுகப்பேன் பொருளனைத்தும்
உன்னை மறந்தோர்க்கு உண்மையில்லை—உன்னையன்றி
ஏதுமில்லை யென்னிறையே ஏகாநீ நன்மைதந்து
தீதைவிட்டும் நீக்கியருள் சேர். (9)

உத்தார மன்றி யுண்மையில்லை மற்றதெல்லாம்
சித்தான பேரறிவார் சீரறிவை—நித்தியமும்
கற்றுணர்ந்து பார்த்தோர்க்கு ஹக்கனே யுன்னருள்மெய்
வற்றாத செல்வமருள் வாய். (10)

ஆங்காரங் கொண்டெழும்பும் அழிவான தத்துவங்கள்
நீங்காகப் போகச் சிறப்பருள்வாய்—பாங்குடனே
என்னை யருள்தவத்தி லேகா நிறைவாக்கென்
தன்னையுன் பொருத்தமதில் தான். (11)

நண்புள்ள பெரியோர்க்கும் நலமில்லாப் பாவிகட்கும்
திண்புவியில் உணவளிக்கும் சீமானே—அன்புள்ள
கிருபைநல முள்ளவனே கேடான பாவியெனை
விருப்பமுடன் கையணைநல் விதம். (12)

உலகில்மூ வாசையற்று வுண்மையருள் முச்சுடரை
நலமாக நித்தியமும் நானறிய—பலமருள்வாய்
காரணனே யுன்தஞ்சம் காப்பா ரொருவரில்லை
பூரணனே பிழையனைத்தும் பொறு. (13)

சரத்திற் கலிமாவைத் தானேற்றி றக்கஞ்செய்
திறமுடைய வேலையிது திடமானால்—பிறப்பிறப்பும்
அற்றுப்போம் ஆதிதனை யறிந்து தொழுதோர்க்கு
சித்துகளும் பெருகிடுமே சீர். (14)

ஓசை யொலிகேளு வுலகிலுள்ள சத்தம்விட்டு
ஆசை பெருகும் அருட்சிறக்கும்—பாசமுள்ள
இறையோனைக் கண்டுதொழு ஏகனுங் கையணைத்து
நிறைவுபூ ரணஞ்சேர்ப்பான் நேர். (15)

## தோங்கல்.

நன்மையாகிய சொற்கமெட்டின்
நலவையுரைக்கிறேன் தெளிவதாக
தன்மையொன்றான தாறுல்கறார்
சங்கையுளதாறுல் ஜலால்ரண்டாகும்
வண்மைமூன்றான தாறுஸ்ஸலாம்
வாகுநாலாம்ஜன் னத்துல்அதுனி
தின்மையணுகாத ஜன்னத்துல்மௌவா
சிறந்தஅழகான சுவர்க்கமைந்தே. (16)

சுவர்க்கம்ஆறான ஜன்னத்துல்குல்தி
துய்யோன்ஜன்னத்துல் பிறதௌசேழு
தவத்தோர்வாழ்கின்ற ஜன்னத்துன்னஹீம்
தன்மையாகிய சொற்கமெட்டு
பவத்தோரிருக்கின்ற நரகமேழின்
பாங்கைநன்றாக விளங்கச்சொல்வேன்
கவுத்துவஞ்செய்யும் ஜஹன்னமொன்றாம்
கனமுள்ளநர காகுந்தானே. (17)

நரகம்லலாரண்டு ஹுதமத்துமூன்று
நலமில்லாசகீறு நாலுமாச்சு
சறுகுதலுள்ள சக்கறுஐந்து
தன்மையில்லாஆறு ஜஹீம்நரகம்
மறந்துநாயனை யறியார்வாழும்
மறுவுள்ள ஹாவியாஏழதாகும்
திறந்துறஹ்மானை நோக்கிப்பார்த்து
தீயிலாகாமற் சொற்கம்வாழே. (18)

சுவனப்பதிதனி லாக்கிடுவான்
துய்யோனருள்கண்டு தொழுதபேரை
தவப்பதிதன்னி லாக்கிவைப்பான்
தன்மைஜோதியிற் கலந்தபேரை
புவனப்பொருள்தன்னிற் சேர்த்துவைப்பான்
பூர்ணஒளிகண்டு அறிந்தபேரை



கவனமாகவே தவஞ்செய்தோரை
கத்தன்பொருத்தத்தி லாக்குவானே. (19)

## வெண்பாக்கள்.

வேதனே மெய்ஞ்ஞான வேந்தனே கிருபையருள்
காதலாய்ப் பார்வையெனைக் காப்பாற்றி—நீதமுள்ள
அருள்தவத்தி லாக்கி யருமையுன் பொருத்தமதிற்
குருவருளே சேர்த்திடுவாய் குணம். (20)

அகாரமென்ற வாசி அன்பாகத் தானேற்றி
உகாரமென்ற ரண்டெழுத்தில் ஊன்றியே—பகாவான
விழிநடுவிற்றாக்கி மேன்மைத் தவஞ்செய்ய
அழிவில்லா வல்லவனே யருள். (21)

ஹூவுக்குள் மீமாம் குருமீமே மேன்மைமணி
ஹூவதுவும் பூரணமாம் குன்னதிலே—ஹூவதனை
கண்டு பிடித்துக் காஷிதனை நல்விதமாய்
அண்டத்திற்றானே அறி. (22)

பூதமைந்து ஒவ்வொன்றும் பொருத்தக்கே டாகாமல்
பூதமைந்து மோர்மனதாய்ப் பொருந்திநின்று—நீதமாய்
நல்லவழியிற் சாடி நன்மைத் தவஞ்செய்ய
வல்லவனே கிருபையருள் வாய். (23)

மெலிவில்லா மேன்மையுள்ள மெய்ஞ்ஞானப் பொற்பதியை
கலீபத்து ஷெய்குஷாஹுல் ஹமீதவனும்—நலமாக
அறிவா யுரைத்தேன் அன்பான கண்மணியே
பரிவுடனே இந்நூலைப் பார். (24)

திக்றாகத் திக்றதுசெய் தெளிவான வல்லவன்மேல்
பிக்றாக வேஇருந்து பிரிசங்கொள்—திக்றறிந்து
மேலவனைக் கண்டு மேன்மைத் தவஞ்செய்ய
காலன்வினை தானகலும் காண். (25)

முப்பூவும் முப்பொருளாம் மூலக் கருவாகும்
அப்பூவைக் காணநிதம் அப்பதனில்—தப்பியெடு

### ஆசிரிய விருத்தம்.

தாயான மாதாபி தாவான தந்தையும்
தாணியில் நிலையுமில்லை
தங்கமது பொன்வெள்ளி காசுபணம் நிலையில்லை
தன்னுடைய வுறவின்முறையார்
சேயான பிள்ளைபெண் டீர்களுஞ் சதமில்லை
சிந்தையி லறிந்துபாரு
சீரான மண்மனையும் மாளிகைய ரண்மனை
செல்வமும் நிலையுமில்லை
வாயதுவும் மொழியாத யானைபரி மாடுட்டை
மாடாடு பெருமைகளுமே
வளமுள்ள பூவுலக வாழ்வெலாம் பொய்யாகி
மங்கிடும் நிலையில்லையே
தீயான தற்றபே ரின்பமெய்ஞ் ஞானவொளி
சீருள்ள நன்னிலையது
தெளிவுபரி பூரணச் சோதிமய மேகிருபை
செய்திடென் கண்ணின்மணியே. (36)

ஆசைக்கு அளவில்லை யன்பனே யுலகுதனி
லகிலமுழு தாண்டபோதும்
அடங்காத பொன்பொரு ளிருந்தபோ தும்இச்சை
ஆசையது இன்னும் அதிகம்
தேசத்தை யரசாளும் மன்னரும் மற்றவரும்
சீவன் பிரிந்தபின்பு
தேகமது மண்ணாகிப் போனதை யறிந்துமொளி
தெளிவருளி லாகாமலே
நேசித்து மூவாசை கொண்டுமன மானது
நிலையற்றி ருந்தசமயம்
நினைவது வுண்பது முறங்குவதும் மோகமாய்
நீசபோகத்தில் முடியும்
பாசமெனும் மூவாசை வந்துசா டாமலே
பரனேநீ காத்துஅருள்வாய்
பரிபூர்ண தங்கமே ஜோதியொளி வேயருட்
பாக்யமே கண்ணின்மணியே. (37)



என்றைக்கி ருப்பதுவும் உண்மையோ உறுதியிலை
எமன்வருகும் நேரமெதுவோ
எந்தெந்த சமயமோ எவ்வேளை தன்னிலோ
இறைவனே உன்தஞ்சமே
நன்றுநல மானநா டதனிலோ அழகுள்ள
நளிரான தேசமதிலோ
நாயனே அழகா யடங்கநீ கிருபைசெய்
நற்பெருமை யுள்ளமணியே
என்றும்நீ நல்லவரு ளானதில் நிரப்பமாய்
இறைவனே ஆக்கிவைப்பாய்
இன்பமுள மோனமதில் நபிஷபா அத்துடன்
எந்தனக் கருள்செய்குவாய்
குன்றுதல் கொடுமைகள் தீவினை கசடெலாம்
கோமானே நீக்கி அருள்தான்
குணமாய் எனக்குத் துலங்கநீ யுதவிசெய்
குறைவிலா ஜோதியொளிவே. (38)

திருவருள் வல்லனே உன்னுடைய வுதவியால்
சிறப்பருள் யானறிந்தேன்
ஜெகமதில் நன்மையுள நற்பேறு வருகவும்
செல்வனே கிருபைசெய்வாய்
கருவான முச்சுடர் ஒளிவதின் காக்ஷியை
ஹக்காக வேயறிந்து
காரணக் கடல்தனில் மூழ்கநீ கிருபைசெய்
ஹக்கனே நீதமணியே
மருவான வேதமதை யழகாக வோதவும்
மறைகலிமா யானெழுதியே
வளமாக வுன்னை வணங்கியே தொழுகவும்
வலனேநீ நல்லுதவிசெய்
குருவான நல்லமிர்தம் பற்றிப்பி டித்துயான்
கூர்மையாய் யானருந்த
கோமானே கிருபைசெய் மாயைதனை நீக்குஎன்
கோவேயான் உன்தஞ்சமே. (39)

மெய்ஞ்ஞானப் போற்பதி முற்றிற்று.

## ஞானச் சிங்காரச் சிந்து.

மெய்ஞ்ஞானம் அருளதுவடி தங்கமே கொடிய
அஞ்ஞானம் இருளைநீக்கடி சிங்கமே மகி
ஜெகதலமானது சகலமும்மறைந்து
தகதகவென்றொளி மிகுந்துகூடிடும்
சிங்காரப் பதியிற்சேரடி தங்கமே நல்ல (1)
மங்காத வொளிவிற்கூடடி சிங்கமே.

நலமான குருவதுவடி தங்கமே தினம்
பெலமாகச் சேர்ந்துநில்லடி சிங்கமே பதம்
போற்றிடத்வமது ஏற்றமதாகவும்
கூற்றுவன்வலையது குலைந்துபோகவும்
அருளான வொளிவிற்கூடடி தங்கமே நன்றாய் (2)
திருவான ஜோதிகாணடி சிங்கமே.

கருவான வொளிவதுவடி தங்கமே அதில்
கருத்தாக வூன்றிநில்லடி சிங்கமே உடனே
ககனமோடவனியும் சகலமும்மறைந்து
சுகவொளி பூரணம் மிகுந்திலங்குமே
சுடலான நீரிற்றானடி தங்கமே நன்றாய் (3)
திடமாக மூழ்கிநில்லடி சிங்கமே.

அறிவான அருளதுவடி தங்கமே அது
பெரியோர்கள் மௌனமேயடி சிங்கமே நல்ல
அந்தரமானதிற் சுந்தரவொளிவது
நந்தியின்வடிவுபோல் வந்துமேயிலங்குது
கருவான சூக்ஷமதிலடி தங்கமே நன்மை (4)
குருவடி தீட்சைபெறுவடி சிங்கமே.

மங்காத சோதிதானடி தங்கமே அதைச்
சிங்கார மாகப்பாரடி சிங்கமே நன்மை
அழகியமாமணி தெளிவருள்முச்சுடர்
பழம்பொருளானது தளதளவெனவரும்



ஆகாய மானதிலேயடி தங்கமே நீயும் (5)
சாகாமற் செத்துநில்லடி சிங்கமே.

சுயமாக இலங்கும்பாரடி தங்கமே நீயும்
பயமாக அறிந்துவணங்கடி சிங்கமே அது
சுந்தரவொளிவது சந்திரவடிவது
சிந்தருள்தெளிவது வந்திடுமுன்னது
தயவாகக் கேட்டுநில்லடி தங்கமே நல்ல (6)
மயமான குருவைத்தேடடி சிங்கமே.

இனமான ஜோதிதானடி தங்கமே அதைக்
கனமாகப் போற்றிநில்லடி சிங்கமே இனிய
இங்கிதராகமும் சங்கதிஓசையும்
பொங்கியதொனிகளும் எங்குமுழங்குமே
தனியான பொருளையறியடி தங்கமே கொடிய (7)
வினையான கசடறுமடி சிங்கமே.

மணியோசை மண்டபமடி தங்கமே அதில்
கனியான கனிமாவதுவடி சிங்கமே நன்மை
மங்களமானது திங்களின்மதியது
தங்கமறிந்தவர் சிங்கமதாகுமே
ஒளிவான வேதந்தானடி தங்கமே அது (8)
தெளிவான நன்மைச்சுடரடி சிங்கமே.

நாலான பூரணமடி தங்கமே அதில்
பாலாக இலங்குதேயடி சிங்கமே அது
நற்பரிபூரணம் பொற்பிரகாசமே
சிற்பரனொளிவுநல் தற்பரனாகுமே
தவமான கல்பிற்சென்றடி தங்கமே நீயும் (9)
பலமாகத் தவத்தைச்செய்யடி சிங்கமே.

சுருமாவின் ஸிபத்ததுவடி தங்கமே அதில்
திருவான வொளிவுதாத்தடி சிங்கமே சுடர்
பந்துபோலாயிரத் தெண்மலரானது
வந்துவுலாவுது வண்மையொளிவதாய்

கனமான முச்சுடரடி தங்கமே நல்ல
தினம்வந் திலங்கும்பாரடி சிங்கமே. (10)

அஞ்சான வடிவதுவடி தங்கமே அதில்
பிஞ்சான மௌனந்தானடி சிங்கமே அதை
ஆவலுடன்தேட பாவமதோடிடும்
தேவனின் திருவொளி சாவுமுன்னறிந்திடு
நஞ்சான சரமதுவடி தங்கமே அறிய
பஞ்சாய்வினையோடிடுமடி சிங்கமே. (11)

அறிவான பொருளைப்பாரடி தங்கமே அது
நெறியான ஜோதிமயமடி சிங்கமே நல்ல
அற்புதமானது பொற்பதியருளது
நற்பரிபூரணம் கற்பூரதீபமே
நலமான முச்சுடரடி தங்கமே நல்ல
குலமாக அறிந்துக்கொள்ளடி சிங்கமே. (12)

உப்பான சீரதுவடி தங்கமே அந்த
அப்பான குணமறியடி சிங்கமே அதில்
அழகியஒளிவது சுடரதுமுச்சுடர்
தளதளவெனகதிர் திடமருள்சுயமது
வடிவான வொளிவதுவடி தங்கமே அது
முடியான தவமருளடி சிங்கமே. (13)

முத்தான அருளதுவடி தங்கமே நீயும்
சித்தாக வணங்கிநில்லடி சிங்கமே நன்றாய்
கலீபத்துஷெய்கு ஷாஹுல்ஹமீது
கலியருளான கலிமாவதனை
அறிந்தே யுரைத்தபொருளடி தங்கமே நன்றாய்
தெரிந்தே யுணர்ந்துக்கொள்ளடி சிங்கமே. (14)

ஞானச் சிங்காரச் சிந்து முற்றிற்று.



## பதக் கண்ணிகள்

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

ஆண்டவனை யறிந்தவர்கள் கோடியிலே ஒன்றுண்டும்
அவனி தன்னில்
ஆண்டவனை யறிந்தவர்கள் அவனியிலே மெய்ஞ்ஞானம்
அருளுள் ளோர்கள்
ஆண்டவனை யறிந்தவர்கள் அவனியிலே யருளுடைய
அறிஞ ராகும்
ஆண்டவனை யறிந்துநிதம் அன்பான மாதவங்கள்
அறிந்து செய்யே.

இ-ம். தரு-ஆகிரி அடதாளம் - சாப்பு.

பல்லவி.

விதி யென்ன செய்திடுமோ—பாவியெனை
மதி யென்ன செய்திடுமோ.

அநுபல்லவி.

விதியென்ன செய்யுமோ வேதநந் நிலையாக்கி
கதியான அருளதைக் காட்டித்தெளி வாக்குமோ. (விதி)

சரணங்கள்.

(1) பாவியாய் நின்று தவித்திடச் செய்யுமோ
பாதக மெனைவிட்டு நீங்கிடச் செய்யுமோ
ஹுவின் சூக்ஷுமதைக் கண்டிடச் செய்யுமோ
குணமில்லாத் துஷ்டரோ டுறவாடச் செய்யுமோ. (விதி)

(2) அறிவான மௌனத்திற் கூடிடச் செய்யுமோ
அற்ப மங்கையரிஷ்டங் கொண்டிடச் செய்யுமோ
குறியான கலிமாவைத் தெரிசிக்கச் செய்யுமோ
குவலய மாயமென்னைச் சூழ்ந்திடச் செய்யுமோ. (விதி)

(3) மேலான பரகதிக் காளாகச் செய்யுமோ
மேன்மை யற்றகொடுந் தீவினை செய்யுமோ

நாலான அருள்கண்டு தவஞ்செய்யச் செய்யுமோ
நன்மையில் லாத்தோசி யாகிடச் செய்யுமோ. (விதி)

(4) தேவசன் னிதிசென்று தொழுதிடச் செய்யுமோ
தேசங்கள் சுற்றிய லைந்திடச் செய்யுமோ
ஜீவமுத் தியருள் பெற்றிடச் செய்யுமோ
தேகமதான தழிந்திடச் செய்யுமோ. (விதி)

(5) முச்சுடர் கண்டு தெளிவாகச் செய்யுமோ
மோகமென் றகாம வெறிகொள்ளச் செய்யுமோ
சச்சிதா நந்தனை வணங்கிடச் செய்யுமோ
சண்டாளர் தன்னோடு கூடிடச் செய்யுமோ. (விதி)

(6) மூலப்பொ ருளைய றிந்திடச் செய்யுமோ
மோசங்க ளைவந்து அண்டிடச் செய்யுமோ
காலன்வந் தணுகாமல் தவஞ்செய்யச் செய்யுமோ
கருவான வாசியைத் தேடிடச் செய்யுமோ. (விதி)

(7) முக்கோண வீதியில் நின்றிடச் செய்யுமோ
மூடனாய் உலகினில் தோன்றிடச் செய்யுமோ
எக்கால முமொளியைத் தெரிசிக்கச் செய்யுமோ
எமன்வலை தன்னிலே சிக்கிடச் செய்யுமோ. (விதி)

(8) கர்த்தனின் ஜோதியைத் தெரிசிக்கச் செய்யுமோ
காடான மனமாச மேகிடச் செய்யுமோ
நித்தியம் கலீபத்து ஷெய்கு ஷாஹுல் ஹமீதை
செப்பமா யருளதி லாகிடச் செய்யுமோ. (விதி)

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

அண்டின பேர்க் கருள்தருநும் அற்புதமா மணிவிளக்கே
அருள்மெய்ஞ் ஞானம்
அண்டின பேர்க் கருள்தருநும் அற்புதமே தீபவொளி
அறிவா னதும்
அண்டின பேர்க் கருள்தருநும் அற்புதமே தெளிவான
ஆதி யாதும்
அண்டின பேர்க் கருள்தருநும் அற்புதநற் றவமதனை
அறிந்து செய்யே.



பல்லவி.

அண்டின பேர்க்கிந்த ஆண்டவன் செய்திடும்
அற்புதம் என்ன சொல்வேன்.

அநுபல்லவி.

பண்பொளி வானதைப் பார்த்து மனமகிழ
அன்பாக வேஅழுத் திடவும்—சரம்
நண்பாக எழுந்துநின் றிடவும்—கருவில்
இன்பமாய் தூங்கிநின் றிடவும். (அண்டின)

1. மட்டிகள் போலே மதிகெட் டிருக்கையில்
வாவென்று கல்வினி லடித்தான்—ஒளி
முட்டித்த தும்பிமு னையிலே மூந்திட
மோகமாய்ப் பாரென்று இடித்தான்—நன்மை
சட்ட மறியாத பாவியே யென்றவன்
சம்பூர்ண வாழ்வையுங் கொடுத்தான்—கொடும்
முட்டாளாய்ப் போகாமல் முன்கலி மாவதை
முறையாக மொழியென்று வுரைத்தான்—அருள்
வற்றாமல் தந்தென்னைப் பிடித்தான்—இருள்
சற்றுமில் லாமலே தொலைத்தான். (அண்டின)

2. கவலைகள் நீங்களன் காதிலு பதேசம்
கருத்துட னேயவ னுரைத்தான்—நன்மைத்
தவமது முச்சுட ரானது திக்கவே
தனுசனே நிமிரென்று பிடித்தான்—யானும்
சவமது செத்தாப்போ லறிவும யங்கவே
சங்கற்ப வரமருள் தொடுத்தான்—பொல்லாப்
பவமது எகவ ருளதை ஈந்தவன்
பக்ஷமு டனென்னை யணைத்தான்—குல
மாகியபொ ருளதைக் கொடுத்தான்—பெல
மாகிய பாவத்தைத் தொலைத்தான். (அண்டின)

3. கண்ணடிக் குள்ளே கலந்த மௌனத்தைக்
காரண மென்றென்னைத் தொடுத்தான்—நீயும்

விண்ணுடிப் பார்த்துப் புகழ்ந்துக்கொள் ளென்றுமே
மேன்மையானவாங் கொடுத்தான்—தன்மை
வன்னவொ ளியில் வகையுட னேகலி
மானவயு றையென்று மொழிந்தான்—நன்மை
ஜன்னப்ப திக்கேக அருளிது தாமென்று
தன்மைய முகாக வுரைத்தான்—யானும்
நன்மைய ருளதை யடுத்தேன்—பவத்
தின்மையி ருளதைத் தொலைத்தான். (அண்டின)

4. சலிப்பான மஸ்தையு முண்ணுதே யென்றுநி
சம்பூரண மாய்ச்சொன்ஞன் இறையோன்—அப்பா
கலீபத்து ஷெய்குஷா ஹுல்ஹமீ தேகீயும்
கருத்திலி ருத்தென்றான் பெரியோன்—யானும்
மலிவாக அவனையும் தெரிசிக்க வாஞ்சையாய்
வாவென் றழைத்தானே நெடியோன்—மேன்மை
பலியென்ற அமுதத்தை வணங்கினோர் யாவர்க்கும்
பரிவுடன் ஈவானே வலியோன்—தன்மை
நேயத்தை யானுமே யடுத்தேன்—தின்மை
மாயையெல் லாம்பரன் தொலைத்தான். (அண்டின)

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

என்றைக்கி ருந்தாலும் இவ்வுலகம் விட்டிறந்து
இறப்ப துண்மை
என்றைக்கி ருந்தாலும் இவ்வுலக வாழ்வதுதான்
இன்ப மில்லை
என்றைக்கி ருந்தாலும் இவ்வுலக மானதைவிட்
டிறப்போம் மண்ணில்
என்றைக்கி ருந்தாலும் சேர்வதுண்மை முதியென்று
எண்ணாய் நெஞ்சே.

இ-ம். செஞ்சுருட்டி - தாளம் சாப்பு.

பல்லவி.

மாயை ருஸ்திய நிஜோகம்வி முமுன்னே
மதிமவி யின்னதென் றறியடா—மேன்மை
மதிமவி யின்னதென் றறியடா.



அநுபல்லவி.

தாயம தாகிய தாரைநடுவினில்
தளதளென்று இலங்கியசுடரொளி
காயமானத றியமுன் காண்பாயே
கருநினைவாகிய திருவருளை இந்த. (மாயை)

சரணங்கள்.

1. தாயானமாதா பிதாதந்தை யிருந்தென்ன
தாரணிதனில்மாட மாளிகை யிருந்தென்ன
சேயானமைந்தர் மனையாளு மிருந்தென்ன
செல்வமானபிறவி திரவிய மிருந்தென்ன
காயமதானது மறைகின்ற வேளையிற்
காணுதுஒன்றையுங் காணுதுகாணுது
மாயமதாகிய காயம்நிமிஷத்தில்
மகிதலம்விட்டு மறைந்துபோமறியிந்த. (மாயை)

2. கூட்டிக்கருணைவிழி யிற்கையைக்காட்டியே
குணமானகலிமாவை வாசியிற்பூட்டியே
திட்டித்தெளிவாகத் திறமுடனேற்றியே
தீங்கானதேகத்தில் தீவினையோட்டியே
மூட்டிவிழிதனையும் மேல்நோக்கிப்பார்த்திட
முனையதில் ஜெகஜோதி முச்சுடர்தோன்றிடும்
சாட்டியில்லாமலே பம்பரமாடிடும்
தன்மையானந்த ஏகனைத்தொழுவிந்த. (மாயை)

3. சரிகைகிரிகையொடு யோகம்நல்ஞானமும்
தனமாகஅறிந்திடும் நலமானபெரியோர்கள்
மறையானவேதத்தின் மௌனமும்தெளிவாக
வாகாயறிவார்கள் வரிசைமுச்சுடரையும்
திரையான இருளெல்லாம் நீங்கிமதியமுதம்
சிறப்பாக வேஇறங்கும் தெளிவாயருந்துவார்கள்
குறைவுஅவர்கட்கில்லை குற்றமொன்றணுகாது
குவலயமானதில் தங்கம்தங்கமேயிந்த. (மாயை)

4. பொங்கும்காமக்கடலில் சிக்கிவிழுந்துநின்ற
புகழில்லாப்பாவிகள் வங்குஞ்சொறியுமாக

சங்கையெல்லாமழிந்து தன்மைமேனியுங்கெட்டு
தளதளப்பாயிருந்த வுடம்புமங்கியேபோகும்
மங்காமணிவிளக்கை யறிந்தசிங்கங்கட்கு
மறையாமலெப்போதும் ஜெகஜோதியிலங்கிடும்
எங்கும்நிறைந்தஇறை யவனருள்தங்கிடும்
எமன்வாதைவிலகிடும் அருளதையறியிந்த. (மாயை)

5. குருவடிபணிந்துநின் றுபதேசம்தான்பெற்று
குணமானஅருளதை யறிந்தோர்க்குஜெயம்ஜெயம்
திருவருள்செம்பொற் கமலவடியைநித்தம்
சிறப்புடன்முத்தினால் நயம்நயம்நயம்நயம்
மருளுள்ள மூவாசை கொண்டுவுலகமதில்
வணங்காமலிருந்தோர்க்கு பயம்பயம்பயம்பயம்
அருளானஞானோபதேசியையனுதினம்
அறிந்துதொழுதவர்க்கு அச்சமில்லையேயிந்த. (மாயை)

6. வாலைப்பிராயம் முதிருமுன்னேயருள்
வண்ணமானமுச் சுடரையான்தெரிசித்து
காலதானபதந் தன்னில்தொழுதிட
கத்தனேயருள் சித்தனேமுத்தனே
மூலமேதாசன் கேட்டதுகொடுத்தின்னும்
முதல்வனேயுன் மனம்போலும்நீகொடு
காலன்வந்துதுயர் செய்யாமலேஎன்னை
கத்தனேயுன்பொருத் தத்திலாக்குவிந்த. (மாயை)

7. பெண்ணாசையானதை யடிமையான் விலக்கவும்
பெரியோனேநின்கருணை யருளுவாய்எந்நாளும்
கண்ணது அவிழ்ந்துஎன் கல்புக்கண் திறக்கவும்
காரணாநின்கருணை மாறாமலருளுன்னைக்
கண்ணுற்றால்என்கவலை யெல்லாமகன்றுபோம்
கண்கண்டதெய்வமே காட்சிதந்தருளுவாய்
கண்ணெதிரில்தோன்றும் காவலனானோனே
காரணமுச்சுடர் அறியவேயருளிந்த. (மாயை)

8. உற்றாரின்முறை உறவற்றுஜனமற்று
ஊரோடொத்துவாழும் நிலைமாயை தானற்று



பெற்றார்பிறந்தார்சுற் றத்தாரின்நிலையற்று
பேரின்பமான வருளைநம்பிமனமுற்று
வற்றாதவருட்செல்வ மானபொருள்கண்டு
வண்ணமுடன்நித்தம் தெரிசித்துஅருள்பெற்றேன்
பற்றுதலாய்றஹ் மானைவணங்கினோர்கள்
பாமனருளிற்சேர்வ துண்மையுண்மையேயிந்த. (மாயை)

9, கலீபத்துஷெய்குஷா ஹுல்ஹமீது அப்பா
காரணாதாஜுத்தீன் அப்துல்காதிர்தன்னை
நலமானதெளிவுள்ள நன்மையருளதிலே
நயமுடனேசேர்த்துக் கிருபைசெய்நேசனே
குலமானதங்கம்போல் பரிபூரணமாக்கி
குற்றமொன் றணுகாமற் காத்துக்கொள்ஈசனே
பெலமானமுச்சுடர் தெளிவாகயான்கண்டு
பிசகில்லாமலேநித்தம் தவஞ்செய்யஅருள்இந்த.(மாயை)

பதக் கண்ணிகள் முற்றிற்று.

## பதங்கள்.

### 1-வது பதம். இ - ம் - நாட்டை - அடதாளம்

பல்லவி.

வடிவானவா நல்ல பரமோக்ஷந் தந்தருள்வாய் நல்ல
வளமாகவே தினமூழ்கியே கனமாகவே தாக்கிடவருள்
பரமோக்ஷந் தந்தருள்வாய். (வடி)

அநுசரணங்கள்.

1. அடிமுடியில்லாத அற்புதக்காரணா
ஆனந்தமாகிய அம்பரபூரணா
அடியனைப்பதமுத்தி அருளதிலாக்கிடு
அற்புதனெனும் சிற்பரனருள் நற்பிரமதி லேகிடவருள்
பரமோக்ஷந் தந்தருள்வாய். (வடி)

2. ஆவென்றஅச்சரம் அன்புடன்ஏற்றியே
ஆசனமானதில் அருமையாய்நாட்டியே
நாவைமடக்கியண் ணுவதுள்ளேற்றவே
நாயகனுன் தாயமொளி நயனமிடை நோக்கவருள்
பரமோக்ஷந் தந்தருள்வாய். (வடி)

3. முச்சுடர்கண்டு தெளிவாகிநிற்கவும்
மும்மலமற்றுப்பிறு தெளிவினிலேகவும்
சச்சிதானந்தனே கிருபைசெய்நலமுள்ள
சாகரத்தை நாகரமாய்ச் சங்கையுடன் நோக்கவருள்
பரமோக்ஷந் தந்தருள்வாய். (வடி)

4. சவிபபெல்லாம்நீக்கிச் சம்பூரணம்தந்தருள்
சருவலோகாதியே சஞ்சலம்நீக்கியே
கலீபத்துஷெய்குஷா ஹுல்ஹமீதுஎன்னைக்
காவலனே ஆலனுடன் தாவிஷமதி லாக்கியருள்
பரமோக்ஷந் தந்தருள்வாய். (வடி)

## 2-வது பதம். இ - ம் - கமாஸ் - திரிமடக்குத்தாளம்.

பல்லவி.

வாசமாகிய நீதனேவருவாய்
வடிவான அற்புதா—வாசமாகியநீதனேவருவாய்.

அநுசரணங்கள்.

1. ஈசனேயரு ளாகியநேசனே
இணையில்லாக்கதி யொளிபிரகாசனே
நீசமான இருளையறுத்துநீ
நிமிசத்தினி லருள்தந்துவென்
சமீபத்தினில் வந்தெனைக்கார். (வாச)

2. சோலைவண்டுகள் ராகங்கள்கேட்கவும்
சொல்லொணாக்கனி மாவொளிகாணவும்
வாலைக்குருமணி நபிபதந்தொழுகவும்
வரமருளைத் திறமாகவே
பரனேயெனக் கீந்திடுவாய். (வாச)



3. மட்டிலடங்கா வொளிவதைக்காணவும்
மறுவற்றமாமணி மண்டபம்தோன்றவும்
முட்டித்ததும்பி முளைத்தெழும்முச்சுடர்
முத்திதரும் முப்பொருளதை
வெற்றியுடன் காணவருள். (வாச)

4. காலானவாசி கலிமாவினோசையாய்
கண்மத்திமீதினிற் கட்டியுயர்த்தவும்
நாலைக்கண்டு நயம்பெறஆதியே
நலந்தந்தெனக் கருள்புரிநற்
பலன்தந்திடும் நாயகனே. (வாச)

5. சலிகையான பிதாமாதாசேய்கட்கும் .
சங்கையாதி பரமுத்திநீயருள்
கலீபத்துஷெய்குஷா ஹுல்ஹமீதென்னை
காத்திடுஅருள் சேர்த்திடுஇரு
நேத்திரமிடை யொளிதோன்றிட. (வாச)

## 3-வது பதம். இ - ம் - சாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

தாஸீமே தாஸீமே தாஸீமெனக்குகந்த
தங்கமணியே அருள் தாரும்.

அநுபல்லவி.

காஸீமேயுமக்கீடு காசினிதனிலில்லை
தாசனைத்தினம்காத்துத் தவமதிலேற்றிடுவீர்

சரளி.

அழகுமணியொடு கதிருமிலங்கிடும்
அருமைவடிவினுள் துலங்கும்நீலமே
அறிவுமுச்சுட ரதனைவணங்கிட
அருளைத்தாரும்நல் விறஸுல்நாதரே. (தாஸீமே)

சரணங்கள்.

1. முச்சந்திமேடையில் முத்தாயிலங்கிநிற்கும்
முன்னேனொளிவுள்மோன மதியே

பக்ஷம்வைத்தெனையாளும் பாலர்முஹம்மதுவே
பாவங்கள்தனைநீக்கிப் பரிபூர்ணந்தந்தருள்வீர்
அழகுமணியொடு கதிருமிலங்கிடும்
அருமைவடிவினுள் துலங்கும்நீலமே
அறிவுமுச்சுடரதனைவணங்கிட
அருளைத்தாரும்நல் விறஸூல்நாதரே. (தாஸீமே)

2. வட்டவடிவானமின் வண்ணம்ஒளிவேயாலும்
வாடும்மயக்கந்தீர்க்க வருவீர்
எட்டாதபேரொளி வின்பமருட்கனிமா
எனக்குத்தெரியும்படி யிரக்கம்வைத்தருளுவீர்
அழகுமணியொடு கதிருமிலங்கிடும்
அருமைவடிவினுள் துலங்கும்நீலமே
அறிவுமுச்சுடரதனைவணங்கிட
அருளைத்தாரும்நல் விறஸூல்நாதரே. (தாஸீமே)

3. குத்துறுக்த்தில்வந்த ஹூறெவன்றசக்கரத்துள்
கூடிக்குலாவிவருங் குருவே
பற்றியிலக்கமாக பரமாய்முன்னிலேவந்தென்
பாவங்களைப்போக்கும் பரமன்முஹம்மதுவே
அழகுமணியொடு கதிருமிலங்கிடும்
அருமைவடிவினுள் துலங்கும்நீலமே
அறிவுமுச்சுடரதனைவணங்கிட
அருளைத்தாரும்நல் விறஸூல்நாதரே. (தாஸீமே)

4. ஆசனமானதில் ஐன்கண்றைடியொளியுள்
அற்புதக்காக்ஷிபருள் மணியே
தாசன்கலீபத்து ஷெய்குஷாஹுல்ஹமீதை
தரணியிற்காத்துநிதம் தனியோனினருளிற்சேர்ப்பீர்
அழகுமணியொடு கதிருமிலங்கிடும்
அருமைவடிவினுள் துலங்கும்நீலமே
அறிவுமுச்சுடரதனைவணங்கிட
அருளைத்தாரும்நல் விறஸூல்நாதரே. (தாஸீமே)



4-வது பதம். இ - ம். துரிதக்காம்போதி - ஏகதாளம்.

பல்லவி.

தருணம் இதுவேயென்னைத் தற்காத்து ரக்ஷித்திடும்.

அநுபல்லவி.

கருவானஜெய்லானியிற் கனமாய்ப்பிறந்தகௌதே. (தருண)

சரணங்கள்.

1. கடலில்தாழ்ந்தகப்பலைக் கடியாய்வரவழைத்த
திடமுள்ளஅப்துல்காதிர் செய்யிதேயாகௌதே. (தருண)

2. ஆயிரத்தெண்மலராய் அன்பாயிலங்கிவந்த
தாயமுடையமேன்மை தன்மைகாதிரேகௌதே. (தருண)

3. பகுதாதில்அரசாளும் பக்கீர்ஒலியுல்லாவே
தகுதிஅபுஸாலிஹு சங்கைசுதனார்கௌதே. (தருண)

4. பாத்திமாஈன்றகண்ணே பாலரப்துல்காதிரே
நேத்திரத்திரைநீக்கும் நேர்மையேயாகௌதே. (தருண)

5. எல்லாவொலிகளுக்கும் ஏற்றமுள்ளவொலியே
பொல்லான்பாவியெனக்கு புனிதந்தந்தருள்கௌதே. (தருண)

6. கலீபத்துஷெய்குஷாஹுல் ஹமீதுஅப்பாதாசனை
கலிமாவிற்கரைசேரும் காரணமானகௌதே. (தருண)

5-வது பதம். இ - ம். சாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

எக்காலமும்மேன்மை யின்பம்நல்ஸலவாத்தை
இறைமுஹம்மதுபேரில் ஓது.

அநுபல்லவி.

திக்குத்திகந்தமெங்குஞ் சிறப்புள்ளநன்மைநபி
செல்வன் திருத்துதனைத் தினமுமேதான்புகழ்வாய்

சரளி.

அருளதானது பொருளதானது
திருவொளியினில் வருகும்மருவது

அந்தமானது சந்தமானது
கந்தமாகவே வந்தநபிபேரில். (எக்கா)

சரணங்கள்.

1. அல்லாவொளியில்நின்றும் அன்பாகவந்துதித்த
அருமையுள்ளகாரண நபிதான்
வல்லான்முஹம்மதுவை வணக்கமுடன்புகழ்ந்து
வண்ணநல்ஸலவாத்தைத் திண்ணமுடனேயுரை
அருளதானது பொருளதானது
திருவொளியினில் வருகும்மருவது
அந்தமானது சந்தமானது
கந்தமாகவே வந்தநபிபேரில். (எக்கா)

2. அருமையொருஸலவாத்தோதினவர்கட்கு
அன்புநன்மைமிகுதந் தானே
பெருமையுள்ளஸலவாத்தோதிதுநல்வணக்கம்
பிசகானவன்னிநர கதுவும்ஹறாமாகும்
அருளதானது பொருளதானது
திருவொளியினில் வருகும்மருவது
அந்தமானது சந்தமானது
கந்தமாகவே வந்தநபிபேரில். (எக்கா)

3. தாஸீம்முஹம்மதுமேற் சங்கைநல்ஸலவாத்தைத்
தரணியிற்சொல்லநலந் தானே
நேசமுள்ளசுவர்க்கம் நெடியோன்கொடுத்துநன்றாய்
நீதமுடனேவைப்பான் காரணமானபேர்களை
அருளதானது பொருளதானது
திருவொளியினில் வருகும்மருவது
அந்தமானது சந்தமானது
கந்தமாகவே வந்தநபிபேரில். (எக்கா)

4. கலீபத்துஷெய்குஷாஹுல் ஹமீதுஅப்பாநாஜுத்தீன்
காஸீமேஅப்துல்காதிர் தனையும்
சலிகையுள்ளமுஹம் மதேநீங்கள்காத்துஎன்னை
தப்பாமலனுதினந் தனியோனருளிற்சேர்ப்பீர்



மண்டலம்விண் டலம்நிறைந்தது
வண்ணமாகிய அருளதானது
எண்குணன்அருள் ஜோதியானது
இன்பமானபே ரின்பமானது. (அருளா)

5. கலீபத்துஷெய்குஷாஹுல் ஹமீதுஅப்பாநாஜுத்தீன்
காதிரிதனைக்காப்பாய் இறையே
வலியநாயகனான வண்மையுடையகோனே
மாசில்லாமணிப்பொருள் தந்துஅருள்சேர்ப்பாயே
மண்டலம்விண் டலம்நிறைந்தது
வண்ணமாகிய அருளதானது
எண்குணன்அருள் ஜோதியானது
இன்பமானபே ரின்பமானது. (அருளா)

பதங்கள் முற்றிற்று.

கலீபத்து ஷெய்கு ஷாஹுல்ஹமீது அப்பா நாயகம்
திருவாய் மலர்ந்தருளிய ஞானத் திருப்பாடற்றிரட்டு
சம்பூரணமாக அல்லாவுடைய கிருபையால்
அச்சிட்டு நிறைவுபெற்றது.

சுபம்! சுபம்!! சுபம்!!!

கோயில் பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 4 | 2 | | உலகைக்கவ |
| 6 | 8 | | அதன்பின் |
| 12 | 4 | வலிவுள்ள | வலியுள்ள |
| டிை | 5 | வலிவுள்ள | வலியுள்ள |
| 13 | 28 | | புகழவும் |
| 14 | 26 | குலயத் | குவலயத் |
| 15 | 29 | கவிமாவில் | கலிமாவில் |
| 16 | 13 | யப்யா | யப்பா |
| 21 | 13 | ருதயமாகு | ருதயமாகும் |
| 23 | 18 | | படிதனில் |
| 24 | 17 | காஷிநள் | காஷிகள் |
| 25 | 9 | | பெரியோர்கள் |
| டிை | 20 | | மாயைதன்னில் |
| 31 | 3 | கண்டுக்தெளிந்து | கண்டுதெளிந்து |
| 37 | 26 | ஹன்கலிமா | ஐன்கலிமா |
| 40 | 16 | நயகமதி | துயரமதி |
| 41 | 25 | ரக்ஷிப்பாய | ரக்ஷிப்பாய் |
| 56 | 21 | நாழிகையுயைந்து | நாழிகையுமைந்து |
| 68 | 15 | ஆறுவத்தை | ஆணவத்தை |
| 85 | 25 | வற்புவெழுததைத | வற்புவெழுத்தை |
| 92 | 21 | வெள்ளிபபணத்தை | வெள்ளிப்பணத்தை |
| 111 | 5 | உன்னருளே | உன்னருளை |
| 112 | 8 | யானறிந்துச்தெரி | யானறிந்துதெரி |
| 129 | 11 | இவ்வணக்கம் | இறைவணக்கம் |
| 130 | 28 | கசமுடனே | சுகமுடனே |
| 138 | 23 | ஆகிதனை | ஆதிதனை |
| 142 | 9 | அவர்களுகு | அவர்களுக்கு |
| 169 | 15 | சேகசமும் | சேசகமும் |
| 174 | 27 | இருகண்ணைத்தின் | இருகண்ணதின் |
| 208 | 29 | எந்தனையும | எந்தனையும் |
| 217 | 28 | ன்புதவஞ்செய் | அன்புதவஞ்செய் |
| 219 | 3 | தினமுமம | தினமும் |
| டிை | 25 | மொளனி | மௌனி |
| 222 | 17 | பொளி | யொளி |
| 223 | 24 | கிருபைவருள் | கிருபையருள் |



அருளதானது பொருளதானது
திருவொளியினில் வருகும்மருவது
அந்தமானது சந்தமானது
கந்தமாகவே வந்தகபியேரில். (எக்கா)

6-வது பதம். இ-ம். மோகனம்—அடதாளம்.

பல்லவி.

தெளிவா யருளைத்தாருமே—ஹபியேயெந்தன்
இன்னதக் கலக்கந்தீருமே.

அநுபல்லவி.

ஒளிவேதெளிவேயென் உண்மைமுச்சுடரேசகல்
ஆகப்பாணநக்கபியே யுங்கள்தஞ்சமேதஞ்சம்

சரளி

தான்தான் தளதள மின்கதிரழகொளி
ஜெகபரிபூரணச் சுடரது இலங்கிய
சங்கையெங்கும்புக ழானவொளிவுகபி
தங்கமாமதியே சிங்கமுகூறும்மதுவே. (தெளிவா)

சரணங்கள்.

1. வானின் மதியமைத்தோமே—அமாவாசையின்
ஞானமான கல்விரீவிலே
தீனின் பயிர்விளைத்தோமே—தெளிவுடைய
செல்வ சுந்தராஜரே—திருவொளிவதனையும்
அனுதினந்தவறிடா தழகுடன்தெரிசிக்க
ஆதி திருத்தாதமே அனுமதிகபியே
அன்புடனேயெனக் குதவிசெய்தருளுவீர்
தான்தான் தளதள மின்கதிரழகொளி
ஜெகபரிபூரணச் சுடரது இலங்கிய
சங்கையெங்கும்புக ழானவொளிவுகபி (தெளிவ
தங்கமாமதியே சிங்கமுகூறும்மதுவே.

2. காதங்க மழும்றமை தலே—அழகுதிரு
காரண மாகியதே

நீதம ஹாமூதநேசர்—குருவேமெய்யர்கள்
நேர்மை மாமணிவிளக்கே—கன்மவஞ்சகவினை

திக்குஅசதிபிணி சிறுமைகொடுமைகாமம்
இன்மைநோய்மறதி இங்கள்நபியேநீக்கி
தினமுமெனக்கருளைக் கனமாய்த்தந்தருள்வீர்

தான்தான்தனாதனா மின்கதிரழகொளி
ஜெகபரிபூரணச் சுடரதுஇலங்கிய
சங்கையெங்கும்புகழ் ஞானவொளிவுநபி
தங்கமாமதியே சிங்கமுஹம்மதுவே. (தெளிவா)

3. முன்னேறு மொளிவுதன்னிலே—இலங்கிவரும்
முஸ்தபா வள்ளல்நபியே
ஜன்னப்பா நிக்காசனே—சிறப்புடைய
சங்கையாளியாறலைதனிலே—அடியனுமனுதினம்

கனிமாப்பொருளதான காசுதிருச்சுடர்கண்டு
காரணமானதவம் கனமுடனேசெய்ய
கருணையெனக்கருளும் காஸீமென்நபியே

தான்தான்தனாதனா மின்கதிரழகொளி
ஜெகபரிபூரணச் சுடரதுஇலங்கிய
சங்கையெங்கும்புகழ் ஞானவொளிவுநபி
தங்கமாமதியே சிங்கமுஹம்மதுவே. (தெளிவா)

4. நேதனிலே லியவாசனே—அருளையுள்ள
தீனோருக் கெல்லாம் ராஜனே
காலிநதியமைழத்தானே—கெதியுடைய
காத்திமுல் வன்பியாவானோனே—கலீபத்துஷெய்குஷாஹுல்

ஹமீதப்பாவானவனைக் கலிமாவில்நிலையாக்கி
கனமானதங்கள்அப்பா அத்தினிற்கரைசேர்த்து
கத்தன்பேறுதெளிவினிற் சேர்த்திடும்ஹாமீமே

தான்தான்தனாதனா மின்கதிரழகொளி
ஜெகபரிபூரணச் சுடரதுஇலங்கிய
சங்கையெங்கும்புகழ் ஞானவொளிவுநபி
தங்கமாமதியே சிங்கமுஹம்மதுவே. (தெளிவா)



7-வது பதம் இ-ம். சாவேரி—அடதாளம்.

பல்லவி.

மெய்யானஅவ்வல்கலிமாவால்மெய்முழுதுமே
மேலோனமைத்தான்நம்மைத் தானே.

அநுபல்லவி.

தையிபுக்கலிமாவில் லாஇலாஹவுடல்
தனம்இலாஹு அல்லாஹு எழும்உடலுக்குயிர்

சரளி

ஏககாயனை யிரவும்பகலுமே
இன்பமாகவே யறிந்துதொழுதோர்க்கு
ஆகமென்றதோர் தேகமானது
அழியாதிருக்கும்நல் லன்பாய்த்தவஞ்செய்யே. (மெய்)

சரணங்கள்.

1. நலமானலாஇரண்டும் கால்இலாஹமூலம்
நன்மைஇல்லாஉடல் தானே
பெலமானமுகம்அல்லா ஹுவென்றவெழுத்துத்தான்
பிசகில்லாமலறிந்து பேரின்பவொளிகாணே

ஏககாயனை யிரவும்பகலுமே
இன்பமாகவே யறிந்துதொழுதோர்க்கு
ஆகமென்றதோர் தேகமானது
அழியாதிருக்கும்நல் லன்பாய்த்தவஞ்செய்யே. (மெய்)

2. தெளிவுலாஇலாஹஇல் லல்லாஹுஎன்றதற்கு
சிறப்புப்பொருளதுவுந் தானே
ஒளிவானலாஅுஇல் லல்லாஹுவென்றதாகும்
உகப்பானஆதியவன் ஒருவனென்றறிந்துக்கொள்

ஏககாயனை யிரவும்பகலுமே
இன்பமாகவே யறிந்துதொழுதோர்க்கு
ஆகமென்றதோர் தேகமானது
அழியாதிருக்கும்நல் லன்பாய்த்தவஞ்செய்யே. (மெய்)

3. முண்டகக்கமலத்தில் அலிபென்றவெழுத்தும்
முறையானஇருதயம் தேறயும்

பண்டமான உந்திக் கமலத்தில்வாவெழுத்தும்
பலமான அஹுறூவென் றுச்சு அறிந்துக்கொள்ளே

ஏகநாயனை யிரவும்பகலுமே
இன்பமாகவே யறிந்துதொழுதோர்க்கு
ஆகமென்றதோர் தேகமானது
அழியாதிருக்கும்நல் லன்பாய்த்தவஞ்செய்யே. (மெய்)

4. நலமான ஆதிதனைத் தவிரவேறில்லையென்றும்
நாயன்தூதர்முஹம்மதென்றும்
பெலமாய்த்தன்னையறிந்து வணக்கஞ்செய்தாலேதலம்
பேரின்பவணக்கத்தை யறிந்துவொளிவைக்காணு

ஏகநாயனை யிரவும்பகலுமே
இன்பமாகவே யறிந்துதொழுதோர்க்கு
ஆகமென்றதோர் தேகமானது
அழியாதிருக்கும்நல் லன்பாய்த்தவஞ்செய்யே. (மெய்)

5. கலீபத்துஷெய்குஷாஹுல் ஹமீது அப்பாதாஜுத்தீன்
காதிரிதன்னைக்காப்பாய் ஆதி
குலமானநற்குலத்தி லாக்கிஒவ்வொருநாளுங்
குணமுள்ளமுச்சுடரைத் தெரிசிக்க வருட்செய்வாய்

ஏகநாயனை யிரவும்பகலுமே
இன்பமாகவே யறிந்துதொழுதோர்க்கு
ஆகமென்றதோர் தேகமானது
அழியாதிருக்கும்நல் லன்பாய்த்தவஞ்செய்யே. (மெய்)

8-வது பதம். இ-ம். ஆனந்த சாவேரி—ரூபகதாளம்.

பல்லவி.

மயங்கிறாய்ஏதுக்கு மனமே—காதிரான
வள்ளல்நாயகம்துணை தினமே.

அநுபல்லவி.

தியங்காதேமனமேநல் ஷெய்கப்துல்காதிருடை
நயபாதங்கண்டோடிப் பணிந்தால்பயமுமுண்டோ. (மயங்கி)



சரணங்கள்.

1. வாராதவினைகள்வந் தாலும்—கொடிய
வறுமைவந்தணுகிக்கொண் டாலும்
தீராதபிணிகள்சார்ந் தாலும்—துயரம்
தீங்குகள்அணுகிக்கொண் டாலும்
ஆரண்ணைதிரு அருமைநல்லருள்கண்டு
பூரணத்தொழிலாகி நாளும்ஆனந்தமான
நீதராகிய நாதர்பாதமே
நிலைபெறக்கொடும் வினைகளோடிடும்
நிரப்பமாயுடல் பொருளும்ஆவியும்
நிறைவுடன்ஹக்கை யறிந்தபாத்திபர்
நாளும்எனதுள்ளம் நிறைந்தமாமணி
சூழும்மணிவிளக் காணபீர்துணை. (மயங்கி)

2. பகுதாதில்அரசாளும் நாதர்—மேன்மை
பக்கீர்ஒலியுல்லாநற் சிலர்
தகுதிஅபுஸாலிஹு பாலர்—அழகு
தன்மைபாத்திமாபுத்திர வாசர்
எல்லாவொலிகளுக்கும் ஏற்றமுள்ளமேலொலி
நல்லார்களெல்லோர்க்கும் நலமானமேன்மைக்குரு
பாதமானது தரித்திடில்யாரும்
பாங்குடன்அழ கானதெளிவதாய்
பலனதாகவே வாழ்வார்சொர்க்கத்தில்
பண்புள்ளபெரி யோர்களாகவே
வாசராம்ஒளி நாதராம்அருள்
போஜராகிய வேதர்பீர்துணை. (மயங்கி)

3. நபிகளுக்கெல்லாமர சான—மேன்மை
நாயகம்ஹாமீம்திருப் பேரர்
ஹபீபானஷெய்குமுஹிய் யித்தீன்—நன்மை
காரணமஹ்பூபு நாதர்
ஸிபத்திலிலங்கிவந்த செல்வசுந்தரமான
ஜெயமான ஆயிரத்தெண் மலரானசுடரொளி

ஆலமடங்கலும் புகழுமாமணி
அப்துல்காதி ரென்றதிருமணி
அற்புதமாக வந்தஅருள்மணி
அன்புபொருந்திய ராஜகண்மணி

வேதராம்சுடர் வாசராம்அருள்
நீதராகிய நாதர்பிர்துணை. (மயங்கி)

4. நிலையான மேன்மைத்தவஞ் செய்த—நன்மை
நிறைவுள்ளயாகௌது மணியே
வலியோன் அருளைப்பெற்ற ஷெய்கே—அழகு
மங்காமண்ணிவிளக்கே கனியே

கலீபத்துஷெய்குஷாஹுல் ஹமீதுஅப்பாதன்னையும்
கனிமாவிற்கரைசேர்த்துக் கனமாய்க்கையேற்றருளும்

செல்வமாகிய ஜெயிலானிதனில்
சிறப்பாய்ப்பிறந்தயா அப்துல்காதிரே
சீர்பொருந்திய ஆதியருள்தனை
ஜெயம்பெறஎனக் கீந்துரக்ஷிப்பீர்

நாதரேஒளி நீதரேஅருள்
போதராகிய காதிரேதுணை. (மயங்கி)

[9-வது பதம் இ - ம் சங்கராபரணம் - ரூபகதாளம்.]

பல்லவி.

குன்னென்றபொருளைக் கண்டறியவே
குருவைநீதேடுவாயே.

அநுபல்லவி.

முன்னேஒளியில் துலங்கியசூஸ்திரம்
மோனமெய்ச்சுடர்காரணம்—அருள்
கன்னிலைஹூவுள்ளே நீமாயிலங்கிடும்
நற்குருமுஹம்மதுவே
சற்குருவாம் நேமணி. (குன்)



சரணங்கள்.

1. மூலப்பொருளையறிந்துதெளிந்தவர்
மோட்சகதிதன்னிலாகுவார்—நன்மை
சீலமுள்ளதாரை மத்தியிற்றீபமே
தெரிசித்தவ ரறிவனுடை
நிறைசுவனம் வாழ்வாரே. (குன்)

2. தாத்தும்ஸிபத்தும்பொ ருந்திநின்றிலங்கிய
தன்மைமுச்சுடர்மேன்மையை—நாட்டம்
நேத்திரத்திலூடு நேராயறிந்தவர்
நீதகுரு வாகிநிலம்
மேதினியிற் பேர்பெறுவார். (குன்)

3. ஐயென்றகலிமா அவிபுலாம்மீமதை
அறிவதுஅரிதிந்தப்புவியிலே—தன்மை
நீயென்றநின்கலி மாவையறிந்தவர்
தேகமதுக் கழிவில்லை
ஜெகமதிலுள் வைத்தாலும். (குன்)

4. கலீபத்துஷெய்குஷா ஹுல்ஹமீதுதன்னை
காரணநல்லருளாகிய—மேன்மை
சலிகையிறைவனே நேர்வழியானதில்
சங்கையுடனாக்கிடுவாய்
பங்கமதை நீக்கியே. (குன்)

10-வது பதம் இ - ம் சாவேரி - அடதாளம்.

பல்லவி.

அருளான அவ்வல்கலி மாவையறிந்துசொன்னால்
அழகுநன்மையதிகந் தானே.

அநுபல்லவி.

திருலாஇலாஹஇல்லல் லாஹுமுன்னான்கெழுத்து
சிறப்புமுஹம்மதுர்ற சூலுல்லாஹிமுன்னான்கே

சரணி.

மண்டலம்விண் டலம்நிறைந்தது
வண்ணமாகிய அருளதானது

எண்குணன் அருள் ஜோதியானது
இன்பமானபே ரின்பமானது. (அருளா)

சரணங்கள்.

1. குலமானகலிமாவைக் கூர்மையாய்த்தான்மொழிந்து
குணமாயறிந்தவர்க்குத் தானே
நலமுள்ளவல்லனை நாயனும்அடங்காத
நன்மையைத்தான்கொடுப்பான் நயமானபெரியோர்க்கு
மண்டலம்விண் டலம்நிறைந்தது
வண்ணமாகிய அருளதானது
எண்குணன் அருள் ஜோதியானது
இன்பமானபே ரின்பமானது. (அருளா)

2. அறுநான்கெழுத்ததுதான் அவ்வல்கலிமாவாகும்
அருமையாய்த்தானறிந்து தானே
பெருமையுடையவல்ல வனையும்முஹம்மதையும்
பிரிசமுடனே கண்டு தெளிந்தவர்க்குக்கெதியே
மண்டலம்விண் டலம்நிறைந்தது
வண்ணமாகிய அருளதானது
எண்குணன் அருள் ஜோதியானது
இன்பமானபே ரின்பமானது. (அருளா)

3. நலமுள்ளஅஹதையும் அறிந்துதெளிவாகவே
நன்மையழகுநயந் தானே
பெலமானமுச்சுடரைத் தினமுந்தெரிசித்தபேர்
பேரின்பநன்மைபெற்ற பெருமையுள்ளராஜரே
மண்டலம்விண் டலம்நிறைந்தது
வண்ணமாகிய அருளதானது
எண்குணன் அருள் ஜோதியானது
இன்பமானபே ரின்பமானது. (அருளா)

4. அஹதானதில்மீமும் வந்துபுகுந்தவுடன்
அஹமதென்றநாமந் தானே
அஹமதின் அலிபுமீ யாகிவிடவேநன்மை
அன்புமுஹம்மதாக வந்தகாரணமறி

காப்பகம்
223878
600 008